
திசை மாறும்
வாழ்க்கை
லதா முகுந்தன்

## பதிப்புரை

திருமதி லதா முகுந்தன் அவர்களின் 'திசை மாறும் வாழ்க்கை' என்னும் இந்த நாவல் தெளிந்த நீரோடை.

மாற்றங்கள் நிகழும் வாழ்க்கையை இந்த நாவல் வெகு யதார்த்தமாகப் படம் பிடித்துக் காட்டுகிறது.

இது, மகளிர்களுக்கு மட்டுமல்ல - மற்றவர் களுக்கும் பிடித்த நாவலாக இருக்குமென்பது நிச்சயம்!

'மனதெல்லாம் மார்கழி'யைத் தொடர்ந்து வரும் இந்த நாவல் எல்லாத் திசைகளிலும் வாசகர்களை ஈர்க்கும் வல்லமை படைத்த நாவலாகும்.

இனி நாவல் உங்கள் கையில்...

படியுங்கள் -

படித்து உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்.

அன்புடன்

*அரு.சோலையப்பன்*

செங்கைப் பதிப்பகத்திற்காக



# திசை மாறும் வாழ்க்கை



## 1

அறையில் பூக்களின் அலங்காரம். வித விதமான இயற்கை நிறங்கள் கண்ணைப் பறிக்க, ரோஜா, குண்டு மல்லி, முல்லை, ஜாதி, சம்பங்கியின் வாசம் நாசியைத் துளைத்தது. கட்டிலில் உள்ள மெத்தையில் சற்று இடுப்பு கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தான் தியாகு. இன்னும் சில நிமிடங்களில் அவனுடைய எதிர்காலத் துணை, சகதர்மினி உள்ளே வந்துவிடுவாள். அவளிடம்

என்ன பேச வேண்டும்? எப்படிப் பேசவேண்டும்? ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தான்.

அம்மா சொன்னது, அப்பா உரைத்தது, ஏன் நண்பர்கள் சொன்னது கூட ஞாபகத்திற்கு வந்தது.

''ஊரிலே உலகத்துலே இல்லாத பொண்ணு வந்தாச் சுன்னு எல்லாரைப்பத்தியும் மொத ராத்திரியிலேயே போட்டு உடைக்காதே.'' அம்மா சொல்ல,

''டேய் உன் வீக்னஸ் எதையுமே வெளியே காண்பிச் சுக்காதே. அப்புறம் ரெண்டாவது நாளே உன்னைப் பத்தி மட்டமா நினைப்பா'' இது அப்பா.

''இத பாரு மச்சி. பொண்ணு புதுசுன்னு என்னிக்காவது நீ கொஞ்சம் தண்ணி போட்டது எல்லாம் சொல்லி வைக் காதே. ரெண்டாவது உம் குடும்பத்தைப் பத்தி எல்லாம் பீலாவுட்டு சொல்லி வை. மொதல்லேயே உங்க அம்மா அப்பாவை கவனிக்கணும். குடும்பத்தை கவனிக்க ணும்னு எல்லாம் சொல்லி வை. அதுக்கே உம்மேல ஒரு மதிப்பு வரும்.''

எல்லாவற்றையும் மனதில் போட்டு உழப்பி பெண் டாட்டி வந்தால் என்ன பேச வேண்டும், எப்படி பேச வேண்டும் என்றெல்லாம் ஒத்திகை பார்த்து காத்துக் கொண்டிருந்தான் தியாகு.

நெத்திச்சுட்டி, தலை அலங்காரம், பட்டுப்புடவை என்று வேர்த்து விருவிருத்து வருகிறாள் சுமதி. முத்து முத் தான வியர்வை கூட, அந்த மாநிற முகத்திற்கு ஒரு அழகை அளித்தது. கூர்மையான நாசியும், சற்று அகன்ற விழிகளும், சின்ன உதடுகளும் பார்க்கும்போதே மடியில் வைத்து கொஞ்ச வேண்டும் போன்ற ஒரு உணர்வு.



தன் வீட்டாரைப் பற்றி உசத்தியாக சொல்ல வேண் டும். தங்கள் நிறைகளைச் சொல்ல வேண்டும் என்ற உணர்வு எல்லாம் மறந்து போய், லேசாக வெட்கத்தோடு ''வா சுமதி'' படுக்கையைக் காண்பிக்கிறான். ''இந்த புடவையிலே சூப்பரா இருக்கே. இந்த தொங்கட்டான் அது கூட அழகு.'' அவன் வழிந்தபடி பேச, அவள் களுக்கென்று சிரித்துவிடுகிறாள்.

அவள் சிரிக்க, அவனும் அசட்டுச் சிரிப்பாக சிரிக்கின் றான்.

''இது தொங்கட்டான் இல்லே ஜிமிக்கி.'' அவள் மெது வாக சிரித்தபடி சொல்லிவிட்டு,

''இருங்க. உங்களை கும்பிடணும்னு சொன்னாங்க. இந்தாங்க பிடிங்க கால்ல விழுந்து கும்பிடறேன்.''

''ஐயையோ என்னம்மா இது என்கால்ல போய் நீ விழுந்திட்டு எழுந்திரும்மா.'' அதற்குமேல் தன் கல்லூரிக் கதைகளை, வீட்டுக் கதைகளை தான் அசட்டுத்தனமாக நடந்து கொண்டதை எல்லாவற்றையும் சொல்லி, சொல்லி சிரித்தபடி மேலும் மேலும் தன்னைப் பற்றி எல்லாவற்றையுமே ஒப்பிக்கிறான் கணவன்.

அடுத்த நாள் மணி ஆறு இருக்கும். யாரோ தடதட வென்று கதவைத் தட்ட, வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்திருக்கிறாள் சுமதி. கலைந்த சேலையை சரி செய்யக் கூட நேரமில்லாமல் அப்படியே ஓடி வந்து கதவைத் திறக்கிறாள் சுமதி.

தியாகுவின் தாயார் தான் மூக்குக் கண்ணாடியை சரி செய்தபடியே, அவளையே முறைத்துப் பார்க்கிறாள்.

''மணி என்ன ஆச்சு ஆறு. உனக்கு வெக்கமாயில்லை. புகுந்த வீட்டுக்கு வந்த பொண்ணு இப்படித்தான் எருமை மாடு மாதிரி தூங்கிட்டு இருப்பாளா?''

சுமதிக்கு கண்கள் கலங்கிப் போயிற்று. கணவன் பாதி வெற்றுடம்பாகத் தூங்கிக் கொண்டிருந்தான். அவனை யாரும் ஒன்றும் சொல்லவில்லை. தன்னைத்தான் மாமியார் அசிங்கப்படுத்தி விட்டுப் போகிறாள். ஒரு நிமிடம் மனம் கஷ்டப்பட்டாலும் அடுத்த நிமிடம் சுதாரித்துக் கொண்டு மாமியாரின் பின்னே ஓடுகிறாள். கல்லூரியில் இளங்கலை ஆங்கில இலக்கியம் படித்தவள்தான். இருந்தும் பயம்தான். ஏன்? விஷயம் நடக்கும் ஆண்டு இரண்டாயிரத்து ஆறு அல்ல. ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து ஆறு. இப்போது போல் சூடிதாரும், நைட்டியும் அறியாத காலம் அது. பாவாடை, தாவணி இல்லையென்றால் புடவைதான். திருமணம் நிச்சயிக்கப்பட்டவுடனேயே அம்மா 'இந்த வேலை செய். அந்த வேலை செய். சமையலைக் கத்துக்க' என்று திருமணம் முடிவதற்குள் உயிரை எடுத்து விட்டாள். அம்மா மட்டுமல்ல அப்பாவும் சேர்ந்து உபதேசித்தார்.

''இத பாரு அம்மாகிட்டே வாயாடற மாதிரி எல்லாம் பேசக்கூடாது. மாமியார்னு ஒரு பயம் இருக்கணும். எதைச் சொன்னாலும் வாயைத் திறக்கக் கூடாது. போனவுடனேயே சண்டை பிடிச்சியான்னா அப்புறம் மருமக பிள்ளைக்கு உம்மேலே வெறுப்பு வந்துடும். எந்தக் காரணத்தைக் கொண்டும் மறுபடியும் இங்க வந்து கண்ணை கசக்கிக்கிட்டு நிக்கக் கூடாது. புரியுதா?''

அந்த உபதேசம் தூண்டிவிட்டதோ என்னவோ சுமதி பதில் பேசாமல் பரபரவென்று மாமியாரைப் பின் தொடர்கிறாள். அவசரம் அவசரமாக தலைக்குளித்து விட்டு, விறுவிறுவென்று வேலை செய்கிறாள்.



''த..... இன்னும் ரெண்டு பூண்டு வச்சுக்க, உடைச்ச கடலை கூட வை. கொஞ்சம் தேங்காயை வை.'' மாமியார் சொல்ல சொல்ல, வைத்து அம்மியில் அரைத்து, இட்லியை அவித்து எடுத்து வேலை செய்கிறாள்.

எட்டு மணிக்கு மெதுவாக இறங்கி கொட்டாவி விட்டபடியே இறங்கி வருகிறான் கணவன்.

''போ அவனுக்கு பேஸ்ட் பிரஷ் எடுத்து கொடு.'' பிரஷ்ஷில் பேஸ்ட்டைத் தடவி கையில் தரும்போது மட்டும் லேசாக கையைக் கிள்ளுகிறான்.

ஒரு நிமிடம் கோபம், ஆத்திரம் வருகிறது. மறு நிமிடம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்கிறாள். கூடாது கணவனிடம் தான் ஏதாவது கோபித்துக் கொள்ள, கணவன் வள்ளென்று விழப்போகிறான். தந்தை சொல்லி அனுப்பி இருக்கிறாரே 'கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்.' அப்பா சொல்லிக் கொடுத்த வேதமாச்சே.

விழுந்து, விழுந்து வேலைகளை செய்கிறாள். நல்ல வேளை காலையில் மாமியார் கத்தித் தீர்த்தாளே ஒழிய 'டிபன் சாப்பிட வா' என்று ஒன்பது மணிக்கு மாமியார் கூப்பிட சாப்பிடப் போகிறாள். வீட்டில் இருக்கும் உறவு முறைகள் எல்லாம் சாப்பிட்டு, மீதி எட்டு இட்லிகள் இருக்க, தனக்கு நான்கு, மருமகளுக்கு நான்கு என்று போட்டு சட்னி மொத்தமும் ஆகிப் போனதால் பூண்டு மிளகாய்ப் பொடி போட்டு சாப்பிட உட்கார திடீரென்று ஊரிலிருந்து வந்தாள் ஒரு சித்தி.

''ஒரே பசி மங்களம்... இரு வாயைக் கழுவிகிட்டு வரேன்.'' மாமியார் நான்கு இட்லிகளை வந்தவளுக்குத் தர, மருமகளும் மாமியாரும் இருக்கும் இட்லிகளை ஆளுக்கு பாதியாக பகிர்ந்து கொண்டனர்.

சுமதிக்கு வயிறே நிரம்பவில்லை. நிரம்ப பசித்தது. பச்சைத் தண்ணீரை நிறையவே குடித்து வயிற்றை ரொப்பிக் கொண்டாள். மாமியாருக்கும் பசி என்பது முகத்தில் தெரிந்தது. மாமியார் மறுபடியும் காபியைக் கலந்து குடிப்பது தெரிந்தது.

அவசரம் அவசரமாக மதிய சாப்பாட்டைத் தயாரிக்க ஆரம்பித்தார்கள். கூட இருக்கும் பெண்களும் உதவி செய்ய சமையலை செய்து முடித்தார்கள். ஒரு வழியாக மணி இரண்டு அடிக்கும் போது ஆண்பிள்ளைகள் எல்லாம் சாப்பிட்ட பின் பெண் பிள்ளைகள் எல்லோரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தனர். பசித்து வயிறு வலிக்க, சாப்பிட ஆரம்பித்தாள் சுமதி. நிறைய சாப்பிட்டதில் வயிறே தூக்க முடியாதபடி கனத்து நிரம்பிப் போய் இருக்க, கஷ்டப்பட்டாள் சுமதி.

ஒரு வழியாக எல்லோரும் படுத்தபோதும், படுத்தவள் மிக மிக கஷ்டப்பட்டாள்.

''என்னம்மா ஆச்சு?'' - மற்ற பெண்கள் கேட்க,

வயிற்றை வலிப்பதாகச் சொல்லி சுமதி லேசாக கண் கலங்க.

''இந்தா இந்த வெத்தலையைப் போடு சரியாயிடும்.'' மாமியார் வெத்தலையைத் தர மென்று தின்றவள் சற்று தேவலாம் போல் இருக்க அப்படியே படுத்துக் கொள்கிறாள்.



அன்று மாலை மற்றவர்கள் டீ, காபி என்று குடிக்க, சுமதி ஒன்றும் சாப்பிடவில்லை.

''ஏன் நீ காபி குடிக்கலை?'' மாமியார் சற்று கரிசனமாகத்தான் கேட்கிறார்.

''வேண்டாம் அத்தை பசியே இல்லை,'' என்கிறாள் சுமதி.

அன்று இரவு பூண்டு, சுண்டக்காய் போட்டு புளி குழம்பு செய்கிறாள் மாமியார். வயிறு உப்புசத்தினால் சுமதி கொஞ்சமாகத்தான் சாப்பிடுகிறாள். அடுத்த நாள் கோவிலுக்கு நேர்ந்து கொண்டு செல்வதால், இன்னும் உறவுமுறை அதிகமாக வந்துவிட இரண்டு கிலோ ரவையில் உப்புமா, மூன்று தேங்காய்களை உடைத்து சட்னி செய்தும் சுமதிக்கும் மாமியாருக்கும் ஒன்றுமே மிஞ்சவில்லை. ஒன்பது மணி அடிக்க சுமதிக்கு பசிக்க ஆரம்பித்தது. வேளா வேளைக்கு கீழே வந்து பெண்டாட்டியைப் பார்த்து சைகை காண்பித்து தான் வயிறு நிறைய சாப்பிட்டு விட்டு, யாரும் பார்க்காத போது கையைப் பிடித்து இழுக்கும் கணவன் மேல் சுமதிக்கு கோபம் வந்தது.

ஆனால் முதல்நாள் மாமியார் ஏதோ கோபத்தில் கத்தினாளே தவிர பிறகு ஆசையாக இருந்த மாதிரிதான் தோன்றியது. தினம் நான்கு முழம் மல்லியோ, முல்லையோ, ஜாதியோ வாங்கி வந்து ''சுமதி இந்தா'' என்று தருகிறாள். இன்றும் டிபன் இல்லை என்றவுடன் ''சுமதி இங்கே வா.. நம்ப தெரு முக்கிலே இருக்கற உடுப்பி ஹோட்டல்லே உனக்கு என்ன வேணுமோ வயிறு நிரம்ப சாப்பிட்டுட்டு வா. போ. பாவம் நேத்திக்கும் டிபன் இல்லை. பசிச்சு சாப்பிட்டதுனால வயித்து வலி வந்து

எப்படி துடிச்சே. போ. சாப்பிட்டு சீக்கிரம் வா. எல்லோரும் கோவிலுக்கு கிளம்பணும்.''

''அத்தே உங்களுக்கும் தான் ஒண்ணும் மிச்சம் இல்லையே. நீங்களும் ஒண்ணும் சாப்பிடலையே.'' சுமதி கேட்க, ஒரு நிமிடம் மாமியார் தன்னையே இளகலான பார்வை பார்க்கிறாள்.

''இல்லேம்மா எனக்கு பசி இல்லை நீ போய் சாப்பிடு.''

ஆனால் சுமதிக்கு மனதே கேட்கவில்லை. தனக்கும் மாமியாருக்குமாக இரண்டு செட்டு தோசை, இரண்டு வடைகள், இரண்டு இரண்டு இட்லிகள் வாங்கிக் கொண்டு கையோடு எடுத்துப் போன சாம்பார் பாத்திரத்தில் சாம்பார், சட்னி வாங்கிக் கொண்டு வந்தாள்.

எல்லோரும் கோவிலுக்கு புறப்படுவதற்காக அரக்க பரக்க கிளம்பிக் கொண்டிருக்க, மாமியாரும் முகம் சோர்ந்து போனவளாய் பட்டு சேலையை உடுத்தியபடி கோவிலுக்கு கிளம்ப யத்தனிக்க,

''அத்தை ஒரு நிமிஷம் உள்ள வாங்க'' என்று கூப்பிட்ட சுமதியை ஆச்சரியத்தோடு பார்த்தவளாய் உள்ளே வருகிறாள் மாமியார்.

''வாங்க அத்தை. நாம ரெண்டு பேரும் சாப்பிட்டுவிட்டு அப்புறம் கிளம்பிடுவோம். வாங்க.''

தான் வாங்கி வந்த பார்ஸலை மாமியாருக்கு தந்து சேரில் உட்கார வைத்து, தானும் அவர் எதிரில் அமர்ந்து உண்ண மருமகளின் எதிரில் அமர்ந்து ஒருவாய் சாப்பிட்ட மாமியார் சட்டென்று கண் கலங்கிப் போய் விடுகிறாள்.



''அத்தை என்ன இது?'' சுமதி பயந்து பதறிப் போய் கேட்க,

''இல்லைம்மா. இந்த வீட்டிலே இத்தனை பேர் இருக்காங்க. ஒருத்தராவது நான் சாப்பிட்டேனான்னு கேட்டாங்களா? புருஷனும் கேட்கலை. புள்ளை, பொண்ணு யாரும் கேக்கலை. ஆனா நீ... ரொம்ப நன்றிம்மா.''

சொல்லிவிட்டு மாமியார் அழ, ''ஆம்பளைங்களுக்கு நம்ப பிரச்சனை எதுவுமே தெரியாது அத்தை. கல்யாணம் ஆனப்புறம்தான் எனக்கு இது புரிஞ்சுது.''

'மனைவி இன்னும் கிளம்பலையா' என்று பார்க்க வந்த தியாகு மனைவியின் இந்த பேச்சில் சற்று அதிர்ந்து போய் நின்றான்.

# 2



திருமணம் ஆகி இரண்டு மூன்று நாட்கள் தான் ஆகின்றன. சாதாரணமாக திருமணமான பெண்கள் கணவரைப்பற்றியே உசத்தியாகப் பேசிக் கொண்டிருப்பார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறான். ஆனால் இங்கே பெண்டாட்டி கணவனையே ஏதோ கேலியாக சொல்கிறாள். நம்ப பிரச்சனை எதுவும் புரியாது என்கிறாளே, என்ன பிரச்சனை இவளுக்கு. அம்மாவிடம் தனியாக

ஏதோ பேசுகிறாளே. அம்மாவிடம் அவள் பிரச்சனையை ரகசியமாக சொல்லி இருப்பாளோ. மனதைக் குடைந்தது. மனதைக் குடைய மௌனமாய் வெளியேறுகிறான்.

மாமியாரும், மருமகளும் சாப்பிட்டு விட்டு சற்று உற்சாகமாகக் கிளம்ப தியாகு உற்சாகமிழந்து வருகிறான். என்னவாக இருக்கும்? தியாகுவைப் பொறுத்த வரைக்கும் அம்மா வேலை செய்யவில்லை என்று கத்துவாளே தவிர, பேச்சு தான் சற்று தடித்ததாகத் தோன்றுமே தவிர, மனம் மிக மிக மென்மையானது. ஒரு பெண் கஷ்டப்படுகிறாள் என்றால் அவளால் தாங்கமுடியாது. அழுதுவிடுவாள். 'டேய் பாவம் நம்மாலான உதவியை செய்துட வேண்டும்' என்று முனைந்து நிற்பாள். டிவி, நாடகங்களில் வரும் நிகழ்ச்சிகளில் பெண்ணுக்கு பழைய காதலன் இருந்து ஒருவேளை வேறு ஒருவனை திருமணம் செய்து கொண்டதை போல் வந்து விட்டால் துடித்து விடுவாள். அழுது விடுவாள். 'இந்தச் சனியனை செய்துக்கறதுக்கு அவ காதலிச்சவனோடவே ஓடிப் போயிருக்கலாம். பாவம் அவ.'' என்று கண்கலங்கி அவளுக்காக பேசிக் கொண்டு இருப்பாள். ஒருவேளை அப்படி ஏதேனும் விஷயம் இருக்குமோ. ஒருவேளை தன் பழைய காதலனோடு ஒப்பிட்டுத்தான் தன்னை மட்டம் தட்டுகிறாளா? என்ன விஷயம்? அம்மாவிடம் எப்படி கேட்பது?

அதுவரை ரசித்துக் கொண்டிருந்த மனைவியின் முகத்தைப் பார்க்கவே கோபம் வந்தது. எரிச்சல் வந்தது. 'விஷயம் என்னவாக இருக்கும்? அவளுக்கு என்ன பிரச்சனை? வந்த ரெண்டு நாட்களிலேயே மாமியாருக்கும், மருமகளுக்கும் என்ன இருக்கும்?' அறிந்து கொள்ள மனம் வெந்து துடித்தது. ஆற்றாமையில் லேசான அழுகை கூட வந்தது. வேண்டாம் ஆண்பிள்ளைகள் அழக்கூடாது. இருப்பு கொள்ளாமல் தவிக்கும் நிலை வந்தது.



அம்மாவைத் தனியாக சந்திக்கும் போது பொறுக்க முடியாமல் கேட்கிறான். ''அம்மா உன் கூட தனியா பேசணும்?''

''என்னடா?'' அம்மா ஆச்சரியப்பட்டவளாய் அவனையே பார்க்கிறாள்.

''வந்து.. நீ தப்பா நினைச்சுக்க கூடாது?'' 'என்ன கேட்கப் போகிறான்? ஒருவேளை அவன் மனைவியை அதிக வேலை வாங்குகிறேன் என்ற நினைப்பா? இங்கே எனக்கு மரியாதையாக இருந்த பெண், ஒருவேளை இரவில் கணவனிடம் போட்டுக் கொடுக்கிறாளா என்ன?' ஒரு நிமிடம் அவளைப்பற்றி தப்பாக நினைத்தாலும், அடுத்த நிமிடம் மனம் 'சீ.. அந்தப் பெண்ணைத் தப்பாகவே நினைக்க முடியாது' என்று தோன்றியது.

பெற்ற பிள்ளை இருக்கிறான், கட்டிய கணவன் இருக்கிறான். யாருமே தனக்கு உதவி செய்யவில்லையே. நீ சாப்பிட்டாயா என்று கேட்கவில்லை. ஏன் உறவு முறைகள் கூட தன்னை கண்டு கொள்ளவில்லை. புதிதாக வந்த மருமகள் தானே தனக்கும் சேர்த்து டிபனை வாங்கி வந்தாள்.

''என்னம்மா நான் ஏதோ கேக்கறேன்? நீ ஏதோ யோசிச்சுகிட்டு இருக்கே?''

''என்ன கேக்கப் போறே?''

''எம் பொண்டாட்டி உங்கிட்டே என்ன சொன்னா?''

ரகசியமாக தியாகு கேட்க, அதிசயித்தவாறு அவனைப் பார்க்கிறாள்.

''எங்கிட்ட ஒண்ணும் சொல்லலியே.'' பிள்ளையை குழப்பமாகப் பார்க்கிறாள் தாய்.

''ஆம்பிளைங்களுக்கு நம்ப பிரச்சனை எதுவுமே புரியாது அத்தை. கல்யாணம் ஆனப்புறம்தான் எனக்குப் புரிஞ்சுதுன்னாளே. என்ன அர்த்தம்?''

தியாகுவின் தாய் மங்கை சட்டென்று சிரித்துவிடு கிறாள். பெருமூச்சு விடுகிறாள்.

''இது தானா விஷயம்? நான் என்னடான்னு யோசிச்சு கிட்டு இருக்கேன்.''

''அப்படீன்னா என்ன அர்த்தம்? ஏதாவது உன்கிட்டே சொல்லி இருக்காளா?''

''அடப்பாவி. தப்பா நினைச்சுட்டியா? அது ரொம்ப நல்ல பொண்ணுடா பாவம்.''

''பின்னே?''

மங்கை நடந்த விஷயத்தைக் கூற, சற்றும் நம்ப முடி யாமல் பார்க்கிறான்.

''என்னடா இப்படி இருக்கே? உறவு முறை எல்லாம் வந்ததுனாலே எங்களுக்கு டிபன் இல்லே. முதல் நாளும் உம் பொண்டாட்டி சாப்பிடாம மதியம் சாப்பிட்டதிலே வயித்து வலின்னு துடிச்சு போச்சு. பாவமா இருந்தது. ரூபாயைக் கொடுத்து சாப்பிடச் சொன்னேன். ஆனா பாவம் தான் சாப்பிடாமே, நான் பட்டினி கிடக்கறேனேன்னு எனக் கும் சேர்த்து வாங்கி வந்துடுச்சு. அதுக்கு தான் அழுதேன். நான் பெத்த பிள்ளை தானே நீ. அம்மா சாப்பிட்டாளான்னு



பாத்தியா? ஏம்மா நீ சாப்பிட்டியான்னு கேட்டியா? இல்லே உங்க அப்பா தான் கேட்டாரா? புதுசா வந்த மருமக பாவம் மாமியார்னு வாங்கிட்டு வந்தாளேன்னு சந்தோஷத்திலே அழுதேன். அதுக்கு தான் உம் பொண்டாட்டி சொல்லி கிட்டு இருந்தா? அவ சொல்றதெல்லாம் நிஜம்தானே.''

அம்மாவின் வார்த்தைகளில் திருப்தி அடைந்தானோ இல்லையோ தெரியாது. ஆனால் பதில் பேசாமல் திரும் பிப் போகிறான் தியாகு. பிறகு வழக்கம் போல் மனைவி யிடம் கொஞ்சி, கொஞ்சி பேசினாலும் உற்சாகம் ஒரு மாற்று குறைந்து தான் போயிருந்தது.

இரண்டு மூன்று மாதங்கள் சென்றிருக்கும். சுமதிக்கு மசக்கை ஆரம்பித்து விட, வாந்தி எடுத்துக் கொண்டு இருந்தாள்.

பிறந்த வீட்டிற்கு சென்றவள் அங்கே அம்மா அழைத்துச் சென்ற டாக்டரிடம் உடலைக் காண்பித்து மருந்து மாத்திரை சாப்பிட்டு, உடம்பை சற்று தேற்றிக் கொண்டு மாமியார் வீட்டிற்கு செல்ல நினைத்த போது தான் அவளின் தோழி செல்வியும் கர்ப்பிணியாக அம்மா வீட்டிற்கு வந்திருந்தாள்.

''என்னப்பா கல்யாணம் ஆனது கூட எனக்கு சொல் லலே.'' செல்வி சண்டை பிடிக்கிறாள்.

''உனக்கு சொல்லக்கூடாதுன்னு இல்லே. திடீர்னு முடிஞ்சு போச்சு. ஜாதகம் சரியா இருக்குன்னு அப்பா மாப்பிள்ளை வீட்டுக்காரரை கூப்பிட்டிருந்தாரு. இவர் தான் என்னைப் பாக்க வந்த முதல் வரன். பார்த்தவுடனே எஸ்ஸுன்னு சொல்லிட்டாரு. எங்கப்பா என் சம்மதத்தை

எல்லாம் எங்க கேட்டாரு? உடனே கல்யாணத்தை நிச்சயம் பண்ணிட்டாங்க.'' சுமதி மெதுவாகக் கூற,

''ஆமா உன்னையே சுத்தி சுத்தி வந்தானே ராஜேஷ் அவனுக்கு உன் கல்யாண விஷயம் தெரியுமா?'' செல்வி கேட்க, சற்று சலிப்புடன் பதில் சொல்லுகிறாள் சுமதி.

''தெரியுமோ. தெரியாதோ? எனக்குத் தெரியாது. ஆனா ஒரே ஊர். சின்ன கிராமத்துலே இருக்கோம். தெரியாம இருக்குமா?'' சுமதி மெதுவாகக் கூற,

''ஏன் சுமதி.. அவனை.. எப்படி தூக்கி போட்டுட்டே நீ. கட்டினா அவனைத்தான் கட்டணும்னு சொல்லியிருக்கே இல்லையா?''

''மனசுக்குள்ளே ஆயிரம் ஆசைகள் உண்டு. ஆனால் எல்லாம் நிறைவேறிடுதா என்ன? கட்டுப்பாடான குடும்பம். ஆசைப்படறது கூட தவறுன்னு போதிச்சு வளர்த்த பேரண்ட்ஸ். இவுங்க முன்னால எந்த ஆசையும் அர்த்தமில்லாதது தான்.'' சுமதியின் வார்த்தைகளில் ஒருவித வலி இருக்க,

''என்னடி சொல்றே? இன்னும் ராஜேஷை நீ மறக்கலையா? என்னதான் லவ் பண்ணாலும் புருஷன்னு வந்தப்புறம் காதலிச்சவனை மறந்துதானடி ஆகணும்.''

''எந்த நினைவுகளை மறக்கச் சொல்றே? நான் இரண்டாம் வருஷம் படிக்கும் போது ஆக்ஸிடண்ட் ஆகி படுத்துக்கிடந்தேனே. அப்ப எனக்கு ரத்தம் ஏத்தணும்னு சொன்ன உடனே ஓடிவந்து ரத்தம் கொடுத்தானே அதையா? பீஸ் கட்ட கடைசி நாள்னு தவிச்சுகிட்டு இருக்கும்போது அவுங்க அம்மா கொடுத்த சங்கிலியை அடகு வச்சு எனக்காக பணம் கட்டினானே அதையா? அந்த சங்கிலியை மீட்க



காலேஜ் முடிச்சிட்டு நைட்லே போய் ஹோட்டல்லே சர்வர் வேலை பாத்தானே அதையா? இத்தனை அன்பு என்மேலே வைக்க நான் என்ன கொடுத்தேன்? நான் என்ன பெரிய கிளியோ பாட்ராவா?''

''ஐயையோ என்னடி ஒரு வினாடி கூட அவனை மறக்கவே முடியாதுங்கற மாதிரி பேசறே, வேணாம்டீ. யாருகிட்டேயும் தப்பித் தவறி மூச்சு கூட விட்டுடாதே. வாழ்க்கையே போயிடும்.''

செல்வியின் பதிலுக்கு கடகடவென்று சிரித்தாள் சுமதி.

''என்ன சுமதி?''

''வாழ்க்கை இருந்தா தானே போக?''

''என்ன சுமதி சொல்றே? உம் புருஷன் உன்னை விட்டுட்டானா?''

''ம்ஹூம்...'' என்று தலை ஆட்டியவள், ''புருஷன் என்னை பிடிச்சுக்கவுமில்லை. விடவுமில்லை.''

''என்னடி குழப்பறே?''

''எதை சொல்றது?'' பெருமூச்சு விட்ட சுமதி. ''அவருக்கு என்மேல ஆசைங்கறதெல்லாம் ஒண்ணுமே கிடையாதுடீ. ஏதோ கல்யாணம் பண்ணிகிட்டோம். வீட்டிலே இருக்கற நாற்காலி, மேசை மாதிரி நானும் ஒரு பொருள். எப்ப தேவையோ அப்ப மட்டும்தான் யூஸ் பண்ணிப் பாங்க.''

''என்னடி என்னென்னவோ பேசறே?''

''நிஜத்தை தான் பேசறேன் செல்வி. ஒரு பிறந்த நாளுக்கு வாழ்த்து சொல்றதோ இல்லை தன்னால

முடிஞ்சதை பிரசன்ட் பண்றதோ, இல்லை கல்யாணம் ஆனவுடனே ஹனிமூனுக்குப் போறதோ, ஒரு நல்ல நாள், பொல்லாத நாள்லே பொண்டாட்டியோட இருந்து சந்தோஷப்படறதோ எதுவுமே கிடையாது. ஏதோ சொந்த மாக கம்பெனி நடத்தறாருன்னு எங்கப்பா கொடுத்தாரு. காலைல ஆறு மணிக்கு போயிடுவாரு. ராத்திரி பதினோரு மணிக்கு தான் வருவாரு. கம்பெனி அஞ்சு மணியோட க்ளோஸ். பதினோரு மணி வரைக்கும் என்ன வேலை தெரியாது.

''அதே மாமனார் எட்டு மணிக்கு போவாரு. அஞ்சு அடிச்சா டான்னு வீட்டிலே இருப்பாரு.''

செல்வி அதிசயித்தவளாய் அவளையே பார்க்கிறாள். ''நீ அப்ஜக்ட் பண்ண வேண்டியது தானே. உங்கப்பா இப்படி இருக்கும் போது நீயும் ஒழுங்கா நேரத்துக்கு வான்னு சொல்ல வேண்டியது தானே.''

''சொல்லாமலா இருப்பேன். கெஞ்சி பார்த்தேன். கொஞ்சி பார்த்தேன். சண்டையும் போட்டாச்சு. எதுக்குமே மசியலே. எனக்கு பிடிச்சதை நான் செய்யறேன். என் இஷ்டப்படிதான் இருப்பேன்னுட்டாரு. என்ன செய்ய?

''எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை.'' என்ற செல்வியிடம் ''ஆமா உன் லைப் எப்படி இருக்கு?''

ஒரு நிமிடம் மௌனம் சாதித்தவள், பின் ''பேசாம பிரிஞ்சுடலாமான்னு தோணுது.''

''என்னடி சொல்றே?'' பதறுகிறாள் சுமதி.





# 3

''குடிக்கறாரா? சிகரெட் பிடிக்கறாரா? இல்லை வேற விதமா தப்புதண்டா பண்றாரா?''

''எதுவுமே இல்லை.''

''பின்னே?''

''என்னை ரொம்ப குழந்தையா டிரீட் பண்றாரு.''

''குழந்தையா டிரீட் பண்றதுக்காகவா இப்படி பேசறே? என்னடி?''

''எதைச் சொல்றது?''

''நீ பேசறதே புரியலை.''

''உனக்கு ஒண்ணும் தெரியாது, தெரியாதுன்னு சொல்லிட்டு எல்லா வேலையும் அவரே செய்வாரு. துணி மடிக்கற வேலையிலிருந்து, தேய்த்த சாமானை எடுத்து வைக்கறவரைக்கும் எல்லாமே அவர்தான் செய்வாரு.''

''பரவாயில்லை. அப்படிக் கூட உதவி செய்யற ஆம்பிளைங்க இருக்காங்களா? ஆச்சரியம் தான்.''

''என்னடி கேலி செய்யறே? அது உதவி அல்ல. உபத்ரவம். உனக்கு ஒண்ணும் தெரியாது, தெரியாதுன்னு சொல்லிட்டு தான் செய்யறது பெரிய உதவியா என்ன?''

''என்ன பேசற நீ நல்லதைக் கூடவா தப்பா சொல் லுவே?''

''நல்லது இல்லே. இது என் இரண்டாவது குழந்தை. உனக்குத் தெரியும்னு நினைக்கிறேன். முதல் பொண் ணுக்கு மூணு வயசாகுது. அப்பாகிட்டே தான் இருக்கும். ஏன்னா அப்பா தான் சாப்பாடு ஊட்டுவார், குளிப்பாட்டு வார், தலையை வாரிவிடுவார். அதனால.''

''என்ன சொல்றே நீ?''

''ஆமாம்டி குழந்தைக்கு பர்பெக்டா பண்ணனுமாம். அதனால எல்லாத்தையுமே எங்க வீட்டுக்காரர்தான் செய்வார். என் குழந்தைக்கு, என்கிட்டே பாசமே இல்லை. அவளுக்கு அப்பா இருந்தா மட்டும் போதும். இப்பபாரு இந்த குழந்தையை பெத்துட்டு நான் அஞ்சு மாசம் கழிச்சு தான் புகுந்த வீடு போவேன். அதுவரைக்கும் என் குழந்தை யின் குரலைக் கூட கேட்க முடியாது. முகத்தையும் பார்க்க முடியாது,'' சொல்லிவிட்டு வருத்தப்பட்டு குலுங்க குலுங்க அழுகிறாள் செல்வி.

சுமதிக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. கடவுள் படைப்பில் என்னெல்லாம் விசித்திரம் இருக் கிறது, செல்விக்கு அவளை ஓவராக கவனித்து அவளை சிறுமைப்பட்டு போகும்படி செய்கிற கணவன், அதே தனக்கு? இருக்கிறாளா? இல்லையா, என்று கவனிக்க விருப்பமில்லாத கணவன், எது நடக்கிறதோ அது நடக் கட்டும். நம்மால் என்ன செய்ய முடியும்? பின் செல்வி யிடமிருந்து விடை பெற்ற பின் தன் வீட்டிற்கு தந்தை சகிதம் செல்லுகிறாள்.

உள்ளே நுழையும்போதே மாமியார் இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்தபடி அனத்துவது தெரிந்தது.



''என்னாயிற்று?'' மாமனார் வாசலில் அமர்ந்து தன் நண்பரோடு சுவாரசியமாக பேசிக் கொண்டிருந்தார். மரியாதை நிமித்தம் அவர் முன் நின்ற தந்தையிடம் கூட சரியாக பேசவில்லை. கணவன் என்ற பிறகுருதியைக் காணவே இல்லை. மாமியார் கண்விழிக்கக் கூட கஷ்டப் பட்டு கிட்டத்தட்ட மயக்க நிலையில் படுத்து இருந்தாள். சுமதி விறுவிறுவென்று உள்ளே சென்று பார்க்கிறாள். உள்ளே எல்லாமே காலியாக இருந்தது. காலையில் சாப்பாடு செய்ததற்கான அடையாளமே தெரியவில்லை. சற்று அதிர்ந்துதான் போனாள். மாமியார் எப்போதிலிருந்து இப்படி படுத்துக் கொண்டிருக்கிறார். மாமனார் வீட்டில் ஒன்றுமே நடவாததுபோல் நண்பனிடம் வெட்டி அரட்டை அடித்துக் கொண்டிருக்கிறார். கணவன் அவன் நல்ல நாளிலேயே நேரத்திற்கு வீட்டிற்கு வர மாட்டான். ஐந்து மணிக்கு கம்பெனியை மூடினால் இவன் இரவு பத்து மணிக்குதான் வீட்டிற்கே வருவான். திருமணம் ஆகி பல மாதங்கள் ஆகிவிட்டதல்லவா இப்போதெல்லாம் பெண் டாட்டியிடம் பயமே விட்டுப் போனது. கல்யாணமான புதிதிலாவது ஒரு எட்டுமணிக்கு வந்துவிடுவான். இப்போதெல்லாம் பழையபடி பதினோரு மணிதான். தான் இருக்கும்போதே இப்படித்தான் வருவான். இப்போது இன்னும் அவுத்துவிட்ட கழுதைதான். கணவன் மேலும், மாமனார் மேலும் எக்கச்சக்க கோபம் வந்தது. விறுவிறு வென்று வாயிலுக்கு வருகிறாள்.

''மாமா அத்தை உடம்புக்கு என்ன? எப்பலேர்ந்து இப்படி படுத்துகிடக்கறாங்க.'' சற்று படபடப்புடன், எரிச்சலுடன், லேசான கோபத்துடனும் கேட்கிறாள்.

''நேத்து ஏதோ ஜுரம்னு படுத்துகிச்சு. எல்லாம் சரியாயிடும்.'' என்றவாறே நண்பனிடம் பேச, சுமதியின்

தந்தை சற்று தயங்கியவாறே உள்ளே வந்து மயங்கிய வாறே படுத்து இருக்கும் சம்பந்தி அம்மாளை பார்த்து விட்டு மெல்ல ஊருக்கு இறங்கிச் சென்றுவிட்டார்.

மடமடவென்று ஒரு குழம்பு கறி என்று சமையலைச் செய்துவிட்டு புழுங்கரிசியை மிக்ஸியில் உடைத்து கஞ்சிபோட்டு வைத்துவிட்டு மாமியாரின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தவள், சுடுவதைப் பார்த்து மடமட வென்று கடைக்கு இறங்கிச் செல்கிறாள். நல்லவேளை அப்பா வீட்டிற்குச் சென்றுவிட்டு வந்ததால் பர்ஸில் பணம் இருக்க, ஓடிப்போய் க்ரோஸின் வாங்கி கொண்டு வந்தாள். முதலில் மாமியார் கண் திறக்கட்டும். பிறகு டாக்டரிடம் அழைத்துச் செல்வோம்.

''அத்தை வாயைத் திறங்க,'' தூங்கிக் கொண்டிருந்த வளைத் தட்டி எழுப்பி க்ரோஸின் போட்டு வாயில் சுடு தண்ணீர் விட்டு, வேலைகளை முடித்து விட்டு மாமி யாரின் அருகில் அமர்ந்து கொள்கிறாள்.

ஒரு அரை மணிநேரத்தில் சுரம் சுத்தமாக விட்டுப் போக மாமியார் மெதுவாக கண்ணைத் திறந்தவள் பலவீனமாகப் பார்க்கிறாள்.

''அத்தை எதனாச்சும் சாப்பிடறீங்களா? பிரட் வாங் கிட்டு வரட்டுமா?''

''நான் அதெல்லாம் சாப்பிட மாட்டேன். எனக்கு பிடிக் காதும்மா.''

''வயத்துக்கு ஏதனாச்சும் சாப்பிட்டீங்களா இல்லையா? இந்தாங்க கஞ்சி போட்டு வச்சிருக்கேன் சாப்பிடுங்க.'' மருமகளின் வார்த்தைகளில் கண்கலங்கிப் போகிறாள். மாமியார் கொடியவள், கடின மனது உடையவள் என்று யார்



சொன்னார்கள்? எதைக் கொடுக்கிறோமோ கட்டாயம் அதுதான் நமக்கு திரும்பி வரும். இங்கே அன்பைக் கொட்டினால் அன்பு அல்லவா திரும்பி வரும். மரு மகளின் அன்பிலே மாமியார் நெகிழ்ந்து உருகுகிறாள்.

''ரொம்ப நன்றிம்மா.'' கஞ்சியைக் கூட குடிக்கமாட் டாமல் அழுகிறாள்.

''முதல்ல சாப்பிடுங்க அத்தை. அதெல்லாம் அப்புறம் பேசலாம்.'' மாமியாருக்கு கஞ்சியைக் கொடுத்துவிட்டு, இரவு படுக்கும் முன் பாலையும் கொடுத்து படுக்க வைக் கிறாள்.

அடுத்த நாள் மாமியார் எழுந்து சுறுசுறுப்பாக வேலை செய்கிறாள். மருமகளுக்கு பிடித்தவை என்னென்ன என்று கேட்டு தெரிந்து செய்கிறாள். ''இன்னும் கொஞ்சம் போட்டுக்கம்மா.'' வற்புறுத்தி சாப்பிடச் செய்கிறாள். மகனை விட மருமகளுக்கு, மருமகளுக்கு என்று விழுந்து விழுந்து செய்கிறாள். ஒரு ஆரோக்கியமான நட்பு அங்கே மலர வீடே சொர்க்கமானது.

நேரம் கழித்து வரும் மகனைக் கடிந்து கொள்கிறாள் தியாகுவின் தாய் மங்கை.

''ஏண்டா. அந்தப் பொண்ணு பாவம் முழுகாம வேறு இருக்கு. கொஞ்சம் சீக்கிரம் வரக்கூடாதா? மருமகளை நல்ல படியா வச்சுக்கக் கூடாதா?''

''சே! ஆரம்பிச்சிட்டியா?'' எரிச்சலோடு உள்ளே செல் கிறான் தியாகு.

''என்ன அம்மாவை கைக்குள்ளே போட்டுகிட்டு என்னை அடக்கணும்னு பார்க்கறியா? இதபாரு நான் என் இஷ்டப்படிதான் இருப்பேன்.'' மனைவியிடம் கொக் கரிக்கிறான் தியாகு.

திருமணம் ஆன முதல் நாள் வெட்கப்பட்டு தன்னைப் பற்றி உளறிய தியாகுவா இவன்? ஆறுமாதத்திற்குள் வாழ்க்கையில் சலிப்புதான் ஏற்பட்டது.

வாழ்க்கையில் அன்பு, அரவணைப்பு ஆறுதல் வார்த்தைகள், உல்லாசங்கள் எல்லாமே வாழ்க்கையை வெற்றிகரமாகவும், சந்தோஷமாகவும் வைத்துக் கொள்ள மிக மிக அவசியம். பெண்களுக்கு சுதந்திரம் என்பது இப்போதுதான். இப்போது மிக மிக அதிகம்தான். ஆனால் முப்பது வருடத்திற்கு முன்பு கணவன், குடும்பம் குழந்தைகள் என்ற வட்டத்தில்தானே அவள் இருந்தாள். அன்று வேலைக்குப் போகும் பெண்ணாக இருந்தாலும் சம்பளத்தை அப்படியே கணவன் கையில் தந்துவிட்டு, ஒன்று, அரை என்று வாங்கிக் கொண்டு போகும் பெண் கள் ஏராளம்தான். வேலைக்குப் போகும் பெண்களுக் காவது வேலைக்கு போகும் நேரம் சற்று விடுதலைதான். ஆனால் வீட்டில் இருக்கும் பாவப்பட்ட ஹவுஸ் வைப் என்ற பெண்களின் நிலை. கணவன் சரியில்லை என்றால் அவள் நிலை என்ன?

இங்கே வந்த ஆறுமாதங்களுக்குள் வீட்டின் நிலைமை நன்றாகப் புரிந்தது. பெண் என்பவள் வேலை செய்து கொண்டே இருப்பாள். ஆணுக்காக படைக்கப்பட்ட ஜீவன் அவள். அவளுக்கு என்று எந்த தனித்திறமை களும் இருக்கக்கூடாது. எது இருந்தாலும் அது குடும் பத்துக்கு உதவுவது போல்தான் இருக்க வேண்டும். கல்லூரியில் படித்த சுமதிக்கு தூக்கிவாரித்தான் போட்டது. வாழ்க்கை இப்படிக் கூட இருக்க முடியுமா? பொண்டாட் டியை லட்சியமே செய்யாத கணவன். எப்போதுமே தேவை இருக்கிறதோ இல்லையோ வேலை, வேலை



என்று ஓடிக்கொண்டே இருக்கும் கணவன். வந்த ஆறு மாதத்திற்குள் திருமண வாழ்க்கை ரொம்ப ரொம்ப சலித்துதான் போனது.

காலம் எதற்கும் நிற்காமல் தன் பாட்டிற்கு ஓடிக் கொண்டே தான் இருக்கிறது. ஆயிற்று சுமதிக்கும் பேறு காலம் வந்தது. ஒன்பதாம் மாதம் அம்மா வீட்டிற்குப் புறப்பட்டு போனாள். அழகான பெண் குழந்தை ஒன்று பிறந்தது. கணவன் வரவில்லை. பத்தாம் நாள் மாமியார், மாமனார் வந்து புண்ணியாசனம் நடத்தி விட்டுப் போனார்கள்.

''அத்தை அவங்க வரலியா?'' அவனைப் பற்றி கேட்கக்கூடாது என்று நினைத்த வைராக்யம் உடைந்து போனது.

பேறு காலத்திற்கு வீட்டிற்குப் போனபோது இவ ளுடைய இன்னொரு அக்கா, சமீபத்தில் திருமணமான தங்கை எல்லாருடைய வீட்டுக்காரர்களும் டெலி போனில் தொடர்பு கொண்டபடி மனைவியிடம் பேசினார் கள். அக்காவின் வீட்டுக்காரர் மூன்று நாளைக்கு ஒரு முறையும், புதிதாக திருமணம் ஆன தங்கையின் வீட்டுக் காரர் தினமும் தொலைபேசியில் தொடர்பு கொள்ள, புறப்பட்டு வந்த நாளிலிருந்து 'எப்படி இருக்கிறாய்?' என்று கூட கேட்காத கணவன் மேல் வெறுப்பு வந்தது. இவளும் வீம்பு பிடித்து தானும் தொடர்பு கொள்ளாமல் இருந்தாள். ஆனால் குழந்தை பிறந்த பின்பும் கணவன் வந்து பார்க்கவில்லை என்றதும் மனது தாளாமல் துடித்தது. கட்டுப்பாடு தளர்ந்தது. மனதில் இருந்த வேதனை துக்கம் எல்லாவற்றையும் அடக்கிக் கொண்டு கணவனைப் பற்றி மாமியாரிடம் கேட்கிறாள்.

''அதையேம்மா கேக்கறே? கம்பெனிக்கு ஏதோ மிஷின் வாங்கணும்னு போன வாரமே எங்கோ போயிட்டான். ஒரு வாரம் ஆச்சு. எங்க இருக்கான், எப்படி இருக்கான்னு ஒண்ணுமே தெரியலே. நான் துடிச்சுகிட்டு இருக்கேன். இப்பதான் உனக்கு குழந்தை பிறந்திருக்கு. உன்கிட்டே சொல்லி உன்னை வருத்தப்பட வைக்கக் கூடாதுன்னு தான் சொல்லலை.'' மாமியார் சொல்ல, சொல்ல விக்கித்துப் போனாள் சுமதி.



# 4

மனம் அதிர்ச்சியில் ஆழ்ந்தது. தொண்டையில் ஏதோ பந்து போல் அடைத்தது. வயிற்றை என்னமோ செய்தது. சட்டென்று கண்களில் இருந்து கண்ணீர் வர, மெளன மாக அழுகிறாள். லட்சியம் செய்யாதவன்தான். பெண் டாட்டி என்றால் தூக்கிப்போடுபவன். அவன் மேல் ஆத்திரம், கோபம் எல்லாம் வந்தாலும் அவனுக்கு ஒன்று என்றதும் உடலும் உயிரும் கலங்கிப் போய்விடுகிறது. தாங்கமாட்டாமல் துக்கம் வந்துவிடுகிறது.

''அத்தை என்ன அத்தை இப்படி சொல்றீங்க? மாமாவை விட்டு எந்த கம்பெனி எந்த இடம்னு விசாரிக்க சொல்லக்கூடாதா?'' இக்காலத்துப் போல் செல்போன் வசதியற்ற காலம் அது.



''அவரும் அலைஞ்சுகிட்டு தாம்மா இருக்கார். இவன் என்ன பிள்ளைம்மா ஒரு போன் போட்டு சொல்லலாமே. இரண்டு வாரமா சோறு இறங்கலே. தண்ணி இறங்கலே. எத்தனை நேரம் அழுகறது சொல்லு. கோவிலுக்குப் போய் நெய் விளக்கு போட்டுட்டு வேண்டிகிட்டு வந் தேன். வேற என்ன பண்ண முடியும் சொல்லு?'' மாமி யாரும் மருமகளும் ரகசியமாக அழுதார்கள்.

''சரி... பிள்ளை பெத்த உடம்பு. அழுவாதேம்மா. நாம் பெத்த பிள்ளை தான். ஆனா உதவாக்கறை. எங்கியானும் திரிஞ்சுகிட்டு கெடப்பான். வந்திடுவான். வந்தவுடனே குழந்தையைப் பார்க்க அனுப்பி வைக்கறேன். கவலை படாதேம்மா.'' மாமியாரின் அனுசரணை மனதைத் தொட்டாலும், கொண்டவன் சரியில்லாதது ஆத்திரத்தை அளித்தது. தன்னை மட்டும் அப்பா ஏன் இப்படிப்பட்ட இடத்தில் திருமணம் செய்து கொடுத்தார். ஏழையாக இருந்தாலும் நல்லவனாக பார்த்து தன் திருமணத்தை முடித்திருக்கக் கூடாதா?

கணவனுடன் இருந்த இந்த ஆறு மாதத்தில் கண வனின் யோக்யதை நன்றாகவே புரிந்தது. ஓயாமல் பேசும் ரகம். அதுவும் பெண்கள் வந்துவிட்டால் போதும். வயது வித்தியாசமே வேண்டாம். வாயை மூடவே மாட்டான். திருமணம் ஆகி ஒரு மாதம் வரை தன்னிடமும் சளைக் காமல் பேசி இருக்கிறான். மோகம் முப்பது நாள் தான். சொல்லி வைத்த மாதிரி முப்பதாவது நாளே எல்லாமே தீர்ந்து போனது. அதன் பிறகு எல்லாம் அரை வார்த்தை, ஒரு வார்த்தை தான் பேசுவான்.

''என்னங்க இப்ப எல்லாம் எங்கூட பேசக் கூட மாட் டேங்கறீங்க?'' கொஞ்சலாகக் கேட்ட போது,

''என்னத்தை பேசறது?'' என்றான். ஆனால் மற்ற வர்கள் யார் வந்தாலும் ஆணோ, பெண்ணோ ஓடி ஓடிப் போய் பேசுவான். மணிக்கணக்காக பேசுவான். எத் தனையோ முறை பார்த்து மனம் நொந்து சண்டை போட்டிருக்கிறாள்.

சண்டை போடப்போட அவர்களுக்குள் பேச்சு குறைந்தே போனது. எப்போதாவது ஒரு இரண்டு நாட்கள், மூன்று நாட்கள் அம்மா வீட்டிற்குப் போனால் ''ஏங்க அங்கெல்லாம் எந்தங்கச்சிக்கும் அக்காவிற்கும் எத்தனை போன் வருது தெரியுமா? நீங்க தான் ஒரு தடவை கூட போன் செய்ய மாட்டேங்கறீங்க?''

வருத்தத்தோடு பேசினால், கேட்டுக்கொண்டு பதில் பேசாமல் எழுந்து போய் விடுவான்.

இந்த மனம் இருக்கிறதே. அது மிக மிக விசித்திர மானது. யாரை நினைக்கக் கூட கூடாது என்று நினைக் கிறோமோ அவரை மறக்கவே முடியாமல் திண்டாடு வோம். அதுவும் பெண் மனம் இன்னும் அலைகடலில் மிதக்கும் துரும்புபோல் அலைபாயும்.

மாமியார் சொல்லிவிட்டுப் போனதிலிருந்து மனம் அலைபாய்ந்தது. சரியாக சாப்பிடப் பிடிக்கவில்லை. தூங்கப் பிடிக்கவில்லை. பெற்றோர் பார்க்காத போது குழந்தையைக் கட்டிக் கொண்டு ரகசியமாக அழுகிறாள்.

''என்னடி உங்க மாமியார் பொறுப்பில்லாதவளா இருக்கா. குழந்தைக்கு பேர் வைக்கணும்னா, அப்பா இல்லாம செய்வாங்களா? முக்கியமான வேலை அதுதான் போயிருக்கான் வந்திடுவான்னு சொல்றாங்க. எனக்கென் னவோ உங்க மாமியார் மேலே தான் சந்தேகமா இருக்கு.



இப்படிக்கூட யாராவது தாய் இருப்பாங்களா?'' அம்மா வெடிக்கிறாள்.

பெண்ணைப் பெற்றவர்கள்தான். எல்லாவற்றையும் பொறுத்துப் போகிறவர்கள்தான். இருந்தாலும் ஒரு தவறு என்று வரும்போது சம்பந்தி மேல் போட்டு தவற்றை மொத்தம் அவள் தான் செய்தாள் என்று போட்டு தாக்க மனம் துடிக்கிறது. வாயில் வந்தபடி சுமதியின் அம்மா சுமதியின் மாமியாரை தூஷிக்கிறாள்.

''அம்மா பிளீஸ் யாரைப் பத்தியும் தப்பா பேசாதே.''

''ஆமாண்டி பொல்லாத மாமியார், அவ கண்ணாடியும், அவளும் மூஞ்சியும்...''

முக்கால்வாசிப் பெண்கள் கெட்டுப் போவதற்கே அவர்களின் தாயார்தான் காரணம். தவறான அறிவுரை பெண்களையும் தவறான வழியில் அல்லவா தூண்டிவிடு கிறது.

''ஏய் செல்லம் வாயை மூடிகிட்டு இருக்க மாட்டே?'' அவ மாமியார் எப்படி இருந்தா நமக்கு என்ன? மாப் பிள்ளையை அனுப்பி வச்சா போதும். ஏதானும் வாயால கொட்டி நிலமையைப் பெரிசு படுத்திடாதே.'' சுமதியின் தந்தை எச்சரிக்கிறார்.

ஆனால் சுமதிக்கு மாமியாரின் நிலைமை நன்றாகவே புரிந்தது. மாமியாரும் தன்னைப்போல் ஒரு பரிதாபமான ஒரு ஜீவன் தான். ஏனென்றால் தன் மாமனாரும் அந்த ரகம் தான். ஒரு முறை உடல் நிலை சரியில்லாமல் மாமியார் படுத்துக் கொண்டபோது, மாமியார் அனாதை யாகக் கிடந்ததும் ஞாபகத்திற்கு வந்தது.

''ஏம்மா உடம்பு சரியில்லைன்னா ஏதனாச்சும் மருந்து சாப்பிட மாட்டீங்களா?''

''இல்லைம்மா நாங்க எல்லாம் இங்கிலீஷ் மருந்து சாப்பிடமாட்டோம். நாட்டு மருந்துதான்.''

''ஏம்மா அதுவாவது மாமாவை வாங்கிட்டு வரச் சொல்லி இருக்கலாம் இல்லே.''

''நாட்டு வைத்தியர் ஊருக்கு போயிருக்காரு. உங்க மாமா போய் பாத்துட்டு வந்தாரு. எப்பவுமே அந்த வைத் தியர் சொன்னா வீட்டுக்கு வந்திருவாரு. என்ன செய்ய என் தலையெழுத்து.'' மாமியார் அலுத்துக் கொண்டதும் ஞாபகத்திற்கு வந்தது.

ஒரு வைத்தியர் இல்லையென்றால் வேறொருவரை வைத்தாவது நோயை சரி செய்திருக்கக் கூடாதா? மாமியார் நினைவிழந்து படுத்திருக்கும் போது, மாமனார் வாசலில் அரட்டை, இவர்களின் பிள்ளை மட்டும் எப்படி இருக்கும்? எல்லாம் நான் செய்த பாவம் நினைத்துக் கொள்கிறாள் சுமதி.

மனம் மறுகிக் கொண்டது. கவலை உள்ளத்தை உருக்கியது. வாழ்க்கையில் பிரச்சனைகள் என்பது பூதாகர மாக மனதை சின்னா பின்னமாக அல்லவா உடைத்து விடுகிறது. தலையெழுத்து தான். பெண் பிறந்த மகிழ்வு கூட இல்லாமல் சற்று சோகமாகவே இருந்தாள் சுமதி.

சரியாக மூன்று மாதம் கழித்து, எதிர்பார்த்து, எதிர்பார்த்து சலித்துப் போய் இருந்த போது கணவன் வந்தான்.

அன்று குழந்தை துணியை துவைக்கும் வேலைக்காரி வரவில்லை. சுமதியே எழுந்து குழந்தையின் மூத்திரத்



துணிகளை துவைத்து டெட்டால் போட்டு காய வைத்து விட்டு, திரும்பும்போது விறுவிறுவென்று உள்ளே வரு கிறான் கணவன் தியாகு.

''என்ன குழந்தை என்ன செய்யுது?'' என்றவாறே குழந்தையை எட்டிப் பார்க்கிறான். சுமதியின் முகத்தில் எள்ளும், கொள்ளும் வெடித்தது.

முகத்தை ஒரு கோபத்தோடு திருப்பிக் கொண்டாள்.

''என்ன சுமதி..'' என்றவாறே அவளருகில் வந்து அமர்ந்து அவளின் தோளில் கை வைக்கிறான்.

''விடுங்க.''

''என்னடா கோபம்?''

''கோபமா? என்ன கோபம்னா கேக்கறீங்க? உங்களுக்கு வெக்கமா இல்லை. நீங்க எல்லாம் என்ன மனுஷங்க? பிள்ளைக்கு பேர் வைக்கறதுக்கு அப்பா இல்லாம இருக்க லாமா? எங்க சொந்தக்காரங்க எல்லோருமே காறித்துப் பிட்டாங்க.''

''தப்பா நினைக்காதேப்பா. வேலை அப்படி, மிஷி னரிங் வாங்கணும்னு போய் மாட்டிக்கிட்டேன். வரவே முடியலே.''

''ஆமா பொல்லாத வேலை...''

''சரி.. சரி.. குழந்தை முழிச்சிகிட்டு இருக்கா? தூங் குதா?''

''ஆமாம்.. குழந்தை மேலே பொல்லாத பாசம்.''

அதற்குள் அவளுடைய தந்தையும், தாயும் வந்துவிட ஒன்றும் பேச முடியவில்லை. அன்று அங்கேயே இருந்து

விட்டு, சாப்பிட்டுவிட்டு அடுத்த நாள் மதியத்திற்கு மேல் தான் புறப்பட்டான்.

''போய்ட்டு நமக்கு என்னன்னு இருக்காதீங்க. பாருங்க எங்கக்காவுக்கும் தங்கைக்கும் போன் வந்துகிட்டே இருக்கு. கொஞ்சம் போன் பண்ணுங்க. நான் மட்டும் அனாதையாட்டம் இங்கே கிடக்கிறேன். புருஷன் கைவிட்டவளாக நான் நினைச்சுக்கறேன். மனசு ரொம்ப வேதனைப்படுது.''

''சரி.. சரி கட்டாயம் செய்யறேன்.'' சொல்லிவிட்டு சென்றவன் சென்றவன் தான்.

ஐந்தாம் மாதம் ஒரு நல்ல நாள் பார்த்து பெண்ணை அழைத்துக் கொண்டு அவளின் மாமியார் வீட்டில் விட்டு வந்தார் தந்தை. குழந்தை ரேகாவிற்கு வாய்கொள்ளாத சிரிப்புதான். வேற்று முகம் இல்லாமல் எல்லோரிடமும் தாவியது. வாய் கொள்ளாத சிரிப்பு வேறு. கோலி குண்டு கண்கள், சற்று குண்டான கன்னங்கள், சற்றே எழும்பிய குட்டி மூக்கு, சொப்புவாய் தான். இருந்தாலும் பார்த்தவரை எல்லாம் பார்த்து சிரிக்கும் பொக்கைவாய். பார்ப்பவரை எல்லாம் பரவசப்படுத்தியது.

தியாகு அன்று எங்குமே போகாமல் வீட்டிலே இருந் தான். சுமதிக்கு கோபமான கோபம்தான். அத்தனை தூரம் சொல்லியும், ஒரு போன் கூட செய்யவில்லை. இந்த மனிதனுடன் பேசக் கூடாது. மாமியார், மாமனாரிடம் பேசியவள், குழந்தை வேலைகளை கவனித்தவள், கணவனைப் பாராதது போல் போகிறாள். கணவன் ''சுமதி, சுமதி'' என்று கூப்பிட்டும் லட்சியம் செய்யவில்லை.



அன்று இரவு அறைக்கு வந்த போது ஆசையோடு தோளைத் தொடுகிறான் கணவன். ''விடுங்க. நீங்க எல்லாம் மனுஷனா?'' சீறி விழுகிறாள் சுமதி.

''என்னம்மா ஆச்சு கோபம்?'' என்ற தேனொழுக தியாகு பேச, ''குழந்தையைப் பாக்க வந்தீங்களே. எத்தனை முறை போன் பண்ணுங்கன்னு சொன்னேன் செய்தீங்களா? என்னைத் தூக்கி போடறீங்க இல்லே.'' கேட்டுவிட்டு பிழிய பிழிய அழுகிறாள் சுமதி.

''சுமதி.. சுமதிக் கண்ணா, அப்படியெல்லாம் இல் லைடா. ஏதோ தெரியாம செய்துட்டேன்டா. என் கண்ணு இல்லே.'' சுமதியின் கைகளை தன் கழுத்தில் போட்டுக் கொண்டு மனைவியை நெருங்கி அணைத்துக் கொள் கிறான் தியாகு.

''சீ.. விடுங்க..'' திமிறும் சுமதியை சமாதானப்படுத்து கிறான் தியாகு.

''சரி.. சரி.. சாரி சாரி.''

அவளின் எதிர்ப்புகள் பயனற்றுப்போக, பெருமூச்செறி கிறாள் சுமதி. கணவன் மிக மிக சுயநலவாதி என்று நன்றாகத் தெரிகிறது. ஆனால் என்ன செய்ய முடியும்? யோசிக்கையில் மனதின் இன்னொரு மூலை அவளை இடித்தது. கணவனோடு இருக்கும் நேரமே மிக மிக கொஞ்சம். இருக்கும் நேரத்தை சந்தோஷமாக இருக்காமல் இது என்ன அசட்டுத்தனம்? வாழும் போது அந்தந்த நிமிடத்தை வாழ்ந்து விட வேண்டும். அடுத்த வினாடி என்ன நடக்கும் என்பது யாருக்குமே தெரியாது.



# 5

ஆயிற்று. குழந்தை ரேகாவிற்கு ஒண்ணரை வயதாகும் போதே வயிற்றில் ஆறு மாதம். இதில் மாமியார் வேறு உடம்பு உடம்பு என்று படுத்துவிட, மாமியார், மாமனார், புருஷன், குழந்தை இவர்களை கவனிக்கவே நேரம் சரியாக இருந்தது. ரேகா சற்று துறுதுறுப்பான குழந்தை. நாளுக்கு நாள் குழந்தைகள் சாமர்த்திய சாலிகளாகவும், அதிதீய புத்திசாலித்தனம் உள்ளவர்களாகத் தானே பிறக்கிறார்கள். சற்று ஏமாந்தால் கேஸை திருப்பிவிட்டு ஓடிவிடும். கொஞ்சம் கவனிக்கவில்லை என்றால் புத்தகம் படிக்கிறேன் பேர்வழி என்று கணவனின் கம்பெனி கணக்கு புத்தகங்களை கிழித்துப் போட்டு விடுவாள். தொட்டியில் நிரப்பி வைத்திருக்கும் தண்ணீரை ஒரு சின்ன டம்ளரில் மொண்டு, மொண்டு கீழே கொட்டிவிடுவாள்.

''குழந்தை தொட்டியிலே விழுந்துடப் போவுது ஓடு'' என்பார் மாமியார், வாய் கொள்ளாத பேச்சு பேசும் குழந்தை.

''அப்பா ஆபீஸிலிருந்து எப்ப வருவாங்க?'' என்பாள்.

''எந்த ஆபீஸிற்கு போறாங்க?'' என்றெல்லாம் கேள்வி மேல் கேள்வி கேட்கும்.



''பயங்கர புத்திசாலி குழந்தை.'' மாமியார் கற்பூரத்தை ஏற்றி திருஷ்டி சுத்திப்போடுவாள்.

அம்மா வீட்டிற்குப் போகலாம் என்றால் ''குழந்தையை விட்டுப்போ'' என்கிறார் மாமியார். குழந்தையைப் பிரிய மனமில்லாமல் வேலை, வேலை, வேலை என்று சதா வேலையில் மூழ்கி உடம்பைக் கூட கவனித்துக் கொள்ளாமல் இருந்தாள் சுமதி.

மாமியார் சற்று எழுந்தால் உடனே, ''ஏம்மா ஏதானும் சாப்பிட்டியா காபி குடிக்கிறியா, இல்லை ஓவல் டின் கரைச்சு கொடுக்கட்டுமா'' என்பார்.

''வேண்டாம் அத்தை எனக்கு எதுவுமே பிடிக்கலை.''

இப்போது இருப்பது போல் ஸ்கேன் வசதி, மாதா மாதம் செக் அப்போ, எதுவுமே இல்லாத காலம். அதுவும் இவள் குடியிருக்கும் டௌனில் ஒரே ஒரு பெண் டாக்டர் தான் உண்டு. கர்ப்பம் என்று உறுதி செய்ததுமே 'மூன்று மாதத்திற்கு ஒரு முறை வரும்படி பணித்தாள் டாக்டர்.

ஆயிற்று மூன்றாம் மாதம், ஆறாம் மாதம் போயாகி விட்டது. எப்படியும் ஒன்பதாம் மாதம் தான் கிளம்பிப் போகப்போகிறோம். போவதற்கு முன் டாக்டரைப் பார்த்து விட்டு கிளம்ப வேண்டியதுதான். ஆனாலும் குழந்தையை விட்டு தன் வீட்டிற்கு செல்ல மனம் ஒப்பவில்லை. பிறகு போய்க் கொள்ளலாம். தள்ளிப்போட்டுக் கொண்டே வருகிறாள்.

ஆனால் நாம் திட்டம் போடுகிறபடியும், நாம் நினைக்கும்படியா வேலைகள் நடக்கிறது. ஒன்பதாம் மாத ஆரம்பத்திலேயே காலை காபி கலக்கும்போதே, வயிற்றைச்

சுருக் சுருக்கென்று இழுக்க வலி ஆரம்பிக்க, கத்த ஆரம் பித்தாள் சுமதி.

கணவனும், பிள்ளையும் காலை நடை பயிற்சிக்கு சென்றுவிட கையைப் பிசைகிறாம் மங்களம்.

''அத்தை ஒரே வலி. தாங்கப் போகவே இல்லை. முடியவே இல்லை.'' அழுகிறாள்.

''சரி.. சரி இரும்மா'' என்றவள், ஒன்றரை வயது பேத் தியை இடுப்பில் வைத்தவாறே, கையில் இருக்கும் பைசாவை பர்ஸில் வைத்தவாறே துடிக்கும் மருமகளை அழைத்துக்கொண்டு கிளம்புகிறாள். ஆட்டோ எல்லாம் அப்போது அதிகம் கிடையாது. கஷ்டப்பட்டு குதிரை வண்டியில் மருமகளை ஏற்றுகிறாள்.

''ஆ.... ஐயோ....'' அவள் கத்தி அலற,

''கொஞ்சம் பொறுத்துக்கம்மா.'' சொல்லிவிட்டு வழக்கமாக பார்க்கும் டாக்டரின் நர்ஸிங் ஹோமுக்குச் சென்று மருமகளை சேர்க்கிறாள்.

கணவனும், பிள்ளையும் வந்து பூட்டிய கதவைப் பார்த்து விட்டு நிற்கப் போகிறார்கள். கணவனை, பிள்ளையை, மருமகளை நினைத்து உருகிப்போய் நிற் கிறாள் மங்களம்.

அடுத்த அரைமணியில் பிரசவம் ஆனது. இப்போது ஆண்பிள்ளை. மங்களம் ஆனந்தக்கண்ணீரே விடு கிறாள். சில நாட்கள் முன்னால் பிறந்ததால் குழந்தையை இன்குபேட்டரில் வைத்துவிட்டார்கள். கொஞ்ச நேரம் மருமகள் மயக்க நிலையில் விடுபடும் வரை இருந்து விட்டு பின் மருமகளிடம் சொல்லிக் கொண்டு ஒரு



நர்ஸை அங்கே துணைக்கு வைத்துவிட்டு வீட்டிற்கு ஓடுகிறாள் மங்களம். மணி எட்டரையைத் தாண்டி விட்டது. எட்டு மணிக்கு திரும்பி வந்து வாயிலிலேயே கணவனும், பிள்ளையும் நின்று கொண்டு இருக்கப் போகிறார்கள். விஷயம் தெரியாமல் தவிக்கப்போகி றார்கள். பயந்தபடியே ஓட்டமும் நடையுமாக ஓடுகிறாள்.

வீட்டின் முன்னே கையைப் பிசைந்தபடியே கணவன் நிற்க, பிள்ளை கோபமாக இங்கேயும், அங்கேயும் போய்க் கொண்டிருந்தான்.

''எங்கே போயிட்டீங்க?'' கத்துகிறான் தியாகு.

''என்னப்பா நீ கத்தறே? சுமதிக்கு திடீர்னு வலி வந்திடுச்சு. நீங்க யாரும் இல்லே. என்ன செய்ய? ஒரு குதிரை வண்டி பிடிச்சு வழக்கமா பார்க்கற நர்ஸிங் ஹோமுக்கு அழைச்சுகிட்டு போயிட்டேன். ஆம்பிளைப் பிள்ளை பிறந்திருக்குப்பா'' மகிழ்ச்சியோடு மங்களம் சொல்ல,

''ஓ.கே... இப்ப ரெண்டு பேரும் நல்லா இருக்காங் களா?''

''ரொம்ப நல்லா இருக்காங்க.''

மங்களத்தின் கணவன் சிரித்தபடி பேச ஆரம்பித்தார். மனைவியை அவசரப்படுத்துகிறார்.

''முதல்ல டிபனைக் கொடு. சாப்பிட்டுவிட்டு கிளம் பணும்.''

''என்னங்க பேரப்பிள்ளையை பாக்க வேண்டாமா?'' மங்களம் கெஞ்சலாகக் கேட்க,

''பேரன் பிறந்தா நான் பட்டினி கிடக்கணுமா?'' எகிறுகிறார் தியாகுவின் தந்தை பாஸ்கரன்.

''சரி.. சரி..'' என்றவள் உள்ளே சென்று குளித்து விட்டு உடை மாற்றி இட்லியை அவித்து எடுத்து, சட்னி அரைத்து கணவனுக்கும் பிள்ளைக்கும் தருகிறாள். வயிறு நிரம்ப சாப்பிட்டுவிட்டு, காபியைக் குடித்துவிட்டு இருவரும் கிளம்ப,

''என்னங்க எங்க கிளம்பிட்டீங்க?'' என்றவள்.

''ஏய் நீ எங்கடா போறே? குழந்தையை பாக்க வேணாமா? எங்க கிளம்பறே? இன்னிக்கு ஒண்ணும் கம்பெனிக்கு போக வேண்டாம். வாங்க குழந்தையை பார்க்க போகலாம். மருமக அங்க தனியா இருக்கு.''

''ஏய் நீ போ. எனக்கு முக்கியமான வேலை இருக்கு.'' கணவன் கிளம்ப.

''எனக்கும் இருக்கு.'' தியாகுவும் கிளம்பிப் போகிறான்.

''டேய் நீ இருடா. நீ எங்க போறே? குழந்தையைப் பாக்க வேண்டாம். ஆம்பளைப் பிள்ளைடா. பிள்ளையைப் பாக்கணும்னு ஆசை கூடவா இருக்காது? என்ன மனுஷன்டா.'' மங்களம் திட்ட, திட்ட கிளம்பிப் போகிறான் தியாகு.''

ஒரு நிமிடம் சற்று கலங்கிய கண்களோடு அவர்களையே பார்க்கிறாள் மங்களம். அடுத்த நிமிடம் 'இப்படிக் கூட உலகத்திலே உண்டா' முணுமுணுத்தவாறே மருமகளுக்கு பத்திய உணவு தயாரிப்பதில் ஈடுபடுகிறாள். இரண்டு பிளாஸ்கில் ஒன்றில் ஹார்லிக்ஸும், காபியும் கலந்து எடுத்துக் கொள்கிறாள். குடிக்கக் காய்த்து ஆற வைத்த தண்ணீர் இரண்டு பாட்டில்களில் எடுத்து வைத்துக் கொண்டு வேண்டிய துணிகளையும் எடுத்துக்



கொண்டு தானும் ஒருவாய் சாப்பிட்டுவிட்டு கிளம்பி விடுகிறாள்.

''அத்தை அவங்க வரலை. அவங்களுக்குத் தெரியுமா? மாமா வரலியா?''

''இல்லைம்மா ரெண்டு பேரும் காலையிலேயே கம்பெனிக்கு கிளம்பி போயிட்டாங்க. பக்கத்து வீட்டு தம்பிகிட்டே சொல்லி விட்டிருக்கேன். மதியம் ஓடி வந்திடுவாங்க.'' இயல்பாக பேசுவது போல் பேசுகிறாள்.

''நீ முதல்லே சாப்பிடு.'' இட்லியைத் தந்து ஹார்லிக்ஸைத் தருகிறாள்.

மருமகளோடு அமர்ந்து பேசி பூரித்தவாறே இன்குபேட்டரில் இருக்கும் பேரனைப் பார்த்து, பார்த்து இன்னும் பூரித்துப் போகிறாள். தன் மகன் கவனிக்காத குறை போக்க விழுந்து விழுந்து கவனிக்கிறாள்.

மதியம் மருமகளுக்கு பத்தியச் சாப்பாடு போட்டு விட்டு கொண்டு வந்திருந்த சாப்பாட்டை தானும் சாப்பிட்டுவிட்டு அங்கேயே மருமகளின் அருகில் தரையில் ஒரு பெட்சீட்டை விரித்து படுத்துக் கொள்கிறாள்.

அன்று மாலையும் வந்தது. கணவனும் வரவில்லை. மகனும் வரவில்லை.

''அத்தை அவங்களுக்கு விஷயம் தெரியுமா?'' மருமகள் கேட்டுக்கொண்டே இருக்கிறாள்.

''இரும்மா கொஞ்சம் காபியைக் குடிம்மா. இதுலே பிஸ்கட் வச்சிருக்கேன்.'' சாப்பிட்டுட்டு படுத்துக்க. நான் வீட்டிற்குப் போய் அவங்களுக்கு ஏதானும் ஆக்கி வச்சிட்டு அப்படியே கையோடு கூப்பிட்டுகிட்டு வரேன். தனியா இருப்பியாம்மா.''

நர்ஸிடம் ஸ்பெஷலாக சொல்லிவிட்டு கிளம்பிவிடு கிறாள். ''ஜாக்கிரதைம்மா. நான் சீக்கிரம் வந்துடறேன்.'' வீட்டுக்கு சென்றும் கணவனும், பிள்ளையும் வராததைக் கண்டு எரிச்சல் வந்தது. இரவு உணவை தயாரித்து விட்டு, வாயிலுக்கும் உள்ளுக்கும் அலைகிறாள். மறு படியும் கடைக்குப் போய் கணவனிடம் போனில் தொடர்பு கொள்ள முயலுகிறாள். கணவன் எங்குமே தட்டுப்படவில்லை. கணவனைத் தொடர்பு கொள்ளவும் முடியவில்லை.

ஆத்திரமும் கோபமுமாக வெளியே வருகிறாள். 'சே தன் புருஷன் தான் அப்படி என்றால் பிள்ளை அதற்கு மேல் இருக்கிறதே. ஆனாலும் புருஷன் ரொம்ப நேரம் ஆக்கமாட்டானே. எப்படியும் ஆறு மணிக்குள் வந்து விடுவான். இதுவரை ஏன் வரவில்லை?' மறுபடியும் இருப்பு கொள்ளாமல் தவிக்கிறாள். மருமகள் இரவு உண்பதற்கு ரொட்டிகளை வாங்கிக் கொள்கிறாள். 'சரி வரவில்லை என்றால் கிளம்பிவிடுவோம்.'

பக்கத்துவீட்டுப் பெண்ணிடம் சாவியைக் கொடுத்து விட்டு கணவரோ, பிள்ளையோ யார் வந்தாலும் நர்ஸிங் ஹோமிற்கு வரச்சொல்லி விட்டு சென்று விடுகிறாள்.

''அத்தை அவங்க வரலியா?'' மருமகள் கேட்க,

''வந்திடுவாங்க, சாப்பிட்டுட்டு வரச் சொல்லி இருக் கேன். பக்கத்து வீட்டுப் பெண்ணிடம் சாவி கொடுத் துட்டு வந்திருக்கேன்.''

''அத்தை எனக்கு நார்மல் டெலிவரி தானே. டாக்டர் கிட்டே நாளைக்கே கிளம்பலாமான்னு கேளுங்களேன்?'' மருமகள் தயங்கியவாறு கேட்க,



''டாக்டர் வரட்டும் கேட்டுடுவோம்.''

''டாக்டர்கிட்டே கேட்டேன். அத்தை நாளைக்கு சொல்றேன்னு சொல்லி இருக்காங்க. அப்புறம் அத்தை'' என்று தயங்குகிறாள் சுமதி,

''சொல்லும்மா....''

''வந்து டிஸ்சார்ஜ் ஆச்சுன்னா பணம் கட்டணும் அத்தை. டாக்டர் சொல்லச் சொன்னாங்க.''

''எத்தனைம்மா?''

''ஐயாயிரம்'' மருமகள் சொல்ல சொல்ல மலைத்துப் போனாள் மங்களம்.



## 6

''என்னம்மா சொல்றே ஐயாயிரமா?''

''ஆமாம்மா. ரூம் சார்ஜ். டாக்டர் சார்ஜ். ஆயிரத்து ஐநூறு ரூபாய்னு சொன்னாங்க. பிரசவம் ஆனதுனால அந்த இடத்துக்கும் கட்டணுமாம். அப்புறம் குழந்தையை இன்குபேட்டர்லே வச்சிருக்காங்க. ஒரு வாரமாவது இருக்கணுமாம். அப்புறம் டிரிப்ஸ் வேற ஏத்தினாங்க அத்தை.''

மங்களம் பேயடித்ததைப் போல் நின்று கொண்டிருக்க, ''இந்தக் குழந்தை இத்தனை சீக்கிரம் பிறக்கும்னு யாருக்கு அத்தை தெரியும்? இன்னும் கொஞ்சம் தள்ளி பிறந்

திருந்தா எங்க ஊர்லேயே வச்சிகிட்டு இருந்திருப்பேன். அப்பாவே பணத்தைக் கட்டி இருப்பாரு. எங்க ஊரிலே இத்தனை காஸ்டிலி இல்லை.''

மங்களம் எதுவும் பேசாமல் வெறித்தபடி இருக்க, ''அத்தை.. பிளீஸ் எப்படியாவது பணத்துக்கு ஏற்பாடு பண்ணுங்க. நான் அம்மா வீட்டுக்குப் போனதும் கட்டாயம் வாங்கி கொடுத்துடறேன்.'' சுமதி மெதுவாகக் கூற, சட்டென்று அவளின் கையைப் பற்றிக் கொள்கிறாள் மங்களம்.

''அதெல்லாம் ஒண்ணுமே இல்லை. ஆனா அத்தனை ரூபாய் எப்படி புரட்டறதுன்னு...''

மங்களம் கவலையோடு இருக்க, சுமதி கைகளைப் பற்றிக் கொண்டாள். ''அத்தை என்ன பண்ணப் போறீங்க?''

''நீ கவலைப்படாதே. எப்படியாவது சமாளிப்போம்.'' சொன்னாளே ஒழிய மங்களத்தை பெரும் கவலை பற்றியது. புருஷன் கம்பெனியை நடத்துகிறானே ஒழிய, மாதா மாதம் பெரும் பணம் எதுவும் தந்ததில்லை. அவ்வப்போது அரிசிக்குப் பணம், பருப்புக்கு, காய்கறிக்கு என்று அன்றன்று வாங்கிக் கொள்வதோடு சரி. தீபாவளியோ பொங்கலோ எது வந்தாலும் தவணை முறையில் விற்கும் புடவைக்காரனிடம் பணம் கட்டி புடவை வாங்கிக் கொள்வாள். அதையும் சிறுக, சிறுக கொடுத்து தான் அடைப்பாள். பிள்ளையும், புருஷனும் தங்களுக்கு கடைக்குப் போய் புதிதாக எடுத்துக் கொள்வார்கள். அவர்களுக்கு எங்கிருந்துதான் பணம் கிடைக்கிறதோ? வாழ்க்கை இப்படி ஓடிக் கொண்டு



இருக்கும் போது முழுவதாக ஐயாயிரம் ரூபாய் எங்கிருந்து தருவது? அத்தனை பணம் யாரிடத்தில் இருக்கும்? மருமகளை சமாதானப்படுத்த ஏதோ சொன்னாளே தவிர, மனது முழுவதும் இதே யோசனையில் இருந்தது.

அன்று சுமார் எட்டு மணிக்கு மங்களத்தின் கணவர், பாஸ்கரன் வந்திருந்தார். குழந்தையைப் பார்த்துவிட்டு சிறிது புன்முறுவல் செய்துவிட்டு மனைவியிடம் இருந்து வீட்டு சாவியை வாங்கிக் கொண்டு கிளம்பினார். ஆனால் தியாகு இருக்கும் சுவடே தெரியவில்லை. இரவு பதி னோரு மணி வரை அவன் வந்தே பார்க்கவில்லை.

இரவு வெகு நேரம் வரை கணவர் வருவார் வருவார் என்று எதிர்பார்த்து, எதிர்பார்த்து ஏமாந்து ரகசியமாக அழுகிறாள் சுமதி. அத்தைக்குத் தெரியாமல் தலை யணையில் முகம் புதைத்து அழுகிறாள். கணவனுக்கு என்ன ஆயிற்று? பெண்டாட்டி, பெண்டாட்டி என்று சுற்றும் ரகம் அல்ல. அதற்காக பெண்டாட்டி அருகிலேயே வராதவன் அல்ல. நேரில் இருக்கும் போது ஆயிரம் பொய் சொல்லி சமாதானப்படுத்தி அவன் காரியத்தை சாதித்துக் கொள்ளும் ரகம். இப்படி குழந்தை பிறந்த பிறகும் விட்டேத்தியாக இருப்பான் என்று தோன்ற வில்லை. அதுவும் ஆண்பிள்ளை. குழந்தையை பார்க் காமல் இருக்க எப்படி மனது வருகிறது? பெரிய பெண் ரேகாவை அத்தை இடுப்பில் தூக்கியபடி தான் எடுத்து வருகிறார். அத்தை வீட்டிற்குப் போகும்போது தன்னுட னேயே படுக்கையில் படுத்துக்கொண்டு அம்மாவை அணைத்துக் கொண்டு படுக்கிறாள் பெண்.

இங்கே யாருமில்லாத போது இந்த சின்ன குழந்தையை யாவது வைத்துக் கொள்ளக்கூடாதா? எத்தனையோ

குடும்பங்களில் பெண்டாட்டியை மதிக்காத புருஷன் கூட தன் குழந்தைகள் என்றால் ஆசையாக இப்பதைப் பார்த்திருக்கிறாள். குழந்தையைத் தூக்கி வைத்துக் கொண்டு இருப்பதையும் பார்த்திருக்கிறாள். ஆனால் தன் கணவன்?

அடுத்த நாள் மங்களம் எழுந்து வீட்டிற்கு செல்லும் போது நினைவு வந்தவளாகக் கேட்கிறாள். ''எங்க வீட்டுக்கு சொல்லிவிட்டீங்களா அத்தை?''

''இன்னும் இல்லேம்மா. இன்னிக்கு போய் சொல் லிடறேன்,'' என்றவள் மருமகளைத் திரும்பிப் பார்க் கிறாள்.

"ஏம்மா ராத்திரி முச்சூடும் அழுதுகிட்டு இருந்தியா?" மாமியார் கேட்கவும் முகம் சிவந்து போனாள் சுமதி.

''நம்ம மாதிரி பெண் ஜன்மமே, அவஸ்தைப்படத்தான் கடவுள் படைச்சிருக்கான். அழாதேம்மா. எல்லாம் சரியா யிடும். இப்ப காலைலே போறேன் இல்லே. அடிச்சு துரத்தறேன். மனசு வருத்தப்படாதே.'' சட்டென்று மரு மகளின் கைவிரல்களை ஆதரவாகப் பற்றிக் கொள்கிறாள்.

பிறகு பழையபடி நர்ஸிடம் சொல்லிவிட்டு கிளம்பிப் போகிறாள். இன்னும் கணவனும், மகனும் எழுந்திருக்க வில்லை. நல்லவேளை மருமகளுக்கு பக்கத்து ஒட்டலி லிருந்து காபியை வாங்கிக் கொடுத்துவிட்டு வந்தாள். எத்தனை நேரம் ஆகுமோ. பாவம் மருமகள் அதுவரைக் கும் பட்டினி கிடக்கவேண்டும். ஒருவழியாக கதவை தட்டி உள்ளே சென்று குளித்து விட்டு பாலைக் காய்ச்சி காபியைக் கலந்து எல்லோருக்கும் தந்துவிட்டு, கடையி லிருந்து வாங்கி வந்திருந்த தோசை மாவை ஊற்றி



தோசை சுடுகிறாள். புதினாவை வைத்து சட்னி செய்து கணவனுக்கும், பிள்ளைக்கும் தந்துவிட்டு தானும் ஒருவாய் சாப்பிடுகிறாள்.

கணவன் கம்பெனிக்கு கிளம்பத் தயாராகும் போது, மகனும் கிளம்ப ஆத்திரத்துடன் எதிரில் நிற்கிறாள்.

''என்னடா நினைச்சுகிட்டு இருக்கே. பெத்த பிள் ளையைப் போய் கூட பார்க்காத அப்பன் ஒரு அப்பனா? ஏன் இப்படி இருக்கே? மொதல்ல உம் பொண்டாட்டிக்கும், உம் பொண்ணுக்கும் டிபன் காபி தரேன். கொண்டு போய் கொடுத்துட்டு நான் வரவரைக்கும் இரு. அப்புறம் கம்பெனிக்கு போகலாம்.''

பிள்ளை ஏதோ பேச யத்தனிக்க, ''த... பாருடா. பேசற வேலை வச்சுக்கோதே,'' எரிந்து விழுகிறாள்.

''என்னங்க முதல்ல நீங்களும் புள்ளையோட ஆஸ்பத் திரிக்குப் போங்க.'' மங்களம் கத்த, ஏதோ பேச வாயெடுத்த மங்களத்தின் கணவர் வாயை மூடிக் கொண்டு கிளம்பிப் போகிறார்.

பெண் குழந்தை கீழே தூங்க மெதுவாக எழுந்திருக் கிறாள் சுமதி. முகத்தைக் கழுவிக் கொண்டு வருகை யில் கணவனும், மாமனாரும் உள்ளே நுழைய ஒரு நிமிடம் மனம் ஆனந்தக் கூத்தாடியது. என்னதான் கணவன் மேல் குறைபாடு இருந்தாலும், அவனுடைய வருகை அவனின் மேல் இருந்த மொத்த கோபத்தையும் துடைத்துவிட்டது. முகம் மலர்ந்து அவனைப் பார்த்து புன்னகைக்க,

''நேத்து ரொம்ப வேலைம்மா. அதான் வர முடியலே வரணும், வரணும்னு நினைச்சுகிட்டே இருந்தேன்.''

கணவனின் வார்த்தைகளை மனம் நம்புகிறது. கணவன், கணவன் என்று அவன் மேல் ஆசையை வளர்த்துக் கொள்கிறது பெண் ஜன்மம். கணவன் பொய் சொல்லுகிறான் என்று தெரிந்தும் அவன் வார்த்தை களைத்தான் மனம் நம்புகிறது. இப்படி நம்பி நம்பித்தானே பெண் எனும் ஜென்மம் படாதபாடு பட்டுக் கொண் டிருக்கிறது. எத்தனை தான் பட்டாலும் மனம் தெளிவு பெறுவதில்லை. கணவன் என்ற ஒரு உறவுதான் தனக்கு மிக மிக நெருக்கமான உறவு என்று பெண் நம்புவதால் தான் இப்படியா? தெரியவில்லை.

''குழந்தையைப் பாருங்க.'' தியாகு குழந்தையின் அருகில் நின்று உற்று நோக்குகிறான். ரோஜா புஷ்பம் போல படுத்துக் கிடக்கும் அந்தக் குழந்தையையே மறுபடியும் உற்று நோக்குகிறான்.

''இந்தா உனக்கும், ரேகாவிற்கும் அம்மா டிபன் கொடுத்து அனுப்பிச்சிருக்காங்க. சாப்பிடு.'' சொல்லி விட்டு அவன் குழந்தையைப் பார்த்துக் கொண்டிருக்க, சந்தோஷமாக சுமதி சாப்பிடுகிறாள். அத்தையை பெருமையோடு மனம் நினைத்தது. பின் குழந்தையை எழுப்பி முகத்தை துடைத்து பல்லை விளக்கி விட்டு டிபனை ஊட்டி பாலைக் குடிக்க வைக்கிறாள். இதற்குள் மாமனார் ''நான் கிளம்பறேன்'' விடை பெற்றுக் கொள்ள, ''சரிம்மா நானும் கிளம்பறேன்.'' தியாகு கிளம்ப, தியாகு வின் தந்தைக்கு கோபம் வந்தது.

''டேய் அம்மா என்ன சொல்லி அனுப்பி இருக்காங்க. இன்னிக்கு நீ வரவேண்டியதில்லை. நீ இங்கேயே இரு.'' சற்று கடினமாக சொல்லிவிட்டு அவர் கிளம்ப, தியாகு எரிச்சலோடு அங்கே அமர்ந்தான்.



''அம்மாவை சீக்கிரம் வரச் சொல்லுங்க.'' சற்று கடுப்புடன் தந்தையிடம் சொல்லுகிறான் தியாகு.

கணவன் என்னதான் எரிச்சலுடன் சொன்னாலும் தன்னோடு வந்து இருக்கிறானே என்றதும் மனம் ஆனந் தப்பட்டது. குழந்தை ரேகாவிற்கு முகம் துடைத்து விட்டு டிபன், பாலைக் கொடுத்து தலையை வாரிப் பின்னி வேறு உடை மாற்றி, ''அப்பாகிட்டே போ'' என்கிறாள். குழந்தை அப்பாவை சற்று பயத்துடன் பார்த்தது. தயக்கத்துடன் பார்த்தது, அப்பாவை அதற்குத் தெரியவே தெரியாது. எப்போதோ வீட்டில் இருக்கும் மனிதனைக் கூட திரும்பிப் பார்த்ததில்லை. என்றாவது விழித்திருந்தால் அப்பா இருந்தால் புதிய மனிதனைப் பார்க்கும் கூச்சத் தோடு அமர்ந்திருக்கும். அம்மா இல்லையென்றால் பாட்டி. சில நாட்களில் தாத்தா. இதுதான் அவள் உலகம். அதனால் 'அப்பாகிட்டே போ' என்று சொன்னவுடன் வெட்கம் பிடுங்கித் திங்க முகத்தை தொங்கப் போட்ட வாறு அமர்ந்திருந்தாள். யாரையும் பார்க்கவும் தைரிய மில்லை. அம்மாவின் சேலையைக் கைகளால் பற்றிய வாறு தலை குனிந்து அமர்ந்திருந்தாள்.

''ரேகா.. போ.. அப்பா....'' ரேகா அசையவில்லை.

''ஏய் முதுகிலே வச்சேன்னா தெரியும். அப்பா வந் திருக்காருல்லே கிட்டே போ'' சுமதி தூண்ட, பின்னும் தலையைக் குனிந்தவாறே கண்களை மட்டும் உயர்த்தி ஓரக்கண்ணால் பார்க்கிறாள் ரேகா. சாதாரணமாக குழந்தை களின் செயல்களே அழகு தான். அதுவும் தன் குழந்தை களின் செயல்கள் அமிருதம். ஆனால் எதையுமே ரசிக்கும் மனது வேண்டும். ரசிக்கத் தோன்றவில்லை என்றால், பிள்ளைகளின் விளையாட்டும் உற்சாகமும் கூட

எரிச்சலைத்தான் தரும். இங்கே தியாகு 'அவுத்துவிட்ட காளை' என்பார்களே அப்படி வளர்ந்தவன். தன்னிச்சை யாக மேய்ந்து, தன்னிச்சையாக திரிந்து, தன்னிச்சையாக பேசுபவன். திருமணம் என்ற பந்தத்தில் மாட்டிக் கொண்டால் அந்த நேர சுகத்துக்காக குழைந்து பயந்து நடித்தானே தவிர கட்டுப்பாடே பிடிக்காதவன். மனைவி, குழந்தைகள் என்ற வட்டத்திற்குள் மாட்டிக் கொள்ள விரும்பாதவன்.

"சும்மா இருக்கமாட்டே. அதுவே பயந்துகிட்டு இருக்குது. அதைப் போய் உசுப்பி விட்டுகிட்டு... பேசாம இரு, அது ராகம் பாடப்போவுது."

சுமதிக்கு ஏமாற்றமாகத்தான் இருந்தது. எத்தனையோ ஆண் பிள்ளைகள் தன் குழந்தையை பெருமையோடு தூக்கிக் கொண்டு அலையும்போது, இவன் சாதாரணத் தகப்பனாகக் கூட இல்லையே. கவலை எழுந்தது. அமைதி குலைந்தது. மனப்போராட்டம் ஆரம்பித்தது.

இதற்குள் பிறந்த குழந்தை அழ ஆரம்பிக்க, குந்தைக்கு பால் தருவதற்காக, எடுத்துக் கொண்டபோது வெளியே நிற்பதாக சொல்லிவிட்டு வெளியே வந்தான் தியாகு. சில நிமிடங்கள் இலக்கு இல்லாமல் திரிந்தவனுக்கு மிக மிகப் போர் அடிக்கவே அதன்பின் அங்கே நிற்காமல், பெண் டாட்டியிடம் கூட ஒரு வார்த்தை சொல்லாமல் அப்படியே மறைகிறான். நேராக பேக்டரிக்கு போனால் அப்பா 'ஏன் இங்கு வந்தாய்' என்று திட்டுவார். அதனால் நண்பன் வீட்டுக்குத்தான் கிளம்புகிறான்.

சுமதியின் சந்தோஷம் சிலமணி நேரங்கள்தான். மறு படியும் மனதைக் கவலைத் தாக்க, மன வருத்தத்தோடு



அமர்ந்திருந்தாள். இதற்குள் சுமதியின் மாமனார் வீட்டிற்கு வர,

"என்னங்க இன்னும் கொஞ்சம் நேரம் பேரன் பக்கத் துலே இருந்துட்டு வந்தா என்ன?" மங்களம் கேட்க,

"அறிவிருக்கா. நான் போய் எத்தனை நேரம் உக்கார முடியும்? கிளம்பறேன்."

"என்னங்க. இன்னும் மூணு நாள்லே டிஸ்சார்ஜ் பண்ணிடுவாங்க. பணம் கட்டணும்?"

"எவ்வளவு?"

"ஐயாயிரம்."

"ரொம்ப அழகா இருக்கு. அத்தனை என்கிட்டே ஏது? என்னை எதுக்கு கேக்கறே? புருஷனைப் பாத்தா இளிச்ச வாயா தோணுதா?" கணவனின் பதிலில் விக்கித்துப் போனாள் மங்களம்.



# 7

"என்னங்க இப்படி பேசினால் என்ன செய்ய? அந்த பிள்ளையை வீட்டுக்கு அழைச்சிட்டு வரவேண்டாமா?"

"ஏன் அவுங்க பிறந்த வீட்டிலே என்ன செய்யறாங்க?"

"அவங்க வீட்டுக்கு குழந்தை பிறந்த விஷயம் கூடத் தெரியாது. நீங்க போனைப் பண்ணி சொல்லிடுங்க.

நான்தான் வீட்டுக்கும், நர்ஸிங்ஹோமுக்கும் அல்லாடி கிட்டு இருக்கேனே." மங்களம் பேச.

"சரி சரி நான் இப்பயே போன் பண்ணிட்டு போறேன்." என்றவாறு கணவன் செல்ல சற்று வருத்தத்துடன் பார்க்கிறார் மங்களம். மருமகள் மிக மிக நல்ல பெண்தான். கட்டாயம் பணத்தை வாங்கிக் கொடுத்துவிடுவாள். ஆனால் அதற்கு முன் பெண்ணைப் பெற்றவர்களை எப்படிக் கேட்பது சற்று அசிங்கமாகத்தான் இருந்தது. 'இந்த மனுஷனுக்கு ஒண்ணுமே புரியாதா? கவலையில் அலுப்பும் சேர்ந்து வந்தது. சட்டென்று பிள்ளையின் ஞாபகம் வந்தது. அது ஒரு அசமஞ்சம். அது என்று பத்து பைசா சம்பாதித்து இருக்கிறது. கணவனாவது வீட்டுத் தேவைக்கு தருவான். அவ்வப்போது புளி, அரிசி, எண்ணெய், சோப்பு வாங்க காசு தந்திருக்கிறான். பிள்ளை சுத்தம். அப்பாவின் கம்பெனியைத் தான் கவனித்துக் கொள்கிறான். இருந்தும் எதற்குமே எட்டணா கொடுத்த தில்லை. ஜர்தா பீடாவிற்கும், பான்பராக்கிற்கும் மட்டும் எங்கிருந்து காசு வருமோ போட்டு மென்று கொண்டிருப் பான். 'அவனிடம் கேட்பதற்கு திருடவே போகலாம்' நினைத்துக் கொள்கிறாள்.

பிறகு ஏதோ தோன்ற, பிள்ளைதான் இருக்கிறானே காலை சிற்றுண்டியும் கொடுத்தாகி விட்டது. கொஞ்சம் வேலையை முடித்துக் கொண்டு போவோம். வீட்டு வேலைகளை அவசரம் அவசரமாக முடித்துக் கொண்டு வழக்கமாக நகை வைக்கும் மார்வாடிக் கடைக்கு சென்றாள். கையில் இருப்பது கழுத்தில் இருந்த ஒரு மெல்லிய செயினையும் அடகு வைத்து ஐயாயிரம் வாங்கி வருகிறாள்.



வரும்போதே, இருபது ரூபாய்க்கு கவரிங் வளையலும் ஐம்பது ரூபாய்க்கு கவரிங் சங்கிலியும் வாங்கி அணிந்த படி வெளி வருகிறாள்.

ஆஸ்பத்திரிக்கு ரூபாயையும் எடுத்துப்போகிறாள். போனவுடன் தன் மகன் அங்கே இல்லை என்று தெரிய, எரிச்சலும் ஆத்திரமும் வந்தது.

"ஏம்மா தியாகு எங்கே?" மருமகளுக்கு பத்திய சாப் பாடு தனக்கும் பேத்திக்கும் சாப்பாடு, மாலை கொறிப்ப தற்கு பிஸ்கட், பிறகு பிளாஸ்க்கில் காபி காய்ச்சி ஆற வைக்கப்பட்ட தண்ணீர் என்று எல்லாவற்றையும் எடுத்துச் சென்றதில் மூச்சு இறைத்தது.

"எப்ப போனான்?"

"ஒரு ஒருமணி நேரம் முன்னாலே போயிட்டாரும்மா. குழந்தை அழுததும் பாலைக் கொடு வெளியே நிக்கறேன்னு சொன்னாங்க. அப்படியே கிளம்பிட்டாங்க."

மருமகளிடம் மகனைப் பற்றி என்ன சொல்வது, மனதிற்குள் பொறுமியவாறே, "இந்தாம்மா இந்த ஐயா யிரத்தை வச்சுக்க. வீட்டிலேருந்தா செலவாகிடும்." என்றவாறே மாமியார் தர பள பளவென்று அணிந்திருந்த சங்கிலியையும் வளையலையும் பார்த்தவுடனே, அவ ளுக்கு புரிந்து போயிற்று. பேச முடியவில்லை. சட் டென்று கண்கள் கலங்கின. எந்த மாமியார் கையிலிருப் பதையும், கழுத்திலிருப்பதையும் கழற்றிக் கொடுப் பாள்? மாமியாரை நன்றி மிகுந்த கண்களினால் பார்க் கிறாள்.

"அத்தை உங்க சங்கிலி...."

''பரவாயில்லைம்மா. மாமாகிட்டே இப்ப பணம் ஒண்ணும் கிடையாது. பிஸினஸ் பிஸினஸ்னு போட்டு புரட்டிகிட்டு இருக்காங்க. அதனால அவ்வளவு பெரிய தொகை கிடையாது. நகையை போட்டு புரட்டலாம். அப்புறமா கொஞ்சம் கொஞ்சமா கட்டி மூட்டுகிட்டா போச்சு.''

'கொஞ்சம் கொஞ்சமாக எதற்கு? மொத்தமாக வாங்கிக் கொடுத்து விடுகிறேன் அத்தை' மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் சுமதி.

அப்பாவிற்கு நான்கு பெண்கள்தான். இருந்தாலும் சம்பாதிக்கும் சம்பாத்தியத்தில் நிறைய மிச்சம்பிடித்து வங்கியில் போட்டு வைத்து ஒவ்வொரு பெண்ணாக ஒப்பேற்றியவர், ஒவ்வொரு பெண்ணின் பிரசவங்களை யும் பார்த்தவர். சாதாரணமாக தாய்வீட்டில் இரண்டு பிரசவங்களைப் பார்ப்பார்கள். அக்காவிற்கு நான்கு குழந்தைகள் பிறந்தபோது, நான்கு பிரசவங்களின் செலவையும் முகம் சுளிக்காமல் ஏற்றவர். வயோதிகத் தையும் மறந்து அம்மாவும் விழுந்து விழுந்து வேலைகள் செய்து, பெண்ணைக் கவனித்துக் கொண்டாள். தனக்கு இரண்டாவது பிரசவம்தான். அதனால் விஷயம் தெரிந்த வுடனேயே அப்பா ரூபாயுடன் தான் வருவார்.

''அத்தை எங்க வீட்டுக்கு சொல்லி அனுப்பிட்டீங் களா?''

''காலைலேயே மாமா போன் பண்ணி சொல்லிட றேன்னு சொன்னாரும்மா. முக்கால் வாசி இந்நேரம் வந்துகிட்டே இருப்பாங்க.''

சுமதி சற்று உற்சாகமாகத்தான் இருந்தாள். மாமியார் சாப்பாட்டை மருமகளுக்கு போட்டுவிட்டு, பேத்திக்கு



ஊட்டிவிட்டு தானும் ஒரு வாய் சாப்பிட்டுவிட்டு பேரனைக் கொஞ்சிக் கொண்டிருக்கிறாள்.

சிறிது நேரம் பொறுத்து பேத்தியை அருகில் படுக்க வைத்துக் கொண்டு ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்ந்துவிடு கிறாள். சுமதி லேசான குறட்டையோடு தூங்கும் மாமி யாரைப் பார்க்கிறாள். 'எத்தனை உயர்ந்த மனது இவ ருக்கு? ஒற்றையாக அத்தனை வேலைகளையும் தலை யில் போட்டுக் கொண்டு யார் இப்படி வேலை செய் வார்கள்? அதுவுமில்லாமல் தன் கழுத்தில் கைகளில் இருந்த நகைகளையும் அடகு வைத்து' மாமியாரின் உயர்ந்த மனதை நினைக்க, நினைக்க லேசாக அழுகை வந்தது. பிள்ளை எப்படி இருந்தாலும் மாமியார் தங்கம். நினைத்து நினைத்து மாய்ந்து போகிறாள், சுமதி.

மாலை மணி மூன்று ஆனதும், மாமியார் சுமதிக்கு காபியும், பிஸ்கட்டும் தந்துவிட்டு பேத்திக்கு பூஸ்டும் பிஸ்கட்டும் கொடுத்துவிட்டு, வீட்டிற்கு செல்ல முற்படுகிறாள்.

''சுமதி நீ இருந்துக்கம்மா. உங்கம்மா அப்பா எப்ப வருவாங்கன்னு தெரியாது. அவங்களுக்கு சமைக்கணும். ஒரு வேளை அவங்க வந்துட்டாங்கன்னா அவங்க கிட்டேயே இராத்திரி சாப்பாடு கொடுத்து அனுப்பிட றேன். நாளைக்கு மாமாவையும், தியாகுவையும் அனுப்பி வெச்சிட்டு அப்புறமா நான் வரேன். சரியா?''

''சரிங்க அத்தை'' என்று அத்தையை அனுப்புகிற வளின் மனதில் கணவனைப் பற்றி எண்ணங்கள். அத்தை அளவு பாசம் காட்டாவிட்டாலும் பரவாயில்லை. அதில் பாதி ஆசையாவது இருக்ககூடாதா? மனம் வருத் தப்பட்டது.

அன்று மாலைபோய் இரவும் வந்தது. சுமதியின் பெற்றோர் வரவில்லை. சுமதி தவித்துக் கொண்டிருந் தாள். தன் பெற்றோர் ஏன் வரவில்லை? மாமியாரோடு பேசிக் கொண்டு வீட்டிலேயே இருக்கிறார்களா? பேரனைப் பார்க்க வேண்டும் என்று கூட தோன்ற வில்லையா? மனம் அடித்துக் கொள்ள ஆவலுடன் காத்திருந்தாள்.

சுமார் எட்டு மணிக்கு மாமியார் சாப்பாட்டை எடுத்துக் கொண்டு வந்திருந்தாள். மருமகள் ஆரம்பிக்கு முன் சற்று படபடப்புடன் பேச ஆரம்பித்தாள்.

''என்னம்மா இது? வருவாங்கன்னு சோறு கீறு எல்லாம் பண்ணி வச்சிருக்கேன். இது வரைக்கும் யாரையுமே காணோமே. மாமாவை போன் போட்டு கேக்க சொன் னேன். உங்க மாமா சண்டை பிடிக்கிறாரு. இன்னாத்தை கேக்கறதுன்னு கத்தறாரு. உங்கம்மா தான் போன் எடுத்தாங்களாம். பேரன் பிறந்திருக்கான்னு சொன்னவுட னேயே அப்படியான்னு கேட்டாங்களாம். அப்புறம் வச்சிட்டாங்களாம். வருவாங்கன்னு நினைச்சேன். இப்படி செய்வாங்கன்னு நினைக்கலே. ஏன் வரலேன்னு தெரி யலையே?'' ஏமாற்றம் அதிர்ச்சி தாக்க, அவள் பேச, சுமதி திடுக்கிட்டு போனாள்.

இப்போது தானே அப்பாவைப் பற்றி உயர்வாக நினைத் தாள். அக்காவிற்கு நான்கு குழந்தைகள் பிறக்கும் வரை அப்பா எத்தனை உதவி செய்திருக்கிறார். தனக்கு ஏன் இரண்டாவது குழந்தையை பார்க்கக் கூட வர யோசிக் கிறார்கள். பேசாமல் அப்பாவிற்கு போன் பண்ணி பேச லாமா? வீட்டிற்குப் போன் பண்ணிக் கேட்டால்தான் என்ன விஷயம் என்று தெரியும்? ஒரு வேளை பணம்,



கிணம் இல்லையோ. எதுவா இருந்தாலும் அம்மா விட்டுக் கொடுக்க மாட்டாளே? என்னாயிற்று? சுமதியே தவிக்க ஆரம்பித்தாள். மாமியாரே விரக்தி அடைந்தது போல் பேசுகிறார். இவர்கள் இப்படி செய்வதால் இந்த நல்ல மனதும் மாறிப் போய்விட்டால்.... மனம் எரிச்ச லுற்றது.

வழக்கப்படி மருமகளுக்கு காபியை வாங்கிக் கொடுத்துவிட்டு, இன்றும் சற்று சீக்கிரம் கிளம்பிப் போனாள் மாமியார். குழந்தை ரேகாவும் தூங்கி விட, புதிதாக பிறந்த பயலும் விடியற்காலையில்தான் பாலைக் குடித்துவிட்டு ஆனந்த நித்திரையில் இருக்கிறான். கதவைத் தாள்போட்டு, அருகில் நிற்கும் வார்ட் நர்ஸிடம் ''இதோ வந்துவிடுகிறேன் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று சொல்லிவிட்டு இறங்கிப் போகிறாள்.

ரிஸப்ஷன் அருகே வந்து டெலிபோன் இருக்கும் இடத்திற்கருகே வந்தபோது அங்கே ஆட்களே இல்லை. மிகவும் காலை நேரமானதால் முக்கால்வாசி பேர் தூக்கம் கலையாது ஒருக்களித்து படுத்திருந்தனர். உட்கார்ந்திருந்த வர்கள் கூட சற்று சாய்ந்தபடி உறங்கினர்.

தெருக்களில் மட்டும் தண்ணீர் தெளிக்கும் ஓசையும் காகங்கள் கரைந்து கரைந்து கத்தியபடி பறப்பதும் தெருக்களில் வாசல் பெருக்கியபடி இருப்பதும், அங் கங்கே மலை மலையாக குப்பை கொட்டப்பட்டு இருக்க, அங்கே பயமின்றி நடமாடும் மாடுகள் குப்பையைக் கிளறிக் கொண்டிருக்க, சில வீடுகளில் எல்லாம் தண்ணீர் தெளித்து கோலம் போட்டபடி இருக்க, இவை எவற்றி லுமே கவனம் இல்லாமல் டெலிபோனையே பதை பதைப்புடன் பார்த்தபடி நின்றாள் சுமதி.

இப்போது இருப்பதுபோல் ஒரு கடைக்கு ஒரு பொது டெலிபோன் வசதி எல்லாம் அந்நாட்களில் கிடையாது. இங்கே இல்லையென்றால் இன்னும் நான்கு தெருதள்ளி இருக்கும் கடையில்தான் போய் பேச வேண்டும். பேசாமல் கிளம்பிப் போய் விடுவோமா? மனம் ஒரு நிமிடம் நினைத்தாலும், தைரியம் வரவில்லை. 'குழந்தைகளை அறையில் தனியே விட்டுவிட்டு... வேண்டாம்.'

இந்த நினைப்பு ஏற்பட்டதும், திரும்பிப் போய்விடுவோமா யோசிக்கிறாள். 'அப்பா... ஏன் இப்படி பண்ணுகிறீர்கள்? நானும் உங்க பெண்தானே. பெண்வீட்டுக்காரர்கள் சீர் செய்தால் மட்டும் போதாது. எதையும் பாந்தமாகச் செய்ய கற்றுக்கொள்ள வேண்டும். எந்தெந்த நேரத்தில் எது செய்ய வேண்டுமோ, அதைக் கட்டாயம் செய்துதான் ஆக வேண்டும். அதைச் செய்தால் தான் பாந்தம். அவ்வாறு இல்லையென்றால் புகுந்த வீட்டில் பெண் அசிங்கப்பட நேரிடும். மருமகள், மருமகள் என்று ஆசை ஆசையாகச் செய்யும் மாமியார் கூட இவர்கள் அலட்சியத்தினால் மனம் மாறிவிட்டால், மனது தவிக்கத் தொடங்கியது.

சிறிது நேரம் கழித்து டெலிபோன் ஆபரேட்டர் பாதி தூக்க கண்ணோடு வருகிறாள்.

''மேடம் ஒரு போன் பண்ணனும்.''

''இல்லைம்மா என் டியூட்டி முடிஞ்சுபோச்சு. டே டியூட்டிக்கு வேற ஆபரேட்டர் வருவாங்க. அப்புறம் செய்யுங்க.'' சற்று அலட்சியமாகச் சொல்லிவிட்டு பகல் நேர ஆபரேட்டருக்காக காத்திருந்தாள் இரவு நேரத்தில் வருபவள்.



''தப்பா நினைச்சுக்காதீங்க. ரொம்ப அர்ஜன்ட்டா நான் பேசியாகணும்.''

''அப்படீன்னா வெளியே கொஞ்ச தூரத்தில் ஒரு பிஸிஓ இருக்கு. அங்க போய் பேசுங்கம்மா.''

''மேடம் தப்பா நினைக்காதீங்க. குழந்தைங்க அங்க தனியா இருக்கு. நான் அவங்களைத் தனியாவிட்டு ஓடி வந்திருக்கேன். எனக்கு டெலிவரி ஆகி நான்கு நாள் தான் ஆகியிருக்கு. எங்கம்மா அப்பா வரணும். அவங்க இன்னும் வரவே இல்லை. அதான் போன் பண்ணி கேக்கலாம்னு பிளீஸ்.''

சுமதி சொல்ல அசுவாரசியமாய் பார்த்துக் கொண்டிருக்கிறாள் டெலிபோன் ஆபரேட்டர். முகத்திலோ, கண்களிலோ பாவம் என்ற உணர்வே தோன்றவில்லை. மிகவும் சலிப்பு தட்டும் கதையைக் கேட்பதுபோல் முகம் மாறியது. கடவுள் படைக்கும் போதே மனிதனை இப்படித்தான் படைத்து விட்டார். நமக்கு நெருங்கியவர்களின் இழப்போ, துக்கமோ பாதிக்கும் அளவிற்கு மற்றவர்களின் இறப்பு கூட நம்மை பாதிப்பதில்லை. இன்னார் இறந்துவிட்டார் என்றால் அதையும் செய்தியாகத் தான் காதில் வாங்கிக் கொள்கிறோம்.

அந்த டெலிபோன் ஆபரேட்டர் இரவு முழுவதும் அந்த ஆஸ்பத்திரியில் தான் இருக்கிறாள். துக்கம், சோகம், அழுகை, அவசரம் எல்லாவற்றையும் அவள் பார்த்தாகி விட்டது. அதனால்தான் யாரேனும் பதட்டப்பட்டால் கூட, முற்றும் துறந்த முனிவரைப் போல் கேட்டுக் கொண்டிருப்பாள். எந்த உணர்ச்சிக்கும் ஆளாக மாட்டாள்.

பேசிக் கொண்டிருக்கும் போதே காலை நேரத்தில் வேலை செய்யும் பெண் வந்துவிட. "யப்பா வந்துட்டியா? அப்பலோர்ந்து ஒரு கேசு போன் போடணும்னு பிடுங்கி எடுத்துகிட்டு இருக்கு.

"இப்ப தான் எல்லா கணக்கையும் எழுதி முடிச்சு கிளம்பலாம்னா இந்த அம்மாவுக்கு ஏதோ அவசரமாம்."

இதற்குள் வந்த பெண், போகிறவளிடம் ஏதோ பேசி, சிரித்து, தன் இடத்திற்கு வந்து உட்காரும் போதே மேலும் பதினைந்து நிமிடங்கள் ஓடிவிட்டது. சுமதி தவித்துக் கொண்டிருந்தாள். அங்கே குழந்தைகள் இரண்டும் தனியாக இருக்குமே.

ஒரு வழியாக வீட்டிற்கு தொடர்பு ஏற்படுத்திக் கொடுத்து பேசச் சொன்னபோது, வீட்டில் மணி அடித்துக் கொண்டிருந்ததே தவிர, யாருமே எடுக்கவில்லை. பல முறை தொடர்பு கொண்டும் இதே நிலைதான்.

"மேடம் நம்பர் சரியா போட்டீங்களா?" சுமதி தயங்கிப் போய் கேட்க, அவள் வள்ளென்று விழுந்தாள்.

அடுத்த முறை எதிர் வீட்டிற்கு ஒரு போன் போட வேண்டும் என்ற போது அந்தப் பெண் எரிந்துவிழ,

"பிளீஸ் தப்பா நினைக்காதீங்க" என்றவாறு கெஞ்சி விட்டு பேச ஆரம்பித்தாள். செல்வியின் தங்கை தான் தொலைபேசியை எடுக்கிறாள்.

"பிரேமா நான் சுமதி பேசறேன். எங்க வீட்டுக்கு போன் பண்ணினா ஏன் யாருமே போன் எடுக்கலை?"

"தெரியலைக்கா. நாங்க ஒரு வாரமா ஊரிலே இல்லே. எல்லோரும் எங்க சித்தி பொண்ணு ஜெயா கல்யாணத்



துக்கு போயிட்டோம். இப்பதான் வரோம். ஆனா உங்க வீடு பூட்டியிருக்கு."

சுமதி சற்று திடுக்கிட்டவளாய், பயந்தவளாய் தன் அறைக்குத் திரும்பி கதவைத் திறந்தவள், அதிர்ச்சியில் 'ஐயையோ' என்று கூவுகிறாள்.



# 8

ஒன்றரை வயது சுட்டிப்பெண் ரேகா பிறந்து நான்கு நாட்களே ஆன குழந்தையைத் தூக்கிக் கொண்டு நிற்க, குழந்தையின் தலை கீழே தொங்கிக் கொண்டு இருந்தது.

"ஐயையோ, என்னடி பண்றே?" சுமதி கிரீச்சென்று கத்த, நர்ஸ் ஓடி வந்து குழந்தையைத் தாங்கிக் கொண டாள்.

"என்னங்கம்மா இப்படியா கத்துவீங்க? குழந்தையை தொப்புன்னு இந்தக் குழந்தை கீழே போட்டிருந்தா என்னாகி இருக்கும்? சின்ன குழந்தைகிட்டே இப்படி யாம்மா நடந்துக்கறது?"

சுமதி ஒரு பெருமூச்சோடு குழந்தையை வாங்கி அணைத்துக் கொண்டாள். ஒன்றும் புரியாமல் மலங்க, மலங்க விழித்து லேசாக அழ ஆரம்பித்த, ரேகாவையும் அணைத்துக் கொண்டாள்.

''ஒண்ணும் இல்லேடா கண்ணா. பாப்பாவை ஏன் தூக்கினே?''

''பாப்பா அழுதுச்சும்மா. பாவம்மா.''

மூன்று வயது குழந்தை பேசுவது போல் பளிச் பளிச் சென்ற பேச்சு. ஒரு நிமிடம் குழந்தையின் பேச்சு குதூ கலப்படுத்தினாலும், அடுத்த நிமிடம் இப்படிச் செய்யக் கூடாது என்று குழந்தையை அழைத்து அவளுக்கு புரியும் வண்ணம் சொல்லி, பெண்ணின் தலையைத் தடவிக் கொடுக்க, தம்பியின் அருகிலேயே படுத்துக் கொண்டாள் பெண். தம்பியைப் பார்த்து சிரித்து, சிணுங்கி சிறிது நேரத்தில் அவளும் உறங்கிப் போய்விட, மெதுவாக எழுந்து வருகிறாள் சுமதி.

அறையின் வாயிலில் நின்று கொண்டு யோசனையில் ஆழ்கிறாள். 'என்னாகி இருக்கும்? அப்பா, அம்மா இருக் கும் இடம் தெரியவில்லை. ஒரு வேளை கடைசி தங்கை ஒருத்தி இருக்கிறாளே. அவளுக்கு ஏதேனும் நிச்சயம் செய்து விட்டார்களா? இல்லையே எதுவாக இருந்தாலும் அம்மா போன் செய்து சொல்லாமல் இருக்க மாட்டார்களே. இல்லையென்றால் வீட்டில் யாருக்காவது உடல்நிலை சரியில்லையா?' சட்டென்று மனதில் இடித்தது. 'அது வாகத்தான் இருக்க வேண்டும். பிள்ளை பெற்ற பெண் ணிடம் சொல்லி கவலைப்படுத்த வேண்டாம் என்று விட்டுவிட்டார்களா?' மன உளைச்சல் படத் தொடங் கினாள்.

மன உளைச்சல் என்பது சிலந்தி வலையைப் போன் றது. ஒரு தடவை பின்னத் தொடங்கினால் பின்னிக் கொண்டே போகும். உளைச்சல் பட்டு பட்டு மன உளைச் சல்கள் வியாதியாகத்தான் திகழும். சிந்தனைகளைத்



தெளிவாக வைத்துக் கொள்ள பழகிக் கொள்ள வேண்டும். எது நடப்பதோ அது நடந்தே தீரும் என்பது நியதி. பெற்றோர்கள் வந்தால் சரி. வரவில்லை என்றால் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று யோசித்திருந்தால் இத்தனை உளைச்சல்களைப் பட்டிருக்க வேண்டிய தில்லை. மனம் தாங்க மாட்டாமல் உள்ளுக்கும் வாசலுக் கும் நடைபோடுகிறாள் சுமதி. என்ன செய்வதென்றே தெரியாத பதற்ற நிலை. மனம் ஒரு நிலையில் இல்லாமல் தவித்தது. திணறியது.

மதியம் மாமியார் வந்த போதும் அப்படிப்பட்ட நிலை யில் தான் இருந்தாள் சுமதி.

''என்னம்மா ஆச்சு? ஏன் பதைச்சுப் போய் நின்னுகிட்டு இருக்கே?'' மாமியார் கேட்க, சுமதி சட்டென்று கண்ணீர் விடுகிறாள்.

''என்னம்மா அழுவுறே? பச்சை உடம்புக்காரி அழக் கூடாதும்மா.''

''முடியலையே அத்தை. முடியலையே. அம்மா, அப்பாவுக்கு போன் செய்தேன். பெல் அடிச்சுகிட்டே இருக்கு. வீட்டிலே யாருமே இல்லைன்னு தெரியுது. யாருக்கு என்ன உடம்புன்னு தெரியலை.''

கலங்கிப்போய் சின்ன குழந்தை போல் திக்கி, திக்கி பேசும் மருமகளையே கனிவாகப் பார்க்கிறாள் மாமி யார்.

''ஒண்ணுமே இருக்காது. எங்காவது வெளியே போயி ருப்பாங்க. நேத்து உங்க மாமனார் போன் செய்து சொன் னாரே. அவங்க எல்லாம் சரிங்கற மாதிரி சொன்னாங்களே. நீ பாத்துகிட்டே இரு. இன்னிக்கு கட்டாயம் முன்னாடி

வந்து குதிக்கப்போறாங்க பாரு. கவலைப்படாதே'' என்று மருமகளைத் தட்டிக் கொடுத்துவிட்டு, வழக்கப்படி சாப்பாடு போட ஆரம்பித்தாள் மாமியார்.

துன்பம் நேர்கையில் ஆறுதலான வார்த்தைகள் யாழ் போல்தான். மனதுக்கும் இதம். உடலுக்கும் புத்துணர்ச்சி. மாமியாரின் வார்த்தைகள் மனதுக்கு இதமளிக்க பாரம் இறங்கின சந்தோஷத்தில் லேசாக சிரித்தாள். மாமியார் இருந்தவரை குடும்ப பிரச்சனைகள், தன் பிறந்த வீட்டு பிரச்சனைகள் எல்லாவற்றையும் பேசிக் கொண்டிருந் தவள் சற்று துக்கத்தை மறந்தாள். இருந்தாலும் தன் பெற்றோரைப் பற்றிய பயம் ஒரு ஓரத்தில் நம நமவென்று அரித்துக் கொண்டிருந்தது.

ஆயிற்று இன்னும் இரண்டு நாளில் ஆஸ்பத்திரியி லிருந்து வீட்டிற்கு வந்தாகிவிட்டது. மாமியார் கொடுத்த ஐயாயிரம் ரூபாயை ஆஸ்பத்திரிக்கு கொடுத்தாகி விட்டது. வீட்டிற்கு வந்து நான்கு நாட்களாகியும், அப்பா, அம்மாவைப் பற்றி விஷயமே தெரியவில்லை. கணவன் அனுசரணையானவனாக இருந்தால் ஒரு போன் பண்ணி பேசச் சொல்லி இருக்கலாம். ஆனால் தன் கணவனை வைத்துக் கொண்டு என்ன செய்வது? இரவு எல்லோரும் உறங்கிய பின் திருடனைப் போல் நுழைபவனை என்ன செய்வது? காலை விடிந்ததும், விடியாமலும் வேலை இருப்பவனைப் போல ஓடுபவனைப் பார்த்தால் ஆத்திரம் தான் வருகிறது. கணவனிடமே பேச முடியாத போது மாமனாரிடம் எப்படி பேசுவது? ஏற்கனவே தன் தாயின் வீட்டில் தன்னை அழைத்துச் செல்லவில்லை என்று மாமனாருக்கு கோபம்; அதுபோதாதென்று தன் மாமியார்



பணத்தைக் கொடுத்துவிட்டதாகத் தெரிந்ததில் வேறு எரிச்சல். என்ன ஆகுமோ?

மாமியார் தனியாக என்ன செய்வாள்? அவர் ஒருவர் மட்டும் உதவி செய்ய நினைத்தால் முடியுமா? மறுபடி யும் தன் அம்மாவைத் தொடர்பு கொள்ள வேண்டும். தன் வீட்டாரிடம் பேசவேண்டும் என்ற ஆவல் மனதைப் பிராண்ட செய்வதறியாமல் திகைக்கிறாள்.

அன்று கணவனும், மாமனாரும் சென்றபின் மாமி யாரிடம் பேசுகிறாள்.

''அத்தை அம்மா வீட்டிலேர்ந்து இன்னும் பதிலே காணோம். அவங்களுக்கு ஒரு போன் போட்டு பாக்க லாமா?'' பேசும் மருமகளையே சற்று பாவமாகப் பார்க் கிறாள் மங்களம்.

''என்ன அத்தை அப்படி பார்க்கறீங்க?''

''இதுவரைக்கும் நாலுதடவை போன் பண்ணியாச்சு. குழந்தை பிறந்ததை சொல்லியும் சரிசரின்னு வச்சிட் டாங்க. என்ன விஷயம்னு தெரியலை. ஒருவேளை எங்க மேலே எதுனாச்சும் கோபமா? என்னன்னே தெரி யலையே... இரண்டு தடவை உங்கம்மாதான் எடுத்தாங்க. ஒரு தடவை உங்கக்கா. இன்னொரு தடவை உன் கடைசித் தங்கை.''

அத்தை சொல்ல, சொல்ல அவமானப்பட்டவளாய் நிற்கிறாள். நான்கு குழந்தைகள் பெற்ற அக்கா, இன்னும் வீட்டிலிருக்கிறாள். ஆனால் தன்னை தன் குடும்பம் கிட்டே சேர்க்கவில்லை. சிறிது நேரம் அழுதவள் பல்லைக் கடித்தவாறு நிற்கிறாள்.

''நீ ஏம்மா அழுவறே? அழறதுனாலே என்ன பிர யோசனம்?''

''அது எப்படி அத்தை மீதி பெண்ணுங்களை எல்லாம் கூட வச்சுகிட்டு இருக்காங்க. நான் மட்டும் வேண்டாத வளா? அப்படி நான் என்ன தப்பு செஞ்சுட்டேன்? பெத்த வங்க இப்படி இருப்பாங்கன்னு நினைச்சு கூட பார்க் கலையே. அக்காவுக்கு நாலு குழந்தைகளுக்கு பிரசவம் பாத்தாங்களே. எனக்கு மட்டும்..'' சட்டென்று அழுகை வெடிக்க, விம்மி, விம்மி அழ ஆரம்பித்தாள்.

''த்சு. எதுக்கு இப்ப அழுவுறே? பச்சை உடம்பு. சின்ன குழந்தையைத்தான் பாதிக்கும்.''

மெதுவாக உள்ளே போகிறாள். குழந்தை பிறந்து குறைந்தது ஒரு ஐந்து மாதமாவது அம்மா வீட்டில் இருக்க வேண்டாமா? தன் வீட்டில் இப்படியா நடந்து கொள் வார்கள்?

அடுத்த நாள் காலை எல்லாவற்றையும் மறந்துவிட்டு சுமதி சின்ன குழந்தைக்கு பால் கொடுத்துவிட்டு, குழந்தை ரேகாவிற்கு டிபன் ஊட்டி விட்டுக் கொண்டிருக் கும் போது மாமனார் கடுகடுக்கிறார்.

''ரொம்ப முக்கியம். முதல்ல எனக்கு டிபனைக் கொடு. வீட்டுலே தண்டச்சோறுங்க அதிகமாகத்தான் போயி டுச்சு. இனிமே கண்ட நாயிங்களை வச்சிட்டு சோறு போடற வேலையை வச்சுக்காதே.''

கேட்க, கேட்க சுமதிக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது. மாமியார் வாயை மூடிக் கொண்டு போய்விட் டாள். மாமனார் பேசினால் மாமியார் எப்போதுமே வாயையே திறக்கமாட்டார். என்றாவது ஒரு நாள் தான்



திருப்பி பேசுவார். இன்று ஏனோ மாமியார் தனக்கு ஆதர வாக பேசமாட்டாரா மனம் அழுதது.

அன்று இரவு வழக்கம் போல் கணவன் பதினோரு மணிக்கு வந்த போது, மெதுவாகப் பேசுகிறாள் சுமதி. கண வன் சாப்பிட்டு முடித்து தங்களின் அறைக்கு வரும்வரை காத்திருக்கிறாள்.

''என்னங்க?''

''என்ன?''

''மாமா.. சொல்லும்போதே அழுகை வந்தது. ரொம்ப கேவலமா பேசிட்டாரு.''

சாதாரணமாக பெண்டாட்டி என்பவள் கண்ணைக் கசக்கினாலே கட்டினவனுக்கு சற்று கோபம் வரும். இங்கே எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் ஏதோ அசுவார சியமாக செய்தியைக் கேட்பது போல் கேட்கிறான்.

''ஏங்க உங்களைத்தான். நான் ஏன் அழறேன்னு கூட கேட்க மாட்டீங்களா?''

''நீ கீழே போய்ட்டு. இப்ப எதுக்கு இங்க வந்தே?''

''ஏங்க இப்படி பேசறீங்க?''

''பின்னே பேசாமே? அப்பா சொன்னதுலே என்ன தப்பு இருக்கு? அப்பா தப்பு பண்ணிட்டாருன்னு மட்டும் சொல்றே. உங்க வீட்டுலே செஞ்சது மட்டும் ரைட்டா? பிரசவம் ஆகி இத்தனை நாள் ஆயிடுச்சு. போன் செய்தும் உங்க வீட்டுலேர்ந்து யாரும் வரலை. பெண்ணை பெத்த வங்க வீட்டிலே இப்படியா இருப்பாங்க. இதுக்குதான் பயங் கரமா உங்க பிறந்த வீட்டைப் பத்தி பெரிசா பெருமை

பேசிக்கறே?'' தியாகு எரிச்சலோடு பேசப் பேச சுமதி சற்று திடுக்கிடலோடு கணவனையே பார்க்கிறாள்.

இதுவரைக்கும் கணவன் என்கிற பிரகுருதி மனதை விட்டு பேசியதில்லை. ஏதாவது பேசியிருந்தால் தன் பிறந்த வீட்டைப் பற்றி புராணமாவது பாடியிருக்க முடியும். எப்படி அநியாயமாக பேசுகிறான். மறுபடியும் மனம் மருண்டது. வேதனைப்பட்டது.

''உங்க வீட்டிலே மத்தவங்க எல்லாம் எத்தனை சாமர்த்தியமா வந்து டோரா போட்டுட்டு இருக்காங்க. உங்க அக்கா நாலாவது குழந்தைக்கும் அங்க தானே வந்தது. எட்டு மாசம் வரைக்கும் உங்க அக்கா வீட்டுக்காரன் வேற அங்கேயே இருந்தான். தெரியாதா? உனக்கு ஒரு குழந்தையோட தலை முழுகிட்டாங்களா என்ன?''

அன்று இரவே குழந்தையைத் தூக்கிக் கொண்டு தன் வீட்டிற்குப் போக வேண்டும் என்று முடிவு செய்கிறாள். அடுத்த நாள் மாமியாரிடம் சொல்லிவிட்டு பிறந்த குழந்தையையும் பெரிய குழந்தையையும் அழைத்துக் கொண்டு கிளம்பியே விடுகிறாள். மாமியார் என்ன சொல்வதென்று தெரியாமல் விழிக்க, கணவனும் மாமனாரும் போகும்படி சொல்ல, கிளம்பியே போய்விடுகிறாள்.

மனதில் எள்ளும் கொள்ளும் வெடிக்க, குழந்தைகளோடு வீட்டு வாயிலில் இறங்கியவள் பூட்டிய கதவைப் பார்த்து திகைத்து நிற்கிறாள்.





# 9

கைக்குழந்தை அழ ஆரம்பிக்க, குழந்தை ரேகாவும் தூக்கக் கண்ணோடு அழ, சோர்ந்து போய் அப்படியே அமர்ந்து கொள்கிறாள். கவலைகள், துக்கங்கள் மனதை மட்டுமல்ல உடலையும் அலைக்கழித்துவிடும். உண்மை தான். அதற்காக கவலைப்படாமல் இருக்க முடியுமா என்ன? சிலபேர் வாழ்க்கையில் எல்லாமே பிரச்சனைகள்தான். பிரச்சனைகளால் மனதும் உடலும் உருகிப் போய் தவிப்பும் அதிகமானது.

அப்படியே சோர்ந்து போய் வீட்டு வாசலில் அமர்ந்த போது எதிர்வீட்டு செல்வியின் தங்கை ஓடி வருகிறாள்.

''அக்கா என்னக்கா வெளியே உக்காந்துகிட்டு இருக்கீங்க? எப்ப வந்தீங்க?'' அவள் கேட்க, கேட்க அழுகை வந்தது.

''வீட்டிலே எல்லோரும் எங்கே போனாங்க? யாருமே இல்லையா?'' கண்களில் கண்ணீரோடு அவள் கேட்க,

ஏதோ பதில் சொல்ல வாயெடுத்தவள் ''அக்கா அங்க பாருங்க உங்க கடைசி தங்கை வானதி வரா பாருங்க.'' காட்ட, கோபம் ஆத்திரம் அழுகையோடு அவளைப் பார்க்கிறாள் சுமதி.

''சுமதி அக்கா எப்ப வந்தீங்க? குழந்தையும் எடுத்து கிட்டு வந்தீங்களா?''

குழந்தையை எடுத்து கொஞ்சத் தொடங்குகிறாள் வானதி.

''ஏய் தொடாதே. அம்மா, அப்பா எங்கே, எனக்கு குழந்தை பிறந்ததுன்னு தெரியும் இல்லே. வேணும்னே என்னை பாக்கக் கூட வராம, ஏன் ஏன் இப்படி செஞ்சாங்க? நான் என்ன தப்பு பண்ணினேன்?'' கேட்கும் போதே ரோஷமும், ஆத்திரமும் வர அழுகிறாள்.

''அக்கா நீ முதல்லே உள்ளே வா. உள்ளே போய் பேசிக்கலாம்.''

''மாட்டேன். எனக்கு இப்பவே எல்லா விஷயமும் தெரியணும். அம்மா கூடவா இப்படி இருப்பாங்க?''

வானதி அவளின் கையைப் பிடித்துக் கொள்கிறாள். ''அக்கா அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக். நியூஸ் கேட்ட வுடனே அம்மா மயங்கி விழுந்துட்டாங்க. அவங்களுக் கும் லோ பி.பின்னு சொன்னாங்க. ரெண்டு பேரும் இப்ப ஆஸ்பத்திரியிலேதான் இருக்காங்க. அக்கா மாமியார் வீட்டிலேயே நாலு குழந்தைகளையும் விட்டுட்டு உதவிக்கு வந்திருக்காங்க.''

கேட்க, கேட்க தலை சுற்றியது சுமதிக்கு. தன் தாய், தந்தை தன்னை வேண்டுமென்றே ஒதுக்கிவிட்டார்கள், புறக்கணித்து விட்டார்கள் என்று நினைத்து அவர்களைத் திட்டி, சபித்து தன் அவசரத் தனத்தை நினைத்து வெட்கப்பட்டாள் சுமதி.

எல்லா மனிதர்களும் இந்த லட்சணம்தான். எந்த விஷயத்தையும் பொதுவாக பார்க்காமல் நாம் காணும் பார்வையில் தான் பார்ப்போம். அது சரியா, தவறா என்று கூட நினைத்துப் பார்ப்பதில்லை. நாமே ஒரு தவறான முடிவுக்கு வந்து சபித்து, எரிச்சலுற்று விரோதியாக பாவித்து உண்மை தெரியும் வரை இப்படி அல்லவா நடந்து கொள்கிறோம்.



இங்கே சுமதியின் நிலைமையும் ஏறக்குறைய, அப் படியேதான் நடந்தது. உண்மை தெரிந்ததும் மனம் மறுகிப்போனது.

''வா வானதி ஆஸ்பத்திரிக்கு கிளம்புவோம்.''

''என்னக்கா நீ இப்படி இருக்கே? முதல்லே குளிச்சிட்டு ஏதானும் சாப்பிடு. அப்புறம் போகலாம்.''

சுமதி மடமடவென்று குளித்துவிட்டு வந்து சமையல் செய்வதில் தங்கைக்கு துணை நின்று குழந்தைகளை குளிப்பாட்டி வயிற்றுக்கு கொடுத்து, உறங்க வைத்து விட்டு, தானும் தங்கையும் ஒருவாய் சாப்பிட்ட பின் பாத்திரங்களை கழுவி வைத்து விட்டு 'கிளம்பலாமா?' என்று வானதியைப் பார்த்து கேட்கிறாள்.

''ஏங்கா இப்படி அவசரப்படறே? விசிடர்ஸ் அவர் மூணு மணிக்கு தான். போய் பேசாம தூங்கு. மூணு மணிக்கு காபியைக் குடிச்சிட்டு கிளம்பிப் போகலாம்.''

அன்று மூன்று மணிக்கு குழந்தைகளை தூக்கிக் கொண்டு வானதியுடன் ஆஸ்பத்திரிக்கு கிளம்பினாள் சுமதி. இருவரையும் பார்த்து கண்ணீர் விடுகிறாள் சுமதி. இருவரையும் எப்படி எல்லாம் ஆக வேண்டுமென்று சபித்தேன். பாவம்... அம்மா.... அப்பா... நினைத்து நினைத்து அழுகிறாள்.

''எப்படிம்மா இருக்கே?'' அம்மா ஆதரவாகக் கேட்கிறாள்.

''அழுவாதே எனக்கு ஒண்ணுமில்லே.''

ஆயிற்று சுமதி வந்து பத்து நாட்களில் அம்மா, அப்பா இருவருமே டிஸ்சார்ஜ் ஆகி வீட்டிற்கு வந்துவிட்டனர். அப்பா குழந்தை ரேகாவை மடியில் இருத்திக் கொண்டே நேரத்தைக் கழிக்கிறார். அம்மா இன்னும் பெயர்கூட வைக்காத பேரப் பயலை தூக்கியபடி இருக்கிறாள்.

அதுவரை இருந்த ஆத்திரம், கோபம், வெறுப்பு எல்லாம் போய் மனம் இப்போதுதான் சமாதானம் அடைந்தது. ஆனால் உள்ளே போன வெறுப்பு, ஆத்திரம், கோபம் நம்மைச் சும்மாவா விடுகிறது. நம் உடம்பையும், அலைக்கழித்து விட்டு தான் செல்கிறது.

முதல் இரண்டு நாட்கள் தலைவலி, படபடப்பு, லேசான ஜுரம் இப்போது எல்லாமே சரியாகிவிட்டது. இருந்தாலும் தான் மாமியார் வீட்டில் இருந்ததைப் பற்றிப் பேசும்போது எரிச்சலுடன் தான் பேசுகிறாள். தந்தை, தாய் செய்தது தவறு என்று வாதிக்கிறாள்.

''ஆயிரம் உடம்பு இருக்கட்டும்மா. என்னையும் இங்கே கூப்பிட்டுகிட்டு வச்சிக்கிட்டு இருக்கலாமில்லே.''

வழக்கம் போல் புருஷனிடமிருந்து தொலைபேசி அழைப்போ, நேரில் வந்து பார்ப்பதோ எதுவுமே இல்லாமல் போக, முதலில் கொஞ்ச நாள் வருத்தப்பட்டவள் பின் மனதைத் தேற்றிக் கொண்டாள். சிங்கம் சிங்கமாகத்தான் இருக்க முடியும். நரி நரியாகத்தான் இருக்க



முடியும். ஒவ்வொருவரும் வந்த வழி அது. ஒருவரை இன்னொருவராக மாற்றவோ திருத்தவோ இயலாது. அவரவராக புரிந்துகொண்டு மாறினால் தான் எதுவுமே சாத்தியம். தாமரை இலைத்தண்ணீர் போல வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். இப்போது மனதை சமாதானப் படுத்திக் கொண்டு தன்னை முற்றிலும் முற்றிலுமாக மாற்றிக் கொண்டாள் சுமதி. வீட்டோடு அப்பா, அம்மாவைக் கவனித்துக் கொள்ள வந்த அக்காவிற்கும், புதிதாக திருமணம் ஆன தங்கைக்கும் தொலைபேசியில் அழைப்பு வரும்போது ஒரு நிமிடம் மனம் வருத்தப்பட்டாலும் அடுத்த நிமிடம் மனதைத் தேற்றிக் கொண்டாள்.

மூன்று மாதங்கள் ஓடியே விட்டது. ஓடியா போய் விட்டது. பறந்து விட்டது என்று சொல்லலாம். காலம் எப்படி வேகமாகப் போகிறது என்று யாருக்குமே புரியாத ஒன்றுதான். நேற்று நடந்தது போல் இருக்கும் நிகழ்வு திரும்பிப் பார்ப்பதற்குள் பல மாதங்களைக் கடந்து இருக்கும்.

அன்று ரேகாவிற்கு சோறு ஊட்டி, பையனுக்கும் பாலைக் கொடுத்துவிட்டு, இருவருக்கும் குளிப்பாட்டி வேறு உடை மாற்றிவிட்டு, தானும் குளித்துவிட்டு சாப்பிட்டுவிட்டு படுக்கையில் படுத்துக் கொண்டபோது வாசலில் நிழலாடியது. தியாகு தான் வாயிலில் நின்று கொண்டு கதவைத் தட்டுகிறான்.

''அக்கா.......'' ஓடி வருகிறாள் வானதி.

''என்னடி.......'' சற்று எரிச்சலுடன் கேட்கிறாள் சுமதி. இப்போது தான் வேலைகளை முடித்துவிட்டு அப்பாடா

என்று படுத்துக் கொண்டிருக்கிறாள். பக்கத்து வீட்டு பெண்ணிடம் இருந்து அவளுக்கு பிடித்த எழுத்தாளரின் நாவல் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறாள். அதை வேறு படித்து முடிக்கவேண்டும். தங்கையின் மேல் ஆத்திரமும் கோபமும் வர ''யாரடி'' என்கிறாள்.

''உங்க வீட்டுக்காரர்.''

ஒரு நிமிடம் ஆர்வம் எழுந்தாலும், அடுத்த நிமிடம் எரிச்சலும், ஆத்திரமும் வந்தது. 'என்னவாம் எதற்கு வருகிறார்? அப்படியே பெண்டாட்டி மேல் பெரிய பாசம். இப்படி வேளை கெட்ட வேளையில் எதற்கு வரவேண் டும்? இப்போது தான் எல்லோரும் சாப்பிட்டுவிட்டு ஒழித்து போட்டு இருக்கிறோம். இப்போ மறுபடியும் அம்மா எல்லாவற்றையும் செய்ய வேண்டும்.'

எரிச்சலையும், ஆத்திரத்தையும் அடக்கிக் கொண்டு மெதுவாக செல்கிறாள்.

''என்ன சுமதி. எப்படி இருக்கே?'' ஒரு சிரிப்பு சிரித்த படி உள்ளே நுழைகிறான்.

''சாப்பிட்டீங்களா? என்ன சாப்பிடறீங்க?''

அவன் லேசாக சிரிக்கிறான். ''எங்கே?......... விடியற் காலைல பஸ் பிடிச்சிட்டு வரணும் இல்லே.''

''உள்ளே வாங்க.'' என்றவள், ஒருவித எரிச்சலுடனும் சலிப்புடனும் அம்மாவைத் தேடிச் செல்கிறாள்.

சமையலை செய்து முடித்துவிட்டு எல்லோரும் சாப்பிட்டுவிட்டு எல்லாவற்றையும் ஒழித்துப்போட்டு விட்டு, அப்பாடா என்று படுத்திருந்தவளைப் போய் எழுப்புகிறாள் சுமதி.



''என்னம்மா?''

''அவங்க வந்திருக்காங்க.''

''யாரு?''

''உம் மாப்பிள்ளைதான்.''

''ஐயையோ என்னடி இது? ஒண்ணுமே இல்லையே? ஹோட்டல்லே போய் ஒரு சாப்பாட்டை உம் தம்பியை விட்டு வாங்கிட்டு வரச்சொல்லு,'' அவசரம் அவசரமாக டிபன் கேரியரை எடுத்து கழுவி சுமதியின் கையில் தருகிறாள்.

''அம்மா தம்பியைக் காணோம்மா. கிரிக்கெட் விளை யாட போயிருக்கான் போலருக்கு.''

''வானதி இல்லே.... அவளை அனுப்பு.''

வானதியைக் கூப்பிட்டு ஓட்டலுக்கு அனுப்பிவிட்டு ''மருமகப் பிள்ளைக்கு தண்ணியை குடுடி,'' என்றவள்,

''அம்மா எல்லாம் நல்லா இருக்காங்களா?'' என்றவாறு விசாரிக்கிறாள்.

''கொஞ்சம் இருங்க தம்பி. இதோ சாப்பாடு இன்னும் அஞ்சு நிமிஷத்திலே போட்டுடறேன்.''

''பரவாயில்லை. மெதுவாகவே போடுங்க.'' என்ற வாறே தூங்கும் குழந்தைகளைக் கொஞ்சியபடி அவர்கள் அருகில் அமர்ந்து கொள்கிறான்.

''மாப்பிள்ளைகிட்டே பேசிகிட்டு இரு. நான் வானதி வந்துட்டாளான்னு பார்க்கறேன்.''

அம்மாவும் இறங்கிப் போய்விட கணவன் இருக்கும் அறைக்குள் வந்து நிற்கிறாள். பார்த்தவுடனே 'ஈ' என்று

பல்லை இளிப்பான். அவன் வேலை முடிந்தவுடன் தூக்கிப் போட்டுவிடுவான். நினைத்தவள் ''சொல் லுங்க...'' என்கிறாள்.

சற்று குரலை உயர்த்தி அவன் பேசப் பேச அதிர்ந்து போய் நிற்கிறாள் சுமதி.



# 10

கணவனா இப்படி பேசுகிறான். கிட்டதட்ட மூன்று மாதங்களுக்கு முன்னால் பார்க்காத மனைவியை யாராவது இப்படி எல்லாம் பேசுவார்களா? ஆச்சரியம்தான்.

''என்னடி மூணுமாசம் இங்க வந்து உக்காந்துகிட்டயே புருஷன் வீட்டிலே ஏதேனும் தகவல் சொல்லணும்னு தோணுச்சா? எங்களை மாதிரி அப்பாவிங்களைப் பாத்தா ஏமாத்தத் தாண்டி ஏமாத்துவீங்க. கராரா நிக்க வச்சு வாங்கியிருந்தா, கரெக்டா, கொடுத்து இருப்பீங்க இல்லே.''

சுமதி ஒன்றும் பேசாமல் அவனையே பார்க்க, ''என்னடி ஒண்ணும் தெரியாத மாதிரி முழிக்கறே? ஐயாயிரம் ரூபாய் எங்கே? மருமகளுக்கு ஒரு கஷ்டம்னு சொன்னவுடனே கையிலே காதுலே இருக்கறதை கழட்டி கொடுத்தாங்களே எங்கம்மா? அவுங்களைப் பத்தி ஒரு நிமிஷம் நினைச்சுப் பாத்தியா? நீ மனுஷியா? எல்லாத்தையும் கழற்றி



கொடுத்துட்டு முண்டமா இருக்காங்களே அவுங்களைப் பத்தி கொஞ்சமாவது நினைச்சிருந்தா இப்படி ஏமாத்து வியா?''

சுமதி அதிர்ந்து போகிறாள். தான் நினைத்தது சரிதான். கணவன் தன்னைப் பார்க்கவில்லை. பணத்தைக் கேட்க வந்திருக்கிறான். தான் வீட்டிற்குத் திரும்பிப் போகும் போது அம்மா, அப்பாவிடம் பணம் வாங்கிக் கொண்டு சென்று விடலாம் என்றுதான் நினைத்தாள். ஒரு நிமிடம் ஆத்திரமும், கோபமும் எழுந்தது. 'இவனுடைய பிள்ளையைத் தானே சுமந்தேன். இவனுக்கு அக்கறை யில்லையா? கடனோ, உடனோ வாங்கி இவன் தானே கொடுத்திருக்க வேண்டும். கொடுத்தவளையும் கேவலப் படுத்துகிறான். மனதிற்கு முணகியவள்,' ''அதுக்காகத்தான் வந்தீங்களா?'' குரலில் சற்று கேலி இழையோட கேட் கிறாள்.

''அதுக்காகவா வந்தேன்? குழந்தைகளையும் பார்த்து நாளாச்சேன்னு பார்த்துட்டு அப்படியே துட்டை கேட் டுட்டு வாங்கி வரலாம்னு நினைச்சேன்.''

''இதபாருங்க. எங்க அம்மா, அப்பா ரெண்டு பேரும் ஆஸ்பத்திரியிலே இருந்துட்டு வந்திருக்காங்க. இப்ப தான் உடம்பு கொஞ்சம் பரவாயில்லை. எக்கச்சக்க துட்டு செலவாயிருக்குது. இன்னும் இரண்டு மாசத்துலே என்னை கொண்டு வந்து விடுவாங்க இல்லே. அப்ப வாங்கிட்டு வரேன்'' சுமதி திட்ட வட்டமாகக் கூற,

''அந்தக் கதை எல்லாம் வேண்டாம். மரியாதையா உன் அப்பன், ஆத்தாளைக் கேட்டு துட்டை வாங்கிக்கொடு. போய்க்கிட்டே இருக்கேன். அங்கே அம்மா வச்ச நகைக்கு

வட்டி கட்டணும். அப்பா வேற அம்மாவை திட்டிகிட்டே இருக்காரு. முதல்ல ரூபா வரணும் ஏற்பாடு பண்ணு.'' சுமதி கையைப் பிசைகிறாள்.

அம்மாவிடம் இப்போதுள்ள சூழ்நிலையில் அவளால் பணத்தை எப்படி கேட்க முடியும்? அம்மா தவறாக நினைத்துக் கொள்ள மாட்டாளா? தாயும் பிள்ளையுமாக இருந்தாலும் வாயும், வயிறும் வேறு அல்லவா?

''என்னடி கேட்டுகிட்டே இருக்கேன். வாயை மூடி கிட்டு இருக்கே?'' சுமதி பதில் பேசாமல் என்ன செய்வ தென்று தெரியாமல் அவனை நோக்க,

''என்னடி முறைக்கிறே? நீ கேக்கலைன்னா நான் கேட்பேன். கூப்பிடு உங்கம்மாவை.''

''இதோ வந்துடுவாங்க.''

தியாகு உறுமிக் கொண்டிருக்க, வானதியோடு ஓட்டல் சாப்பாட்டோடு உள்ளே நுழைகிறாள் சுமதியின் தாயார்.

''வாங்க மாப்பிள்ளை.'' வாழையிலையைக் கழுவிப் போட்டு இனிப்போடு பறிமாறுகிறாள் சுமதியின் தாய்.

''வேண்டாம்...'' என்று சொல்ல வாயெடுத்தவன், பதில் பேசாமல் சாப்பிட ஆரம்பித்தான். சாப்பிட்டு எழுந்த வனிடம்.

''அந்த ரூம்லே படுக்கை இருக்கு. நீங்க கொஞ்ச நேரம் படுங்க மாப்பிள்ளை.'' என்று உபசரிக்கிறாள் சுமதியின் தாயார்.

முதலில் சற்று தயங்கியவன், பின் மெதுவாக ''பணத் துக்கு ஏற்பாடு பண்ணு. நான் சாயங்காலம் கிளம்பணும்'' என்றவாறு அறையில் போய் படுத்துக் கொள்கிறான்.



சுமதிக்கு வெறுத்துப் போனது. எப்படி இருக்கிறாய்? என்ற கேள்வி இல்லை. குழந்தைகள் சவுக்கியமா என்று கேட்கவில்லை. முதலில் அவள் புறப்பட்ட போது பாந்தமாக 'வாடா கண்ணு' என்று கொண்டுவந்து விட்ட தில்லை. எல்லாம் தலையெழுத்து தான். நல்ல கணவன் கிடைக்கக் கூட கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

அதற்கு மேல் பேசாமல் மௌனமாக எழுந்து போகி றாள். அம்மாவிடம் என்னவென்று சொல்வது, அப்பாவும், அம்மாவும் இப்போதுதான் ஆஸ்பத்திரியில் இருந்து வந்திருக்கிறார்கள். அவர்களிடம் என்ன பணம் இருக் கும்? கடைசி தங்கைக்கு காலேஜ் பீஸ் கட்டவே பணம் இல்லை என்று தங்கை புலம்பிக் கொண்டிருந்ததும் தெரிந்தது. இந்த மாலைக்குள் பணத்தை எப்படி ரெடி செய்வது? மனம் மறுகியது.

நல்ல தூக்கம் கலைந்து போனதால் அம்மா கையை தலைக்கு அண்ட கொடுத்து படுத்துக் கொண்டிருக் கிறாள். தூக்கம் வராமல் ஏதோ வெட்ட வெளியைப் பார்த்தபடி இருக்கிறாள்.

சுமதி ''அம்மா'' என்று மெல்ல கூப்பிட,

''என்னம்மா'' என்றவள் ''ஆமா மாப்பிள்ளை இரண்டு நாள் இருந்துட்டு போவாரா? நீ வந்ததுலேர்ந்து ஒரு போன் கூட இல்லை. உன் வாடிப்போன முகத்தைப் பார்க்க, பார்க்க மனசு வருத்தப்பட்டுகிட்டு தான் இருக்கேன்.

ரெண்டு நாளாவது இருந்துட்டு போகச்சொல்லு. நீயும் சந்தோஷமா இருப்பே.''

சுமதி பெருமூச்செறிகிறாள். வெற்றுச் சிரிப்பு சிரிக் கிறாள். இந்த காலம் என்றால் எப்போதோ டைவர்ஸ்

ஆகிவிடும். இன்று பெண் பொறுமையைத் தொலைத்து தான் விட்டாள். எல்லாவற்றிலும் ஆணிற்கு நிகராக ஆகிவிட்டாள். இது இன்று பரவலான குற்றச்சாட்டுதான். அவர்களைச் சொல்லியும் குற்றம் இல்லை. சுமதியைப் போல் எத்தனையோ பெண்கள் அடங்கி, அடங்கி பொறுத்து பொறுத்து இப்பொழுது நிலைமையே தலைகீழாகத்தான் மாறிவிட்டது.

"என்னம்மா சுமதி ஏன் ஒரு மாதிரி இருக்கே?"

"இல்லேம்மா உன்கிட்டே கொஞ்சம் பேசணும். ஆனா எப்படி பேசறதுன்னு தெரியலை?"

"சொல்லு......."

சுமதி மறுபடியும் தயங்குகிறாள்.

"சொல்லேன்... என்னாச்சு சொல்லு?" அம்மா லேசான எரிச்சலுடன் எழுந்து அமர்ந்து கொள்கிறாள்.

"என் பிரசவத்துக்கு நர்ஸிங் ஹோமில் வச்சு பார்த் தாங்க. ஐயாயிரம் ரூபாய் ஆச்சு."

"ஐயாயிரமா?" அம்மா வாயைப் பிளக்கிறாள்.

"அந்தப் பணம் கட்ட யார்கிட்டேயும் பணம் இல்லே." பெண் சொல்ல, சொல்ல அம்மா பயத்துடன் பெண்ணையே பார்க்கிறாள். இவள் என்ன சொல்ல வருகிறாள்.

"பின்னே எப்படி கட்டினீங்க?"

"அத்தை தான் கை வளையலையும், சங்கிலியையும் அடகு வச்சு பணம் வாங்கித் தந்தாங்க."

அம்மா மௌனமாக இருந்தாள். பதில் ஒன்றும் பேச வில்லை. பெண்ணிற்கு தருவதைப் பற்றி அவளுக்கு



ஒன்றும் இல்லை. ஆனால் இருந்தால் தானே தர. மாமியார் வீட்டில் பிரசவம் ஆகிவிட்டது. ஏதோ ஐநூறு, ஆயிரம் ஆகியிருக்கும் சரிதான் மாமியார் வீட்டிலுள்ள வர்கள் தரக்கூடாதா? பெண்ணைப் பெற்றவர்களேவா தரவேண்டும் என்று வேறு நினைத்துக் கொண்டாள்.

மனிதன் எதற்காக சேர்த்து வைத்துக் கொள்கிறானோ இல்லையோ ஆஸ்பத்திரி செலவுக்கு கட்டாயம் சேர்த்து வைத்துதான் ஆகவேண்டும். இந்த காலம் என்பது அப்படி? நோய் நொடிகள் எப்போதுமே அதிகம். அதுவும் கடைசி நேரத்தில் நோயோடு பணம் இன்றி தளர்ந்து போய் இருக்கும் கொடுமையை என்னவென்று சொல் வது?

"என்னம்மா நான் கேட்டுகிட்டே இருக்கேன். பேசாம இருக்கே?"

"என்ன கேட்டே?"

"சரிதான். பிரசவ செலவை அப்பாகிட்டேர்ந்து வாங் கித்தா. எங்க மாமியார் நகைக்கு வட்டி வேற கட்டணுமாம். அதுக்கு தான் வீட்டுக்காரர் வந்திருக்கார்."

பெண் சொல்ல, சொல்ல ஒரு நிமிடம் பெண்ணையே தீர்க்கமாகப் பார்க்கிறாள். அதற்கு தான் பெண்ணையே பெற்றுக் கொள்ளக் கூடாது என்பது. முதல் பிரசவம் தான் இங்கே வைத்து பார்த்துக் கொண்டாயிற்று. இப்போது பணம் இல்லாத நிலையில் நாங்கள் தான் பார்த்துக் கொள்கிறோம் என்று சொல்லகூடாதா? வெக்கமில்லாமல் வந்து நிற்கும் மாப்பிள்ளையைப் பார்த்தால் எரிச்சல் வந்தது.

''என்னம்மா பேசாம இருக்கே? இன்னிக்கு சாயங் காலத்துக்குள்ளே வேணும்.'' சுமதி பயந்தபடியே அம்மா விடம் சொல்லுகிறாள்.

''எங்ககிட்டே ஏது அவ்வளவு பணம்? ஒரு ஆயிரம் ரூபா பீஸ் உன் தங்கைக்கு படிப்புக்கே கட்ட முடியலே. என்ன செய்வது?''

சுமதிக்கு கண்ணில் நீர் நிறைந்தது. பிச்சை எடுப்பது மிகவும் ஈனமான தொழில். கடவுள் தன்னை பிச்சை எடுக்கவிட்டு விட்டாரே, அழுகை வந்தது. அவளையும் மீறி கண்களில் கண்ணீர் பதட்டம், துக்கம், வேதனை யோடு நிற்கிறாள்.

''எதுக்கு கண்ணை கசக்கறே? குழந்தைக்கு ஏதானும் அபெக்ட் ஆகப்போகுது. நான் அப்பாவை கேக்கறேன்.''

''அவர்கிட்டே தான் துட்டு இல்லேன்னு சொன் னீங்களே?'' சுமதியின் குரல் ஈனஸ்வரத்தில் ஒலிக்க,

''எதுக்கு கவலைப்படறே? இதோ இருக்கு பாரு. இதை வச்சு சமாளிக்கலாம் என்று அம்மா தாலிக் கொடியைக் காண்பிக்க, விக்கித்துப்போய் அழுகிறாள் சுமதி.



# 11

''என்னம்மா இது?''



''வேற என்ன பண்ணச் சொல்றே? சாயங்காலம் உங்க வீட்டுக்காரர் போறதுக்குள்ளே பணம் புரட்ட இது ஒன்று தான் வழி.''

சுமதிக்கு தன்மீதே வெறுப்பு வந்தது. இது என்ன வாழ்க்கை? ஒரு பெண்ணாக பிறந்து விட்டால் பெண்ணைப் பெற்றவர்களுக்கு இத்தனை சங்கடங்களா? இருந்தால் அம்மா செய்ய மாட்டாளா? ஆசை ஆசையாய், பார்த்து, பார்த்து செய்யும் குணம் அவர்களுக்கு உண்டே. 'இன்று' இல்லாத நிலையில் என்ன செய்வார்கள்? கணவன் ஈட்டிக்காரன் மாதிரி வந்து அமர்ந்துவிட்டான். இனி என்ன செய்வது? யோசிக்கிறாள்.

''சரி நீ போய் படு. இப்ப போனாலும் சேட் சாப்பாட் டுக்கு போயிருப்பான். உங்க வீட்டுக்காரர் அஞ்சு மணிக்கு மேல் தானே போவாரு. நான் ஒரு மூணு மணிக்கு போய் சங்கிலியை வச்சு பணத்தை வாங்கிக் கொடுத்துட றேன்.''

சுமதி மெதுவாக நகர்கிறாள். கணவன் இருக்கும் அறைக்குப் போகாமல், வெளியே அப்படியே தரையில் படுத்துக் கொள்கிறாள். அப்படியே உறங்கிப் போகிறாள். மணி மூன்றடித்தது. சுமதி வாரிச் சுருட்டி கொண்டு எழுகிறாள். கணவன் இன்னும் குறட்டை விட்டு தூங்கு வது தெரிந்தது. அவனை வெற்றுப் பார்வை பார்த்து விட்டு உள்ளே எழுந்து எட்டிப் பார்க்கிறாள்.

அப்பா ஆஸ்பத்திரிக்கு செக் அப்புக்கு போயிருந்தார். கூடவே அக்காவும் போயிருந்தாள். அவர் ஆறுமணிக்கு மேல் தான் வருவார். இங்கே அக்கா குழந்தைகளோடு அம்மாவும் தூங்கிக் கொண்டிருந்தாள். தங்கையும் ஒரு

பக்கம் சுருண்டிருந்தாள். ஒரு நிமிடம் அவர்களையே பார்த்தவள் ஏதோ நினைவுக்கு வந்தவளாக, முகத்தைக் கழுவி, உடை மாற்றி, யாருக்கும் தெரியாமல் கதவைத் திறந்து கொண்டு வெளியே இறங்கிப் போனாள். ஒரு ஒருமணி நேரம் சென்றபின் மெதுவாக திரும்பி வருகிறாள். கழுத்தில் இருந்த சங்கிலி, கையில் இருந்த இரண்டு வளையல்களும் இப்போது இல்லை. கழுத்தை இழுத்து போர்த்தியபடி வருகிறாள்.

வீட்டுப் படியேறியவுடனே அம்மா பிடித்துக் கொள்கிறாள்.

''எங்கடி போயிட்டே?''

''கடைக்கு?''

''ஏன்?''

சுமதி பதில் பேசவில்லை. அம்மா பெண்ணையே வைத்த கண் வாங்காமல் முறைக்கிறாள்.

''எங்க போயிட்டு வந்தே?''

''எங்கேயுமில்லே.''

''உன் கைவளையல் எங்கே? கழுத்தை ஏன் மூடிகிட்டு இருக்கே?'' சட்டென்று புடவையைத் தலைப்பைத் தள்ளி அதிர்ந்து போகிறாள்.

''சங்கிலி எங்கடி?''

''சேட் கடையிலே வச்சிட்டேன்.''

''என்னது?'' அம்மா அதிர்ந்துபோய் அவளைப் பார்க்க,

''ஆமாம்மா என்ன செய்யறது?''



''என்ன செய்யறதா. நான் தான் பணம் வாங்கித் தர்றேன்னு சொல்லலை. உன் வீட்டுக்காரர் போகறதுக்குள்ளே வச்சு வாங்கித் தரேன்னு சொன்னேனே. அதுக்குள்ளே உனக்கு என்ன அவசரம்?''

அம்மாவின் கைகளைப் பிடித்துக் கொண்டாள் சுமதி. ''பரவாயில்லைம்மா நீ பாவம் தாலியை அடகு வச்சு வாங்கித் தரணுமா?''

''என்னடி உளர்றே. நீயும் உன் சங்கிலியை அடகு வச்சிருக்கே?

உன் மாமியார் வீட்டிலே ஒத்துப்பாங்களா? இப்பவே தண்டச் சோறுன்னு மாமனார் திட்டினார்னு சொல்றே? இப்படி வேற போனா என்னாகுமோ?''

''என்னம்மா இது. நான் அஞ்சு மாசம் கழிச்சு தானே போகப் போறேன். எப்படியும் அதுக்குள்ளே போட்டுறலாமே?''

''அதுக்கு உன் சங்கிலியை ஏண்டிக் கழற்றணும்?''

''ப்ளீஸ்மா... சண்டை வேணாம்மா.''

அம்மா பெண்ணையே பாவமாகப் பார்த்துவிட்டு உள்ளே போகிறாள். ரூபாயைக் கணவனிடம் தந்தபோது சந்தோஷமாக வாங்கிக் கொண்டு கிளம்புகிறான் தியாகு. அவசரம், அவசரமாக பணத்தை பாக்கெட்டில் வைத்தபடி கிளம்ப, அவனையே வெறிக்கிறாள் சுமதி.

'இது என்ன கல்யாணம்? இது என்ன வாழ்க்கை?' நினைத்த சுமதிக்கு மனதை என்னவோ செய்தது. யாரோ நெஞ்சைப் பிழிவது போல் தோன்றியது.

யாரும் அறியாமல் கண்ணீரை அடக்கிக் கொள்கிறாள். மனது விண்டு, விண்டு போனது. தலை சுற்றியது. வாந்தி

வரும்போல் தோன்றியது. யாரோடும் பேசத் தோன்ற வில்லை.

ஆயிற்று சுமதி வந்து முழுவதுமாக ஐந்து மாதங்கள் முடிந்தே போய் விட்டது. மாமியார் வீட்டிலிருந்து கிளம்பி வரும்படி போன் வந்தே விட்டது.

அம்மா தன் சங்கிலியை அடகு வைத்து பெண்ணின் சங்கிலியையும், வளையலையும் மீட்டு விட்டாள்.

அப்பா மாமியார் வீட்டிற்கு கொண்டு விட்டபோது மாமியார் ஆனந்தமாக வரவேற்றாள்.

''என்னம்மா எப்படி இருக்கே? குரு எப்படி இருக்கான்?'' பேரனை வாங்கி முகர்கிறாள் மாமியார் அம்மா, அப்பா ஆஸ்பத்திரியில் இருந்தது வந்து கஷ்டப்பட்டது எல்லாம் சேர்ந்து குழந்தைக்கு பேர் வைக்கக்கூட மறந்து போனது, மாமியார் வீட்டில் பிரசவம் பார்த்ததே பெரிய விஷயம். தன் வீட்டில் குட்டி பாப்பா சின்னி என்று ஆளுக்காள் ஏதோ ஒரு பெயரைக் கூப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

இங்கே மாமியார் 'குரு' என்று கூப்பிட, 'ஏதோ ஒரு பெயர்' என்று நினைத்துக் கொண்டாள் சுமதி. எப் போதுமே முதல் குழந்தைக்கு செய்யும் அளவிற்கு அடுத்த அடுத்த குழந்தைகளுக்கு செய்ய கை வருவ தில்லை.

அப்பா அவர்களோடு கொஞ்ச நேரம் பேசிவிட்டு வழக்கம்போல் கிளம்பிவிட மருமகளோடு, இனிப்புகள், டப்பாக்கள், பூ பழங்கள் ஆகிய சீரை எல்லாம் உள்ளே எடுத்து வைக்கிறாள் மாமியார் மருமகளோடு குதூ கலித்துப் பேசுகிறாள். பேசிக் கொண்டிருக்கும்போதே சற்று தயங்குகிறாள்.



''என்னடா அத்தை? ஏதோ தயங்கறீங்க? ஏதோ எங்கிட்டே சொல்ல வர்றீங்க? சொல்லாம யோசிக்கிறீங்க என்ன விஷயம்?''

சொல்ல வந்ததைச் சொல்லாமலே மறைக்கிறாள் மாமியார். ''ஒண்ணுமில்லேமா'' என்று சொல்லிவிட்டு குழந்தைகளோடு கொஞ்சுவதில் இறங்கி விடுகிறாள்.

மருமகள் வந்து சிறிது நேரம் கழித்து மாமனார் வரு கிறாள். வரப்போகிறேன் என்று முன்பே அறிவித்தும் புருஷன் வரவில்லை. மனம் வழக்கப்படி வேதனைப் பட்டது. ''எதனாச்சும் சாப்பிடு'' மாமியார் இனிப்புகளைக் கொண்டு கொடுக்க,

''எனக்கு பசிக்கலை அத்தை'' என்றவாறே விலகிப் போகிறாள்.

''ஏம்மா?''

''பசிக்கலை அத்தை.''

''எப்படி பசிக்கும்? ஊரை ஏமாத்தி, உலைல வச்சா, எப்படி பசிக்கும்?''

மாமனார் காட்டமாகக் கூற, மாமியாரும் சற்று பயந்த படி பார்க்கிறாள்.

''என்ன சொல்றீங்க மாமா?''

''எங்க அந்த ஐயாயிரம் ரூபா. உம் மாமியார் கழுத்தை பார்த்தியா? உனக்கு அவசரம் என்ற உடனே கழற்றிக் கொடுத்தா. இன்னிக்கு எப்படி நிக்கறா? ஊருக்குப் போன வுடனே மாமியாருக்காக ரூபாய் வாங்கித் தருவேன்னு நினைச்சேன். கமுக்கமாக உக்காந்துட்டே. நீ என்ன மனுஷி. உங்க மாமியார் உனக்காக கவலைப் பட்டாங் களே. அது உனக்குத் தெரிய வேணாம்.''

சுமதி அதிர்ந்து போகிறாள். கணவனிடம் என்றோ ஐயாயிரம் கொடுத்து அனுப்பினே. அதைக் கணவன் கொடுக்கவில்லையா என்ன? சற்று அதிர்ச்சியுடன் மாமியாரைப் பார்க்கிறாள்.

''என்னங்க. அவ கொணர்ந்து இருப்பா. வந்ததும் வராததுமா ஏங்க பாவம் மருமககிட்டே இப்படிப் பேசறீங்க?''

''அவகிட்டே பேசாம வேற யார்கிட்டே பேச முடியும்?

அன்னிக்கே சொன்னேன். அவுங்க வீட்டு மனுஷங் களை வரச் சொல்லி எழுதிப்போடுன்னு கேட்டியா?'' எரிச்சலோடு கத்துகிறார் மாமனார்.

ஒரு நிமிடம் அதிர்ச்சியில் மூழ்கி இருந்தவள் மாம னாரின் வார்த்தைகளில் காயப்பட்டவளாய் சற்று எரிச்ச லுடன் கத்துகிறாள்.

''மாமா மேலே மேலே ஏதேனும் பேசிட்டுப் போகா தீங்க. உங்க பையன் வந்தபோதே கொடுத்து அனுப் பிச்சிட்டேன். வட்டியும் சேர்த்து கொடுத்து அனுப்பிச் சேன். மூணு மாசத்துக்கு முன்னாடியே கொடுத்தாச்சு.''

சற்று கிரீச்சிட்டலோடு அவள் கத்த, மாமனார் முகம் மாறினார்.

''என்னது என் பையன் கிட்டே கொடுத்தியா? யாரைக் கேட்டுக் கொடுத்தே?''

அவர் சற்று பல்லைக் கடித்தபடி கூற,

''ஏம்மா அவன் கிட்டே கொடுத்தே?'' மாமியார் கேட்க,

மாமியாரை சற்று திடுக்கிடலோடு பார்த்தவாறே,



''இல்லை அத்தை அவர் குழந்தையைப் பார்க்க வந்தபோது கண்டபடி ஏசினாரு. அம்மா கழுத்திலே, கையிலே ஒண்ணுமே இல்லைன்னு திட்டினாரு. எங்கம்மா அவுங்க சங்கிலியை, வளையலை அடமானம் வச்சு வட்டியோடு திருப்பி கொடுத்து அனுப்பிச்சாங்க.''

''ஏம்மா அவன் குணம் உனக்கு தெரியாதா? கொடுக் கறதுக்கு முன்னே என்னைப் போன்லே ஒரு வார்த்தை கேக்க வேண்டாமா?'' மாமியாரின் குரலிலும் லேசான அதிருப்தி தோன்ற, சுமதி குற்ற உணர்வில் திளைக் கிறாள். சாதாரண மருமகளாக இருந்தால், ''அதெல்லாம் கொடுக்க முடியாது. உன் பையன் கிட்டே கொடுத்து அனுப்பிச்சாச்சு'' என்று முறைத்திருக்கலாம். ஆனால் வீட்டில் உள்ள ஆண் பிள்ளைகளும், தன் கணவர் உட்பட ஒரு உதவியும் செய்யாதபோது, தன் வீட்டு மனிதர்கள் வராதபோது எதையும் பொருட்படுத்தாம தன் சங் கிலியையும், வளையலையும் அடகு வைத்தவள் தன் மாமியார். அந்த மனது நோகும்படிதான் செய்தது தவறுதான்.

சுமதிக்கு சட்டென்று கண்களில் நீர் நிறைந்தது. தன் மாமியாரின் கைகளைப் பிடித்துக் கொள்கிறாள். கண் களில் ஒற்றிக் கொள்கிறாள்.

''பெத்த தாயைக் கூட உங்க பையன் ஏமாத்துவாங் கன்னு நினைக்கலே.

மன்னிச்சிடுங்க அத்தை. எப்படியாவது அந்த பணத்தைக் கொடுத்துடறேன்.''

பெண்ணுக்கு பெண்ணே விரோதி என்பது எத்தனை நிஜமோ பெண்ணுக்கு பெண் தான் உறவினர் என்பதும்

அத்தனை நிஜம் இங்கே ஒன்றை ஒன்று வரிந்து கொண்டதால் மனம் விகசித்துப் போய், மாமியார் மருமகளை அணைத்துக் கொள்கிறாள்.

"அழாதேம்மா. என்ன செய்ய முடியும் சொல்லு?"

"என்னடி அது நடிக்குது. துட்டை அவுங்க வீட்டு லேந்து கொண்டு வந்து கொடுக்கச் சொல்லு" மாமனார் பேயாட்டம் ஆட, மாமியார் கையைப் பிசைந்தாள்.

புருஷன் கையாலாகாதவன் தான். பணம் இருந்தால் மொத்தத்தையும் செலவு செய்பவன். அதற்காக அம்மா மடியில் கை வைப்பவன் என்று அவள் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. யாருக்காக இல்லையென்றாலும் மாமி யாருக்காக தான் ஏதாவது செய்தே ஆக வேண்டும்.

அன்று இரவு கணவன் வந்தபோது பணத்தைப் பற்றி சுமதி கேட்க, பயங்கர சண்டையே வந்தது. கணவன் ஆடு ஆடு என்று ஆடுகிறான்.

"என்னடி என்னமோ கணக்கு கேக்கறே? அம்மாவுக் காகத் தானே வாங்கினேன். பேக்டிரியாலே அவசர செலவு. சரி அப்புறம் கொடுத்துக்கலாம்னு செலவழிச்சேன். இதுக்கு என்னமோ கணக்கு கேக்கறே?"

"கணக்கு நான் கேக்கலைங்க. உங்கப்பா கேக்கறாரு. எம் பொண்டாட்டி நகை போட்டாளே என்னாச்சுன்னு கேட்டாரு?"

"கேக்காம இருப்பாங்களா? கஷ்டம்னவுடனே மாமியார் அவுத்துக் கொடுக்கலே."

சுமதிக்கு மனதில் என்னவோ ஓடிற்று. அழுகை வந்தது. எதற்காக இப்படி காயப்படுத்துகிறான். எனக்கு



குழந்தை என்றால் அவனுக்கு ஒன்றுமில்லையா? மனது வெந்தது. தாள முடியாமல் அழுகை வந்தது. யாருக்கு என்னவென்றாலும் புருஷன் தான் ஆதாரம். ஆதாரமாக இருக்கக் கூடிய புருஷனே தன்னை இவ்வாறு செய் கிறானே. மீண்டும் நெஞ்சினில் தாபம் வேதனை.

அடுத்த நாள் காலை மாமனார் திட்டவட்டமாக அறி வித்து விட்டார். உம் பொண்டாட்டி, பிள்ளைகளைக் கூப்பிட்டுக்கிட்டு கிளம்பு. இனிமே ஒண்ணா இருந்தா வேலைக்கு ஆவாது. இவ பரிதாபப்பட்டுகிட்டே இருப்பா. இதெல்லாம் ஒண்ணும் சரியாகாது" பிள்ளை யிடம் அப்பா கூற,

"என்னப்பா நீங்க இவுங்களை அழைச்சுகிட்டு நான் எங்கே போறது?" மகன் கத்துகிறான்.

"என்னைக் கேட்டா?" அப்பா திருப்பிப் பேச,

"இத பாரு மாசம் கம்பெனி கணக்குலேந்து ஆயிரம் ரூபா எடுத்துக்க. கம்பெனி பக்கத்துலேயே வீட்டைப் பிடி. குடி போய்த் தொலை." சற்று எரிச்சலுடன் கத்துகிறார் மாமனார்.

அடுத்த ஒரு வாரத்தில் கம்பெனிக்கு அருகிலேயே ஒரு வீட்டைப் பார்த்து மனைவி, குழந்தைகளை அழைத் துப் போகிறான் தியாகு. மாமியார் தான் விருப்பமில்லாமல் அழுகிறாள். கணவனுடன் தனிக்குடித்தனம் என்று மகிழ்ச்சியில் போகிறாளே தவிர, இது மீள முடியாத இருட் டுக் குகை, ஒரு வழிப் பாதை என்று தெரியாதவளாய் போகிறாள் சுமதி.



# 12

முதலில் கணவன் தனி வீடு போக மாட்டேன் என்று அடம் பிடித்து பின் மாமனார் போயாக வேண்டும் என்று வற்புறுத்த அரை மனதாக ஒத்துக் கொண்டான். மாமனாரே வீடு பார்த்து அட்வான்ஸ் கொடுத்து, ஒரு நல்ல நாளில் சுமதி குழந்தையைத் தூக்கிக் கொண்டு கிளம்பிப் போகிறாள். பேக்டரியின் அருகில் வீடு, கணவன் நேரத்துக்கு வந்து மற்ற கணவன்மார்கள் போல் இருப்பான் என்று நினைத்ததிலும் ஏமாற்றம்தான். அவன் வழக்கப்படியான பதினோரு மணியைத் தாண்டவே இல்லை. என்ன செய்வானோ, எங்கு போவானோ? ஆனால் வேலை இருப்பது போல் நடிப்பான். மாமியார் வீட்டிலேயாவது மாமியார் என்ற ஜீவன்கூடே இருப்பாள். இங்கே தனி வீட்டில் இருக்கவே பயமாக இருந்தது. சண்டை போட்டு பார்த்தாயிற்று. நல்ல தனமாக சொல்லியாயிற்று. எதற்குமே பலன் இல்லாமல் போனது. தனிக்குடித்தனம் என்று மாமியார் வாங்கிப் போட்ட சாமான்களை வைத்து ஒரு மாதம் ஓட்டுகிறாள். அன்று வீட்டு வாடகை கேட்டு வீட்டுக்காரர் வந்துவிட, கணவனிடம் விஷயத்தைச் சொல்ல, கணவன் எதையும் லட்சியம் செய்யாமல் அமர்ந்திருந்தான். அடுத்த மாதத்திற்குள் வாடகை தர முடிய



வில்லை. பால்காரன், மளிகை என்று எல்லாவற்றிற்கும் கடன்.

''ஏங்க பணம் இல்லேன்னா எப்படிங்க குடும்பம் நடத்தறது?''

மனம் நொந்து போய் கேட்க,

''எனக்கு சோறு போடத்தானே துட்டு கேக்கறே? இனிமே இந்த வீட்டிலே கையை நனைக்கலே'' என்று கெத்தாக கணவன் கூற அதிர்ந்து போகிறாள் சுமதி. கணவனின் உண்மைச் சொரூபம் மொத்தமும், அப்போது தான் தெரிந்தது.

வாழ்க்கையில் எதை நினைக்கிறோமோ, எது வேண்டும் என்று துடிக்கிறோமோ அதை ஏதோ ஒரு ரூபத்தில் நமக்குக் கிடைக்க கடவுள் சந்தர்ப்பத்தைக் கொடுத்துக் கொண்டு தான் இருக்கிறான். பாதிப் பேர் அந்த சந்தர்ப்பங்களைக் கூட அறிந்து கொள்ள முயலுவதில்லை. அறிந்து பயன்படுத்துகிறவன் வெற்றிப் பாதையின் முதல் படியில் கால் வைத்து விடுகிறான்.

பக்கத்து வீட்டுப் பெண் கணக்குகளில் மிகவும் குறைவான மதிப்பெண்கள் வாங்குவதாக கணக்கும், ஆங்கிலமும் சொல்லித் தர இயலுமா என்று கேட்டு, அதற்கு நூறு ரூபாய் கொடுப்பதாகவும் சொல்ல, சுமதி குதிக்கிறாள். ஒரு ஐந்து டியூஷன் கிடைத்தால்கூட மாத வருமானம் என்பது வரும். மிகவும் சிரத்தையோடு, ஆசையோடு வந்த பெண்ணுக்கு டியூஷன் சொல்லித் தர, ஒரே மாதத்தில் எட்டு பெண்கள் சேர்ந்து போயினர். மாதம் எண்ணூறு ரூபாய் வரவு. வீட்டு வாடகை முந்நூறு ரூபாய் போனாலும் பின்னும் ஐந்நூறு ரூபாய் மாதச் செலவிற்கு என்று இருக்கிறது.

கணவனிடம் பணம் கேட்காமலேயே மாதா மாதம் சம்பாதிக்க ஆரம்பித்தாள் சுமதி. எப்போதுமே வீட்டில் இருக்காத கணவனுக்கு அவள் டியூஷன் எடுப்பதுகூட தெரியவில்லை. ஒருமுறை ஊருக்குச் சென்றபோது, "ஆமா அப்பா மாசா மாசம் உனக்கு சம்பளம் போட்டுத் தராரே அதை என்ன செய்யறே?" கேட்கிறாள் தாயார். "பாவம் ரெண்டு குழந்தையும் வச்சுகிட்டு டியூஷன் எடுத்துகிட்டு எத்தனை சிரமப்படறா என் மருமக?" அன்று வீட்டிற்கு வந்து "டியூஷன் ஏன் எடுக்கிறாய்?" என்று சண்டை போட்டான் கணவன்.

"நீங்க பணம் தாங்க. நாங்க டியூஷனே எடுக்கலை" சுமதி அலுத்துக் கொண்டபோது, "இருந்தா சாப்பிடு. இல்லைன்னா பட்டினி கிட" என்று அலட்சியமாகச் சொன்னான் கணவன்.

பல மாதங்கள் கழித்து இன்னொரு குழந்தையையும் சுமக்க ஆரம்பித்தாள் சுமதி.

"என்னம்மா நீ இரண்டு குழந்தைகளையே வளர்க்கறது கஷ்டம்" என்று மாமியாரும் தன் பங்குக்கு அறிவுரை சொல்லி விட்டுப் போனாள்.

அம்மாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது "ஏண்டி அதுதான் ஒரு பொண்ணு பிள்ளைன்னு ஆயிடுச்சு இல்லே. ஜாக்கிரதையா இருக்கக் கூடாது?"

அம்மா கடிந்து கொண்டாள். பணம் தருவதற்கு ஆயிரம் யோசிக்கும் கணவன், இந்த வேலையில் மட்டும் சரியாக இருக்கிறான் என்று அம்மாவிடம் எப்படிச் சொல்வது? 'குழந்தை வேண்டாம்' என்று தான் சொன்னால் மட்டும் எடுபடுமா என்ன? ஆனாலும் சுமதி சும்மா



யிருக்கவில்லை. தனக்குத் தெரிந்த லேடி டாக்டரைப் பார்த்து 'குழந்தை வேண்டாம்' என்று தன் நிலை மையைச் சொல்லி, குழந்தையை கலைப்பதற்குக் கூட ஏற்பாடு செய்து கொள்கிறாள்.

எப்படி இருந்தும் குழந்தையை ஒன்றும் செய்ய முடியவில்லை. பத்தாவது மாதத்தில் இன்னொரு பையன் பிறந்துவிட, சுமதி ஆபரேசன் செய்து கொண்டாள். உதவிக்கு அம்மா வந்து பல மாதங்கள் கூடவே இருந்தாள்.

"என்னடி இது உம் வீட்டுக்காரர் மாச துட்டு ஒண்ணும் கொடுக்க மாட்டாரா? என்ன வீடு இந்த லட்சணத்தில் இருக்கு?" அம்மா எரிச்சலுடன் பேசியவள் இருந்தவரை தன் கையில் இருந்த ரூபாயை போட்டு ஒப்பேற்றி விட்டுப் போனாள். அடுத்து உதவிக்கு வந்த மாமியாரும், மகனைத் திட்டிவிட்டு மருமகளுக்கு உதவி செய்து விட்டுப் போகிறாள்.

பொண்ணை இந்த ஆண்டு பள்ளியில் சேர்க்க வேண்டும். சுமதி மறுபடியும் டியூஷன் எடுக்க ஆரம்பித்து, அதில் வந்த பணத்தை வைத்து யூனிபார்ம் வாங்கி பணத்தைக் கட்டி கிண்டர் கார்டனில் மகளைச் சேர்த்து விடுகிறாள். வீட்டு வேலை செய்ய வேண்டும், மூன்று குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள வேண்டும், டியூஷன் எடுத்துப் பணம் சம்பாதிக்க வேண்டும். பெண்ணுக்கு சொல்லித் தர வேண்டும்.

சாப்பிடக்கூட நேரமில்லாமல் பயங்கர பிஸியானாள் சுமதி. சமைத்து காலையில் கிளம்ப வேண்டும், கிளம்ப வேண்டும் என்று பறக்கும் கணவனுக்கு டிபன் செய்து

கொடுத்துவிட்டு, மூன்று குழந்தைகளுக்கும் ஊட்டி விட்டு, பெரிய பெண்ணை கிண்டர் கார்ட்னில் கொண்டு போய் விட்டு விட்டு மறுபடியும் இரு குழந்தைகளையும் குளிப்பாட்டி, டிபன் ஊட்டி, தானும் ஒரு வாய் சாப்பிட்டு விட்டு வேலை செய்து வீட்டைப் பெருக்கி, பாத்திரம் கழுவி, துணிகளைத் துவைத்து மறுப்படியும் மதியம் சாப்பாடு செய்து, குழந்தையை அழைத்துக் கொண்டு வந்து, குழந்தைகளுக்கு ஊட்டி, மதியம் வீட்டிற்குள் வரும் கணவனுக்கும் சோறு போட்டு, தான் ஒருவாய் போட்டுக் கொண்டு, சிறிது படுத்து எழுந்து, துணிகளை மடித்து வைத்து, இரவு சமையல் செய்து, டியூஷன் சொல்லிக் கொடுக்க உட்காருவாள்.

கூடவே தன் குழந்தைகளையும் உட்கார வைத்து சொல்லிக் கொடுப்பாள். இந்த சர்க்கஸ் ஆட்டத்தில் நேரம் பறந்தே போனது. தன்னைப் பற்றிக் கொஞ்சம் கூட கவலைப்படாமல் நேரத்திற்கு சாப்பிடாமல் வேலை, வேலை, கடமை, கடமை என்று மாறிப் போனாள் சுமதி. பொறுப்பைத்தான் ஏற்றுக் கொண்டதால் வேலையின் சுமை தெரியவில்லை. ஏதாவது கேட்டால் சால்ஜாப்பு சொல்லும் கணவன். அவனோடு மல்லுக்கு நிற்பதற்கு பதில் இன்னும் நாலு டியூஷன் எடுத்தால் பணமாவது வரும். மனிதனுக்கு எந்தத் தேவைக்கும் ஒரு எல்லை உண்டு. பணத் தேவைக்கு மட்டும் எல்லையே கிடை யாது. எத்தனை சம்பாதித்தாலும் போதவில்லை. வீட்டு வாடகை, மின்சார செலவு, ஐந்து ஜீவன்களுக்கு சாப்பாடு, அவ்வப்போது வந்து போகும் மாமியார் மாமனார், தன் குடும்பங்களிலிருந்து யாரேனும் ஒருவர்.

இது முடிந்தால் அது, அது முடிந்தால் இது என்று வாழ்க்கையே ஒரு சக்கரம் போல் ஆனது. முதல் முடிவு



இல்லாத ஒரு சுற்று. தியாகு வழக்கப்படி கம்பெனிக்கு போய் வருகிறான். விடியற் காலையில் ஜாகிங் என்று கிளம்பி விடுவான். பிறகு எட்டு மணிக்கு தான் வீட்டுக்கு வருவான். 'ஆச்சா போச்சா' என்று கத்தி ஆர்ப்பாட்டம் செய்து டிபனைச் சாப்பிட்டு விட்டு, கிளம்பி விடுவான். மதிய உணவிற்காக பதினோரு மணிக்கே கூடைக்காரன் வந்துவிட அவசரம் அவசரமாக மதிய உணவையும் கையோடு சமைத்து, டிபன் கேரியரில் கொடுத்து அனுப்பி விடுவாள். இதன் நடுவில் பெண்ணைக் கொண்டு பள்ளியில் விட்டு பிள்ளைகள் இருவருக்கும் டிபன் ஊட்டி, விளையாட்டு காட்டி, குளிக்க வைத்து, தூங்க வைத்து விட்டு திரும்புவதற்குள் நேரம் எங்கோ ஓடி விடும். தான் எப்படி இருக்கிறோம் என்பதே மறந்துவிடும். பல நாட்கள் காலை சாப்பிட்ட வயிறு பசிக்க, பசிக்க வேலைகளை முடித்துவிட்டு பன்னிரண்டு மணிக்கு காய்ந்த மாடு கம்பன் கொல்லையில் விழுவது போல் சோற்றை வாயில் திணித்துக் கொள்வாள். அலுப்பான இந்த தொடர் வாழ்க்கையில் அலுத்துக் கொள்ளக்கூட நேரம் இன்றிப் போனது.

பெண்டாட்டி தன்னைப் பணமே கேட்பதில்லை என்றதும் தியாகு இன்னும் சுதந்திரமானான். கட்டுப் பாடில்லாது வரவை இஷ்டப்படி செலவு செய்து கொண்டு, தன் வாழ்க்கையை ஆனந்தமாக வைத்துக் கொண்டான்.

இங்கே மனைவிக்கு அணிந்து கொள்ள நல்ல புடவை இருக்காது. சட்டை இருக்காது. சற்று சாயம் போன புடவையை அணிந்து கொண்டிருக்கும் மனைவியை கவனித்தும் கவனிக்காதவன் போல் இருப்பான்.

அவளைப் பார்க்கும்போதே உள்ளுக்குள் ஆத்திரம் வரும். தன் வீட்டில் என்னமோ தனக்கு கூடப் பிறந்தவர்கள் இல்லை. ஆனால் சித்தப்பா பெண், பெரியப்பா பெண் எல்லாரையும் பார்த்திருக்கிறான். திருமணம் ஆகி இரண்டு குழந்தைகள் பிறந்ததும் இன்னும் புடவை, நகை என்று பிறந்த வீட்டிலிருந்து வந்து கொண்டே தான் இருந்தது. சித்தப்பா, பெரியப்பா மட்டுமல்ல அவனுக்குத் தெரிந்த வீடுகளில் எல்லாம் ஏழையோ, பணக்காரனோ பெண்ணுக்கு செய்து கொண்டே தான் இருக்கிறார்கள். ஏன் தன் மனைவியின் அக்கா பிறந்த வீட்டுக்குப் போய் டேரா போட்டுவிட்டு எப்படி எல்லாம் என்ஜாய் பண்ணு கிறாள். தன் மனைவி ஒரு அசத்து, எதையும் கேட்கத் தெரியாது. கிழிந்த புடவையையும், சாயம் போன துணியும் உடுத்திக் கொண்டு தன் மனைவி இத்தனை கஷ்டப்படுகிறாள். ஆனால் அவர்கள் தாய் தந்தை...?

தான் செய்ய வேண்டிய எதையும் செய்ய துப்பு இல்லை. ஆனால் பெண்டாட்டியின் பெற்றோரிடமிருந்து எதுவுமே வரவில்லை என்று மட்டும் மனம் குற்றம் சாட்டுகிறது. தாங்கள் ஏழ்மையால் இருப்பதற்கே மனைவி யின் பெற்றோர்தான் காரணம் என்ற ரீதியில் யோசிக்க ஆரம்பித்தான். மனம் வெறுப்படித்தது. எரிச்சலுற்றது. அந்த எரிச்சலில் மனைவியைப் பார்க்கும் போதெல்லாம் எரிச்சலுற்றான்.

சுமதிக்கு எல்லாமே பழகிப் போனது. இல்லாமை பழகிப் போனது. வறுமையும் பழகிப் போனது. கைக்கும், வாய்க்கும் போராட்டமும் பழகிப் போனது. நேரமின்மை, பசித்தவயிறு ஓயாத வேலை எல்லாமே பழகிவிட, நினைவுகளைக்கூட விட்டவளாய் ஓயாது செக்குமாடு



போல் உழைத்துக் கொண்டிருக்கிறாள். அவன் கோபம், வெறுப்பு இவற்றைக்கூட ஒரு கை தேர்ந்த ஞானியைப் போல் ஒதுக்கித் தள்ளிவிட்டு தன் கடமைக்காக வாழும் பெண்ணாகவே மாறிவிட்டாள்.

இரட்டை மாட்டு வண்டியில் பூட்டப்பட்ட இரண்டு மாடுகளில் ஒன்று சண்டித்தனம் செய்தாலும் வண்டி ஓடுவதற்கு இன்னொன்றல்லவா அதிக சுமையைத் தாங்கிக் கொண்டு ஓட வேண்டியிருக்கும். இங்கே சுமதியும் அப்படித்தான் ஓடிக் கொண்டிருக்கிறாள்.

அன்று இரவு எதிர்பாராத விதமாக பக்கத்து வீட்டில் இருக்கும் சுமதியின் தோழி குடும்பம் ஏதோ வேலையாக அங்கே வர சுமதியைப் பார்த்துவிட்டு வரலாம் என்று வந்தார்கள். வந்தவர்கள் சுமதியின் கடைசி தங்கைக்கு நிச்சயம் ஆகப்போகும் விஷயத்தையும் சொல்லிவிட்டு, மற்ற இரு தங்கைகளின் நிலைமையைப் பற்றிச் சொன்னார்கள்.

''உன் முதல் தங்கையோட புருஷனுக்கு, மும்பையிலே பெரிய வேலையாம். ஏன்னா பெரிய கார் தெரியுமா? வந்து இறங்கிச்சு. ஆச்சரியமா இருந்தது என்கிறாள். பக்கத்து வீட்டுக்காரி. அவுங்க மும்பைக்கு பிளேன்லே தான் போறாங்க.''

அவள் சொல்லச் சொல்ல சுமதி சற்று ஏக்கத்தோடு தான் கேட்கிறாள். ''உன் அடுத்த தங்கை இருக்காளே, அவுங்க வீட்டுக்காரருக்கு அமெரிக்காவிலே வேலை கிடைக்கும் போலருக்கு. கிடைச்சா உன் தங்கச்சி அமெரிக்காவுக்கு பறந்துடும்'' என்றவள் ''உன் கடைசி தங்கச்சிக்கும் ரொம்ப ரொம்ப நல்ல இடம். பெரிய

பணக்காரங்க. இந்த பையனே இன்ஜினியரா இருக்கான். மாசம் 40க்கு மேலே சம்பளமாம். கேட்க கேட்க சுமதி மலைத்துப்போக, ஒரு நிமிடம் சந்தோஷம் ஏற்பட்டாலும், அடுத்த நிமிடம் மனதின் ஒரு மூலையில் சின்னதாக வலித்தது - முகம் கூம்பிப் போனது. தன் விதியை மனதிற்குள் நொந்தவாறே திரும்பியவள் திடுக்கிட்டுப் போனாள்.



# 13

எப்போதும் ஊர் சுற்றி விட்டு நடு இரவு எப்போது வரும் என்று காத்திருந்து உள்ளே நுழையும் கணவன், இன்று ஐந்தரை மணிக்கே வீட்டின் வாயிலருகே வந்து நிற்கிறான். சுமதியின் தோழி அவளின் தங்கைகளைப் பற்றிச் சொல்லச் சொல்ல ஆத்திரம், கோபத்தோடு விழித்துப் பார்க்க, அந்தப் பார்வையைப் பார்த்து தான் சற்று பயந்து, திடுக்கிட்டுப் போனாள் சுமதி.

இந்த கோபப் பார்வை ஒன்றும் புதிதல்ல. சில வருடங்களுக்கு முன்பு தான் படும் துன்பங்களை மாமியார் புரிந்து கொண்டு பிள்ளையிடம் சண்டை போட்டபோது, ஒரு நாள் சண்டை போட்டவன், அதை மனதில் வைத்துக் கொண்டு மற்றுமொரு தூரத்துச் சொந்தங்கள் வந்தபோது அனைவர் முன்னிலையிலும் காரணமில்லாமல் தன்னை அவமானப்படுத்தியது நினைவிற்கு வந்தது.



அவள் வந்த சொந்தங்களுக்கெல்லாம் சாப்பாடு கொடுத்துவிட்டு, மாலை டீ போட்டுக் கொடுத்துவிட்டு டியூஷன் எடுத்துக் கொண்டிருந்தபோது மூன்றாவது படித்துக் கொண்டிருந்த தன் பெரிய பெண்ணையும் அடித்து ஒன்றாவது படித்துக் கொண்டிருந்த தன் பிள்ளையையும் தலையில் குட்டி இன்னொரு பிள்ளையை தொடையில் கிள்ளி, ''என்னடி டியூஷன் எடுக்கற மாதிரி பந்தா காமிக்கிறியா?'' என்று வந்தவர்கள் முன்னால் ஏசி ஏன் அடிக்கக் கூட அடித்து, சொந்தக்காரர்கள் முன்னிலையில் மட்டுமல்ல, டியூஷன் சொல்லிக் கொடுக்கும் பிள்ளைகள் முன்னாலும் தலை குனிந்து அமர்ந்து இருந்தாள் சுமதி. கண்களில் இருந்து கண்ணீர் வடிந்து கொண்டே இருந்தது. எப்போது அந்த நிகழ்ச்சியை நினைத்தாலும் மறுபடியும் கண்ணீர் பொங்கிக் கொண்டு வரும். இன்று என்ன கூத்து செய்யப் போகிறானோ? சற்று பயத்தோடு கணவனையே பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

''ஓ... ரொம்ப நல்லா இருக்கு. நான் ஒருத்தன்தான் மட்டம். அப்படீன்னு உங்க வீட்டுக்காரங்க சொல்லிக் காண்பிக்க வந்தாங்களா?''

தோழிகள் சற்று பயத்தோடு பார்க்க, ''என்னடி பார்க்கறாளுக? உங்கப்பனை வேணா உனக்கு இப்ப ஒரு இன்ஜினியர் மாப்பிள்ளையை பார்க்கச் சொல்லு.''

தோழிகள் எல்லாம் சற்ற நடுங்கிப் போய் அமர்ந்திருக்க ''எல்லாம் கூனி பரம்பரையா இருக்கு. இதுக்குன்னா இங்கே புறப்பட்டு வந்தீங்க. குடும்பத்தை கெடுத்துட்டு என்ன செய்யப் போறீங்க?''

அந்தக் கேள்வி மனதை கொத்த அடுத்த ஐந்து நிமிடத்தில் எல்லோரும் காலி செய்தனர். அவர்கள் போன பின்னும், கணவன் கேவலமாகத் தான் திட்டினான்.

சுமதி கூனிக் குறுகிப் போய் விட்டாள். எத்தனை பெரிய அவமானம்? ரொம்ப நெருங்கி இருந்த உறவு, அந்த பக்கத்து வீட்டினர் சுமதிக்கு மிக மிக நெருங்கியவர்கள். இவனுடைய வார்த்தையினால் எல்லாமே போய் விட்டதே. மனம் வெந்து போய் அழுகை வந்தது. இப்படி எத்தனை முறை அவமானப்படுத்துவான் பாவி. கணவனை நினைக்க நினைக்க நெஞ்சு எரிந்தது. அழுகை வந்தது. அன்று இரவு சாப்பிடாமலே படுத்துக் கொண்டாள் சுமதி. பல நாட்கள் சாப்பாடு இல்லாமல் தண்ணீரைக் குடித்து விட்டு படுத்திருக்கிறாள். இன்று இருந்தும் சாப்பாடு வேண்டியிருக்கவில்லை.

காலை எழுந்தபோதே, தலை வலித்தது. இரவு சாப்பிடாமல் படுத்துக் கொண்டது. அழுதழுது சிவந்த கண்கள், உப்பிப் போன முகம் சோர்ந்து போய் எழுந்திருக்க முடியாமல் தான் எழுந்திருக்கிறாள். நல்லவேளை முதல் நாள் இட்லி மாவை அரைத்து போட்டு வைத்திருந்தாள். மளமளவென்று கணவனுக்கு டிபனை செய்து சாம்பார் வைத்து தர, முகத்தை சுளித்துக் கொண்டு தான் சாப்பிடுகிறான் கணவன்.

அவனை அலுவலகத்திற்கு அனுப்பிவிட்டு குழந்தைகளை பள்ளியில் விட்டு வந்த பின் தலைவலி பிய்த்து உதறியது. அவசரமாக சிறிது காபி கலந்து குடிக்க வாந்தி வந்தது. வயிறு பிடித்து இழுக்க இரண்டு இட்லிகளை சாம்பாரில் தோய்த்து சாப்பிடுகிறாள். சற்று தேவலாம் போல் இருக்க, கண்ணை மூடி அப்படியே அமர்ந்து



கொண்டாள். தலை வேறு லேசாக கிறுகிறுத்தது. மயக்கம் வரும் போல் இருக்க, அப்படியே சரிந்து படுத்துக் கொள்கிறாள்.

அன்று கணவனுக்கு எதுவும் விசேஷமாக சமைக்கவில்லை. சாதம் வடித்து காலையில் செய்த சாம்பாரையே ஊற்றி அப்பளப் பூவை வறுத்து அனுப்பி வைத்தாள். சற்று கஷ்டப்பட்டு மீதி வேலைகளை செய்கிறாள்.

பள்ளியில் இருந்த குழந்தைகளுக்கு சாப்பாடு இட்டு கடைசி மகனை அழைத்து வந்து சாப்பாடு ஊட்டி விட்டு அதற்கு மேல் தாள முடியாமல் சாப்பிடாமலேயே படுத்துக் கொள்கிறாள்.

அதிகமான சுரம் வந்து சற்று கண் திறக்காமல் தான் படுத்துக் கிடக்கிறாள்.

அன்று இரவு கணவன் வந்ததும் என்ன ஏது என்று கேட்கவில்லை. எரிச்சலோடு இருந்த சாப்பாட்டை வழித்துப் போட்டுக் கொண்டு சாப்பிடுகிறான். எரிச்சலுடன் கத்துகிறான்.

கிட்டத்தட்ட பல வருடங்களாக இந்த ஏமாற்றமும் விரக்தியும் மனதைக் கவ்வ, சுமதியும் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறாள்.

பெரிய பெண் ரேகா பி.காம் இரண்டாம் ஆண்டு படிக்கிறாள். அவளை விட ஒண்ணரை வயது சிறியவனான குரு தொழில் நுட்ப கல்லூரியில் சேர்ந்தான். சிறியவன் பத்தாவது படித்துக் கொண்டு இருக்கிறான். வாழ்க்கையில் எந்த மாற்றமும் இல்லை. இன்னும் கணவன் அப்படியேதான் இருக்கிறான். மாமனாருக்கு வயதாகிவிட கம்பெனிக்கு வாரத்தில் ஒரு நாளுக்கு மேல் வருவதில்லை. கணவனோ இன்னும் சிறுபிள்ளையாக

காலையில் போனால் வழக்கப்படி பதினோரு மணிக்கு வந்து கஷ்டப்படுத்திக் கொண்டிருந்தான். சுமதியும் வேலை, வேலை என்று மாய்ந்து மாய்ந்து செய்து சோர்ந்து போயிருந்தாள். தொண்டை தண்ணீர் வற்றிப் போகும் வரை வகுப்புகள் எடுப்பாள். காலையிலும், மாலையிலும் சில நேரங்களில் மதியம்கூட வகுப்புகள் எடுத்திருக்கிறாள். இன்னும் எடுத்துக் கொண்டு தான் இருந்தாள்.

மாமியாருக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டபோதெல்லாம் மருமகள் வீட்டிற்கு வந்து விடுவாள். மருமகளும் அவளைப் பாந்தமாகத்தான் கவனித்தாள். அம்மா ரொம்ப வந்ததில்லை. எப்போதாவது வந்து இருந்து விட்டுப் போய் விடுவாள். அவ்வப்போது வரும் உறவு முறைகளுக்கு உடலாலும், பொருளாலும் தன்னால் முடிந்ததை செய்து செய்து இன்னும் ஓய்ந்துதான் போனாள் சுமதி.

''ஏய் ரேகா ஸ்பெஷல் கிளாஸ் இருக்குன்னுட்டு வெறும் வயத்துலே போவாங்களா?'' பெண்ணுக்காக கான்பிளக்ஸ் வாங்கி வைத்து போர்ன்விடா கொடுத்து அவளை அனுப்பி பிள்ளைகளுக்கும், கணவனுக்கும் டிபனை தயார் செய்து அவர்கள் சாப்பிட்டுச் சென்றதும், ஒன்பது மணிக்கு மேல் வரும் டியூஷன்கள் வந்துவிடும். என்றுமே எட்டு மணிக்குள் வேலை முடித்து ஒன்பது மணிக்குள் சாப்பிட்ட கதை எல்லாம் கிடையாது. சில நாட்கள் கணவனே எழுந்திருக்க தாமதமாகும். சில நாட்கள் பிள்ளைகள் பள்ளிக்கு செல்ல மாட்டேன் என்று முரண்டு பிடிப்பார்கள். சில நாட்கள் பிள்ளைகளுக்குள் சண்டை வரும். சில நாட்கள் எட்டு மணிக்குத்தான்



தண்ணீர் வரும். இப்படிப்பட்ட நாட்களில் காலை காபியோடு சுமதி வேலை செய்தபடி ஒட்ட ஒட்ட கிடப்பாள். டியூஷன் முடிந்து பிள்ளைகளுக்கும், புருஷனுக்கும் கட்டிக் கொடுத்துவிட்டு சாப்பிடுமுன் பாதி நாள் பசி போய்விடும். வயிறு கனத்து விடும்.

''என்னடி இது பொழப்பு? நீ ஏன் காலைலேந்து பட்டினி கிடக்கறே? உடம்பை கவனிச்சிக்க வேணாமா?''

அம்மா கடிந்து கொள்ளும் போதும் 'நேரமில்லையம்மா' வாய் முணுமுணுக்கும்.

இப்படிப்பட்ட ஜெட் வேக வாழ்க்கைகூட இன்னும் வேகமாகத்தான் ஓடிவிட்டது. பெண் பி.காம் முடித்து விட்டாள். எம்.சி.ஏ. சேர வேண்டும் ஒற்றைக் காலில் நிற்கிறாள். பிள்ளை நான்காம் ஆண்டு இன்ஜினியரிங் போயிருக்கிறான். இன்னொரு பிள்ளையும் முதல் ஆண்டு இன்ஜினியரிங்கில் இருக்கிறான்.

''தபாரும்மா என்னமோ எல்லாருக்கும் ஃப்ரீ சீட் கிடைச்சது. என்னால படிக்க வைக்க முடிஞ்சுது. இதுக்கு மேல எனக்கு சக்தி இல்லைம்மா'' சுமதி பெண்ணிடம் சற்று பணிவாகவே கூறுகிறாள்.

''ஆமா எனக்கு செலவு செய்யணும்னா உங்களுக்கு பணம் இருக்காது. அவுங்க ரெண்டு பேரையும் எப்படி இன்ஜினியரிங் படிக்க வச்சீங்க?''

''அதுக்காகத்தானேம்மா நாள் மொத்தமும் டியூஷன் எடுக்கறேன். அப்படி வரத் துட்டுக்கும் புல்லா செலவு இருக்கே. நான் என்ன பண்ணுவேன்?''

பெண்ணிடம் தன் கஷ்டங்களை எத்தனையோ உரைத்தும் பெண் ஒத்துக் கொள்ளவில்லை.

''என்னம்மா பெரிய பொல்லாத கஷ்டம். எங்கூட வருவாளே மங்கை. அவுங்க அம்மா கூலி வேலை செய்யறாங்க. அவகிட்டே செல்போன் இருக்கு. நேத்து எம் பிரண்ட் வீட்டுக்குப் போனேன். இத்தனூண்டு குழந்தை ரெண்டாவதோ, மூணாவதோ தெரியலை. அதுக்கு செல் இருக்கு. ஆனா எங்களுக்கு? ஆடு மாடுக கூட கொஞ்சம் கவனிச்சு வளர்ப்பாங்க. ஆனா நாங்க எப்படி வளர்ந்திருக்கோம்?'' ரேகா சற்று விரைப்பாக கூற,

சுமதி சற்று விதிர்த்துப் போனாள். என்ன இந்தப் பெண் இப்படி எல்லாம் பேசுகிறது. எத்தனை கஷ்டப்பட்டு குடும்பத்தை ஒப்பேத்திக் கொண்டிருக்கிறேன். இப்படிப் பேசுகிறாள்.

''ஏம்மா நம்ப குடும்ப நிலைமை உனக்குத் தெரியாதா?''

''என்னம்மா குடும்பம். எல்லாத்தையும் நீ தான் தாங்கற மாதிரி. உன்னை யாரு தலையிலே எல்லாத்தையும் தூக்கி போட்டுக்கச் சொன்னா.. நீ வாயை மூடிகிட்டு துட்டு வேணும்னு சொல்லியிருந்தா கம்பெனிலே சம்பாதிக்கறதை வீட்டுக்குத்தானே கொண்டு போட்டிட்டிருப்பாரு அப்பா. நீ தான் பெரிய மேதாவி மாதிரி எல்லாத்தையும் உன் தோள்ல எடுத்துகிட்டே. எப்பவுமே அடுத்தவங்க செய்ய வேண்டிய டியூட்டியிலே நம்ம மூக்கை நுழைக்கக் கூடாது. இல்லேன்னா மூக்கறு படணும். இப்ப நீ இருக்கியே, அந்த மாதிரி.''

பெண்ணின் வாயினின்று அக்கினித் திரவமான வார்த்தைகளைக் கேட்டவள் அதிர்ந்து போய் பார்க்கிறாள்.





# 14

வளர்த்த கடா மார்பில் பாய்வது என்பார்களே அது இது தானோ. இதற்குள் அதிசயமாக வேலைக்குப் போகாத அப்பா இவர்கள் உரையாடலை வேடிக்கைப் பார்ப்பது தெரிந்தது.

சுமதி தன்னையும் மீறி எரிச்சலுறுகிறாள்.

''ஏங்க பொண்ணு பேசறது ரொம்ப பெருமையா இருக்கா?''

''அவ சொல்றதுலே என்ன தப்பு?''

''தப்பா. உங்க பொறுப்பை என்னிக்காவது நீங்க செய்திருக்கீங்களா? எப்ப பணம் கேட்டாலும் கிடையாதுன்னு எரிஞ்சு விழுவீங்க. சம்பாதிக்கற துட்டை மொத்தமும் நீங்க தானே செலவு பண்ணிகிட்டு இருந்தீங்க. உங்க என்ஜாயின்மெண்டை என்னிக்காவது குறைச்சுகிட்டு இருக்கீங்களா? மூணு குழந்தைங்க வந்தும் விடலைப் பையன் மாதிரி நீங்க நடந்துக்கலே. என்னிக்காவது ஒரு நாள் பொறுப்பா நடந்துகிட்டு இருக்கீங்களா? பொறுப்பா இருக்க மாட்டேன்னு பிடிவாதமா இருந்தீங்களே? பிள்ளைங்க பாழாயிடுமேன்னு எப்படி எல்லாம் உழைச்சேன். கடைசியில் உழைச்சவளுக்கு என்ன பேர் பாத்தீங்களா?'' சொல்லிவிட்டு குமுறிக் குமுறி அழுகிறாள்.

ரேகாவின் பேச்சு எரிச்சலையும் ஆத்திரத்தையும் தர கணவனை விழித்துப் பார்த்து கத்துகிறாள்.

''ஏம் பேசாம இருக்கீங்க? கேக்க மாட்டீங்களா? பொண்ணு ஏன் இப்படி நடந்துக்கறான்னு எரிச்சல்பட மாட்டீங்களா?''

''ஆமாம்... என்ன எரிச்சல் படறது? அவ பேசறது லேயும் நியாயம் இருக்கத்தானே இருக்கு.''

''என்ன நியாயம்?'' சுமதி இன்னும் ஆத்திரத்துடன் கேட்கிறாள்.

''ஏய் சும்மா கத்தாதே. ரெண்டு பிள்ளைகளையும் பி.ஏ. படிக்க வச்சிருக்கே. இவ வெறும் பி.காம் தானே. தானும் மேலே படிக்கணும்னு அவளுக்கு ஆசை இருக்கா?''

''இவளை நானா படிக்க வேணாம்னு சொன்னேன். இவதானே காமர்ஸ் எடுத்துகிட்டா.''

சுமதி ஆத்திரமாகக் கேட்க,

''காமர்ஸ் எடுத்துகிட்டா, அவுங்களுக்கு ஆயிரம் ஆயிரமா கொட்டி படிக்க வைக்கறே. எனக்கும் கொஞ்சம் செலவு பண்ணக்கூடாதா? எம்.ஸி.ஏ. படிச்சா பெரிய லெவல்ல வேலை கிடைக்கும்.''

ரேகா பொறுமுகிறாள்.

''அப்படி இல்லேம்மா நீ நிறைய படிச்சா அதுக்கு ஏத்த மாதிரி மாப்பிள்ளை பாக்கணும். உன் கல்யாணத்துக்கு வேற செலவு செய்யணும். நான் எங்கே போறது சொல்லு?''

''இத பாரும்மா என் கல்யாணத்தைப் பத்தி நீ கவலைப் பட வேண்டாம்.



நல்லா படிச்சு ஒரு நல்ல வேலை கிடைச்சா என் கல்யாணத்துக்கு நானே சம்பாதிச்சு செய்துக்க முடியும்.''

மறுபடியும் சுமதி ஆட்சேபிக்க, எரிச்சல் பட்டாள் ரேகா.

''வேண்டாம்மா பணத்தை எல்லாம் முடிஞ்சு வச்சிக் கங்க.''

உங்களின் இரண்டு பிள்ளைகளுக்கே எல்லாம் செய்யுங்க.''

சொல்லிவிட்டு விடுவிடுவென்று உள்ளே போய் கதவைச் சாத்திக் கொள்கிறாள் ரேகா.

சுமதி அதிர்ந்து போகிறாள். வேதனையில் துடிக்கிறாள். தியாகு எதுவுமே கண்டு கொள்ளவில்லை.

இத்தனை நாட்களில் பெண்ணுக்கு என்று கஷ்டப் பட்டு மாதா மாதம் சிறுக சிறுக சேர்த்து வைத்து ஒரு செட் நெக்லஸ் ஒரு ஜோடி வளையல், கம்மல், மோதிரம், இதை எதையும் தொடாமல் தன் பழைய வளையல்களைப் போட்டு, புதிதாக செய்து கொண்ட வளையல்கள், தன் கழுத்து சங்கிலியை அடகு வைத்து பணம் வாங்கி வருகிறாள். என் பெண்ணுக்கு மட்டும் ஏன் குறையிருக்க வேண்டும்? போய் எம்.ஸி.ஏ.விற்கு விண்ணப்பிக்கச் சொல்கிறாள்.

அம்மா சொல்லச் சொல்ல ரேகா குதிக்கிறாள்.

''தேங்க்ஸ்மா'' என்றவாறே துள்ளி குதித்து ஓடுகிறாள். ஆயிற்று பெண் எம்.ஸி.ஏ. சேர்ந்து விட்டாள். சுமதிக்கு தான் மனதை அறுத்தது. தன் குழந்தைகள் என்று பாசம் வைப்பது தவறோ?

மூன்றாம் வீட்டில் இருக்கும் டாக்டர் புவனா வீட்டிற்கு கிளம்பி செல்கிறாள். அருகருகே இருப்பதனால் வெகு

நாள் பழக்கம். பல வருடங்களுக்கு முன் உடல் நிலை சரியில்லை என்றபோது ஏற்பட்ட பழக்கம். சாதாரணமாக டாக்டர் பன்னிரண்டு மணியிலிருந்து மூணு வரை யாரையும் பார்க்க மாட்டாள். 'ரிலாக்ஸ்' பண்ணனும் என்று கட்டாய ஓய்வு எடுத்துக் கொள்ளும் நேரம் அது. ஒரு மணிக்கு மேல் சில நேரங்களில் டி.வி. பார்ப்பார். புத்தகம் படிப்பார். இல்லை சுமதி வந்தால் அவளோடு கொஞ்சம் பேசிக் கொண்டு இருப்பார்.

இன்றும் சுமதி டாக்டரின் வீட்டுக் கதவைத் திறந்து உள்ளே சென்றபோது, சோபாவில் சாய்ந்தவாறே அமர்ந் திருந்தாள் புவனா.

''வா... வா நீயாவது வரக்கூடாதான்னு நினைச்சுகிட்டு இருந்தேன் வந்திட்டே?''

''ஏன் டாக்டர்?'' தன் சோகத்தை மறைத்தவாறே லேசாக புன்னகைக்கிறாள் சுமதி.

''இன்னிக்கு எல்லாமே போரடிக்குது. டி.வி.யிலே வழக்கமான அரைச்ச மசாலாவே. புக் படிக்கவும் மனசு ஓடலே.'' சுமதி லேசாக புன்னகைத்தவாறே எதிரில் அமருகிறாள்.

''ஆமா என்ன இன்னிக்கு ஒரே டல்லா இருக்கே?''

சாதாரணமா இருக்கிற சிரிப்புகூட மிஸ்ஸிங். என் னாச்சு?'' சட்டென்று அழுது விடுகிறாள் சுமதி. டாக்டரின் பரிவான பேச்சு நெஞ்சில் ஏற்பட்டிருக்கும் அடிக்கு மருந்து போடுவது போல் இருந்தது. முதலில் சற்று பேசா திருந்தவள்..

பின் மெதுவாக பெண் தன்னை குற்றம் சொன்னது தன்னை தூக்கிப் போட்டது எல்லாவற்றையும் சொல்லி விட்டு குலுங்க, குலுங்க அழுகிறாள்.



''ஐயையோ என்ன இது? கூல் டவுன். எதுக்கு இப்படி அழறே? சரி ஒண்ணு கேக்கறேன். நீ பதில் சொல்வியா? நீ அம்மாவா இருந்தா உன்னை ஒண்ணும் கேக்கக் கூடாதா?''

''அம்மான்னு மரியாதை வேண்டாமா?'' சுமதி லேசான ஆத்திரத்தோடு பேசுகிறாள். ''எங்கம்மா அப்பான்னா இன்னும்கூட எனக்கு மரியாதை தான். ஒரு வார்த்தை எதிர்த்து பேசினதில்லை தெரியுமா?''

''என்னம்மா இப்படி பேசறே? அந்தக் காலத்துல வளர்ப்பு முறை அப்படி. பேரண்ட்ஸ்னா பேசக்கூடாது. பெரியவங்கன்ற மரியாதை வேணும்னு வளர்த்தாங்க. ஆனா இந்த காலத்துலே இப்படியா இருக்கோம்? குழந்தைகளை ஒரு நண்பனா தானே ட்ரீட் பண்றோம். அப்படி இருக்கும்போது நம்பளை தூக்கி மேலே வச் சிடுமா என்ன? மனசுல பட்டதை இந்தக் காலத்துப் பிள்ளைகள் சொல்லத்தான் சொல்வாங்க.''

''எதும்மா மனசுலே படும். தப்பானதா? இந்த வீட்டுக்கு எத்தனை உழைச்சிருக்கேன்னு அவளுக்குத் தெரியாதா? உழைச்சதுக்கு மரியாதை தர வேண்டாம் சேத்தை வாரிப் பூசாமல் இருக்கலாம் இல்லே.'' மறுபடியும் சுமதி கண்ணீர் விட,

''இதபார் சுமதி இதை கொஞ்சம் ஆப்டி மிஸ்டிக்கா எடுத்துக்க. தாமரை இலைத் தண்ணீர் போல வாழக் கத்துக்கணும். அப்பதாம்மா மனசு சங்கடமில்லாம வாழ முடியும். உம் பொண்ணு தான் எம்.சி.ஏ. படிக்க முடியலையேங்கற ஆதங்கத்திலேதான் பேசி இருக் கணும். உம்மேலே வெறுப்புன்னு எனக்குத் தோணலே.''

"நீங்க சொல்றது கரெக்ட் தான். பணம் கொடுத்ததும் அவ 'தேங்க்ஸ்மான்னு' கையைப் பிடிச்சிக்கிட்டா."

"அதாம்மா இந்த காலத்துப் பிள்ளைகள் எல்லோரும் ரொம்ப சுய நலவாதிகள். தன் காரியம் நடக்கணும். அதற்கு எதிராளியை காயப்படுத்தினாலும் தவறுன்னு நினைக்கறதில்லே. விடு. படிக்கத்தானே கேட்டா. ஏதோ பிள்ளைகள் வாழ்க்கையிலே விளக்கேத்தறேன்னு நினைச்சுக்க."

"நீங்க சொல்றது எல்லாமே சரிதான். ஆனா எனக்கு தாங்க முடியலே. நான் செஞ்ச அத்தனை உழைப்பையும், ஏன் நினைச்சுப் பார்க்க மறுக்கறாங்க? அதுக்குப் பதிலாக இவுங்க வீட்டிலே செல் இருக்கு. அவுங்க வீட்டுலே செல் இருக்குன்னு மத்தவங்களை உசத்தியாகவும் என்னை அசிங்கப்படுத்தறது என்ன விதத்துலே நியாயம் டாக்டர்?"

டாக்டர் அவளையே பார்க்கிறாள். "நீ சொல்றது எல்லாம் வாஸ்தவம்தான். ஆனா இந்த காலம் இப்படித் தான். போன வருஷம் மலேசியா, சிங்கப்பூர், பேங்காக், தாய்லாந்து எல்லாம் போயிட்டு வந்தோம் ஞாபகமிருக்கா? நான் கிட்டத்தட்ட மூணு இலட்சம் செலவு பண்ணி என் குடும்பத்தை அழைச்சுகிட்டு போனேன். எம் புருஷனைப் பத்தி உனக்கே தெரியும். டாக்டர்தான். ஆனா கொஞ்சம்கூட பிரயோசனமில்லாத ஆளு. ஒரு மாசத்துக்கு ரெண்டு பேர் அவர் கிட்டே உடம்பைக் காண்பிக்க வந்தா ஜாஸ்தி. என் ஒரே பிள்ளை கிரியையும் அழைச்சு கிட்டு போனேன். அவன்னா எனக்கு எத்தனை பிடிக்கும்னு உனக்கே தெரியும் இல்லே. போய் இறங்கின வுடனேயே அசிங்கப்படுத்தினான். என் மெடிக்கல் கிட், என் பாக்ஸ் எல்லாம் தனியா வச்சிருந்தேன். என் ஹஸ்பண்டு எல்லாத்தையும் ஒண்ணா கலந்து ஒவ்வொரு சாமானையும் தேடும்படி ஆயிடுச்சு.



எனக்குக் கோபம் வந்து "ஏங்க இப்படிச் செய்யறீங்கன்னு" அவர்கிட்டே சண்டை போட்டபோது பிள்ளை புல்லா அப்பாவுக்கு சப்போர்ட். என்னை கிழிகிழின்னு கிழிச்சிட்டான். நீ டாக்டர்னா ஒசத்தியான்னு? ஒரே அமர்க்களம். எனக்கு ஊர் பார்க்கற சந்தோஷம் கூட போச்சு. இப்ப நீ அழுகற அழுகையை நானும் மனசுக்குள்ளே அழுதிருக்கேன். அந்த அளவு நாம இடம் கொடுத்து வச்சிருக்கோம்னு புரிஞ்சுது. இடத்தைக் கொடுத்தப்புறம் மடத்தை பிடுங்கறானேன்னு வருத்தப் பட்டு என்ன பிரயோசனம்? அங்க தான் எனக்கு ஞானோதயமே வந்தது."

டாக்டர் புவனா பேசப் பேச சுமதி பெருமூச்செறிகிறாள். "நீங்க சொல்றது எல்லாம் உண்மை டாக்டர். நாமே நம்மளை முட்டாளாக்கிகிட்டு அப்புறம் அவன் முட்டாள்னு சொல்றான்னு என்ன பிரயோசனம்?"

"ஒ.கே. சுமதி மனது கஷ்டப்படாதே. வாழ்க்கைங்கறது ஒரு முறை தான். நம்ம வாழ்க்கையை நாமதான் வாழ்ந்தாகணும். அனிமல் பிளானட், நேஷனல் ஜியாகரபி பார்த்திருக்கே இல்லே. ஒவ்வொரு மிருகமும் வாழுவதற்கே ரொம்ப கஷ்டத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கு. நம்ப நிலைமையும் அப்படித்தான்னு வச்சுக்க. சூழ்நிலையை அனுசரிச்சு வாழ கத்துக்கணும்."

சுமதி புவனா சொல்லச் சொல்ல தலை ஆட்டுகிறாள். ஆமோதிக்கிறாள். ஆனால் நாம் நினைப்பதா நடக்கிறது?

அப்படி எல்லாம் வாழ்க்கை அமைந்து விட்டால் அப்புறம் படைத்தவனுக்கு என்ன வேலை இருக்கிறது?

ஒரு ஆறு மாசம் ஓடியது. நேரம் கிடைக்கும் போதெல்லாம் சுமதி டாக்டரின் வீட்டிற்கு சென்று பேசுவாள். மீதி நேரங்களில் எல்லாம் வேலை, வேலை என்று வழக்கப்படி வேலைதான்.

பெண் படிப்பிற்கும், புத்தகம் வாங்கவும், துணி வாங்கவும் என்று அதிகப்படி செலவானதில் சுமதி இன்னும் பத்து டியூஷனை எடுத்து கூடுதலாக உழைக்க ஆரம்பித்தாள். இப்போதெல்லாம் டாக்டர் வீட்டிற்குப் போவதும் சற்றே குறைந்து தான் போனது. நாள் மொத்த மும் டியூஷன் எடுத்து, வீட்டு வேலைகள் செய்து, சமைத்து மனமும் உடலும் களைத்தே போனது. பல நாட்கள் காலை டிபன் சாப்பிட மறந்து விடும்.

மதியம் பசி தாங்க முடியாமல் அள்ளிப் போட்டுக் கொண்டு அடுத்த வேலையைப் பார்க்க ஓடுவாள். தியாகு வழக்கம்போல் தன் வயிற்றை ரொப்பிக் கொண்டு தனக்கு வேண்டுமென்பதை சாப்பிட்டுக் கொண்டு எப்போதும் போல் தன் இஷ்டப்படி வளைய வளைய வருகிறான். எப்போதும் போல் அவளையும் பணம் கேட்கிறான். தர மறுத்தால் சபித்துவிட்டு அடித்து விட்டுப் போவான். எதையும் நினைத்துப் பார்க்கவோ, அழுவதற்குக்கூட நேரமில்லாமல் போனது. உழைப்பதற்கும், சம்பாதிப்பதற் குமே நேரம் சரியாக இருந்தது.

ஆயிற்று இன்னும் நான்கு மாதங்கள் படித்தால் பெண் ஒரு வருடப் படிப்பை முடித்து விடுவாள். பிள்ளை குருவும் இந்த வருடம் படிப்பை முடித்து விடுவான். பிறகு



அவன் சம்பாதிக்க ஆரம்பித்தால் அவன் சற்று மூச்சு விட்டுக் கொள்ளலாம். நல்லவேளை, கணவன் போல் எதுவும் சோடை போகவில்லை. அவள் மனதிற்குள் அடிக்கடி மகிழ்வது இதை நினைத்துதான்.

ஆனால் விதை ஒன்று போட்டால் சுரை வேறொன்றா முளைக்கும்? அன்று அடுத்த வீட்டம்மாள் தேடி வரு கிறாள்.

''சுமதி சுமதி'' முகத்தில் பரபரப்பு, திகில், பயம்.

''என்னாச்சும்மா. என்ன விஷயம்?'' சற்று ஆச்சரியத் துடன் கேட்கிறாள் சுமதி. இன்னும் பத்து நிமிடங்களில் ஒரு வீட்டிற்குப் போய் டியூஷன் எடுக்க வேண்டும். இரண்டு பிள்ளைகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் தருகிறார்கள். பெண்ணின் செலவுக்காக ஒத்துக் கொண்ட டியுஷன் இது.

''மனசை திடப்படுத்திக்க. உம் பெண்ணுக்கு இன் னிக்கு காலைல தான் சர்ச்சிலே கல்யாணம் நடந்திடுச்சு'' என்கிறாள்.

# 15



சுமதி திடுக்கிட்டுப் போய் பார்க்கிறாள். பக்கத்து வீட்டு மாமி ஏதேனும் உளறுகிறாளா? அப்படித்தான் இருக்க வேண்டும். தன் பெண்ணாவது? கல்யாணம்

பண்ணிக் கொள்வதாவது? இருக்கவே முடியாது. படிக்க வேண்டும். படிக்க வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தவள் தன் பெண். அவளா இப்படி நடந்து கொள்வாள்?

''அம்மா தப்பா நினைக்காதீங்கம்மா. எம் பெண் காலேஜுக்கு தான் போயிருக்கா. ரேகாவிற்கு படிப்புன்னா உயிர். நீங்க கட்டாயம் வேற யாரையோ பார்த்துட்டு தான் தப்பா சொல்றீங்க?''

''ஏம்மா எனக்கு ரேகாவைத் தெரியாதா? இத்தனூண்டு குழந்தையிலேர்ந்து அவளைப் பார்க்கறேனே.''

''என்னம்மா சொல்றீங்க?''

''வா. நானே பதைச்சுப் போய் ஓடி வந்திருக்கேன். ஒரு பையன் கூட உம் பொண்ணு அங்கே இங்கே சுத்தறான்னு எம் பொண்ணு சொன்னபோது கூட நான் நம்பலே. இன்னிக்கு காலைல கண்ணால பார்த்தப்புறம் எப்படி நம்பாம இருக்கறது? சர்ச்சிலே கவுன் போட்டுகிட்டு, தலையிலே கிரீடம் எல்லாம் வச்சுகிட்டு, பார்த்தவுடனே எனக்கு பக்குன்னு ஆயிடுச்சு. வா போய் பார்ப்போம்.''

சுமதிக்கு தெளிவாகப் புரிந்தது. பக்கத்து வீட்டு மாமி யாரையோ தவறாகப் பார்த்து விட்டு தன் பெண் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாள். இப்போது போய் சரி செய்யவில்லை என்றால் தன் பெண்ணைப் பற்றி ஊரெல்லாம் தூற்றி விடுவாள். அவசரம் அவசரமாக அவளோடு கிளம்பிச் செல்கிறாள்.

சர்ச்சில் இப்போது கூட்டமே இல்லை. திருமணம் முடிந்து எல்லோரும் சென்று விட்டார்கள்.



''வா அந்த பாதிரியார் கிட்டே போய் கேட்போம்'' பக்கத்து வீட்டு மாமி அழைத்துச் செல்ல, சற்று தயங்கியவாறே உள்ளே செல்கிறாள் சுமதி.

திருமணத்தைப் பற்றி தயங்கித் தயங்கி விசாரித்த போது ஜூலி என்ற பெண்ணுக்கும் விக்டர் என்ற பையனுக்கும் தான் திருமணம் நடந்தது என்றார்கள். ஜூலியின் தாய், தந்தை பற்றி பக்கத்து வீட்டு மாமி கேட்க, அவளின் தந்தை பெயர் ஜேம்ஸ் என்றும் தாய் பெயர் சூசையம்மாள் என்றும் சொல்ல, அமிஞ்சிக் கரை விலாசமாக அவர்கள் வீட்டு விலாசத்தையும் தர, சுமதி நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். தன் பெண்ணுக்கு பணம் கொடுத்தபோது தன் பெண்ணே அல்லவா சொன்னாள்.

''அம்மா நான் பேசினதுக்கு மன்னிச்சிடு. நீங்க எத்தனை கஷ்டப்பட்டு என்னை படிக்க வைக்கறீங்கன்னு தெரியும். எனக்கு படிக்கணும்மா, நிறைய படிக்கணும். படிச்சு பெரிய வேலைக்குப் போய் உங்களை நல்லா வச்சுக்கணும்'' அப்படிச் சொன்ன பெண்ணா இப்படி தரம் கெட்டுப் போவாள்.

''மாமி இப்பவாவது புரிஞ்சுக்கங்க. ரேகா அப்படிப்பட்ட பொண்ணும் இல்லை. அவளை நான் அப்படி வளர்க்கவும் இல்லே. எம்.ஸி.ஏவிற்கு பதிலாக உனக்கு கல்யாணம் பண்றேன்னு சொன்னேன். ஒத்துக்கவே இல்லே. படிக்கணும். படிக்கணும்னு துடிச்சுகிட்டு இருந்தவ. அவ எப்படி எங்களுக்குக்கூட சொல்லாம கல்யாணம் பண்ணிப்பா?''

மாமியும் ஆமென்று தலை ஆட்டுகிறாள்.

''சரிம்மா ஒண்ணும் இல்லேன்னா நிம்மதிதான்'' என்றவாறு கிளம்ப,

''சே. தேவையில்லாத சந்தேகம். இவளால் டியூஷ னுக்கு லேட்டாகி விட்டது.'' முணுமுணுத்தவாறே கிளம் பிப் போகிறாள் சுமதி.

அன்று மூன்று மணிக்கு வந்து, எல்லோர்க்கும் மாலை சிற்றுண்டி செய்து இரவு சமையல் முடித்து, மாலை டியூஷன் எடுக்க ஆரம்பித்து கல்லூரி விட்டு வந்த பிள்ளைகளுக்கு டிபன் தந்து, அபூர்வமாக சற்று சீக்கிரம் வந்த புருஷன் டிபனை சாப்பிட மறுத்து, சாப்பாடே சாப்பிட்டுவிட அவனுக்கு சாப்பாடு போட்டு, நடு நடு வில் ஓடி வந்து டியூஷனை கவனித்துக் கொண்டு வேலை செய்ததில் ரேகா வராததே யாருக்கும் தெரியவில்லை.

இரவு ஒன்பது மணி சுமாருக்கு டியூஷனை முடித்துக் கொண்டு உள்ளே போன போது ரேகா வந்தாளா இல்லையா என்று கூட யாருமே கவனிக்காமல் டி.வி. பார்த்துக் கொண்டிருந்தனர். சுமதிக்கே அப்போது தான் உரைத்தது. ரேகா இன்னும் வரவில்லை. வயிற்றைக் கலக்க, முதன் முறையாக நெஞ்சை அடைத்தது. பயம் வேறு நெஞ்சை அடைக்க கலங்கி போய் நிற்கிறாள்.

'கடவுளே தப்பாக ஒன்றும் நடந்திருக்கக் கூடாது' நினைக்கும்போதே நெஞ்சு நடுங்கியது.

''ஏங்க ரேகா இன்னும் வரலியே'' தவித்தபடி கணவ னிடம் கூறியபோது ''த்சு...'' என்றபடி டி.வி. பார்க்கிறான்.

''எதுக்கும்மா பயப்படறே? அவ என்ன சின்ன குழந்தையா?'' என்கிறான் பெரியவன் குரு.

''எல்லாம் வந்திடுவாம்மா'' என்கிறான் சின்னவன் ராஜ்.



பக்கத்து வீட்டு மாமி சொன்னது போல் ஒரு வேளை திருமணம் செய்து கொண்டாளோ? அவள்தான் திருமணத்தில் தற்போது நாட்டமில்லை என்று சொன் னாளே. பாதி படிப்பில் யாராவது இப்படி செய்வார்களா? ம்.. ஹூம் சான்ஸே இல்லை. ஒரு வேளை கல்லூரியில் மீட்டிங் ஏதாவது இருந்திருக்குமோ? இருக்கலாம். பெண் வந்து விடுவாள். மணி பத்தடித்தது. பெண் இன்னும் வீடு திரும்பவில்லை. கணவன் தூங்கப் போய் விட்டான்.

கணவனிடம் சொல்லி பிரயோசனமில்லை. சாப்பிடக் கூட பிடிக்காமல் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு அழு கிறாள் சுமதி.

''அம்மா கவலைப்படாதேம்மா'' சின்னவன் தேற்ற, பெரியவன் அக்கா வருகிறாளா என்று பார்க்க தெருவில் இறங்கிச் சென்றான்.

சுமார் ஒரு மணி நேரம் பொறுத்து குரு வருகிறான்.

''அக்கா எங்கேயும் இல்லேம்மா. அவுங்க பிரண்ட் வீட்டுலே எல்லாம் கேட்டாச்சு. அவ இன்னிக்கு காலே ஜுக்கு வரவே இல்லைன்னு சொல்றாங்க.''

சொன்னவுடன் குமுறிக் குமுறி அழுகிறாள். ''என் னம்மா இது? அவ வேற பிரண்ட் வீட்டுக்கு போயிருக் கலாம்.''

''இல்லைடா அவளுக்கு கல்யாணம் ஆயிடுச்சு. காலையில் மாமி சொன்னவற்றை சொல்ல,

''என்னம்மா உனக்கு பைத்தியமா பிடிச்சு இருக்கு.'' பிள்ளைகள் கத்த,

''இல்லைடா இது நிஜம்'' என்று பின்னும் அழுகிறாள்.

"யார்மா உங்கிட்டே சொன்னது?" இரு பிள்ளைகளும் அதிர்ச்சியோடு கேட்க,

பக்கத்து வீட்டு மாமி சொன்ன விஷயத்தைப் பற்றி சொல்கிறாள். "என்னம்மா இது அநியாயம்? படிக்கணும், படிக்கணும்னு அத்தனை சண்டை போட்டா. கல்யாணமே வேண்டவே வேண்டாம்னு சத்தியம் பண்ணினா? என்னம்மா இது?" இரு பிள்ளைகளும் பதற, பின்னும் அழுகிறாள்.

மூவரும் தூங்கவில்லை. இடிந்து போய் அமர்ந்திருந் தனர். சுமதி நொறுங்கிப் போயிருந்தாள். தங்கள் காலத்தில் இருப்பது போல் தாய், தந்தையிடம் பயம் இருக்க வேண் டும் என்று கேட்கவில்லை. பற்று கூடவா இருக்கக் கூடாது? தன்னை ஏமாற்ற எப்படி மனது வந்தது? தன்னை, தன் உழைப்பை எள்ளி நகையாடியது போல், அல்லவா இருக்கிறது.

காலையில் கணவனுக்கு காபி கலந்து தந்தபோது, மெதுவாக விஷயத்தை உரைக்கிறாள்.

"என்ன உளர்றே? எக்ஸாம் ஆக இருக்கும். பிரண்ட் வீட்டுலே படிக்கப் போயிருப்பா?"

"இதுவரைக்கும் அவ ராத் தங்கினதில்லே." சுமதி வருத்தத்தோடு சொல்ல,

"சே! நிம்மதியாகவே இருக்க முடியறதில்லே" என்றவாறே காபி டம்ளரை ஓங்கி தரையில் அடித்து விட்டுக் கிளம்புகிறான் கணவன். சுமதி பின்னும் அழு கிறாள். எந்தச் சூழ்நிலையிலும் சந்தோஷமாக இருக்க கற்றுக் கொள்ள வேண்டும் என்று டாக்டர் புவனா



சொன்னார்களே இந்த சூழ்நிலையை தானா உருவாக் கினோம். இதில் எப்படி சந்தோஷமாக இருப்பது? சட்டென்று அழுகை வந்தது. எத்தனைதான் அழுவது? இரவு முழுவதும் அழுது, அழுது கண்கள் சிவந்து வீங்கிப் போயிருந்தது.

குருவும், ராஜூம் அருகே வந்தார்கள். "அம்மா கவலைப்படாதே. அந்த அட்ரஸை குடு. பார்த்துட்டு வரோம்."

"பெண் ஜூலின்னு போட்டிருக்கு. அவங்க அம்மா அப்பான்னு போட்டிருக்கேடா."

"இல்லைம்மா எல்லாமே ஏதோ சந்தேகமா இருக்கு. போய் பார்ப்போம். அங்க அவ இல்லைன்னா அப்புறம் வேற வழியைக் கண்டு பிடிப்போம்."

மூவரும் ஒரு ஆட்டோ பிடித்துக் கிளம்பினர். அமிஞ் சிக் கரையில் அந்த விலாசத்தில் வண்டி நின்றபோது அதிர்ந்து போயினர். ஒரு சிறிய ஓட்டு வீட்டில் வய தானவள் மேக்ஸி அணிந்து நின்றிருக்க அவளை விட இரண்டு வயது பெரியவராக இருக்கலாம். அரை நிஜாரோடு நின்று கொண்டிருக்கிறார். முன் பக்கம் ஒரு பெரிய சாக்கடை ஒன்று ஓடிக் கொண்டு இருக்கிறது. கேட்டை ஒட்டி ஒரு சின்ன பராமரிக்கப்படாத தோட்டம். வீட்டைப் பார்க்கும்போதே வீட்டின் ஏழ்மை நிலை புரிந்தது. அதை நினைத்து தான் மூவரும் அதிர்ந்தனர்.

"இந்த வீட்டுப் பிள்ளையையா அக்கா லவ் பண்ணி கல்யாணம் பண்ணிகிச்சு."

"தெரியலைடா" சுமதி சொல்கிறாள்.

மூவரும் மெதுவாக அருகே போய் ரேகாவைப் பற்றி விசாரிக்கின்றனர். முதலில் முகம் சுளித்தவர்கள், சுமதியின் கண்ணீரைப் பார்த்து பரிதாபப்பட்டு விஷயத்தைச் சொல்கின்றனர். அடுத்த தெருவில் இருக்கும் ரேகாவின் புகுந்த வீட்டு விலாசத்தை தர கண்ணீரோடு தான் அடுத்த தெருவுக்கு பயணப் பட்டனர்.

அடுத்த தெருவில் ஒரு சின்ன கச்சிதமான மாடி வீடு. சுற்றிலும் பூந்தோட்டம் காய்கறிச் செடிகள் சற்று சுத்தமாக அழகாக இருந்தது. அந்த நிலையிலும் மனது ஆறுதல் பட்டது. 'பெண் நல்ல இடத்தைதான் தேர்ந்தெடுத்திருக்கிறாள். இருந்தாலும் வேறு ஜாதி என்றதும் மனது வலித்தது. ஒரே ஜாதியில் திருமணம் புரிந்தாலே எக்கச்சக்க மனவேற்றுமைகள் வருகிறது. இதில் ஜாதி விட்டு ஜாதியில் திருமணம் புரிந்தால் என்னாகும். பெண்ணுக்கு அவர்களின் பழக்க வழக்கங்கள் ஏதேனும் தெரியுமா? இப்படி பல எண்ண ஓட்டங்கள் ஓட சுமதி பிள்ளைகளுடன் பதை பதைத்தபடி வாயிலில் நிற்கிறாள். அழைப்பு மணியை அழுத்தி விட்டு வெளியே காத்திருக்கிறார்கள்.

கதவைத் திறந்து வெளியே வந்தவர்களை நெஞ்சு திடுக்கிட பார்க்கிறாள் சுமதி. இவர்களிடம் என்ன கேட்பது? என்ன கேட்டால் பதில் சொல்வார்கள்? பெண்ணை இப்படி வளர்த்திருக்கிறாயே என்று கேலி செய்வார்களா? மிகவும் தயங்கித் தயங்கி பெண்ணைப் பற்றி கேட்க, வந்தவர்களின் முகம் மாறியது. ஒரு வெண்ணிறத்தில் நீலநிற பூக்கள் போட்ட சில்க் புடவையை அணிந்திருந்த



முதியவள், கண்ணாடியை வேறு அடிக்கடி சரி செய்தவாறே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். பெண்ணின் மாமியாரா கேட்க கூச்சமாக இருக்க, சற்று பயத்துடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள் சுமதி. வயதானவளின் அருகே இன்னொரு வயதானவர் பைஜாமா ஜிப்பாவை சரி செய்தவாறே முறைத்துப் பார்க்கிறார்.

சுமதியைப் பார்த்ததுமே வள்ளென்று விழுகிறாள் அந்த முதியவள்.

''யார் ரிச்சா இருக்காங்கன்னு தேடி அலைஞ்சுகிட்டு வந்தீங்களா? ஏமாந்த பையன் கிடைப்பான்னு சொன்னவுடனே தலைலே கட்டிட்டீங்களா?''

சுமதி நெருப்பை மிதித்தவள் போல் ஆனாள்.

''சாரி மன்னிச்சிடுங்க. எங்களுக்கே எங்க பொண்ணு விஷயம் தெரியாதுங்க. இப்ப எதேச்சையா தெரிஞ்சு போய் துடிச்சு போய் வந்திருக்கேங்க.'' அழுது விடுவாள் போல சொல்கிறாள்.

குரல் தழுதழுக்கிறது. இருவரும் என்ன நினைத்தார்களோ என்னவோ,

''ஜூலி... ஜூலி'' குரல் கொடுக்க, நெற்றியில் ஒன்றும் இல்லாமல் ஒரு மேக்ஸியில் கையில் ஒரு மோதிரத்தோடு கழுத்திலும் ஒன்றும் இல்லாமல் வந்து நின்றவளைப் பார்த்து அதிர்ந்து போகிறாள் சுமதி.

# 16



ரேகா... ரேகாவேதான். ஒரு நிமிடம் தாயையும், சகோதரர்களையும் பார்த்து அதிர்ச்சி அடைந்தவள், அடுத்த நிமிடம் அலட்சியமாக நிற்கிறாள்.

''ரேகா என்னடி இது? ஏண்டி இப்படி பண்ணினே? படிக்கணும், படிக்கணும்னு சொன்னியே பாவி.'' சட்டென்று கன்னத்தில் அறைகிறாள் சுமதி.

''ஏய் நில்லுங்க. என்ன செய்யறீங்க?'' மாமியார் சற்று உரக்கக் குரல் கொடுக்க,

''பெத்த பொண்ணுங்க. என்னை ஏமாத்தினது தாங்க முடியலேங்க.'' அழுகிறாள் சுமதி.

''இத பாருங்கம்மா, நாங்களும் விரும்பி ஒண்ணும் இந்த கல்யாணத்தை செய்யலே. இவ கிடைக்கலேன்னா செத்துடுவேன்னு சொன்னான் என் பையன். சாகறதுக்கு கூட தயாராயிட்டான். அதான் வேற வழியில்லாம செய்து வச்சோம். எங்க சொந்தக்கார பொண்ணுங்க எத்தனையோ அழகாவும், நிரம்ப படிச்ச பொண்ணுங்க எல்லாம் இருக்கு. என்ன பண்ண முடியும்? பிள்ளை அவளைத் தான் கல்யாணம் பண்ணனும்னு சொல்லும்போது என்ன பண்ண முடியும்? அதுனால உங்க பொண்ணை அடிக்கறதோ, துன்புறுத்தறதோ எதுவும் வேண்டாம். என்ன கேக்கணுமோ கேட்டுட்டு கிளம்புங்க.''



சுமதிக்கு பொங்கி, பொங்கி அழுகை வந்தது. இந்த வீட்டில் சம்பந்தி மரியாதையும் புரிந்தது. பிள்ளைகள் இருவரும் எரிச்சலோடு ரேகாவையே பார்த்தவாறு பல்லைக் கடித்தபடி நிற்பது புரிந்தது.

''என்னடி இது? ஏன் இப்படி செய்தே? படிக்கணும் படிக்கணும்னு சொன்னியே. இப்ப ஏண்டி இப்படி செய்தே?'' சுமதி ஆத்திரத்தோடு கேட்க,

ரேகாவும் கன்னத்தை தடவிக் கொள்கிறாள். தாயை எரிச்சலோடு பார்க்கிறாள்.

''ஆமா அப்ப படிக்கணும்னு தோணிச்சு. அப்புறம் தோணலே...''

''தோணலையா. இன்னும் மூணு மாசத்துலே இந்த வருஷ படிப்பு முடிஞ்சிடும். அப்புறம் ஒரு வருஷம். கொஞ்சம் கஷ்டப்பட்டா முடிச்சிடலாம். உனக்காகத் தானடி இத்தனை கஷ்டப்பட்டேன். இப்படி செஞ்சிட்டியே.''

''இப்ப என்ன ஆச்சுன்னு குமுறித் தொலைக்கறீங்க? அப்ப படிக்கணும்னு ஆசையா இருந்தது. இப்ப படிக்க பிடிக்கலே. உழைச்சேன் உழைச்சேன்னு பீத்திக்கறீங்க. இனிமே உழைக்க வேண்டாம். அடுத்த வருஷத்துக்கு பணம் மிச்சம்னு நினைச்சுக்க'' அவளின் பதிலில் எரிச்சலடைந்த குருவும் ராஜும் கத்த ஆரம்பித்தனர்.

''ஏய் என்ன பேசற நீ? அம்மா பாவம் டியூஷன் எடுத்து கஷ்டப்பட்டு சம்பாதிச்சு கொடுத்தா ஏண்டி பேச மாட்டே?''

''ஏய் நீங்க ரெண்டு பேரும் வாயை மூடுங்க. எனக்கும் எங்கம்மாவுக்கும் உள்ள பிரச்சனை இது. நீங்க யாரும்

தலையிட வேண்டாம்'' ஓவென்று கத்திப் பேசுகிறாள் ரேகா.

''நீ படிக்கறே படிக்கலே. அதுகூட பரவாயில்லே. ஆனா சொல்லாம கொள்ளாம வீட்டுக்குத் தெரியாம கல்யாணம் கட்டிக்கிட்டு யாரையோ அம்மா, அப்பான்னு சொல்ல வேண்டிய அவசியம் என்ன?'' சுமதி ஆத்திரத்துடனும், வேதனையுடனும் கேட்கிறாள்.

''சொல்றேன். நான் பி.காம் பைனல் இயர் படிக்கும்போதே இவரைப் பார்த்தேன். இவருக்கும் எனக்கும் லவ்வாயிடுச்சு. அவர் பி.இ. பைனல் இயர் படிச்சுகிட்டு இருந்தாரு. அதுக்குள்ளே நீ கல்யாணம்னு ஆரம்பிச்சா. நான் சும்மா இருந்தா நீ கட்டாயம் கல்யாணத்தை முடிச்சிடுவே. அதுனால தான் எம்.ஸி.ஏ. படிக்கணும்னு ஆரம்பிச்சு கொஞ்ச நாள் படிச்சேன். ஆமா என்னவோ பரந்த மனசு இருக்கற மாதிரி பேசறே? இவரை லவ் பண்றேன்னா கல்யாணத்தை பண்ணி வச்சிடுவியா? என் கல்யாணத்தை நானே பாத்துக்கறேன்னு சொன்னேன் இல்லே. சொன்ன மாதிரியே செஞ்சு காமிச்சிட்டேன்.''

அடுத்த நிமிடம் அங்கே நிற்காமல் விருட்டென்று உள்ளே போகிறாள். எப்படி வீட்டிற்கு வந்தோம் என்று கூடத் தெரியாமல் சுமதி வந்து சேருகிறாள். இழவு விழுந்த வீடு போல் ஆனது அந்த வீடு. எப்போதும் அழுகை தான். ஒரு வாரம் டியூஷனுக்கும் செல்லவில்லை. எந்த டியூஷனையும் எடுக்கவில்லை.

அன்று குரு வருகிறான். ''அம்மா பிராஜக்ட் சப்மிஷனுக்கு பணம் வேணும்.''

''என்னடா சொல்லறே? ப்ராஜெக்ட்டுக்குன்னு ஆறாயிரம் கேட்டியே, கொடுத்தேனே.''



''இன்னும் ஒரு ஆயிரம் ரூபா வேணும்மா.''

''இன்னும் ஒரு ஆயிரமா?'' மலைத்தவள், பரபரவென்று பீரோவைத் திறந்து பார்க்கிறாள். பார்த்ததில் நூறு ரூபாய் தான் அகப்பட்டது. ரேகாவிற்குத்தான் திருமணம் ஆகி விட்டதே. அவளின் வளையலையாவது வைத்து வாங்கலாம். டியூஷனுக்கு வேறு செல்லாததால் வர வேண்டிய பணமே நின்று போயிருந்தது. அவசரம் அவசரமாக வளையலைத் தேடியவள் ரேகாவிற்கு செய்த எந்த நகையும் இல்லாது போக அதிர்ந்து போகிறாள். ரேகாவுடைய சர்டிபிகேட்ஸ் எதையும் காணவில்லை. அதுவும் பீரோவில் தான் இருந்தது. எல்லாவற்றையும் பெண் வழித்து எடுத்துக் கொண்டு போனது புரிந்தது. ஒரு வேளை பெண் எடுத்தாளா? இல்லை புருஷன் எடுத்து விட்டானா?

மெதுவாக பெரியவன் குருவிடம் சொன்னபோது, ''வேறு யார் எடுத்திருப்பா? எல்லாம் உம் பொண்ணுதான். எல்லாத்தையும் சுருட்டி இருக்கணும்.'' கறுவுகிறான்.

கணவன் வந்தபோது விஷயத்தைச் சொல்ல, எகிறுகிறான்.

''ஒத்த ரூபா எனக்கு கொடுக்க யோசிப்பியே. இப்ப என்ன சொல்லப் போறே? அதுதான்டி புருஷனுக்கு துரோகம் செய்தா அப்படித்தான் நடக்கும்.''

சுமதி இடிந்து போய் அமர்ந்திருந்தாள். இவன் என்ன மாதிரியான துணை. தடுக்கி விழுந்தால் தாங்கிப் பிடிப்பதற்கும், இன்பம் வரும்போது சேர்ந்து கொண்டாடுவதற்கும், துன்பம் வந்தால் தோள் கொடுக்கவும் அல்லவா துணை வேண்டும். இது வெற்றுத் துணை. எந்த

நாளிலும் கூட வராத துணை. சட்டென்று அழுகை நெஞ்சை அடைக்க அழுகிறாள். வாழ்க்கையில் அவள் ஒற்றை மாட்டு வண்டிதான். துணை இல்லாத வண்டி. வெற்றுக்கு பக்கத்தில் ஒரு துணையை வைத்துக் கொண்டு பாரம் முழுவதையும் தன் தோளில் சுமக்கும் அதிர்ஷ்டம் கெட்ட ஒற்றை மாட்டு வண்டிதான்.

சுமதி இடிந்து போய் உட்கார்ந்திருக்கிறாள். யாரிடமும் எதுவும் பேசவில்லை. எதைப் பேசுவது? பிள்ளைகள் இருவரும் அவளைத் தேற்ற, அழுதபடி இருக்கிறாள். சோகம், வருத்தம், துன்பம், ஆனந்தம், மகிழ்ச்சி எதுவுமே நிலையும் கிடையாது. எதுவும் யாருக்காகவும் நிற்பதும் கிடையாது. சுமதியும் அப்படித்தான் வருத்தப்பட்டு அழுது, கலங்கி பின் யதார்த்தத்திற்கு வந்து வேலைகளை செய்கிறாள். நாளடைவில் அந்த துக்கம் கூட குறைந்து போனது. மறுபடியும் வேலைகளில் மனதை செலுத்த ஆரம்பித்தாள். துக்கத்தை மறக்க, பின்னும் கடுமையாக உழைக்க ஆரம்பித்தாள். பிள்ளைகள் கேட்ட பணத்தை கடனை உடனை வாங்கி கட்ட ஆரம்பித்தாள்.

மாமியார் இறந்து, மாமனார் தனிமைப்பட்டு அவ்வப் போது இவர்கள் வீட்டில் வந்து இருக்க ஆரம்பித்தார். அந்த துக்கம் மற்ற துக்கங்களைத் தூக்கிப் போட, மரணத்தை விட வேறு கொடுமையான முடிவு வேறு எதுவுமே இருக்க முடியாது. முடிவுக்கு வருகிறாள் சுமதி.

காலம் பறந்துதான் போனது. அப்பாவும் போய்விட அம்மா முதல் அக்காளுடன் கூட இருக்க ஆரம்பித்தாள். மாய்ந்து மாய்ந்து வேலை செய்த அம்மா முதுமையில்



ஒடுங்கிப் போய் களைத்துப் போய் அமர்ந்திருப்பது மனதை வேறு என்னவோ செய்தது. ஒவ்வொரு மனிதனுக்கும் இதுதான் முடிவோ? வேதனை பிடுங்கித் தின்றது.

பிள்ளை படிப்பை முடித்து தனியார் கம்பெனியில் வேலைக்கு சேர்ந்து விட்டான். மாதம் பதினைந்தாயிரம் சம்பளம். சம்பளப் பணத்தை அம்மாவிடம் தரவில்லை என்றாலும் வீட்டுத் தேவைகளை கவனித்துக் கொண் டான் மகன். சாமான் வாங்கிப் போடுவது, காய்கறிகள் வாங்கிப் போடுவது ஏதாவது தேவை என்றால் உடனே பணம் கட்டுவது என்று சுமதியின் பாரத்தை கொஞ்சம் தன் தோளில் ஏற்றுக் கொண்டான்.

பெண் வேறு ஜாதியில் ஓடிப்போய் திருமணம் புரிந்து கொண்டதால் பிள்ளைக்காவது ஒழுங்காகத் திருமணம் புரிய வேண்டும் என்று கனவே கண்டு கொண்டிருந்தாள் சுமதி. அவர்கள் தூரத்து உறவினரின் பெண் விமலாவைப் பார்த்த மாத்திரத்திலேயே சுமதிக்கு பிடித்து விட்டது. தன் பையனின் ஜாதகத்தை எடுத்து விமலாவின் ஜாத கத்திற்குப் பொருத்தம் பார்த்து பேசி முடித்தே விடு கிறாள்.

அதிசயமாக கணவனும் உடன்வர, திருமணம் நிச் சயிக்கப்பட்ட ஒரு நல்ல நாளில் திருமணமும் நடந் தேறியது. விமலாவும் ஒரு வங்கியில் வேலை செய்து கொண்டிருந்தாள். சுமதிக்கு பெருமை பிடிபடவில்லை. பரவாயில்லை. கணவனும், மனைவியும் வேலைக்குப் போகிறார்கள். தன்னைப்போல் அவர்களுக்கு பணப் பிரச்சனையே வராது. காலை எட்டு மணிக்கு அவர்கள்

இருவரும் அலுவலகத்துக்குப் போய் விட்டு இரவு ஏழு, ஏழரை சில நாட்களில் எட்டு மணிக்கு கூட வருவார்கள். சுமதி வழக்கம் போல் எல்லா வேலைகளையும் செய்து மருமகளுக்கும் சேர்த்து சமைத்து வைத்திருப்பாள். விடுமுறை நாட்களில் இருவருமே எட்டு மணிக்கு குறைந்து எழுந்திருக்க மாட்டார்கள். காலை டிபனை முடித்துக் கொண்டு இருவருமே வெளியே கிளம்பிப் போய் இரவு தான் வருவார்கள்.

மருமகளை ஏதேனும் வேலை செய்ய சொல்லக்கூட தயங்குகிறாள் சுமதி. தன் காலம் போல் இப்போது இல்லை. பெண்களுக்கு வீட்டு வேலையே தெரிவ தில்லை. பெண்களுக்கு அதிக சுதந்திரம் வந்து விட்டது. இப்போது எல்லாம் மிகவும் செல்லமாக வளர்க்கிறார்கள். எந்தத் தாயும் ஏழையாக இருந்தாலும், பணக்காரர்களாக இருந்தாலும் சரி பெண்களை ஒரு வேலையும் செய்ய விடுவதில்லை. பெண் என்பவள் வேலைக்குப் போய் சம்பாதிப்பதால் பழைய நாட்களைப் போல் மாமியார் என்பவள் தன் ஹோதாவைக் காட்டக் கூட யோசிக்கிறாள். இங்கே சுமதியும் அப்படித்தான் மருமகளை ஒரு வேலை செய்யச் சொல்லவே பயப்படுகிறாள். எல்லா வேலையை யும் தானே மாய்ந்து, மாய்ந்து செய்கிறாள். பூ கட்டி மருமகள் தலைமேல் வைத்து அழகு பார்க்கிறாள். மரு மகளுக்குப் பிடித்ததெல்லாம் வாய்க்கு ருசியாக செய்து போடுகிறாள்.

மருமகளும் மாமியார் செய்கிறாளே என்ற கூச்ச நாச்ச மில்லாமல் "அத்தை தலைவலி எனக்கு காபி கலந்து தாங்க" என்பாள்.



"என் பிரண்ட்ஸ் எல்லாம் வராங்க ஒரு ஸ்வீட் சேவரி பண்ணி வச்சிடுங்க அத்தை" என்று சிரித்தபடி சொல்லி விட்டுப் போவாள்.

மருமகள் சொல்லிவிட்டாளே என்று மாய்ந்து, மாய்ந்து சுமதி செய்வாள்.

"அத்தை எங்க அம்மா அப்பா எல்லாம் நாளைக்கு வராங்க. அண்ணன் அண்ணி கூட வராங்க. அண்ணன், அண்ணிக்கு உருளைக்கிழங்கு செய்திடுங்க. அம்மா அப்பாவுக்கு கோஸ் கறியும், கீரையும் செய்திடுங்க. சாம்பார், ரசம் எல்லாம் ரெடி பண்ணிடுங்க அத்தை. அப்பளப்பூ பொரிச்சு வச்சிடுங்க." இத்தனையும் சொல்லி விட்டு மருமகள் அலுவலகத்திற்கு கிளம்பிப் போய் விடுவாள். சுமதியும் மாங்கு மாங்கென்று செய்து வைப் பாள்.

உறவினர் வந்ததும் அவர்களிடம் அமர்ந்து கும் மாளமிட்டு பேசுவாள் விமலா. வேலைக்காரியைப் போல் அவர்களுக்கு பரிமாறி எல்லா வேலைகளையும் செய்வாள் சுமதி. ஒருநாள்கூட "அம்மா பாவம். நீ கூட வேலை செய்யேன்" என்று மகன் சொன்னதில்லை. திருமணம் அதை விடுத்து பெண்டாட்டி எவ்வழியோ அவ்வழியே போனான் புருஷன்.

முதலில் சுமதிக்கு மனது கஷ்டமாக இருந்தாலும் பின்பு மனதை தேற்றிக் கொண்டாள். ஒரு கணவன் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இருக்கிறான் மகன். தனக்கு கிடைக்காத வாழ்க்கை தன் மருமகளுக்காவது கிடைக்கட்டுமே மனதைத் தேற்றிக் கொள்கிறாள். ஆயிற்று மருமகள் கருவுற்றாள். சுமதியின் வேலை இரட் டிப்பானது. ஒரு வழியாக மருமகள் எட்டாம் மாதம் அம்மா

வீட்டிற்குப் போன பிறகுதான் சுமதிக்கு மூச்சுவிடவே முடிந்தது. பிள்ளையும் அடிக்கடி பெண்டாட்டியைப் பார்க்க என்று சென்று விடுவான்.

மருமகள் ஒரு பேரனைப் பெற்றெடுத்து தர சுமதி மகிழ்ச்சியின் எல்லைக்கே போகிறாள். ஐந்து மாதத்தில் குழந்தை வீட்டிற்கு வந்துவிட சுமதியின் வேலை மறுபடியும் ஆரம்பித்தது. மருமகள் மூன்றாம் மாதத்தி லிருந்தே வேலைக்குப் போக ஆரம்பித்தாள். நாட்கள் ஜெட் வேகத்தில் ஓடியது. குழந்தைக்கு இரண்டரை வயதானது. துறுதுறுவென்று ஓட்டமும், குழந்தை கேட்கும் கேள்விகளும் சந்தோஷப்படுத்தினாலும் பல நேரங்களில் முடியாமல் போனது. குழந்தையின் பின் னால் ஓட முடியவில்லை. சாப்பிடக் கொடுத்தால் பல நேரங்களில் முகத்திலேயே துப்பியது. கோபம் வந்தால் கையில் கிடைக்கும் சாமான்களை தூக்கி சுமதியின் மேலேயே போட்டது. பேரனைக் கொஞ்சியபடி எல்லா வற்றிலும் பொறுத்துக் கொண்டாள் சுமதி. தாத்தாவின் அருகிலேயே பேரன் போகாது. எப்போதுமே பாட்டியின் உயிரைத்தான் எடுத்துக் கொண்டிருக்கும்.

அன்று ஏதோ வேலையாக இருந்தபோது, 'பாட்டி பாட்டி' என்று பேரன் கூப்பிட வேலையின் மும்முரத்தில் சுமதி கவனிக்காதபோது கையில் கிடைத்ததை தூக்கி வீசி அடிக்க சுமதியின் நெற்றியை பதம் பார்த்து விட்டது. வலி தாளாமல் பட்டென்று முதுகில் சுமதி ஒன்று போட ரணகளமானது. குழந்தை மாலை அம்மாவும், அப்பாவும் வரும்வரை அழுது ஆர்ப்பாட்டம் செய்ய, வீட்டிற்கு வந்த மருமகளோடு பிள்ளையும் சேர்ந்து அம்மா மேல் எகிறி விழுகிறான்.



# 17



சுமதி அதிர்ந்து போகிறாள். "ஏன் அத்தை உங்களை நம்பி குழந்தையை விட்டுட்டு போனா இப்படியா அடிப்பீங்க! கண்ணெல்லாம் சிவந்து போய், குழந்தை அழுது, அழுது சே!" என்று விமலா கோபிக்க,

"நான் ஒண்ணும் அடிக்கலேம்மா. சாமானை தலைலே போட்டுடுச்சு. பாரும்மா" சிவந்து போய் வீங்கிப்போன தலையை காண்பிக்கிறாள். "ஒரு அடிதான் முதுகிலே வச்சேன். அதுக்குதான் இத்தனை ஆர்ப்பாட்டம்."

"ஏம்மா ஒரு சின்ன குழந்தைக்கு சரிக்கு சமானமா சண்டை போடுவீங்களா? சே!" என்று மகன் திட்ட, சிறிது நேரம் கழித்து வந்த கணவனும் மனைவியை திட்டு கிறான். சுமதி பிழியப் பிழிய அழுகிறாள். குழந்தை தவறு செய்தால் பெரியவர்கள் கண்டிக்க மாட்டார்களா?

இரண்டாவது மகன் ராஜ் வர அவனிடம் சொல்லி புலம்புகிறாள்.

"குழந்தையை என்கிட்டே விட்டு போறாங்களேன்னு, பயந்து பயந்து குழந்தையைப் பாத்துக்கறேன். அன்னிக்கு ஏதோ வேலை பண்ணிகிட்டு இருக்கேன். குழந்தை ஸ்கேலை எடுத்து வந்து பட்டுபட்டுனு அடிச்சிடுச்சு. இன் னொரு நாள் கோலமாவு இருந்த டப்பாவை அப்படியே

தலைல கவுத்துட்டான். சாப்பிட அடம் பண்றான். 'இப்படி செய்யக்கூடாது'ன்னு சொல்லிட்டா போதும். வீல் வீல்னு கத்தி ஒரே ஆர்ப்பாட்டம். நான் இன்னிக்கு ராத்திரி சமையல் முடிச்சிட்டு குப்பையை கொட்ட போனேன். குப்பை கூடையைத் தட்டி விட்டான். சரி குழந்தை தானே போகட்டும்னு குப்பையை பொறுக்கி கூடையிலே போட்டுகிட்டு இருக்கும்போதே கைல இருக்கறதை எடுத்து வீசிட்டான். நானும் எத்தனை பொறுத்துக்கறது சொல்லு. சட்டென்று கோபத்திலே முதுகிலே ஒண்ணு வச்சுட்டேன்.

அதுக்கு தான் இத்தனை ஆர்ப்பாட்டமும்." சட்டென்று பொங்கி பொங்கி அழுகிறாள்.

"குழந்தைகளுக்கு ஓவரா செல்லம் கொடுத்தா இப்படித்தான் ஆகும்..." ராஜ் கூற, கேட்டுக் கொண்டே வந்த குரு, அடிப்பதற்கே கையை ஓங்கி விட்டான்.

"ஏண்டா உன்னை மாத்த முடியுதா? பெரிசா குழந் தையைப் பத்தி பேச ஆரம்பிச்சிட்டே."

"சொல்லுங்க. அது எத்தனை சின்னக் குழந்தை. அது தூக்கி அடிச்சா அத்தனை காயம் பட்டுடும்மா. உங்கம்மா நல்லா நடிக்கறாங்க. நல்லவங்க மாதிரி எல்லா வேலை யும் செய்துட்டு உள்ளுக்குள்ளே மருமகளை அடக்க முடியலையேன்னு எம் மேலே வயித்தெரிச்சல். அது புள்ளை மேலே காட்டிட்டாங்க." குதி குதி என்று குதிக் கிறாள் விமலா.

அன்று வருத்தப்பட்டு சாப்பிடாமலேயே படுத்துக் கொண்டாள் சுமதி. அடுத்த நாள் காலையில் சுமதி செய்த டிபனை சாப்பிட்டு விட்டு கிளம்பிப் போனார்கள். குருவும் அவன் மனைவியும்,



"குழந்தையை அடிச்சுடாதீங்க. பத்திரம்..." சொல்லி விட்டுக் கிளம்பினாள் விமலா. பிள்ளை பேசவே இல்லை.

அவர்களை அனுப்பிவிட்டு குழந்தைக்கு பாலைக் காய்ச்சி ஆற வைத்தாள் சுமதி. குழந்தை எழுந்தவுடன் பாலைக் கொடுக்க, பாலைச் சாப்பிட்ட பின் மெதுவாக எழுந்தது. சட்டென்று பாட்டியை கட்டி அணைத்து முத்த மிட்டது. நேற்று ஒரு அடி கொடுத்ததற்கு ஆர்ப்பாட்டம் செய்த குழந்தை, இன்று எல்லாவற்றையும் மறந்துவிட்டு பாட்டியை முத்தமிடுகிறது.

சுமதி பூரித்துப் போகிறாள். இதுவரை ஏங்கித் தவித்த மனசு லேசானது. குழந்தையை கட்டி அணைத்துக் கொள்கிறாள். முத்தமிடுகிறாள். மடியில் வைத்து கொஞ்சு கிறாள். குழந்தையை உப்பு மூட்டை தூக்கியவாறே எல்லா வேலைகளும் செய்கிறாள். 'நேற்றைய சண்டை நேற்றோடு போகட்டும்' நினைத்தவாறே வேலைகளை செய்துவிட்டு குழந்தைக்கு இட்லியை ஊட்டி குளிப் பாட்டி குழந்தையின் மழலைச் சிரிப்பில் தன்னை மறக்கிறாள். 'குட்டிப் பாப்பாவை சிரிக்க வைக்கட்டுமா?' என்று கொஞ்சியவள் அதன் கைகளில் கிச்சு கிச்சு மூட்ட குழந்தை பெரியதாக சிரித்தது.

நேற்றைய சூழ்நிலை மாறி இன்று ஒரே ஆனந்தம் தான்.

"ராஜாப் பையா கண்ணாமணி, குட்டிப் பிசாசு" என்று கொஞ்சுகிறாள் சுமதி. பாட்டியும், பேரனும் இன்று ஐக்கியமாகிவிட பழையதெல்லாம் மறந்து போனது. வழக் கம்போல் மாலை சிற்றுண்டி செய்து இரவு சாப்பாட் டையும் செய்து வேலைகளையும் முடித்து விட்டு

குழந்தைக்கு எப்போதும் செய்வதுபோல் பவுடர் அடித்து சட்டை மாற்றி வாசலில் தூக்கிக் கொண்டு நிற்கையில் விடுவிடுவென்று உள்ளே வருகிறாள் மருமகள்.

எப்போதும் ஏழு மணிக்கு வருபவள் இன்று என்ன ஐந்து மணிக்கே வந்து விட்டாள். சுமதி ஆச்சரியமாகப் பார்க்கிறாள்.

''குழந்தையைக் கொடுங்க'' சுமதியின் கையிலிருந்து வெடுக்கென்று குழந்தையைப் பிடுங்கிக் கொண்டாள். ஒரு பத்து நிமிடம் பொறுத்து குருவும் வந்து விடுகிறான். சுமதி அவசரம் அவசரமாக காபி கலந்து எடுத்து வருவ தற்குள், ஒரு நாலைந்து பேர் உள்ளே வந்து குருவின் அறையில் இருக்கும் சாமான்களை வாசலில் வந்து நிற்கும் டெம்போவில் அடுக்க ஆரம்பித்தார்கள்.

''என்னடா இது?'' சுமதி குருவிடம் கேட்க,

''நாங்க இங்கே இருந்து கிளம்புறோம். தனியா போக லாம்னு இருக்கோம்.''

குரு விரைப்பாகக் கூறுகிறான்.

''ஏண்டா?'' சுமதி பதறுகிறாள்.

''ஏண்டாவா? சும்மா ஒவ்வொருத்தர் பேரண்ணா எப்படி வச்சிருப்பாங்க. பிள்ளைங்களை கண்டிக்கறவங்ககூட பேரண்ணா தலைல தூக்கி வச்சிட்டு ஆடுவாங்க.''

''நான் ஒண்ணும் செய்யலைடா?''

''ஒண்ணும் செய்யாமயா என் பையன் அழுதுகிட்டே இருந்தான்.''



''அவன் மண்டையிலே அடிச்சதும் வலிச்சதுடா, அதன் ஒரு அடி கொடுத்தேன்.''

''போதும். போதும் உன் விளக்கம். இங்க இருந்தா எம்பிள்ளை செத்துப் போயிடும்னு என் பொண்டாட்டி அழுதுகிட்டு இருக்கா. அதான் தனியா போறோம்.''

''என்னடா இப்படி பேசறே? தனியா போனா குழந் தையை யார் பார்த்துப்பாங்க.''

''அவுங்க அம்மா வீட்டு மாடியிலே ஒரு போர்ஷன் காலி இருக்கு. அங்க போயிடறோம். அவுங்க பார்த்துப் பாங்க.''

குரு சொல்லச் சொல்ல அழுகிறாள் சுமதி. காலையில் 'பாட்டி' என்று தன்னைக் கட்டி முத்தமிட்ட குழந்தையை பிரியப் போகிறோமா.

''டேய் குரு ப்ளீஸ் வேணாம்டா.'' சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலில் விழலாம்.

''என்னம்மா விமலா இதெல்லாம். போகாதேம்மா, குழந்தை இல்லாமல் என்னால் இருக்க முடியாதும்மா. அவனை பாக்கலைன்னா நான் செத்தே போயிடுவேம்மா.'' சுமதி கெஞ்ச கெஞ்ச பதில் பேசாமல் குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஆட்டோவில் ஏறிப் போகிறாள் விமலா.

மறுபடியும் வீடு மயானமானது. எந்தப் பிள்ளைகளுக் காக நம் வாழ்க்கையே அர்ப்பணிக்கிறோமே, அந்தப் பிள்ளைகள் நம்மைத் தூக்கி எறியும்போது ஏற்படும் சோகம் மரணத்தை விட கொடுமையானது. பேரக் குழந் தையை ஒரு சின்ன தட்டு தட்ட கூட தனக்கு உரிமை யில்லையா? தான் ஏதோ கொலை செய்து விட்டது போல்

அல்லவா பிள்ளையும், மருமகளும் நடந்து கொள் கிறார்கள்.

கணவன் வந்ததும் தன் வருத்தங்களை சொல்கிறாள். தன்னுடைய வாழ்க்கைத் துணை, வழித்துணையாகக்கூட வராத கேஸ். இருந்தும் அவன் வந்ததும் தாள முடியாமல் அழுது கொண்டே சொல்கிறாள். சற்று எரிச்சலுடன் கேட்டவன். ''போனாப் போகட்டும். எதுக்கு இப்படி ஒப் பாரி வைக்கறே'' என்று எரிந்து விழுகிறான்.

''அவுங்க குழந்தையை அடிச்சா அவுங்களுக்கு கோபம் வராதா?'' என்று பேசுகிறான். உதவுபவனோ, உதவாக் கறையோ தன் சோகங்களை யாரிடமாவது பகிர்ந்து கொண்டு தானே ஆக வேண்டும்.

கணவன் சாப்பிட்டுவிட்டு வழக்கம் போல் டி.வி.யில் மூழ்கி விட, மௌனமாக சின்ன மகனின் வரவிற்காகக் காத்திருக்கிறாள் சுமதி.

''என்னம்மா இத்தனை டல்லா இருக்கே?'' பிள்ளை வரும்போதே கேட்கிறான்.

''ராஜ்'' என்று ஆரம்பித்தவள், ஓவென்று அழுகிறாள். பின் நடந்ததைக் கூற புருவத்தை உயர்த்துகிறான் ராஜ்.

''அண்ணன் என்ன லூசா?'' கேட்கிறான்.

''அவன் என்ன பண்ணுவான்?'' எல்லாம் பொண் டாட்டி சொல்லிக் கொடுக்கறதுனால வந்த வினை.''

''அவனுக்கு கல்யாணமே பண்ணியிருக்கக் கூடா தும்மா. இப்பதானே வேலைக்குப் போனான். என்ன அவசரம்?'' கத்துகிறான் ராஜ்.

''உங்க அக்கா மாதிரி ஆயிடக் கூடாதுன்னு நினைச் சேன்'' சுமதி வருத்தத்தோடு கூற,



''எல்லாத்துக்கும் கல்யாணம்தாம்மா காரணம்'' என் கிறான் ராஜ்.

மறுபடியும் வீடு சோகம் காத்தது. இப்போது சுமதிக்கு வெகுவாக வேலை குறைந்து தான் போய்விட்டது. புருஷ னுக்கும், இருக்கும் ஒரு மகனுக்கும் வேண்டியதை செய்து விட்டு நிறைய ஓய்வு எடுக்க முடிகிறது. வழக்கப்படி ஓய்வு நேரங்களில் டாக்டர் புவனாவைத் தேடி ஓடுகிறாள்.

''கேள்விப்பட்டேன். எல்லாக் கண்றாவியையும் கேள் விப்பட்டேன். முதல்லயே அவுங்களை நீ தனிக்குடித் தனம் வச்சிருக்கணும். தனியா இருந்தாதான் கஷ்ட நஷ்டம் தெரியும். பிள்ளை, பேரன் மருமகன்னு மாஞ்சு மாஞ்சு வேலை செய்து அவுங்க கேக்கறதுக்கு முன் னாடியே எல்லாம் செய்தா, அதைச் செய்ய எத்தனை உழைப்பு, வலி, பணம் வேணும்னு அவங்களுக்குத் தெரியுமா? அவுங்களையே செய்ய விட்டிருந்தியானா, விழுந்து விழுந்து தானா புரிஞ்சுகிட்டு இருப்பாங்க. அப்ப உன் அருமையும் தெரிஞ்சிருக்கும்.''

சுமதி மௌனமாக தலை அசைக்கிறாள். எத்தனையோ நாட்கள் டாக்டர் புவனாவிடம் சென்று அழுது அவள் உபதேசங்களில் சற்று கவலையை மறந்திருக்கிறாள். அன்று டாக்டரிடம் பேசும்போதுதான் முதல் முறையாக ஒரு வித்தியாசத்தை உணர்கிறாள்.

''இந்த நெஞ்சிலும் தோள்ளேயும் போட்டு வளர்த் தேன் டாக்டர் எட்டி உதைச்சிட்டான்'' நெஞ்சில் கை வைத்துச் சொன்னபோது நெஞ்சு ஏதோ கனமாக இருந்த மாதிரி இருந்தது.

அன்று வீட்டிற்குப் போனபோது வலது மார்புப் பகுதியை தொட்டுப் பார்க்கிறாள். கட்டி உள்ளுக்குள்

இருப்பது போல் தோன்ற ஒரு நிமிடம் அதிர்ந்து போகிறாள். இடது மார்பகத்தில் ஒன்றையும் காணோம். அது சொள சொளவென்று மிருதுவாக இருந்தது. எத்தனை நாட்களாக இப்படி இருக்கிறது? எப்படி கவனிக்காமல் விட்டோம் யோசிக்கிறாள். ஒரு பத்து வருடங்களுக்கு முன்பே, குழந்தைகள் எல்லோரும் சிறியவர்கள் ஆக இருக்கும்போது, ஒரு முறை ஒரு திருமணத்திற்கு செல்வதற்கென்று ரவிக்கையை மாற்றியவள் மார்புப் பகுதியில் ஏதோ கல்லாக இருப்பது போல் உணர்கிறாள். சட்டை இறுக்கமாக இருந்ததால் அப்படி இருந்திருக்கும் என்று அலட்சியப்படுத்தி விட்டாள். ஆனால் இன்று அந்தக் கட்டி சற்று பெரியதாக ஆனது போல் தோன்று கிறதே. ஒரு வேளை மார்பகப் புற்று நோய் என்கிறார்களே அதாக இருக்குமோ?

சுமதிக்கு முதன் முறையாக பயம் எழுந்தது. பல நாட்களாக கட்டியாக, ஏதோ உருண்டை போல் இருக் கிறது. தான் எப்படி கவனிக்காமல் விட்டோம்? எப்போதும் வேலை, கஷ்டங்கள் இதுதானே வாழ்க்கை தானே. தன் உடல்நலத்தைப் பற்றி எண்ணக்கூட முடியவில்லை.

மார்பகப் புற்றுநோயை எப்படிக் கண்டு பிடிப்பது என்று எத்தனையோ முறை பேப்பரில் வந்ததுண்டு. அதெல்லாம் அவள் இலட்சியமே செய்ததில்லை. ஒரு வேளை தனக்கு வரவே வராது என்ற நிலையில் இருந் தாளா? தெரியவில்லை. தான் எப்போதோ அறை குறை யாக படித்தது நினைவுக்கு வர, கண்ணாடி எதிரில் போய் நின்று கொண்டு சட்டையைக் கழற்றுகிறாள். ஒரு மார்பகத்தை விட இன்னொன்று சற்று பெரியதாக இருப்பது போல் தோன்றியது. வயது கையை உயரத்



தூக்கி இடது உள்ளங்கையால் தடவிப் பார்க்கிறாள். உண்மையிலேயே உருட்டுக் கட்டி இருப்பது தெரிய, ஒரு நிமிடம் அதிர்ந்து போகிறாள். மறுபடியும், மறு படியும் அழுத்திப் பார்க்கிறாள். கட்டிதான் என்று நிச்சயமாகத் தெரிய லேசான அழுகையோடு, அதிக பயம் வந்தது. புற்று நோய் என்றால் பிழைக்கவே முடியாது என்று சொல்லி இருக்கிறார்களே தனக்கும் இப்படி ஒரு முடிவு வந்து விடுமோ.

சட்டென்று கண்கள் கலங்கிற்று. வாழ்க்கை முழுவதும் கஷ்டப்பட்டு முடியும்போது, கஷ்டத்திலேயாவா முடிய வேண்டும் என்றாவது தனக்கு ஒரு விடிவு காலம் வராதா என்று ஏங்கி ஏங்கி கடைசியில் வராமலேயே போய் விடுமோ. மனது கிடந்து தவித்தது. தான் ஆரோக்கியமாக இருக்கிறோம் என்ற வரையில் நாம் எதைப் பற்றியும் கவலைப்படுவதில்லை. உடல்நலம் குறைவு என்றதும் தான் நம் நிலைமை புரிகிறது. உடல்நலம் நன்றாக இருக்கும் வரை நாம் எதைப் பற்றியும் கவலைப்படுவ தில்லை. உடலைப் பற்றிக்கூட கவலைப்படுவதில்லை. உடல்நலம் குறையும்போது தான் உடலின் ஞாபகமே வருகிறது.

முதன் முறையாக உடல்நலத்தைப் பற்றிக் கவலைப் பட்டாள் சுமதி. கணவன் கேட்கிறானோ, இல்லையோ அவன் வந்ததும் சொல்ல வேண்டும் என்று தோன்றியது. ஏனோ டாக்டரிடம் போகக்கூடத் தோன்றவில்லை. கணவன் எப்போது வருவான் என்று ஆவலோடு காத் திருக்கிறாள். உள்ளுக்குள் குமைந்து, குமைந்து அழு கிறாள். எத்தனை நேரம் அழுதிருப்பாளோ? அன்று எந்த டியூஷன் எடுக்கவும் மனம் வரவில்லை.

எல்லோருக்கும் விடுமுறை அறிவித்துவிட்டு கணவன் வரவிற்காக காத்திருக்கிறாள். மணி ஏழடித்தது. எட்டடித்தது. ஏன் ஒன்பதுகூட ஆனது? கணவன் வந்த பாடில்லை. இவள் காத்திருப்பு இன்னும் அதிகமானது. மனது அடித்துக் கொள்ள கணவன் வரவில்லையே என்ற கவலை அதிகமானது. தன் உடலைப் பற்றி மறந்து போனது கணவனுக்கு ஏதேனும் ஆகியிருக்குமோ அழுகை வந்தது. 'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்' என்று சொன்னாலும் சொன்னார்கள். அதற் கேற்றாற்போல் உபயோகமில்லாத அந்த புருஷனை நினைத்து, நினைத்து அழுகிறாள். அவன் வரமாட்டானா? தனக்கு மார்பகப் புற்றுநோய் வந்தாலும் சரி, நாளைக்கே தான் இறந்தாலும் சரி, தன் கணவனாவது நன்றாக இருக்க வேண்டும். அவனுக்கு ஒன்றும் இல்லாமல் இருக்க வேண்டும். அவன் நன்றாக இருக்க வேண்டும்.

துடிக்கிறாள். கடவுளை நேர்ந்து கொள்கிறாள். இரவு பதினோரு மணிக்குத்தான் கணவன் வருகிறான். அவ னுக்கு முன் ஏழு மணிக்கு வந்த ராஜூம் அம்மா கலங்கு வதைப் பார்த்து அப்பாவைத் தேடுகிறான்.

''எங்கேம்மா போனாரு? அவர் கம்பெனியிலேயும் இல்லே. இன்னும் பத்து பிரண்ட்ஸ் கிட்டேயும் கேட்டுட் டேன். அப்பா வழக்கமா போற இடமெல்லாம் பார்த்தாச்சு. எங்கேயும் இல்லே'' வள்ளென்று விழுகிறான். ''அவரைத் தலை முழுகித் தொலை.''

''அப்படி எல்லாம் சொல்லாதேடா. ஆயிரம் இருந் தாலும் அவர் உனக்கு அப்பாடா.''

''ஆயிரம் இருந்தா தான் அப்பா.'' என்று சொன்ன வன்,



''எனக்கு சாப்பாடு போடு பசிக்குது.'' என்றபடி சாப்பிட உட்கார்ந்தான்.

சுமதி பிள்ளைக்கு சாப்பாடு போட்டு விட்டு தான் பட்டினி கிடக்கிறாள். 'கடவுளே என் புருஷனை எனக்கு ஒழுங்காக சேர்ப்பித்துவிடு.' இத்தனைக்கும் சாதாரணமாக வழித் துணையாகக்கூட வராதவன், இருந்தும் வாழ்க் கையை விட்டுப் போய் விடுவானோ என்று நினைக்கும் போதே நெஞ்சு நடுங்கியது.

பதினோரு மணிக்கு போன் வந்தது. போனில் வந்த செய்தியைக் கேட்டு திக்பிரமை அடைந்தாள்.



# 18

சுமதி ஒரு நிமிடம் அதிர்ந்து பின் ஓவென்று அலற, ஓடி வருகிறான் ராஜ்.

''என்னம்மா ஆச்சு?''

''அப்பா... அப்பா...'' என்று அழுகிறாள் சுமதி.

''என்னம்மா ஆச்சு? அப்பாவுக்கு என்ன ஆச்சு?''

''ஆக்ஸிடண்ட் ஆகி போச்சாம்.''

''யார் சொன்னாங்க?''

''யாரோ போன் பண்ணாங்க. மதுமலர் ஆஸ்பிடல்ல தான் சேர்த்திருக்கங்களாம். அப்பாவைத் தலை முழு கிடுன்னு சொன்னியேடா'' அம்மா அழுகிறாள்.

''சாரிம்மா. அவர் வீணா நம்பளை கஷ்டப்படுத் தறாரேன்னு எரிச்சல்ல சொன்னேன். இப்படியாகும்னு தெரியாது'' அவன் கண்களிலும் கண்ணீர். கண் மூடி ஏதோ பிரார்த்திக்கிறான்.

''வாங்கம்மா ஆஸ்பத்திரிக்குப் போவோம்.''

ஒரு ஆட்டோ எடுத்தபடி இருவரும் கிளம்பிச் செல் கின்றனர். வழி எல்லாம் சுமதி அழுது கொண்டேதான் வருகிறாள்.

''ஒண்ணும் ஆகாதும்மா. கவலைப்படாதீங்க.''

மது மலர் ஆஸ்பிடலுக்குப் போய் இன்டன்ஸிவ் கேர் யூனிட்டில் விசாரித்தபோது தியாகு என்றொருவரை சேர்த்திருப்பதாகச் சொன்னார்கள். 'மிகவும் சீரியஸ்' என்றும் சொல்ல, வெளியில அமர்ந்து சுமதி பிழியப் பிழிய அழுகிறாள். ராஜும் சற்று சோகமாகவே அம்மா வின் அருகில் அமர்ந்து கொள்கிறான். அம்மாவின் தலையைத் தடவிக் கொள்கிறான். தியாகுவின் உறவினர் என்று தெரிந்ததுமே இவர்களிடம் இதுவரை கட்ட வேண்டிய தொகை என்று ஒரு பதினைந்தாயிரத்துக்கு பில் தரப்பட்டது.

''இப்ப ஒண்ணும் கொண்டு வரலைங்க'' சுமதி பில் தொகையைப் பார்த்து திடுக்கிட்டு போனவளாய் கூற, ''சரிம்மா நாளைக்கு கொண்டு வந்து கட்டிடுங்க'' சொல்லி விட்டு நர்ஸ் போகிறாள். சுமதி மௌனமாக அமர்ந்திருக் கிறாள். அழுகை கூட வரவில்லை. அழுது என்ன பிரயோசனம்? இனி ஆக வேண்டிய காரியத்தைப் பார்க்க வேண்டும். பணம்... அது படுத்துகிற பாடு... அப்பப்பா... நினைத்துக் கொள்கிறாள் சுமதி.



''அம்மா இங்கே இருந்து என்ன பண்றது? காலைல வருவோம்'' ராஜ் சொல்ல,

''உங்கப்பா இப்படி இருக்கும்போது எனக்கு வீட்டிலே இருக்க எப்படிடா மனசு வரும்?'' அழுகிறாள் சுமதி.

''நான் இங்கே இருக்கேன். நீ வேணா வீட்டுக்குப் போய் காலைல வா'' என்று பிள்ளையை அனுப்ப,

''நீயும் வந்திடும்மா'' ஆனவரை கூப்பிட்டும் அவள் கேட்கவில்லை.

ராஜ் கிளம்பிச் செல்கிறான். ஏனோ அம்மாவைப் பார்த்தாலே பாவமாக இருந்தது. பாவம் அம்மா. கஷ்டப் படுவதற்கென்றே கடவுள் அவளைப் படைத்தானா? வேதனையோடு தான் வீட்டை அடைகிறான்.

வீட்டு வாசலில் தியாகு இப்படியும், அப்படியும் நடை போட்டவாறு இருக்கிறான். ராஜ் அதிர்ச்சி அடைகிறான். இது அப்பாவா? இல்லை ஆவி, கீவி என்கிறார்களே அது மாதிரி ஏதாவதா?

''என்னடா? அப்படிப் பார்க்கறே? திமிரா எங்க உங்கம்மா வீட்டைப் பூட்டிகிட்டு இந்த ராத்திரி வேளை யிலே எங்கே போனா?''

''இது நிச்சயமாக அப்பாதான். அப்பாவால்தான் இப்படி அதிகாரமாகவும், அலட்சியமாகவும் பேச வரும்.''

''ஆஸ்பத்திரியிலே இருக்காங்க?''

''என்ன கேடு உங்கம்மாவுக்கு?''

''என்னப்பா இப்படி பேசறீங்க? உங்களுக்கு ஆக் ஸிடண்ட்டுன்னு போன் வந்தது. இன்டன்ஸிவ் யூனிட் கேர்ல சேர்த்திருக்காங்கன்னு சொன்னாங்க. அம்மா

இன்னும் அழுதுகிட்டு அங்கே உட்கார்ந்துகிட்டு இருக்காங்க. வீட்டைப் பூட்ட வேண்டாம்ங்கறதுனால தான் நான் வந்தேன்.''

''என்னடா என்ன, ஏதுன்னு விசாரிக்க மாட்டீங்களா? எவனோ ஆக்ஸிடண்ட்டுன்னு போன் பண்ணினா உடனே ஓடிப்போய் அழுதுகிட்டு இருப்பீங்களா?''

ராஜுவிற்கு எரிச்சலாக வந்தது. அப்பாவால் எதையும் புரிந்து கொள்ள முடியாது. ஏட்டிக்குப் போட்டி பேசுவதை விட அழுது கொண்டிருக்கும் அம்மாவை சமாதானப் படுத்தி அழைத்து வருவது ரொம்ப முக்கியம். ''இதெல் லாம் அப்புறம் பேசிக்கலாம். முதல்ல அம்மாவை அழைச்சு கிட்டு வந்துடறேன்.''

அதற்கு மேல் அப்பாவின் பேச்சுக்கு காத்திராமல் கிளம்பிச் செல்கிறான். சுமதி அங்கே இடிந்து போய் அமர்ந்திருந்தாள். ஏதேனும் அதிசயம் ஏற்பட்டு கணவன் சரியாகி தன் முன்னால் நடக்கமாட்டானா? தன்னை அலட்சியம் செய்தாலும் பரவாயில்லை. தன்னிடம் பேசவில்லை என்றாலும் பரவாயில்லை. அவன் நன்றாக உயிரோடு இருந்தால் போதும். அழுது அழுது பாரமான மனதினால் தலை கனத்தது. சாப்பிடாத வயிறு வேறு சத்தம் போட ஆரம்பிக்க, தலை வேறு அதிகமாக சுற் றியது. தலையை கவிழ்ந்தவாறே சேரில் இலேசாக சாய்ந்தபடி அமர்ந்திருக்கிறாள். திடீரென்று மார்பகப் புற்று நோய் கடகடவென்று எல்லாவற்றிலும் பரவி தன் இறுதி நேரம் வந்து விட்டது போல் ஒரு உணர்வு. முழுவதுமாக மூழ்கிப்போனவளுக்கு இனிமேல் என்ன மரண பயம் இருக்கும்? இப்படி சிந்தனை ஓட்டம் இருந்தபோது ராஜ் ஓடி வருகிறான்.



''அம்மா... அம்மா...'' சற்று பரபரப்பாக கூப்பிடுகிறான்.

''என்னடா...'' ஈனஸ்வரத்தில் கேட்கிறாள். உடனே சட்டென்று அம்மாவின் அருகே அமர்ந்து விஷயத்தைச் சொல்லுகிறான்.

''என்னடா சொல்றே? நிஜமா...''

''ஆமாம்மா. அப்பா அங்கே இருக்கார். இது வேற யாரோ.''

ஒரு நிமிடம் மலங்க மலங்க விழிக்கிறாள். ஆனந்தம் படக்கூட முடியவில்லை.

''என்னடா சொல்றே?'' என்றவள் பெருமூச்சு விடு கிறாள். ராஜ் நடந்தவற்றைக் கூற ஆசுவாசப்படுத்திக் கொண்டு எழுந்திருக்கிறாள். நேராக ரிஸப்ஷனுக்கு சென்று ஐ.ஸி.யூவில் இருப்பவர் தன் கணவர் அல்ல என்று கூறி விட்டு மருந்து சீட்டுகளை அவர்கள் கையிலே திணித்துவிட்டுக் கிளம்புகிறாள்.

''அதெப்படிங்க. பணம் கட்டணுமே?''

''மேடம் இவங்க யார் வீட்டைச் சேர்ந்தவங்கன்னு கண்டு பிடிச்சு அவங்ககிட்டே சொல்லுங்க. பணத்தைக் கட்டுவாங்க. நாங்க வரோம். எங்க வீட்டுக்காரர் வந்துட் டாராம். நான் இனிமே இங்க நிக்க முடியாது.'' சொல்லி விட்டு ராஜுவுடன் கிளம்பிப் போகிறாள்.

மாலை சாப்பிடாதது, கணவனுக்கு ஏதோ என்று நெஞ்சை அடைக்க அழுதது, வருத்தப்பட்டு வருத்தப் பட்டு மனம் குன்றிப் போனது எல்லாம் சேர்ந்து தலை சுற்றலை ஏற்படுத்தியது. வீட்டிற்குப் போய் கணவனைப் பார்த்ததுமே லேசான அழுகை வந்தது.

''என்னடி பெரிசா அழறா மாதிரி நடிக்கறே?'' யாரு என்னன்னு விசாரிக்க மாட்டியா?''

''இல்லைங்க தியாகுன்னு உங்க பேர் சொல்லி போன் வந்தது. அப்புறம் விசாரிச்சா இன்டன்ஸிவ் கேர் யூனிட்டே தியாகுன்னு இருக்காங்கன்னு சொன்னாங்க. பயந்து போயிட்டேங்க.''

''அதுக்குத்தான். ஐடன்டி கார்ட் எல்லாம் வச்சிருக் கனும்னு சொல்றது. எல்லோருக்கும் எப்ப என்னாகும்னு தெரியாது. இதை வச்சிருந்தா வீட்டுக்கு கரெக்டா காண்டாக்ட் பண்ண முடியும் இல்லே.''

''என்னப்பா நீங்க சொல்றது? எல்லோருமேவா வேலைக்குப் போறங்க. ஐடன்டி கார்ட் வச்சுக்கறதுக்கு'' ராஜ் கேட்க,

''ஐடன்டி கார்ட் இல்லேன்னா அவங்க பெயர், அட்ரஸ், போன் நம்பர் இதை எழுதி வைக்கலாம். பாரின்ல எல்லாம் என்ன வியாதி இருக்குங்கறதுலேர்ந்து எழுதி வைப்பாங்களாம். அப்படி இல்லாததுனால தானே உங்கம்மா திண்டாட வேண்டி இருந்தது.''

சுமதிக்கும் அவன் சொல்வது ரொம்ப சரி என்று தோன்றியது. நாம் தேவை இல்லாததை எல்லாம் காப்பி அடிக்கிறோமே தவிர, தேவையானவற்றை லட்சியம் செய்வதில்லை. ஒழியட்டும். இன்றுதான் சரியான விலாசம் இல்லாததால்தானே யாரோ ஒருவருக்காக அழுது கொண்டு, லேசான அவமானம் தாக்கியது. தான் அவ மானப்பட்டாலும் பரவாயில்லை. அவனின் அடிபட்ட விஷயம் அவர்கள் வீட்டிற்குத் தெரியாதே. இப்போது என்னாகும்? முகம் தெரியாத அந்த தியாகுவையும் அவன்



பெண்டாட்டியையும் நினைத்து மனம் வருத்தப்பட்டது. அவனுக்கு என்ன ஆகுமோ? பாவம் அவன் குடும்பம் என்ன பரிதவிக்கப் போகிறதோ?

''என்ன கேட்டுகிட்டே இருக்கேன். மரம் மாதிரி நிக்கறே? தியாகு கேட்ட பின்தான் அவன் ஏதோ கேட்டா னென்று தெரிந்தது.

''என்ன கேட்டீங்க?'' என்னவோ வேதனையிலே இருந்தேன். ஏதோ யோசனை நீங்க சொன்னதுகூட காதிலே விழலை.''

அதற்குமேல் தியாகு விவாதிக்காமல் போய் படுத்துக் கொள்ள, ''அம்மா இந்த பாலையாவது சாப்பிடுங்க'' பிள்ளையே சுட வைத்துக் கொடுக்க பசித்த வயிற்றுக்கு பால் அமிர்தம் போல் ஆனது. பிள்ளையின் அன்பை நினைத்து கண்களில் கண்ணீர் வந்தது. இந்த கலாட்டா வில் தன் உடல் நோய் எல்லாமே மறந்து போனது.

மனம் சரியாகி மறுபடியும் பழையபடி வேலைகளைப் பார்க்க ஒரு வாரம் ஆனது. அந்த பதட்டத்தில் தன் உடல்நிலை பற்றிய உணர்வே மறந்து போனது. வெகு நாட்கள் கழித்து அன்றுதான் டாக்டர் புவனா வீட்டிற்குச் செல்கிறாள்.

''என்ன சுமதி ஆளே காணோம். ஊருக்கு எங்கியாவது போயிட்டியோன்னு நினைச்சேன்'' என்று கூற கணவ னின் விபத்து பற்றிய செய்தியைக் கூறுகிறாள். தான் தவறுதலாக அழுததிலிருந்து அந்த மனிதன் சரியாகி அவன் குடும்பத்தோடு சேர்ந்தானா இல்லையா என்று தெரியவில்லை என்ற கவலையோடு சொல்லி முடிக் கிறாள்.

''இதுக்கெல்லாம் நீ ஏன் கவலைப்படறே? எல்லாமே நம்ப அஜாக்ரதைதான். எங்கயாவது விழுந்து அடிபட்டா நாம யாரு என்னன்னு தெரிய வேண்டாமா? எத்தனையோ பேர் அட்ரஸ் தெரியாம அனாதைப் பொணமா இருந்து அப்புறம் கஷ்டப்பட்டு தேடிக் கண்டு பிடிச்சிருக்காங்க. இவ்வளவு ஏன்? எம் மச்சின்ன் ஒரு தடவை ஸ்கூட்டர்லே போயிருக்கான். அவனுடைய பொண்டாட்டியோட தங்கை ஹஸ்பண்டுக்கு ஆக்ஸிடண்ட் ஆயிருக்கு. இவன் அந்த வழியாவே போயிருக்கான். யாரோன்னு நினைச்சு விட்டுட்டான். அடிபட்டு யாரும் கவனிக்காம ரோட்லே யிருந்து கடைசியிலே ஆளே காலி. இதைவிடக் கொடுமை என்னன்னா அவர் பெயரோ அட்ரஸோ எதுவுமே அவர் கிட்டே இல்லை. மார்ச்சுவரியிலே மூணு நாள் கிடந்து, நாலா நாள் அவரைத் தேடி அலைஞ்சு கடைசியிலே கண்டு பிடிச்சாங்க. நமக்கு அசாத்திய நம்பிக்கை நமக்கு எதுவுமே ஆகாதுன்னு. நம்ப நம்பிக்கை நல்லதாகவே இருக்கட்டும். ஆனாலும் இந்த நம்பிக்கை எத்தனை பேரை கஷ்டப்படுத்துதுன்னு தெரிஞ்சா இப்படி கேர்லஸ்ஸா இருக்கத் தோணுமா?''

புவனா பேசப் பேச அவள் கூற்றில் உண்மை இருக்க தலை ஆட்டுகிறாள். ஆனாலும் அப்போது தன் உடலைப் பற்றிய ஞாபகமே அவளுக்கு இல்லை. வேறு ஏதேதோ பேசிவிட்டு கிளம்பி விடுகிறாள். வீட்டிற்கு வந்ததுமே பக்கத்து வீட்டு அம்மாளின் மூலமாக பெண்ணைப் பற்றி தகவல் வர மனம் துடித்துப் போகிறது.

''சுமதி உனக்கு எப்படிச் சொல்றதுன்னு தெரியலே. உம் பெண் கல்யாணம் கட்டிகிச்சே அதுக்கு பக்கத்து வீட்டிலே தான் தம்பி இருக்கான். நான் நேத்து அங்க போயிருந்தேன். உம் பொண்ணைப் பார்த்தேன். அப்



படியே மனசு வறண்டே போச்சு. முழுகாம இருக்கு போலருக்கு. சாக்கடை, கக்கூஸ், கழுவறதுலேந்து, பேங்குக்கு போற வரைக்கும் எல்லா வேலையும் செய் யறா. அவ மாமியார் அவளை திட்டிகிட்டே இருக்காங்க. கன்னமெல்லாம் ஒட்டிப்போய், கண்ணுலே குழி விழுந்து அவ நிறம் கூட மங்கிப்போய், எதுக்கு இந்த மாதிரி ஒரு கல்யாணத்தைக் கட்டிக்கணும். சே! தேவையா? எனக்கு மனசு தாளலை.

அவுங்க மாமியார், மாமனார் வெளியே போனதும் நேரே அவ வீட்டுக்கு போயிட்டேன். என்னைப் பார்த்து கையைப் புடிச்சுகிட்டு அழுவறா. ''தப்பு பண்ணிட்டேன். அம்மா, அப்பாவை அழ வைச்சேன். அதுக்கு அனுபவிக்க வேணாமா? அதுவும் எங்கம்மா ரொம்ப பாவம். தன்னைப்பத்தி நினைக்காம எங்களுக்காக வாழ்ந்தவங்க. இளமை இருக்குங்கற திமிர்லே அவங்களை தூக்கி போட்டேன். இப்ப அனுபவிக்கிறேன். அவங்க மாமியார் ரொம்ப பொல்லாதவங்களாம். சாப்பாடே கொடுக்க மாட்டாங்களாம். ரொம்ப அசிங்கப்படுத்துவாங்களாம். நாள் முழுவதும் வேலை செய்யணுமாம். நான் செய்யும் போது தான் எங்கம்மாவோட அருமை புரியுது. அவங்க எத்தனை செய்திருப்பாங்கன்னு தெரியுது'' சொல்லி விட்டு ரொம்ப அழுதா.''

சுமதி பெருமூச்சு விடுகிறாள். தன்னைத் தூக்கி எறிந்து விட்டுப் போய் விட்டாளே என்று பெண்ணின் மேல் கோபம் இருந்தாலும் பெண் கஷ்டப்படுகிறாள் என்றதும் மனது தவித்தது. அழுதது. எல்லாம் விதி. யார் தலை எழுத்தையும் யாராலும் மாற்ற முடியாது. பட வேண் டியதை பட்டுத்தான் தீர வேண்டும். மீண்டும் மனம் பாரமானது. துக்கம் நெஞ்சை அடைத்தது. கணவனிடம்

சொல்லி அழ வேண்டும் என்று மனம் துடித்தது. ஆனால் அந்த வெற்றுக் கணவனால் என்ன பிரயோசனம்? துன்பம் வரும்போது மறந்து போய் கூடத் தோள் கொடுக்காத ஒரு மனிதன் தன் இளைய மகன் வந்ததும் தாங்க முடியாமல் கொட்டி விடுகிறாள்.

''ஏண்டா எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கணும்? நான் என்ன தப்பு பண்ணேன்? குடும்பத்தைக் காப்பாத்த நாய் மாதிரி உழைச்சேன். எனக்குத் தெரிந்து யார் வாழ்க்கையையும் கெடுக்கலே. யாருக்கும் துரோகம் பண்ணலே. எல்லோருக்கும் அடங்கிப் போய்தான் வாழ்ந்திருக்கேன். எனக்கு ஏண்டா இப்படி வரணும்? கடவுளுக்கு எம்மேல என்ன பகை?'' குமுறி, குமுறி அழுகிறாள்.

''மனுஷன் பண்றதுக்கு கடவுள் என்னம்மா பண்ணுவார். இதையெல்லாம் பார்த்தவுடனே நான் முடிவு பண்ணிட்டேம்மா. நான் சாமியாரா போகலாமா வேணாமான்னு யோசனையிலே இருந்தேன். இப்ப டிசைட் பண்ணிட்டேன். நான் கட்டாயம் சாமியாராகத்தான் போகப் போகிறேன்'' என்று சொன்னவன் தான் சேரப் போகும் ஆசிரமத்தின் பெயரைச் சொன்னதும் விக்கித்துப் போகிறாள் சுமதி.



# 19

''என்னடா இப்படி எல்லாம் பேசறே? எல்லாத்தையும் விட்டு சாமியாரா போகப் போறியா? அப்படி என்ன கஷ்டம் வந்திடுச்சு.''



''எல்லாமே மாயைதாம்மா. இந்த சம்சார பந்தம்ங்கறது ரொம்ப மோசமான பந்தம். நல்லா யோசிச்சுப் பாரு. உன் கஷ்டத்துக்கு காரணம் என்ன? பொருந்தாத கல்யாணம். பொறுப்பில்லாத கணவன். ரேகா வீட்டை விட்டு ஓடினதுக்குக் காரணம் என்ன? அதுக்குக் கல்யாணம் தான் காரணம். இத்தனை கஷ்டப்படறான்னு அழுதியே. அதுக்கும் இந்த குடும்ப வாழ்க்கைதான் காரணம். இத்தனை ஏன்? அண்ணன் வீட்டை விட்டுப் போயிட்டானே அதுக்கும் காரணம் அவன் பொண்டாட்டிதான். ஸோ குடும்பம்தாம்மா எல்லா கஷ்டத்துக்கும் காரணம்மா.''

''அப்படி இல்லேடா. குடும்பங்கறது அழகான அமைப்புடா, அது சரியா வரலைன்னா தான் பிராப்ளம்.''

''நீ அண்ணனுக்கு நீயா பாத்த கல்யாணமும் நல்லா இல்லே.''

அக்கா அவளுக்குன்னு பார்த்துகிட்டே வாழ்க்கையும் நல்லா இல்லே.''

நல்லா வரும்னு என்ன கேரண்டீ சொல்லு.''

''அப்படி இல்லேடா, எத்தனையோ பேர் அற்புதமா நல்லா வாழ்ந்துட்டு அடுத்தவங்களையும் வாழ வச்சுகிட்டு இருக்காங்க.''

''இல்லேம்மா நீ சொல்றது எல்லாம் அந்த காலமா இருக்கலாம். இந்த காலத்துலே இரண்டு பக்கமும் எதிர்பார்ப்புகள் ஏராளம். ஒரு சின்ன எதிர்பார்ப்பு நிறைவேறலேன்னா வாழ்க்கையே வீணாக்கிகிட்டு பிரிஞ்சு போறாங்க. இந்தக் காலத்துலே சகிப்புத் தன்மையே குறைஞ்சு போச்சு.''

''அப்படி எல்லாம் இல்லேடா. பொருளாதாரத்துலே ஆணுக்கு ஈக்குவலா பெண்ணும் இருக்கா. அவளை அசிங்கப்படுத்தினாலோ அவமானப்படுத்தினாலோ அவளால தாங்க முடியறதில்லே.''

''அம்மா இந்தக் காலத்துலே பெண் மட்டுமில்லேம்மா ஆணும் எத்தனையோ விதங்கள்ளே அசிங்கப்படுத் தப்படறான். அதுக்கு தான் இந்த சம்சார பந்தமே வேண் டாம்னு முடிவு பண்ணிட்டேன். சுவாமி மதுநந்தாவோட ஸ்பீச் கேட்டதுலேர்ந்து மனது ஒரு நிலையிலே இல்லே. அவரு ஆஸ்ரமத்துலே போய் சேரணும்.''

''என்னடா உளர்றே? அந்த ஆஸ்ரமத்தை பத்தி தப்பு தப்பா நியூஸ் வருது. அந்த சுவாமிஜி ஒழுங்கு இல் லேன்னு எல்லா பத்திரிகையிலும் எழுதி இருக்கான். அவர் கிட்டயா போகப் போறே?''

''அட போம்மா பத்திரிகையிலே வரது எல்லாம் நிஜம்னு நினைக்கறியா? வேண்டியவன்னா தூக்கிப் பேசி எழுதுவாங்க. வேண்டாதவங்கன்னா போட்டு மிதிச்சிடு வாங்க.''

''சும்மா சகட்டு மேனிக்கு எல்லாரையும் குத்தம் சொல்லாதே. எல்லா பத்திரிகைக்கும் அவர் மேலே என்ன காழ்ப்பு உணர்ச்சி. உண்மையிலே அவர் நடவடிக்கை எதுவும் சரியில்லேடா. திருமணத்துலே ஏமாறக்கூடா துன்னு சொல்லிட்டு, இதுலே ஏமாந்துடப் போறே. தயவு செய்து வேண்டாம்டா.''

''அம்மா சும்மா ஒருத்தரைப் பத்தி தப்பா பேசாதே. அவர் உபதேசங்களைக் கேட்டு இருக்கியா? எத்தனை அருமையா இருக்கும் தெரியுமா?''



''உபதேசம் செய்யறது சுலபம்டா'' அம்மா சொல்லச் சொல்ல,

''அம்மா ப்ளீஸ் என்னை என் போக்கிலே விட்டுடு'' பிள்ளை கூறக் கூறக் கண் கலங்கி அழுகிறாள் சுமதி.

''இது என்னடா பைத்தியக்காரத்தனம்? நல்ல வேலைல சேருவே நல்லா சம்பாதிப்பே, நீயாவது நல்லா வரணும்னு நினைச்சேன். உனக்கு ஏண்டா இப்படி புத்தி போவுது.''

அதற்குமேல் ராஜ் எதுவும் பேசவில்லை. பதில் பேசாமல் எழுந்து போகிறான்.

அன்றையிலிருந்து ராஜ் தினமும் நேரம் கழித்து வரு கிறான். கேட்டால் காலேஜில் ஏதோ மீட்டிங் அது, இது என்று சொல்லுகிறான். சில நாட்களில் வந்தால் இரவு சாப்பாடு சாப்பிடுவதில்லை. திடீரென்று ஒரு நாள் காவி வேஷ்டி காவி சட்டை அணியத் தொடங்கினான்.

''இது என்னடா வேஷம்?'' சுமதி அங்கலாய்த்தபோது,

''இது வேஷம் இல்லைம்மா. இதுதான் நிரந்தரம்'' சுமதி கலங்குகிறாள்.

அடுத்த ஒரு வாரத்தில் அவன் பின்னும் நேரம் கழித்து வருகிறான். ஒரு நாள் இரவு வரவே இல்லை. சுமதி தவித்துப் போகிறாள். கணவனிடம் சென்று முட்டி மோதுகிறாள்.

''என்னங்க... என்ன விஷயம்னு பாருங்களேன்?''

''ச்சு... சும்மா கிட. உம் அருமைப்பிள்ளை எங்கி யாவது ஊரைச் சுத்திட்டு வருவான்.'' அவன் அதட்ட சுமதி துவண்டு போகிறாள்.

அடுத்த நாள் பிள்ளை விடியற்காலையில் வருகிறான்.

''என்னடா இது? எங்கே போய்ட்டே? நாங்க எல்லாம் தவிச்சுப் போயிட்டோம் தெரியுமா?''

''எல்லாமே பரப்பிரம்மனின் செயல்.'' சுமதி பெருமூச்சு விடுகிறாள்.

அன்று பிள்ளை கல்லூரிக்குச் செல்லும்போது பிள்ளையிடம் கெஞ்சுகிறாள்.

''இத பாருடா, நேரத்துக்கு வந்துடுடா. அம்மாவை கலங்கடிக்காதே.''

''கவலைப்படாதே தாயே. இன்னும் எமக்கு உத்தரவு கிடைக்கவில்லை.'' என்று சொல்லிவிட்டு பிள்ளை நகர, சுமதி விழிக்கிறாள்.

இத்தனை களேபரங்களில் தன் உடல்நிலை பற்றிய சிந்தனை சுமதிக்கு முற்றிலுமாக ஒழிந்தது.

ஒரு வாரம் வரைக்கும் நல்ல பையனாக நேரத்துக்கு வந்து விடுகிறான். ஆனால் அவனிடம் ஒரு பெரிய மாற்றம் என்னவென்றால் மாலை வந்ததும் குளித்து விட்டு ஒரு மணி நேரம் போல் பூசையில் இறங்கி விடு கிறான். காலையிலும் அப்படித்தான். சுமதி முதலில் அவன் மாற்றத்தை நினைத்துக் கவலைப்பட்டாலும், நல்ல விஷயம்தானே என்று மனதை தேற்றிக் கொள் கிறாள்.

அடுத்த வாரம் வழக்கப்படி ராஜ் ஒரு நாள் வரவில்லை. பிள்ளை மறுநாள் வந்து விடுவான் என்று நம்பிக்கை யோடு காத்திருந்தாள். மறுநாளும் வரவில்லை. அதற்கு அடுத்த நாளும் வரவில்லை. மனம் குடைய ஆரம் பித்தது. கணவனிடம் புலம்ப ஆரம்பிக்கிறாள்.



''வாயை மூடு'' என்று கணவன் வழக்கப்படி வாய் மேல் போட அழுகை வருகிறது. பிள்ளை என்ன வானான்?

நான்கு நாட்கள் கழித்து பிள்ளையின் நண்பன் வருகிறான். ''அம்மா ராஜ் காலேஜுக்கும் வரலை. சுவாமி மது நந்தாவோட ஆஸ்ரமத்துலே போய் சேர்த்துட்டான்மா. அந்த ஆள் ஒரு பெரிய பிராட்மா. விஷயம் தெரிஞ்சு நாங்க பிரண்ட்ஸா போய் எத்தனையோ கெஞ்சிப் பார்த் தோம். அவன் கேக்கலைம்மா. தலையெல்லாம் மொட்டை அடிச்சுகிட்டு காவி உடுத்திகிட்டு பாதியா இருக்கான். அதான் உங்ககிட்டே சொல்லிட்டுப் போகலாம்னு வந்தோம்.''

சுமதி துடித்து விடுகிறாள். ''எங்கே இருக்குப்பா அந்த ஆசிரமம்? நீ எனக்கு சொல்லு. அவனைப் போய் எப்படி யாவது கூப்பிட்டுகிட்டு வந்துடறேன். இன்னும் ஒரு வருஷம் படிப்பு இருக்கு. இப்படியா நடந்துப்பான். படிப்பை பாதியிலே நிறுத்தலாமா?'' அழுகிறாள்.

அன்று கணவனிடம் சண்டை போட்டு ஒத்துக் கொள்ள வைத்து, அவனையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு போய் ஆசிரமத்தின் வாசலில் நிற்கிறாள். சிறிது நேரம் காத்திருந்தார்கள். தங்களைப் போல் இன்னும் சிலரும் அங்கே நிற்பது தெரிந்தது. நிறைய இளைஞர்கள் மொட்டை அடித்துக் கொண்டு காவி உடை அணிந்து இங்கும் அங்கும் போய் வந்தார்கள். சுமதி பதைபதைப் புடன் நின்றிருந்தாள். தியாகு எரிச்சலுடன் நின்றிருந்தான்.

பலமுறை வாயிலில் இருப்பவர்களிடம் எல்லாம் சொல்லி அனுப்பி கடைசியில் வந்தான் அவளின் அருமை மகன். மொட்டைத் தலை காவி உடை நான்கு நாட்களில்

சருகாகிப் போன உடல் மலங்க மலங்க விழிக்கும் பார்வை - பிள்ளையைப் பார்த்ததும் அடி வயிறு கலங்க ஓவென்று அழுகிறாள் சுமதி.

''ஓம் சாந்தி...'' என்றவன் ஏதோ ஒரு ஸ்லோகத்தை சொல்லி அம்மாவை தேற்றுகிறான்.

''என்னடா இதெல்லாம்? இன்னும் ஒரு வருஷம் படிப்பு இருக்கு. காலேஜை கட் பண்ணிட்டு யாராவது இப்படி செய்வாங்களா? வாடா வீட்டுக்கு வாடா.''

''அம்மா நீ தாய், அதுனால பதில் சொல்றேன். இந்த உலகம் ஒரு மாயை. இந்த உடலும் ஒரு மாயை. இந்த உடலை பெரிசா நினைக்கறதுனாலேதான் நான், நீங்கற போட்டியே உண்டாகுது. யோசிச்சுப் பார்த்தா இந்த அண்டத்துலே நாம அணுவிலும் அணு. புரிந்தால் எந்தக் குழப்பமும் இருக்காது.''

''டேய் ராஜ் போதும்டா. அம்மா நிறைய பட்டுட் டேண்டா'' சுமதி சொல்லி அழ தியாகு வெறித்தபடி மகனையே பார்க்கிறான்.

''அன்னையே நீயும் அந்த ஈஸ்வரியின் சொரூபம் தானே. முடிவில் இந்த உயிரினங்கள் அனைத்தும் அவளிடம்தானே சேரப் போகிறது. ஆட்டுவிப்பவரும் அவள்தானே. என்னமோ நாம் தான் எல்லாவற்றையும் காப்பாற்றுவது போல் ஏன் பேச வேண்டும்?''

''டேய் நிறுத்துடா. இப்ப வரப்போறியா இல்லையா?'' சுமதி கத்த,

''அன்னையே என் பாதை மாறி விட்டது. புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் செல்லலாம்.''



சுமதி வெறி பிடித்தவள் போலானாள். ''உன் பாதை வேறா. வாடா போகலாம்'' பிள்ளையின் கையைப் பற்றி வலுக்கட்டாயமாக இழுக்க, இதற்குள் ஆசிரமத்தில் இருந்த மற்றவர்கள் எல்லாம் ஓடி வந்தனர்.

''போம்மா போ. பிள்ளை நல்ல நிலைமைக்கு போயிருக்கான்னு பெருமைப் படுவியா? அவனை தடுத்து குட்டிச் சுவராக்குவியா? போம்மா.''

பிடித்துத் தள்ளியதில் சற்று தூரம் போய் விழுகிறாள். தியாகு ஒரு நிமிடம் அவளைத் தாங்கிப் பிடிக்கிறான். பிறகு ''வா போகலாம்'' முரட்டுத்தனமாக அவள் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு செல்கிறான்.

''என்னங்க சொல்றீங்க. நம் குழந்தைங்க. கூப்பிடுங்க. இன்னும் ஒரு வருஷ படிப்பு இருக்குங்க. முடிச்சா நல்ல வேலை கிடைக்கும். கூப்பிடுங்க, கூப்பிடுங்க'' கத்திய வள் மயங்கி விழுகிறாள்.

சுமதி கண் விழித்துப் பார்த்தபோது தன் வீட்டுப் படுக் கையில் படுத்து இருக்கிறாள்.

பக்கத்து வீட்டு மாமி கையைப் பிடித்துக் கொள்கிறாள்.

''என்னாச்சும்மா. நானே ஒரே பயந்துட்டேன். நீ கண் முழிக்கலையேன்னு கவலைப்பட்டுகிட்டு இருந்தேன். உங்க வீட்டுக்காரருக்கு ஏதோ முக்கியமான வேலையாம். உன்னை பாத்துக்க சொல்லிட்டுப் போயிட்டாரு. ஒண்ணு மில்லை. சாதாரண மயக்கம்னு சொன்னாரு. இந்தா முதல்லே இந்த பாலைக் குடி.''

''இல்லேம்மா எனக்கு ஒண்ணும் வேண்டாம்'' மக னின் நினைவில் கண்கள் குளமாக அழுகிறாள் சுமதி.

"இத பாரு சுமதி கவலை இருக்கட்டும். அதுக்காக வயிற்றை பட்டினி போடுவானேன். யாரோ செய்த தப்புக்கு உன்னை நீ தண்டிச்சுப்பானேன். முதல்லே சாப்பிடு" ஊட்டாத குறையாக பாலைக் கொடுக்கிறாள்.

"போதும் மாமி."

"முதல்ல குடி."

அவசரம், அவசரமாக நான்கு இட்லிகளையும், சட்னியையும் எடுத்து வந்து "சாப்பிடு" என்கிறாள்.

"வேண்டாம் மாமி."

"சாப்பிட்டுத்தான் ஆகணும்" மாமி இட்லிகளையும் ஊட்ட ஆரம்பிக்க,

"வேண்டாம் மாமி நானே சாப்பிடுகிறேன்" என்கிறாள்.

ஒரு வழியாக சாப்பிட்டு முடித்தபோது ஆயாசமாக வந்தது. சாய்ந்து படுத்து கண்களை மூடி மூடித் திறக்கிறாள்.

"நீ பேசாம தூங்கு. நான் இங்கேதான் இருக்கேன்."

சுமதிக்கு மறுபடியும் அழுகை வந்தது. அருகில் இருந்து பார்த்துக் கொள்ள வேண்டிய கணவன் எங்கோ ஊர் சுற்றப் போய் விட்டார். ஆனால் எந்த சொந்தமுமில்லாத பக்கத்து வீட்டு மாமி தன்னை விழுந்து விழுந்து கவனிக்கிறாள்.

"த பாரும்மா... வருத்தப்படாதே. எது நடக்குமோ அது நடந்துதான் ஆகும். வாழ்க்கை இப்படித்தான்."

யார் வாழ்க்கை எப்படியோ தன் வாழ்க்கை இப்படித்தான். மனம் மருள படுத்தபடியே வெறித்துப் பார்க்கிறாள்.



தன் பிள்ளைகள் எல்லோருமேவா இப்படி ஆக வேண்டும்? பெண் எவனையோ காதலித்து திருமணம் செய்து கொண்டு இப்போது கஷ்டப்படுகிறாள். ஒரு பிள்ளை சாமியாராகப் போய் விட்டது. இன்னொரு பிள்ளை அவன் எப்படி இருப்பான்? மிக மிக நன்றாகத்தான் இருப்பான். அவன் தான் மாமியார் வீட்டோடு போய் விட்டானே. பேரக் குழந்தை அவனைப் பார்த்தும் மூன்று மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது. பேரன் எப்படி இருக்கிறானோ?"

அங்கே முதல் மகனும் அவனுடைய மனைவியும் கையைப் பிசைந்து கொண்டிருக்கிறார்கள். இருவருமே இன்று அலுவலகத்திற்கு விடுமுறை எழுதிக் கொடுத்தாகி விட்டது. குழந்தை ஜீவாவை மடியில் இருத்திய வாறே எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறாள் முதல் மருமகள் விமலா. குருவும் அவள் அருகில் அமர்ந்தபடி ஏதோ யோசனையில் ஆழ்ந்திருக்கிறான். விமலாவிற்கும் எரிச்சல் தாங்க முடியாமல் வந்தது. 'சே! இவளெல்லாம் ஒரு அம்மா' என்று தன் அம்மாவை வைதது. தான் மடத்தனம் செய்து விட்டோம். மாமியாரிடம் சற்று சுமூகமாகப் போயிருக்கலாமோ. மனம் நினைத்தது.

மாமியார் வீட்டில் இருக்கும்வரை வீட்டு வாடகை கிடையாது. சாப்பாடு ப்ரீ. ஒரு வேலை கிடையாது. மாலை அலுவலகம் முடிந்து வந்தவுடனே மாமியார் கையில் காபியைக் கொண்டு வந்து தருவாள். பிள்ளையை அவள் தான் பார்த்துக் கொண்டிருந்தாள். பாட்டியை மறக்கவே பிள்ளைக்கு இரண்டு மாதம் ஆனது. ஆனால் தன் பிறந்த வீடு? பெருமூச்சு விடுகிறாள். மாமியாரிடம் சண்டை போட்டு, "அம்மா இனிமே நாங்க இங்கதான் இருக்கப்

போறோம். அம்மாவும் வந்து மாமியார் பிள்ளையை அடித்ததை சொல்லி அழுதுவிட்டு தான் பிறந்த வீட்டிலேயே இருக்கிறேன்'' என்று ஆரம்பித்தபோதே அம்மா நறுக்குத் தெறித்தாற்போல் பேசி விடுகிறாள்.

''தாராளமா வாயேன். மாடிப்போர்ஷன் காலியாதான் இருக்கு. அதுல நீ இருந்துக்க. குழந்தையை நான் பார்த் துக்கறேன். உங்கண்ணன் குழந்தைங்க இல்லையா. அதுங்களோட இதுவும் இருந்துட்டுப் போகட்டும். அண்ணனின் பெரிய குழந்தைக்கு மூன்று வயதும் சிறியவ னுக்கு ஒண்ணரை வயதும் ஆகிறது. தன் குழந்தையும் அவர்களோடு ஒத்துப் போகும் என்று சந்தோஷப்பட்டு அன்றே சாமான்களை எடுத்துக் கொண்டு அம்மா வீட்டிற்கு வந்து விடுகிறாள். ஒரு இரண்டு நாட்கள் போன தும் அம்மா மாடி போர்ஷனை சுத்தப்படுத்திக் கொடுத்து, சாமான்களை எல்லாம் அங்கே வைத்துவிட்டு, பெண் பாலைக் காய்ச்சியதும்,

''ஆமா எத்தனை வாடகை கொடுப்பே?'' கேட்கிறாள்.



# 20

''**எ**ன்னம்மா?''

''என்னடி என்னம்மான்னா என்ன அர்த்தம். வெளி ஆள்னா இரண்டாயிரத்து ஐநூறுக்கு கொடுப்பேன். நீ



பொண்ணு அதுனால ரெண்டாயிரம் கொடு. அட்வான்ஸ் ரொம்ப வேண்டாம். ஒரு ரெண்டு மாச அட்வான்ஸ் கொடு போதும்.''

திருடனுக்கு தேள் கொட்டியதுபோல் ஆனது. தன் மாமியாரை சாடு சாடு என்று சாடியதைப் போல் அம்மாவைப் பேச முடியவில்லை. அன்று அம்மாவின் வீட்டில்தான் அனைவருக்கும் சாப்பாடு. சாமானை ஒழித்து வைத்தது, வீட்டை சரி செய்ததில் இடுப்பு விட்டுப் போயிற்று. அடுத்த நாள் எழுந்து கொள்ளும் போது ரொம்ப லேட்டாகத்தான் எழுந்திருக்கிறாள்.

குழந்தை அழவேதான் தூக்கம் விழித்தது. சட்டென்று விழித்துக் கொண்டு ஏதோ ஞாபகமாக 'அத்தை' என்று குரல் கொடுக்கிறாள். தன் புகுந்த வீட்டில் இருந்தால் குழந்தை லேசாக சிணுங்கும்போதே, அத்தை ஓடி வருவாள். குழந்தை ஒரு பால் ஊட்டி, குளிப்பாட்டி உடை மாற்றி எல்லாவற்றையும் செய்துவிட்டு, டிபன், காபி ரெடி பண்ணிட்டு வெந்நீர் போட்டுவிட்டுத்தான் மருமகளுக்கு குரல் கொடுப்பாள் மாமியார்.

''பத்து நிமிஷம் தூங்கினா உங்கம்மாவுக்கு ஆகாதே'' என்று முணு முணுத்தபடி, எரிந்து விழுந்தபடி எழுந்திருப் பாள் விமலா. இன்றும் 'அத்தை' என்று பல்லைக் கடித்தபடி குரல் கொடுக்கிறாள்.

''ஏங்க எழுந்திரிங்க. உங்கம்மாவுக்கு என்ன கேடு? ஏன் எழுந்திருக்கலை?'' என்று புருஷனை உலுக்கும்போது கீழிருந்து குரல் கேட்டது.

அவளைப் பெற்றவள் தான் கூப்பிடுகிறாள்.

''விமலா.. ஏய் விமலா'' கத்துகிறாள். பின் கதவு தட தடவென்று இடிக்கும் சப்தம் கேட்டு விமலா பதைத்துப்

போய் எழுந்து போகிறாள். மாமியார் வீட்டில் தான் இல்லையா?''

''என்னடி மணி எட்டரை ஆவுது. சாதாரணமாக எட்டே முக்காலுக்கு எல்லாம் ஆபீசுக்குப் போயிடுவே இல்லே. என்ன ஆச்சு உனக்கு?'' கத்துகிறாள் அம்மா.

''இல்லேம்மா சாமானை எல்லாம் எடுத்து வச்சேன். இல்லே ஒரே டயர்ட். அதான் எழுந்துக்க முடியலே.'' குழந்தை வேறு வீல் வீலென்று அலற ''என்னடி குழந்தை வேறு அலறுது.''

''அதுக்குப் பசிம்மா பால் கலக்கணும்.''

''இந்தா தினமும் இரண்டு பால் பாக்கெட்டை போடச் சொல்லி இருக்கேன். காய்ச்சி பிள்ளைக்கு கொடுத்துட்டு கிளம்பற வழியைப் பாரு.''

அம்மா செய்வாள் என்று நினைத்தவள் சிறிது விழிக்கிறாள். பிள்ளை இன்னும் பெருங்குரலெடுத்து அழ, அவசரம் அவசரமாக உள்ளே சென்று சிறிது பாலைக் காய்ச்சி ஆற வைத்து கொடுப்பதற்குள் கை, கால் நடுங்கியது.

''விமலா... ஏய் விமலா'' புருஷன் வேறு கத்துகிறான். ''சீக்கிரம் பாலைக் கொண்டா'' அந்த வீட்டில் இருக்கும் வரைக்கும் 'விம்மி விம்மி' என்று பம்மியபடி கூப்பிடுபவன், எப்படி எல்லாம் பேசுகிறான். அதற்குள் குழந்தை கத்தி கதறி, வீல் வீலென்று கூச்சல் இட, கை கால் நடுங்க பாலை சுட வைத்து குழந்தைக்கு ஊட்டுவதற்குள் போதும் போதும் என்று ஆனது. மணி எட்டரை ஆனதும் வங்கிக்கு கிளம்ப முயற்சிக்கிறாள்.



''இன்னிக்கு ஒண்ணுமே செய்யலை. நாம ஹோட்டல்லே சாப்பிட்டுடுவோம்.''

புருஷன் எரிச்சலோடு தலை ஆட்ட, அவசரம் அவசரமாக குளித்து உடை மாற்றி குழந்தையை எடுத்த வாறே அம்மாவிடம் வருகிறாள்.

''அம்மா கொஞ்சம் கவனிச்சுக்கங்க.'' குழந்தையை கொடுத்தபோது,

''என்னடி குழந்தையைக் குளிப்பாட்டலையா. டிரஸ் எடுத்து வச்சிட்டு போ. பாலைக் காய்ச்சி கொடுத்துட்டு போ. குழந்தைக்கு என்னென்ன கொடுக்கணும். எல்லாத் தையும் வச்சிட்டுப் போ.''

விமலா அசந்து போகிறாள். தன் அண்ணன் பிள்ளைகளைப் பார்த்துக் கொள்கிறார்கள். கூடவே தன் பிள்ளைகளையும் பார்த்துக் கொள்ள மாட்டாளா? அம்மா ரொம்ப ஸ்டிரிக்ட் என்று தெரியும். இருந்தாலும் சின்ன குழந்தைக்கு உணவு கொடுப்பதில் கூட இத்தனை கெடுபிடியாக இருப்பார் என்று தெரியாது.

''சாரிம்மா இன்னிக்கு ஒண்ணும் ரெடி பண்ணலை. நாளையிலேர்ந்து எல்லாம் ரெடி பண்ணி கொடுத்துட்டுப் போறேன்'' அம்மா பதில் பேசாமல் குழந்தையைத் தூக்கியபடி செல்கிறாள்.

அடுத்த நாளிலிருந்து, விடியற்காலையில் எழுந்து பாலைக் காய்ச்சி, டிபன் சாப்பாடு ரெண்டும் செய்து, குழந்தைக்கு வேண்டியவைகளையும் கொடுத்துவிட்டு ஓடுகிறாள் விமலா. மாமியார் வீட்டு சுகம் இப்போதுதான் புரிந்தது. மாய்ந்து மாய்ந்து வேலை செய்பவளை தான் எப்படி எல்லாம் மிரட்டி இருக்கிறோம். நான்கு நாட்

களிலேயே உடல் சோர்ந்து போனது. மாலை பெண் எப்போது வருவாள் என்று காத்திருந்து பேரனை விட்டு வருவாள் விமலாவின் தாயார்.

''மருமக... மருமகன்னு துடிச்சுகிட்டு எல்லா வேலையையும் தன் தலைல போட்டுகிட்ட உங்க தங்கையோட மாமியாரா உங்கம்மா. எல்லாத்துக்கும் கணக்கு. இத்தனை நேரத்துக்கு மேலே குழந்தையை பாத்துக்க மாட்டேன்னு ஒரே ஆட்டம். என்னிக்காவது ஒரு வார்த்தை கேட்டிருக்கீங்களா? அங்க பாருங்க உங்க தங்கை புருஷனை. அத்தனை பாடு பட்டதாலையே தூக்கிப் போட்டுட்டாரு. அவுங்க பக்கத்து வீட்டு அம்மா வந்து இதை கதையா சொன்னாங்க. எனக்கும் வந்து வாச்சிருக்கு பாரு. என்னிக்காவது ஒரு நாள் உங்கம்மாவை நிக்க வச்சு கேள்வி கேட்டிருக்கீங்களா?''

பெண்டாட்டி கத்த, கத்த ''உம் பேசாம இரு'' என் கிறான் விமலாவின் அண்ணன். குழந்தையைத் தூக்கிக் கொண்டு மாடியேறிய விமலா, விமலாவின் கணவனுக்கு இது காதில் விழுந்து முகமே மாறிப் போனது. முதன் முறையாக குருவிற்கு தன் தவறு புரிந்தது. வாயில்லா பூச்சி தன் அம்மா. அவளை காலில் போட்டு நசுக்காத குறையாக நசுக்கியது பாவம்.

அடுத்த நாள் மாலை 'குழந்தையை எடுத்துகிட்டு போ.' அம்மா கூற வெடிக்கிறாள் விமலா.

''என்னம்மா வரும்போதே பறக்கறே? எங்க மாமியார் ஒரு நாள் கூட பாத்துக்கன்னு சொன்னதில்லே. நீங்க இத்தனை மட்டமா இருக்கீங்க.''

''நிறுத்துடீ. என்னவோ மாமியார் பெருமையைப் பேசறே? பின்னே ஏன் அந்த வீட்டை விட்டு வந்தே.''



''புத்தியில்லாமதான்'' என்று சற்று கடுப்பாக விமலா கூற,

''காலைலேந்து நீ வர்றவரைக்கும் குழந்தையைப் பார்த்துக்கிறோமே, அதுக்கே நீ கால்ல விழணும். என்னை உம்மாமியார் மாதிரி கேணக்கிறுக்கின்னு நினைச்சியா? எல்லா வேலையையும் தலைல தூக்கி போடறதுக்கு பதிலாக உன்னை வைக்கற இடத்துலே வச்சிருந்தா இப்படி பேசுவியா?''

விமலாவோட வந்த குருவிற்கு சுருக்கென்று கோபம் வந்தது. தன் வீட்டில் வாடகை இல்லை. ஏதோ தான் வாங்கிப் போடும் சில சாமான்கள்தான். மற்றபடி செலவு என்பது கொஞ்சமும் கிடையாது. ஆனால் இங்கே வந்ததிலிருந்து எல்லாமே தனி செலவுதான். பத்து நாட்களில் தன் சம்பளம் பாதி கரைந்தது போன்ற ஒரு உணர்வு. மனம் வெறுத்துப் போனது.

''எங்கம்மாவைப் பற்றி யாரும் பேச வேணாம்...'' சற்று கோபமாகக் கூறிவிட்டு உள்ளே நுழைந்தான் குரு. அன்று முழுவதும் அம்மா பேசவில்லை. அடுத்த நாளும் குழந்தையை கொண்டு போய் விட்டபோது முகத்தை சுளித்துக் கொண்டாள். விமலாதான் பணிந்து போக வேண்டியது இருந்தது. அன்று மாலை திரும்பும்போது குழந்தை வீல் வீலென்று அழுதது. விமலாவின் எதிரிலேயே அம்மா பேரனின் கன்னத்தை அழுத்தமாகக் கிள்ளிக் கொண்டிருந்தாள்.

''அம்மா என்ன இது?'' விமலா கொதித்துப் போய் கேட்க,

''குழந்தையா பெத்து வச்சிருக்கே. ரொம்ப துஷ்டை. எல்லாரையும் அடிக்குது, கடிக்குது, சாமானை தூக்கிப்

போடுது. இதை கவனிக்கறதுக்குள்ளே போதும் போதும்னு ஆயிடுச்சு.''

விமலாவிற்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது. "அம்மா போதும் உங்களை மாதிரி ஒரு பொம்பளையைப் பார்த்ததே இல்லே. சொந்த பேரனை கவனிக்க யாராவது கணக்குப் பார்ப்பாங்களா?''

''உன்னை மாதிரி பொண்ணைக்கூட நான் பார்த்த தில்லே. வயசான அம்மாவை பிள்ளையை பாத்துக்க விட்டுட்டு யாராவது போவாங்களா? வயசான அம்மா பாவம்னு என்னிக்காவது நினைச்சிருக்கியா? வறியே என்னிக்காவது இரண்டு பழம் வாங்கிட்டு வந்திருக்கியா? சின்ன வயசுலேந்து உங்களை ஊட்டி ஊட்டி தானே வளர்த்தோம். இப்ப நாங்க சாயும்போது எங்களைத் தாங்க வேண்டாமா? இப்பவும் அத்தனை வேலையையும் எங்க தலைல போட்டுட்டு போனா என்ன அர்த்தம்?'' எகிறி விழுகிறாள்.

கேட்டுக் கொண்டிருந்த விமலாவிற்கு சர்வ நாடியும் ஒடுங்கியது. விமலாவின் குரு வாயடைத்துப் போய் நின்றான். விமலாவின் தாயார் சொல்வது மிக மிக உண்மைதான். வயதானவர்கள் ஓய்வு எடுக்க வேண் டாமா? இத்தனை நாட்கள் உழைத்த கட்டை எப்போது ஓய்வு எடுப்பது? பாவம் அம்மா எத்தனை செய்திருப்பாள். 'அம்மா நீ நன்றாக செய்கிறாய்' என்று புகழ வேண்டாம். அவளைத் தூக்கிப் போடாமல் இருந்திருக்கலாம். குழந்தையை ஒரு அடி அடித்ததற்கு தான் என்னவெல் லாம் பேசினோம். அதே தன் மாமியார் கண் எதிரில் குழந்தையை கிள்ளி எடுக்கிறாள். வாயைத் திறக்க முடியவில்லை. மீண்டும் அம்மாவை நினைத்து அழுகை



வந்தது. பாவம் அம்மா பெண்டாட்டியின் மேல் எரிச் சலும், கோபமும் வந்தது. இவளால் தான் அம்மாவைத் தவறாக நினைத்தேன். அம்மா... அம்மா மனம் முழுவதும் அம்மா நிறைந்து போனாள்.

விமலாவிற்கு இனிமேல் இங்கே இருப்போமா என்ற எண்ணம் தோன்றியது. ஏற்கனவே அண்ணிக்கு அவள் என்றால் இளப்பம்தான். இப்போது அம்மா வேறு மட்டம் தட்ட, தன்னைப் பார்த்தாலே கேலியாகத் தோன்றியது. உதட்டை சுழிப்பதும் கண்ணை உருட்டுவதும் வெளியே தெரியாமல் மௌனமாக உதட்டை அசைத்து திட்டு வதும் எரிச்சலை உண்டாக்கியது. அவமானப்பட்டுக் கொண்டு ஒரு இடத்தில் இருக்க முடியாது. போதும் கிளம்பிவிட வேண்டியதுதான். கணவனிடம் விஷ யத்தைச் சொன்னபோது அவனும் ஆமோதிக்கிறான்.

''எங்கே போவது?''

''வேற எங்கேயாவது வீடு பார்த்துக்கிட்டுப் போயிட லாங்க'' என்கிறாள்.

''சரி கொஞ்சம் பல்லைக் கடிச்சுகிட்டு இரு. நான் இடம் பார்க்கிறேன். கிளம்பிடலாம்'' என்கிறான்.

''நீங்களும் பாருங்க நானும் பார்க்கிறேன்'' என்கிறாள்.

''எவ்வளவு சீக்கிரம் முடியுமோ இங்கிருந்து காலி பண்ணனும்.'' என்கிறாள்.

இப்போதெல்லாம் சுமதிக்கு லேசான மயக்கம் அடிக் கடி வருகிறது. நின்று கொண்டிருக்கும்போதே தலை சுற்றுகிறது. சில நேரங்களில் முடியாமல் அமர்ந்து விடு கிறாள் சுமதி. சில நேரங்களில் முதுகில்கூட வலி எடுக்கிறது. முதலில் சாதாரணமாக ஆரம்பிக்கும் வலி

இருக்க, இருக்க அதிகமாகப் போய் விடுகிறது. கொஞ்ச நேரம் தவித்த பின் வலி சிறிது நேரத்தில் போய் விடுகிறது. இருந்தாலும் அந்த கொஞ்ச நேரத்தில் சுமதி தவித்துப் போகிறாள். தலையணையை முதுகில் அண்ட கொடுத்து படுத்துக் கொள்கிறாள்.

முதலில் வாரத்திற்கு ஒரு தடவை வந்த வலி இப்போது இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை வருகிறது. ஒரு முறை மூச்சை இழுத்தது. நாளுக்கு நாள் ஏதாவது ஒரு வேதனை வர சோர்ந்து போன மனம் போல் உடலும் சோர்ந்தது. தனக்கு என்னாயிற்று?

முதுகு வலி வந்தபின் புவனாவைப் பார்க்காமல் இருந்தாள். சுமதி. வலிப்படுவதற்கும், வேதனைக்குமே நேரம் சரியாக இருக்கிறது. இதில் மனிதர்களை எங்கே போய் பார்ப்பது?

அன்று உடல் சற்று பரவாயில்லை என்று தோன்ற புவனாவின் வீட்டிற்குப் போகிறாள். அவ்வப்போது நினைவுக்கு வரும் கடைசிப் பையனை நினைத்து நினைத்து கண்ணீர் உகுத்து, இப்போது அவனை நினைக்கும்போது நெஞ்சில் வேதனை தான் தோன்றும். வேதனைகூட மறத்துப் போனது. எதுவும் அளவிற்கு அதிகமாகப் போனால் அதற்கு மதிப்பு அவ்வளவுதான்.

புவனாவின் வீட்டினுள் நுழையும்போதே புவனா உற்சாகத்துடன் வரவேற்கிறாள். "வா... வா... வா புவனா ஏம்மா இத்தனை நாட்கள் ஆளையே காணோம்."

"எங்க டாக்டர் வேலையே சரியா இருக்கு. எங்கிருந்து வர்றது?"

"விஷயத்தைக் கேள்விப்பட்டேன். ரொம்ப கஷ்டமா இருந்தது."



"எதுவும் நம்மை கைல இல்லே டாக்டர்."

"உண்மைதாம்மா. அப்படி கட்டாயம் மனசை தேத்திகிட்டு தான் ஆகணும்."

"இதை எளிதா தேத்திக்க முடியுமா டாக்டர்? எத்தனை நினைச்சாலும் நெஞ்சில் வந்து முட்டுது. வருத்தம் தாங்க முடியலே."

"சாமியாரா ஆனா என்ன? தானா தெளியும்போது சரியாகும். அவன் கொஞ்சம் கூட அனுபவமே இல்லாத சின்ன பையன் அனுபவப்பட்டா எல்லாம் சரியாயிடும்."

விரக்தியாக தலை அசைக்கிறாள் சுமதி. "ஆமா வருத்தம் ஒரு பக்கம் இருந்தாலும், உடம்பு எல்லாம் டல்லாக இருக்கற மாதிரி இருக்கே. ஏதோ உனக்கு உடம்பு இருக்கும்னு தோணுது. ஜெனரல் செக்கப்பிற்கு போனியா?" டாக்டர் கேட்க, சுமதி இல்லையென்று தலை அசைக்கிறாள்.

"இல்லையா? உன் வயசு என்ன சுமதி?"

"அம்பத்து நாலு மேடம்."

"அம்பத்து நாலா. பீரியட்ஸ் எல்லாம் நின்னுபோச்சா?"

"மாதவிலக்கு நின்னு போய் இரண்டு வருஷம் ஆகுது."

"செக்கப் எதுக்குமே போகலையா நீ?"

"இல்லியே. நான் நார்மலாத்தான் இருக்கேன்."

"இல்லம்மா நீ தப்பா பண்றே. அம்பது வயசு ஆனாலே நோய் கூப்பிடாமலேயே உடம்புலே வந்து சேரும். வீட்டு விலக்கு நின்னவுடனே கட்டாயம் செக்கப் பண்ணனும். சுகர் இருக்கா, பி.பி. இருக்கா, யூரின்லே உப்பு

இருக்கான்னு பாக்கணும். ரெகுலரா ஐ டெஸ்ட் பண்ணிக் கணும். லேடீஸ் எல்லாம் பேப்ஸ்மியர் டெஸ்ட் கட்டாயம் பண்ணிக்கணும். பிளஸ்ட் செக் பண்ணனும். மெமோ கிராம் எடுக்கணும். வீட்டு விலக்குங்கறது நம்பளை காப் பாத்தற ஒரு விஷயம். அதுலே சுரக்கற ஆர்மோன்தான் பெண்களை காப்பாத்துது. ஒன்ஸ் அதெல்லாம் நின்னு போனப்புறம் வருஷத்திற்கு ஒரு தடவை, அப்படி முடியலேன்னா ரெண்டு வருஷத்துக்கு ஒரு தடவை யாவது செக் பண்ணிக்கணும். ஆரம்பத்திலேயே கண்டு புடிச்சிட்டா எந்த குறையும் நிவர்த்தி பண்ணிடலாம். அப்படி ஒரு குறையுமில்லேன்னாகூட சாப்பாட்டு முறை களையும் உடல் உழைப்பையும் மாற்றி அமைக்கணும். ஓவரா உன்னை போல் உழைக்கக் கூடாது. ரெஸ்ட் எடுக்கணும். பொறித்த பதார்த்தங்களும், ஸ்வீட்டும், ஸேவரியும் சாப்பிடறதை விட பழங்களை நிறைய யூஸ் பண்ணனும். பச்சைக் காய்கறிகளை அதிகம் எடுத்துக் கணும். கீரை அதிகமா சேத்துக்கணும்.'' டாக்டர் புவனா சொல்லச் சொல்ல விம்மி விம்மி அழுகிறாள் சுமதி.



# 21

''என்னம்மா என்னாச்சு? ஏன் அழறே'' புவனா பதறிப்போய் கேட்க,



''டாக்டர் நான் ரொம்ப நாள் இருக்க மாட்டேன்'' அழுது கொண்டே சுமதி கூற,

''என்னம்மா சொல்றே? ஏன் இருக்க மாட்டே? என் னாச்சு?'' - புவனா.

''இல்லை டாக்டர் சில டைம் மயக்கமா வருது. சில சமயம் பொத் பொத்துன்னு கீழே விழறேன்.''

''அதுக்கும் சாகறதுக்கும் என்ன சம்பந்தம்?''

''இல்லை டாக்டர் என் ரைட் பிரெஸ்ட்லே ஏதோ கட்டி மாதிரி இருக்கு.''

''கட்டி மாதிரியா? எப்பலேந்து இருக்கு?''

''ரொம்ப வருஷமா டாக்டர்.''

''ஏன் சொல்லலை?''

''ஒண்ணும் இருக்காதுன்னு நெனச்சேன் டாக்டர்.'

''என்ன இப்படி சொல்றே? இத்தனை நாளா இங்கே வந்துட்டு போறியே எங்கிட்டே சொல்லி இருக்கக் கூடாதா?'' என்றவள், சரி ஒரு நிமிஷம் எங்கூடவா. இரவு நேரத்தில் வீட்டில் நோயாளிகளை பார்ப்பதற்காக இருக் கும் அறைக்கு அழைத்துச் சென்று சோதிக்கிறாள். நிச் சயமா இது கட்டிதான். ஆனா கேன்சரா இல்லையான்னு பார்க்கணும். முதல்லே மெமோகிராம் எடு. எங்க ஹாஸ் பிடல்லேயே லேடீஸ்க்குன்னு எல்லா டெஸ்டையும் குறைவான ரேட்லே போட்டிருக்காங்க. அங்க போய் எடுத்துக்க. எல்லா டெஸ்டையும் செய்துக்க. ரிபோர்ட் டோட என்னை வந்து பாரு'' சொன்னபோது, சுமதி கலங்கிப் போகிறாள்.

''பணம் இருக்கா?''

''ஐயோ வேண்டாம் மேடம் இருக்கு.''

நிறைய டியூஷன் எடுத்து, எடுத்து பணம் சேர்ந்து தான் போனது. பெண், பிள்ளைகள் எல்லோரும் வீட்டை விட்டுப் போயாகி விட்டது. சம்பாதிக்கும் பணத்தை என்ன செய்வது வங்கியில் சேர்த்து வைத்திருந்தாள். கணவனுக்குத் தெரியாது. இல்லையென்றால் பணம், பணம் என்று பிடுங்கி விடுவான். கொடுக்கவில்லை என்றால் அடித்து விட்டுப் போவான். சுமதிக்கு வேதனையாக இருந்தது. இத்தனை உழைத்து, பிள்ளைகளைக் காப்பாற்றி எல்லா வேலைகளையும் தன் தலை மேல் போட்டுக் கொண்டு செய்து என்ன பிரயோசனம்? மாமியார் உடல்நிலை சரி இல்லாதபோதும், ஓடி ஓடி செய்திருக்கிறாள். மாமனாருக்கும் ஓரளவு செய்திருக்கிறார். தன் குடும்பத்திலும் அப்பா கூப்பிட்ட போதும், அம்மா கூப்பிட்ட போதும் ஓடி ஓடி உழைத்திருக்கிறாள். பிள்ளைகளுக்காகவே வாழ்ந்திருக்கிறாள். கணவன் செய்ய வேண்டிய வேலைகளை எல்லாம் தானே தனியாக மாய்ந்து, மாய்ந்து செய்திருக்கிறாள்.

கடைசியில், கடைசியில் நினைக்கையிலே அழுகை பொத்துக் கொண்டு வந்தது. தனக்கு என்று கடவுள் வியாதியைக் கொடுத்து விட்டானே. முகமே சரியில்லை. கணவன் வந்து ஏதோ கேட்பான் என்று நினைத்தால் கணவன் கண்டு கொள்ளவே இல்லை. வழக்கப்படி தன் வயிற்றை ரொப்பிக் கொண்டு பக்கத்து நண்பர்களிடம் அரட்டை அடித்து விட்டு உறங்கப் போய் விட்டான். நெஞ்சு கனமானது.

'ம்... கணவனின் அலட்சியம் கோபப்படுத்தியது. சே! செத்து விடலாம். எதற்காகத்தான் டாக்டரிடம் போக வேண்டும்?' யோசிக்கிறாள். தன்னை அலட்சியப்



படுத்தும் கணவனை தான் ஏன் பொருட்படுத்த வேண்டும்? அடுத்த நாள் டாக்டர் புவனாவின் மருத்துவ மனைக்குச் செல்லுகிறாள். புவனா எழுதிக் கொடுத்தது போல் முழுமையான டெஸ்ட்களை எல்லாம் செய்து கொள்கிறாள். சிறிது நேரம் காத்திருக்கிறாள். அடுத்த நாள் வந்து முடிவுகளை தெரிந்துகொள்ளும்படி கூற சற்று பயத்துடன்தான் செல்கிறாள். எல்லா டெஸ்ட்களும் எடுத்தாகி விட்டது. நாளைக்கு ரிசல்ட் என்ன வரும்? மார்பகப் புற்று நோய் இருக்குமோ என்று இவளுக்கும் சந்தேகம்தான். நினைத்தவுடன் ஏனோ பயம் வந்தது. இவள் உறவினர் சில பேருக்கு வந்து முதலில் சற்று குணமானது போல் தோன்றினாலும், பின் வேறு இடத்தில் பரவி ஆளே முடிந்து போன கதையும் அவளுக்கும் தெரியும். வலி வலி என்று அவர்கள் வலியை அனுபவித்ததும் அவளுக்கு மிக நன்றாகவே தெரியும். 'கடவுளை வேண்டிய அளவு மனதில் வலி பட்டு விட்டேன். உடல் வலியையும் தந்து விடாதே!' மனதார வேண்டிக் கொள்கிறாள்.

அடுத்த நாள் படபடக்கும் இதயத்துடன் அவள் சென்றபோது மார்பகத்தில் புற்று நோய் இருப்பது ஊர்ஜிதம் ஆயிற்று. மற்ற இடங்களிலெல்லாம் எதுவும் இல்லே. இது எதிர்பார்த்ததுதான். இருந்தாலும் இதயத்தின் மூலை வலித்தது. அடுத்த நாள் டாக்டர் புவனாவின் வீட்டிற்குச் சென்று ரிஸல்ட்டைக் காண்பித்தபோது புவனா லேசாக அதிர்வது தெரிந்தது.

''டாக்டர்...''

''என்னம்மா இது கேன்ஸர்னு கன்பர்ம் ஆயிடுச்சே'' என்கிறாள். பிறகு சற்று சிந்தித்தவள், ''இந்த எல்லா

டெஸ்ட்டையும் பண்ணிடு. பேப்ஸ்மியர் டெஸ்டில் எல்லாம் ஒண்ணுமில்லே. மீதி இடங்களிலும் பார்க்கணும். ஹாஸ்ட், போன், வயிற்றையும் ஒரு தடவை ஸ்கேன் பண்ணனும். சி.டி. ஸ்கேன் பண்ணிடு.''

''எதுக்கு டாக்டர்?''

''பிரெஸ்ட்லே மட்டும் இருக்கா? இல்லே மீதி இடமெல்லாம் பரவி இருக்கான்னு பார்க்கணும்.'' சுமதி ஒடிந்து போகிறாள். லேசாக கண்களில் கண்ணீர் மறைக்க எழுந்து கொள்ள முயற்சிக்கிறாள்.

சட்டென்று புவனா அவளை அணைத்துக் கொள்கிறாள்.

''இதபார் சுமதி. இந்த காலத்துலே கேன்ஸர்ங்கறது ஒண்ணுமில்லே. எத்தனையோ பேர் குணமாகி நல்லா ஆயிருக்காங்க. முறையான வைத்தியம் செய்தா எல்லாம் சரியாவிடும். இதுக்கு வேண்டியது தைரியம்தான்.''

''நான் சாகறதுக்கு பயப்படலே டாக்டர். ஆனா வாழ்க்கை முழுவதும் கஷ்டப்பட்ட நான் இப்போதும் ஏன் கஷ்டப்படணும்? என் கடைசி நேரமாவது நான் நல்லபடியாக போய்ச் சேரக்கூடாதா?''

''ஏன் போய்ச் சேர்றதைப் பத்தியே பேசறே? உடம்புன்னா வியாதி வராதா? வந்தா அதை குணப்படுத்திக்க பார்க்கணும். அதை நினைச்சு பயப்படக்கூடாது. தைரியமா இருக்கணும். குணப்படுத்திடலாம். கவலைப்படாதே. நீ போய் நான் சொன்ன ஸ்கேன் எல்லாம் எடுத்துகிட்டு வந்து என்னைப் பார்.''

சுமதி டாக்டர் சொன்னபடியே ஸ்கேன் எல்லாம் எடுத்துக் கொண்டாள். போன் ஸ்கேனுக்கு ஒரு இன்



ஜெக்ஷன் போட்டார்கள். அரை மணி நேரம் கழித்து ஸ்கேன் எடுத்தார்கள். கீழே அப்டாமென் ஸ்கேனுக்கு தண்ணீர் கொஞ்சம் கொஞ்சமாக நிறைய குடித்துவிட்டு வரச் சொல்லிவிட்டு வயிறு தண்ணீரில் நிரம்பிய பின் எடுத்தார்கள். உடம்பு நன்றாக இருக்கும் வரை எந்தப் பிரச்சனையும் இல்லாமல் தான் இருந்தார்கள். உடம்பில் பிரச்சனை என்று வந்தபோது உடல் மட்டுமல்ல மனமும் சோர்ந்து போனது.

இரண்டு நாட்களில் ரிசல்ட் வந்தபோது சுமதி எடுத்துப் பார்க்கிறாள். ஒன்றும் புரியவில்லை. எடுத்துக் கொண்டு வழக்கம்போல் டாக்டர் புவனாவின் வீட்டிற்குச் செல்கிறாள். டாக்டர் புவனா ரிசல்ட்டைப் பார்த்ததும் இடி விழுந்தவள் போல் ஆகிறாள்.

''என்ன டாக்டர்?''

''தைரியமா இரும்மா. பிரெஸ்ட்லேர்ந்து போனுக்கு பரவியிருக்கு.''

டாக்டரையே பார்த்தவாறு இருக்கிறாள் சுமதி. ''நல்லவேளை வேறு எதிலேயும் கேன்ஸர் இல்லை.'' என்றவள் சுமதியின் கூம்பிப் போன முகத்தைத் தடவிக் கொடுக்கிறாள்.

''இப்ப வேண்டியது தைரியம்தான். நாம எதிர்த்து பைட் பண்ணுவோம் சரியாயிடும்.''

''சும்மா எனக்காக சொல்றீங்களா?''

''சீ... சீ... இது நிஜம்மா. இதவிட சீரியஸ் கண்டிஷன்ல இருந்தவங்களை எல்லாம் காப்பாத்தி இருக்கோம்.''

''பிரெஸ்ட் ஆபரேஷன் செய்யணும்.''

''ஆபரேஷனா?'' சுமதி பயந்தபோது,

''என்ன சுமதி... எதுக்கு பயப்படறே? எத்தனையோ பேருக்கு செய்துகிட்டே தான் இருக்காங்க. நீ நாளைக்கே அட்மிட் ஆகிடு. பிளட் டெஸ்ட், யூரின் டெஸ்ட், மோஷன் டெஸ்ட் எல்லாம் எடுத்திடு. உங்க வீட்டுக் காரரை வரச் சொல்லு சுமதி. சுமதிக்கு வருத்தம் தாங்க வில்லை. டாக்டர் முன்னால் தன் பயத்தையும் வெறுப் பையும், காண்பிக்க அவளால் முடியவில்லை.

அன்று வீட்டிற்கு சென்றபோது பக்கத்து வீட்டு மாமிதான் வரவேற்கிறாள்.

''என்ன சுமதி முகமெல்லாம் பேயறைஞ்ச மாதிரி இருக்கு. என்னாச்சு? ஒண்ணுமில்லே மாமி. என்ன விஷயம்.''

''நம்ம பக்கத்து வீட்டு ராஜன் கல்யாணமே வேண் டாம்னு இருந்தானே அவனுக்கு சட்டுனு நிச்சயமா யிடுச்சு. நாளைக்கு நிச்சயதாம்பூலம். பத்திரிகை அடிக்க நேரமில்லையாம். அவுங்க அம்மா, அப்பா ரெண்டு பேரும் வந்து கூப்பிட்டுட்டு போனாங்க. பூட்டின வீட் டுக்கு முன்னாலே ரொம்ப நேரம் நின்னுகிட்டு இருந் தாங்க. நான் சொல்லிக்கிறேன். சொல்லி அனுப்பிச் சேன்.''

''சரி மாமி'' என்றவள் மெதுவாக வீட்டுக்குள் நுழைந்து கதவைச் சாத்துகிறாள். படுக்கையில் கண்களை மூடிப் படுக்கிறாள். சூடான தண்ணீர் முகத்தில் இறங்கி, மார்புக் குள் புகுந்தது. நேற்று வரை திருமணமே வேண்டாம் என்று சொன்ன பையனுக்கு இன்று திருமணம். எல்லோர் வாழ்க்கையில் நல்லது என்பது நடக்கத்தான் நடக்கிறது.



அதே தன் வாழ்வில் ஒன்றுமே இல்லை. எல்லாம் கெடு தல் தான். பெண் ஓடிப் போய் விட்டது. பிள்ளை மாமனார் வீட்டோடு அடைக்கலமாகிவிட்டான். இன்னொருவன் சாமியாராகி விட்டான். கட்டி அணைத்து ஆறுதல் சொல்ல வேண்டிய கணவன் தன் போக்கில் சுற்றிக் கொண்டிருக்கிறான். சரி எல்லாமே ஒழியட்டும் என்றால் தான் வியாதியில் மாட்டிக் கொண்டு இருக்கிறோம். இன்னும் கஷ்டம் ஏதேனும் பாக்கி இருக்கிறதா? ஒரு வேளை இதில் தன் உயிர் போய்விடுமோ. போகட்டும். போதும் இந்த வாழ்க்கை. இதற்குள் டாக்டர் புவனா போன் செய்கிறாள்.

''என்ன மேடம்?''

''உன் ஹஸ்பண்ட்டை வந்து பார்க்கச் சொல்லு.''

''ஓ.கே. டாக்டர்.'' சொல்லும் குரலில் சுரத்து இல்லை.

அப்படியே படுக்கையில் படுத்தவள் அப்படியே உறங்கிப் போகிறாள். இரண்டு மணிக்கு வாசலில் பெல் அடிக்க திடுக்கிட்டு எழுந்திருக்கிறாள்.

''யாரது?''

இன்றுதான் செல்ல வேண்டிய டியூஷனுக்கு கூடச் செல்லவில்லை. ஒரு வேளை அந்த மாணவர்கள் யாரா வது வந்து விட்டார்களா? அவசரம் அவசரமாக கதவைத் திறக்கிறாள். தனக்கு அடுத்தவள், பெரிய பணக்காரனை திருமணம் செய்து கொண்டவள்,

''ஏய் மீனா வாடி.... என்ன திடீர்னு வரப் போறதா ஒரு வார்த்தைகூட சொல்லலை?''

''உனக்கு சர்பிரைஸிங் விசிட் இருக்கணும்னுதான் சொல்லலே.''

''ஆமா நீ ஏன் ஒரு மாதிரி இருக்கே. உடம்பு எல்லாம் இளைச்ச மாதிரி இருக்கு. கண் எல்லாம் கலங்கி இருக்கு. என்னாச்சு?''

தங்கையைப் பார்த்த பின் பொறுக்க முடியாமல் அழுகிறாள்.

விஷயத்தைச் சொல்லச் சொல்ல ஆடிப் போகிறாள்.

''ஏண்டி எங்கிட்டே எல்லாம் சொல்லலே?''

''எனக்கே இப்பதான் தெரியும்.''

அழுத சுமதியை அணைத்துக் கொள்கிறாள்.

''அழாதேடி. அழாதே. நான் நாளைக்கு ஒரு மேரேஜுக்குப் போகணும். இவரை அனுப்பிச்சுடறேன். உன்னை இந்த நிலைமையில் விட்டுட்டு நான் போவேனா?'' மீனா சுமதியை இன்னும் இறுக்கமாக அணைத்துக் கொண்டாள். அவள் கண்களிலும் நீர் முத்துக்கள்.

''ஆமா உங்க ஹஸ்பண்டுக்கு விஷயம் தெரியுமா?'' மீனா கேட்க தெரியாது என்று தலையை ஆட்டுகிறாள்.

''என்னடி இது? அவருக்குச் சொல்ல வேண்டாமா?''

''அவர் வீட்டுக்கு வரும்போதுதான் சொல்ல முடியும்.''

''செல்லிலே காண்டாக்ட் பண்ணேன்.''

''நீ வேணா டிரை பண்ணு.''

மீனா செல்லில் தொடர்பு கொண்டு பார்க்கிறாள். செல்லை அணைத்தே வைத்திருந்தது.

''சே! என்னக்கா இது? எத்தனை தடவை டிரை பண்ணாலும் உங்க வீட்டுக்காரரை காண்டாக்டே பண்ண முடியலே'' என்று அலுத்துக் கொள்கிறாள்.



''சரி ஏதாவது சாப்பிட்டியா?''

காலையில் சுமதி செய்து வைத்திருந்த சாப்பாட்டை ஒரு தட்டில் பிசைந்து வந்து வாயில் ஊட்டாத குறையாக தருகிறாள். தங்கை வந்தது மனதிற்கு இதத்தைக் கொடுத்தது போல் இருந்தது. அம்மாவுக்குத் தெரிஞ்சா அவ்வளவுதான் என்கிறாள் தங்கை. புற்று நோய் பத்தி நிறைய படிச்சிருக்கேன். சாதாரணமா அதுல ரொம்ப குணம் கிடையாதுன்னு சொல்றாங்க.''

''என்னடி சொல்றா? ஆரம்பத்துலே இருந்தா குணப் படுத்திடலாமாம். இல்லைன்னா கொஞ்சம் கஷ்டம்னு சொல்றாங்க. நேத்துகூட ஒரு பேமஸ் டாக்டர். வித்யா ஆஸ்பிடலோட டாக்டர் அவரோட ஸ்பீச்சை மொத்தம் கேட்டேனே.''

சுமதியின் மனம் விழுந்தது. தனக்கு இறுதி முடிவு வந்து விட்டது. தங்கை பொய் சொல்ல மாட்டாள். கணவன் எக்கச்சக்கமாக சம்பாதிப்பவன். தன் தங்கை பொழுது போகாமல் ஒன்று விடாமல் எல்லாவற்றையும் பார்க்கும் ரகம். அவள் சொன்னால் தப்பேனும் இருக்காது.

''அக்கா பேசாம படுத்துக்க. ரொம்ப அசையாதே. டாக்டரைப் பார்ப்போம்.''

இதற்குள் பக்கத்து வீடு. எதிர் வீடு என்று வர எல்லோருடனும் சகஜமாகப் பேச ஆரம்பித்தாள் தங்கை. சிறிது நேரத்திலேயே அக்காவின் உடல்நிலை பற்றி தான் கவலைப் படுவதைப் பற்றி சொல்லிச் சொல்லி அலுத்துப் போகிறாள் தங்கை. ஆக சுமதியின் விஷயம் எல்லோருக்கும் தெரிந்து எல்லோருமே வருத்தப்பட்டனர். போதாக் குறைக்கு ஊருக்கு போன் போட்டு அம்மா

விடம், அக்காவிடம் தங்கையிடம் என்று எல்லோரு டனும் பேச ஆரம்பித்தாள்.

''மீனா இப்ப எதுக்கு சொல்றே? அவுங்களுக்கு எதுக்குத் தெரியணும்?''

''நீ பேசாம இரு. நாளைக்கு ஏதாவது ஆயிடுச்சுன்னா எனக்கு சொல்லலையேன்னு கேக்க மாட்டாங்களா?''

இதற்குள் முதல் மகன், கடைசி மகன், பெண்ணைப் பற்றி விலாவாரியாகக் கேட்கிறாள். எதை மறைக்க முடியும்? தன், தங்கைகள், அக்காள் விஷயம் எதுவுமே தனக்கு ரொம்ப தெரியாது. ஆனால் தன் வீட்டில் ஒரு கடுகு விழுந்தால் எப்படியோ வெளியே போய்விடும்.

''அக்கா நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதே. இந்த காலத்துப் பொண்ணுங்களே மோசம்தான். அதுனால மருமக எது சொன்னாலும் பொறுத்துகிட்டு அனுசரிச்சு தான் போகணும். பொண்ணும் வேற ஜாதியிலே பண்ணி கிட்டா என்ன? நீதான் போய் சரி பண்ணனும். நாம முறைப்பா இருந்தா இப்படித்தான் பட வேண்டியிருக்கும்.''

''என்னடி உளர்றே? அவுங்க வீட்டுலே அவமானப் படுத்தறாங்க.''

''ஏங்கா கட்டின புடவையோடு ஓடி வந்தா அப்படித் தான் செய்வாங்க. நீதான் எல்லாத்தையும் பொறுத்து கிட்டு அட்ஜஸ்ட் பண்ணிகிட்டுப் போகணும். அப்படியே உன் கடைசி பிள்ளைகிட்டே போய் கைலே கால்லே விழுந்து கூப்பிட்டுகிட்டு வா.''

சொன்ன தங்கையையே அதிர்ச்சியுடன் பார்க்கிறாள் சுமதி.





# 22

இவள் என்ன சொல்ல வருகிறாள்? தன்னை குற்றம் சொல்ல வருகிறாளா? வீட்டில் தனக்கு அடுத்தவள் தான். ஆனால் பிடிவாதம் எக்கச்சக்கம். அவள் திருமணம் முடிந்ததும் அம்மா விட்ட பெருமூச்சும் ஞாபகம் வந்தது. மீதி மூணு பேரையும் ஒரு கூட்டிலே சேர்க்கலாம். இவ ஒரு ரகம். அப்பா... நல்லவேளை கல்யாணம் பண்ணி ஒழிச்சாச்சு'' என்றாள்.

அம்மா சொல்வதும் ஒரு விதத்தில் நியாயம்தான். எக்கச்சக்க பிடிவாதம் அவளுக்கு. நினைத்ததை நடத் தியே ஆக வேண்டும். எந்த ஒரு விஷயத்திற்கும் எல் லோரிடமும் சண்டை போடும் ரகம். தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று சாதிக்கும் குணம். ஓவென்று கத்திப் பேசுவாள். அவள் செய்ததை ஒத்துக் கொண்டே ஆக வேண்டும் என்ற வலுக்கட்டாயம். ஏதோ 'அக்கா' என்று அழுகிறாளே என்று பார்த்தால் தன் வழக் கத்தைக் காண்பித்து விட்டாளே. மனதிற்குள் எரிச்சல் பட்டாள் சுமதி. ஆனாலும் வெளியில் காண்பித்துக் கொள்ளவில்லை. சற்று உம்மென்று தான் இருக்கிறாள்.

கொடுத்து வைத்தவள். நிறைய பணம் இருக்கிறது. குழந்தைகளை புகழ் பெற்ற பள்ளியில் படிக்க வைக்கிறா ளாம். அவள் கணவன் 'ஒரு பூம் பூம் மாடு' என்று அம்மா

சொல்லிக் கேள்வி. தனக்கும் வாய்த்திருக்கிறதே? அவள் கணவன் நியாயம், அநியாயம் கூட பார்க்க மாட்டானாம். தங்கச்சி சொன்னால் அதுதான் வேத வாக்காம். எத்தனை பேருக்கு இப்படிப்பட்ட புருஷன் கிடைக்கும்? அதான் திருமணம் முடிந்தும் கொஞ்சம் கூட மாறாமல் அதே தோரணையோடு எல்லோரையும் பேச முடிகிறது. மனதிற்குள் அந்த வேதனையையும் போட்டு பூட்டி வைக்கிறாள். சில பேருக்கு வாழ்க்கை என்பது அழகான படகில் போவது போல. மற்றும் சிலருக்கு வாழ்க்கை என்பது அலை கடலில் துரும்புதான். தன்னைக் கடவுள் துரும்பாக மாற்றி விட்டானே என்று மனம் பதைத்தது.

இரவு கணவன் வந்தபோது மீனாவைப் பார்த்து ஆச்சரியப்பட்டான்.

''என்ன திடீர்னு?''

''என்ன இத்தனை லேட்டா வர்றீங்க? இங்க அக்காவுக்கு உடம்பு சரியில்லை. நாளைக்கு ஆஸ்பத்திரிக்குப் போய் சேரணும்.''

''என்ன உடம்பு?''

மீனா டாக்டர் சொன்னதை எல்லாமே ஒப்பிக்கிறாள்.

''த்சு... ஏதாவது உளராதே. அப்படி எல்லாம் ஒண்ணும் இருக்காது.''

''என்ன இப்படிச் சொல்லறீங்க? டாக்டர் சொல்லியிருக்காரு.'' அவன் தோள்களைக் குலுக்கிவிட்டுச் சென்றுவிட, மீனா விக்கித்துப் போகிறாள்.

''என்ன அக்கா உங்க வீட்டுக்காரர் இத்தனை மோசமாக இருக்கிறார்?'' என்று அங்கலாய்க்கிறாள்.



அக்காவின் கணவனுக்கு சாப்பாடு போட்டு விட்டு, தானும் சாப்பிட்டு எல்லாவற்றையும் ஒழித்துப் போட்டு விட்டு கலங்கிப் போய் இருக்கும் அக்காவிற்கு சூடான பாலைக் கொடுக்கிறாள்.

''வேண்டாம்டீ.''

''சாப்பிடு பேசாம'' என்று உரிமையோடு அதட்டுகிறாள். லேசாக இருந்த முதுகு வலி சற்று அதிகமானது போல் தோன்ற, லேசாக முணகியபடி திரும்பிப் படுக்கிறாள் சுமதி.

அடுத்த நாள் மீனாவின் வற்புறுத்தலின் பேரில் தியாகு வருகிறான். ''ஒண்ணும் இருக்காது'' என்று அலட்சியமாகப் பேச, டாக்டர் புவனா அவனை கூப்பிட்டு அனுப்புகிறாள். ஒரு அரை மணி நேரம் பேசுகிறாள். வெளியே வந்தவனின் முகம் சுத்தமாக மாறிப் போயிருந்தது. இதுவரை புழுவைப் பார்ப்பது போல் பெண்டாட்டியைப் பார்த்த பார்வை மாறித்தான் போனது. எத்தனை நாட்கள் தனக்காக இரவு பகல் எந்நேரமும் காத்திருந்து வேளா வேளைக்கு உணவளித்து, தன் இச்சைக்கு பலியாகி மூன்று குழந்தைகளையும் பெற்று, மொத்த பொறுப்பையும் தானே கவனித்து முகம் சுளிக்காமல் தன்னையும் பார்த்துக் கொண்டு, சட்டென்று அழுகை வந்தது. கணவன் என்று தான் என்ன பொறுப்பை எடுத்துக் கொண்டோம். முதலில் பெண்டாட்டி என்றால் கொள்ளை ஆசையாகத்தான் இருந்தது. பிறகு எப்படியோ கொஞ்சம் கொஞ்சமாக எல்லாமே போனது. தான் தன் சுகம் என்று தான் சுயநலமாகவே இருந்து விட்டோம்.

''இன்னும் ஒரு மாசம் உங்க பொண்டாட்டி உயிரோட இருக்கறதே அதிகம். இத்தனை நாள் தான் பொறுப்பு

மில்லாம இருந்தீங்க. இனிமேலாவது அவுங்களை நல்லபடியா பார்த்துக்கங்க. அவுங்க கடைசி நாட்கள்ளே யாவது அவுங்க சந்தோஷப்படும்படி நடந்துக்கங்க'' டாக்டர் புவனா கூற,

தியாகு அதிர்ந்து தான் போகிறான். இந்நிலையில் தான் பெற்ற பிள்ளைகளும் அம்மாவை உதறிவிட்டுச் சென்றது மனதை அறுத்தது. பிள்ளைகள் தங்களை விட்டுச் சென்ற போதெல்லாம் ஆத்திரமும் கோபமும் வரும். ஆனாலும் அதை பொருட்படுத்தாமல் இருந்தான். ஆனால் இன்று எல்லாமே பூதாகரமாகத் தெரிந்தது. சுமதி இல்லாத வீட்டில் தான் என்ன செய்வது? தான் சுற்றுவதே அவள் ஆதாரம் என்று நம்பி தானே மனம் மருண்டது. வாழ்க்கையில் முதல் முறையாக கண்ணீர் வந்தது. தான் தோற்று விட்டோம் என்றும், தோற்பதற்குக் காரணமும் தன் நடத்தை தான் என்று புரிய மனம் விண்டு போனது.

சுமதிக்கு இன்ஜெக்ஷன் போட்டு மாத்திரைகள் கொடுத்து, ரேடியேஷன் செய்ய அழைத்துப் போனார்கள். எழுந்திருக்க முடியாமல் படுக்கையோடு படுக்கையாக கிடந்த மனைவியைப் பார்த்து பரிதாபம் எழுந்தது.

டாக்டர் வேற நடக்கக்கூடாது. படுத்தபடி இருக்க வேண்டும் என்று சொல்ல, கூடவே இருந்தான் கணவன்.

தங்கை சாப்பாட்டை ஒட்டலில் வாங்கி தானும் சாப் பிட்டு விட்டு அக்காவிற்கும், அவள் கணவனுக்கும் வாங்கிக் கொண்டு வர,

''இந்தாம்மா'' முதன் முறையாக மனைவியின் சாப்பாட் டுக்கும் சேர்த்து பணம் தருகிறான் கணவன்.

''ஐயோ எதுக்கு வேண்டாம்'' என்று மறுத்த மீனாவை விடவில்லை.



''வாங்கிக்க'' என்று கொடுத்து விட்டான். தான் கூட சாப்பிடாமல் மனைவிக்கு தட்டில் வைத்து தருகிறான்.

''சாப்பிடும்மா'' என்கிறான். ஸ்பூனில் ஊட்டுகிறான். சுமதிக்கு ஆச்சரியத்தில் விழிகள் விறைத்துப் போயின. தன் கணவனா இது? லேசாக அழுகை வந்தது. எப்படித் தன் மேல் இத்தனை ஆசை வந்தது.

கொஞ்சம் சாப்பிட்டதும் வயிறும் மனதும் நிரம்பியது போல் இருந்தது. ''வேண்டாம்'' அவள் மறுக்க,

''சாப்பிடும்மா. சாப்பிடாமத்தான் இப்படி ஆயிட்டே'' அருகில் அமர்ந்து ஊட்டுகிறான்.

''போதுங்க.''

''சாப்பிடு.''

''அவர் கவனிக்கறதே இல்லைன்னு சொல்லிகிட்டு இருப்பியே. இப்ப என்ன சொல்றே? எத்தனை ஆசையா இருக்காரு பாரு. நீதான் அவரைப் புரிஞ்சுக்கலை.''

சுமதிக்கு அந்த உடல்நிலையில் எரிச்சல் வந்தது. என்ன மனுஷி இவள்? இவள் கணவன் எள் என்பதற்கு முன் எண்ணெயாக நிற்கிறான். இவள் ஏன் பேச மாட் டாள்? சுமதியின் எண்ண ஓட்டங்களை புரிந்து கொண் டானோ என்னவோ? பேசுகிறான்.

''அவ நினைச்சதுலே என்ன தப்பு? நான் அப்படி நடந்துகிட்டேன். பாவம் இவ. சுமதியின் தலையைத் தடவுகிறான். கண்கள் கலங்கிப் போய் விடுகின்றன. அடுத்த ஒரு வாரமும் அவளோடு ஆஸ்பத்திரி வாசம்தான். பெண்டாட்டியை விட்டு இப்படி, அப்படி நகராமல் இருந் தான் கணவன். தங்கை மீனா அடுத்த நாளே ஊருக்குப் போக வேண்டும் என்று புறப்பட்டுப் போய் விட்டாள்.

இரண்டு நாட்கள் கழித்து அம்மா, அக்கா எல்லோரும் வந்து இவளைப் பார்த்துவிட்டு, கொஞ்ச நேரம் இருந்து அழுது விட்டுப் போனார்கள். சுமதிக்கு இப்போது எந்த அழுகையும், வேதனையும் ஒன்றும் செய்யவில்லை. கணவன் ஆசையாக தன்னை கவனித்துக் கொள்வதும், தன் மேல் அக்கறை காட்டுவதும் மனதை நிறைத்து விட்டது. இதுவரை இல்லாத அமைதி மனதுக்கு கிட்ட, இப்படியே போய் விட்டாலும் தவறு இல்லை என்று இனிமேல் சாவைப் பற்றி பயமும் இல்லை. இந்த ஒரு வாரத்தில்தான் திருப்தியாக வாழ்ந்தாகி விட்டது. நினைத் துக் கொள்கிறாள்.

நேரத்துக்கு மனைவிக்கு ஜூஸைத் தருவது, பாலைக் கொடுப்பது, சாப்பிடுவதற்கு பிஸ்கட், கேக் என்று எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்து வாங்கித் தருவது என்று பணத்தைப் பற்றிக் கவலைப்படாமல் செலவு செய்தான். மனைவி லேசாக முணகினாலே ''என்னம்மா ஆச்சு?'' ஓடி வருவான். கணவன் பார்த்துக் கொண்டதில் பிள்ளைகளின் நினைப்பும் அற்றுப் போனது.

ஒரு பத்து நாட்கள் சென்றது. அன்று சாப்பிட்டு விட்டு சுமதி லேசாக கண் அயர்ந்திருக்கிறாள். தியாகுவும் சற்று தள்ளி இருந்த படுக்கையில் படுத்து நன்றாக உறங்கி விட்டான். யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்க, தூக்கம் கலைந்து எழுந்து கதவைத் திறக்கிறான். சாமியாராகிப் போன கடைசி மகன் ராஜ்தான் நிற்கிறான். சாதாரணமாக பேண்ட் சட்டை போட்டிருக்கிறான். தலை மொட்டையை மறைக்க தொப்பி வேறு அணிந்திருக்கிறான்.

''அப்பா அம்மாவுக்கு என்னாச்சுப்பா?'' கேட்கும் போதே அழுது விடுகிறான். கண்களில் வெறுப்பும், ஆத்திரத்துடனும் பேசுகிறான் தியாகு.



''என்னடா பெரிய அம்மா பாசம் இப்ப வந்திடுச்சா? அவ இப்படி ஆனதுக்கு காரணமே நீதான். உன்னை நினைச்சு அழுது அழுது தான் பாதி செத்துட்டா. மீதி எப்ப போகுமோ தெரியாது.''

ராஜ் குமுறி குமுறி அழுகிறான். ''நான் பாவிப்பா. அம்மா மனசை உடைச்சவன். என்னை எத்தனை வேணா திட்டுங்க அடிங்க.'' அவன் அழ, சுமதி விழித்துக் கொண் டாள்.

''டேய் கண்ணா? எப்படா வந்தே?'' கேள்வியில் ஆசையும் ஆச்சரியமும் கலந்து வர, ''அம்மா'' என்று அழுத படியே அம்மாவின் கால்களைப் பிடித்துக் கொள்கிறான்.

''என்னடா கண்ணு இது?'' என்றவாறே அவன் தலையைப் பாசமாகத் தடவுகிறாள். தாய் மனது எப்பவுமே மன்னிக்கும் மனதுதான்.

எல்லா தவற்றையும் மன்னிப்பது மட்டுமல்ல. மறந்து விடும் மனது. அதனால் நான் இறைவனையும் தாயாக நினைக்கிறோம். தன்னைக் கதற கதற விட்ட பிள்ளையை மன்னித்ததும்,

''அப்பா நீங்க கம்பெனிக்குப் போங்க. நான் இங்கே இருந்தபடியே அம்மாவை பார்த்துக்கறேன்.''

''நீ உன் வேலையைப் பாரு'' தியாகு கூற, சுமதி குறுக்கிடுகிறாள்.

''இல்லீங்க. நீங்க கம்பெனிக்கு போயும் பத்து நாட் களாயிடுச்சு அதை போய் கவனிக்க வேண்டாமா?''

''இல்லை நான் போகலை. உன்னை இப்படி விட் டுட்டு எங்கேயும் போக மாட்டேன்'' சுமதிக்கு உண்மை

யிலேயே சந்தோஷம் கரை புரண்டு ஓடியது. இவன் தன்னோடு இருக்க மாட்டானா? என்று எப்படி எல்லாம் ஏங்கி இருக்கிறாள்.

"ஓ.கே.ம்மா எல்லாத்தையும் நான் கவனிச்சுக்கறேன்" என்கிறான் இரண்டாவது மகன்.

அடுத்த நாளிலிருந்து சரியாக பன்னிரண்டு மணிக்கு வந்து விட்டு நான்கு மணி வரை இருந்து விட்டுப் போவான் மகன். அம்மா அப்பா இருவருக்கும் சாப்பாடு கொண்டு வந்தான்.

"ஏதுடா சாப்பாடு?" தியாகு கேட்க,

"பக்கத்து வீட்டு மாமியை அரேன்ஜ் பண்ணியிருக்கேன் பா. அவுங்க செய்து கொண்டு வந்து கொடுத்திடறாங்க. பாந்தமாகத் தட்டு, ஸ்பூன் என்று எல்லாவற்றையும் கொண்டு வந்திருந்தான். அம்மா, அப்பா எல்லோருக்கும் சாப்பாட்டை பரிமாறி விட்டு அம்மாவிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு, வேண்டுமென்ற உதவிகளையும் செய்து விட்டுத் திரும்புகிறான்.

"ஏண்டா இத்தனை நேரம் இருக்கியே. கம்பெனிக்கு போக வேண்டாமா?"

"இல்லைம்மா காலைலேயே போயிட்டு வந்துடறேன்" என்றவன் அம்மாவிடமும் வெகு நேரம் பேசிவிட்டு கிளம்புகிறான்.

இரவு எட்டு மணி சுமாருக்கு மறுபடியும் சாப்பாட்டை கொண்டு வருகிறான். சுமதி இன்னும் பூரித்துப் போனாள். இழந்து விட்டோம் என்று நினைத்த மகன் திரும்பக் கிடைத்து விட்டானே. மனம் துள்ளியது. உடம்பு இப் போதே சரியாகி விட்டது போல ஒரு உணர்வு. பிள்ளை



தெளிந்தே வந்து விட்டான். தெரிந்தபோது மனம் ஆனந்தக் கூத்தாடியது.

தன் வாழ்க்கையிலும் வருத்தம் என்பது வந்து விட்டதே. இரவு என்பது உண்டென்றால் பகலும் உண்டு. தன் கஷ்டங்கள் விடிந்து போய் விட்டது போல் தான் தோன்றியது. மனம் கடவுளுக்கு நன்றி சொன்னது.

அன்று வழக்கமாக வரும் ஆயா வரவில்லை. அறையைக் கூட்டவோ, பெருக்கவோ யாரும் வர வில்லை. தியாகு வார்டில் இருக்கும் நர்ஸிடம் பலமுறை சொன்ன பின் கடைசியாக ஆயா வருகிறாள். "அறையையும் கூட்டி பெருக்கி, பாத்ரூம் கழுவிவிட்டு போகிறேன்" என்று கூறியவளைப் பார்த்து அதிர்ந்து போயினர் தியாகுவும் சுமதியும்.



## 23

அப்படிச் சொன்னவளும் அதிர்ந்துதான் போய் நிற்கிறாள்.

"நீ... ஏன்... எப்படி இந்த வேலைக்கு வந்தே?" அதிர்ச்சியுடன் பெண்ணைக் கேட்க,

"அம்மா நீங்களா? உங்களுக்கு என்னாச்சு?" கலங்கித் தவிக்கிறாள் பெண்.

சுமதி விஷயத்தைச் சொல்லச் சொல்ல ரேகா கதறி விடுகிறாள்.

"அம்மா... அம்மா... உங்களுக்கு ஒண்ணும் ஆகாதும்மா. நீங்க நல்லா இருப்பீங்க. சுயநலம் இல்லாம லைப்பை தியாகம் செஞ்சவங்க நீங்க. உங்களுக்கே இந்த கதின்னா அப்புறம் மத்தவங்க லைப்பை பத்தி என்ன சொல்றது?"

"ஆமா... நீ... ஏண்டி இந்த வேலைக்கு வந்தே?"

"செய்த பாவம்மா."

"என்னடி?"

"உங்க மனசை உடைச்ச பாவம். படிக்கிறேன்னு பொய் சொல்லிட்டு உங்க உழைப்பை திருடின பாவம். ஏற்கனவே சுமையை சுமந்துகிட்டு இருக்கறவங்க தலையில இன்னும் பாரத்தை ஏத்தின பாவம்."

சுமதி லேசாக கண் கலங்கிப் போய் அமர்ந்திருந்தாள். "எனக்கு எப்படிம்மா நல்லது நடக்கும்? எவனுக்காக படிக்கற மாதிரி ஆக்ட் பண்ணினேனோ அவன் என்னைப் பாதியிலே விட்டுட்டான். மோகம் முப்பது நாள். ஆசை அறுபது நாள்னு சொல்வாங்க. அவனுக்கு அத்தனை நாள் கூட தேவைப்படலே. ஒரு மாசத்துலே நான் கசந்துட்டேன். அவன் பி.ஈ. முடிச்சிருந்தும் வேலை கிடைக்கலை. அவுங்க உறவுக்கார பொண்ணே பணமும் கொடுத்து அவங்க கம்பெனி எம்டி ஆக்கறதாகவும் சொல்லி இருக்காங்க. அவ்வளவுதான். என் மேல் இருந்த லவ் எல்லாம் காணாமப் போயிடுச்சு. ஏற்கனவே புருஷன் இல்லாத சமயத்தில் மாமனார் மாமியார் என்னை வறுத்தெடுத்துடுவாங்க. இப்ப புருஷனுக்கும் வேண்டாதவன்னு தெரிஞ்சதும் என்னை வீட்டை விட்டே விரட்டிட்டாங்க. ஒண்ணுமே இல்லாத விஷயத்துக்கு மூணு பேரும் சேர்ந்து சண்டை போட்டு வீட்டை விட்டு வந்துட்டேன்."



"நீ பிரெக்னென்டா இருக்கேன்னு சொன்னாங்களே."

"ஒரு கெட்டவன் குழந்தையை சுமக்கக் கூடாதுன்னு கடவுள் விருப்பம் போலும். குழந்தை செத்தே பிறந்தது."

அம்மா அதிர்ச்சியோடு பெண்ணைப் பார்த்து கண் கலங்குகிறாள்.

"ஏய் சுமதி... பேசாம இரு" என்று மனைவியை அடக்கியவன்,

"இதுக்குதான் இங்க வந்தியா? உன் கஷ்டத்தைச் சொல்லி அழ இப்பதான் நேரமா? அவளுக்கு உடம்பு வேற சரியில்லை. எதையும் பேசாதே" உறுமுகிறான் தியாகு.

"எனக்கு ஒண்ணும் இல்லீங்க. நம்பிப் போனாளே அவளை நல்லபடியா வச்சிருக்கக் கூடாதா?" சுமதி ஒரு பெருமூச்சோடு கூற,

"அம்மா நீங்க ஏன் வருத்தப்படறீங்க? என் லைப்லே லவ் பண்ணவனுக்காக எல்லாத்தையும் விட்டுக் கொடுத்தேன். ஜாதி மாறினேன். எத்தனை அடி பணியணுமோ பணிஞ்சேன்.

அதுக்கு பதிலா எனக்கு ஒண்ணும் கிடைக்கலே. ஆனா உங்களை ஏமாத்தினதுக்கு பலன் கிடைச்சது."

"போதும்... நீ எங்களோட வந்து இரும்மா. எதுக்கும்மா இந்த ஆயா வேலை எல்லாம்."

"மத்தவங்களை ஏமாத்தினாதாம்மா தப்பு. உழைச்சா தப்பில்லே" என்றும் பி.காம்முக்கு முக்கியமா வேலை

கொடுப்பா. நான் நர்ஸிங் கோர்ஸ் சேர்ந்திருக்கேன். அதுக்கு பீஸ் கொடுக்க தான் இந்த ஆயா வேலை. இந்த ஆஸ்பத்திரியிலேதான் அதுவும் கத்துக்கறேன்.''

இதற்குள் சுமதிக்கு பெட் பேன் வைத்து, துடைத்து விட்டு பவுடர் போட்டு வேறு உடை மாற்றி, எல்லா வற்றையும் செய்கிறாள் ரேகா.

''வேண்டாம்... வேண்டாம்...'' சுமதி மறுக்க மறுக்க ரேகா ஆசையுடன் செய்கிறாள். அம்மாவிற்கு டிபனை ஸ்பூனில் ஊட்டிவிட்டு வாயைத் துடைத்து எல்லாவற்றை யும் ஒரு கர்ம சிரத்தையோடு யோகி செய்வதுபோல் செய்கிறாள்.

பெண் ஆசையாக இருப்பதை நினைத்து சந்தோஷப் படுவதா இல்லை அவளின் வாழ்க்கை வீணானதை நினைத்து வருத்தப்படுவதா? பெருமூச்சு விடுகிறாள் சுமதி. இருந்தும் மகள் ஆசையாக கலந்து தனக்கு 'அம்மா... அம்மா' என்று சேவை செய்தது மனதை தொட்டது.

கடைசி மகன் பொறுப்பாக சாப்பாட்டை கொண்டு வந்து கொடுத்து அம்மாவிடம் கலகலவென்று பேசி, மதிய நேரங்களில் பெண் அம்மாவுக்காக அவருடைய வேலை செய்து வாழ்க்கை சற்று இன்பமாக மாறிப் போனது போல் தோன்றியது. எந்த துக்கங்களும் நிலை இல்லை.

எல்லாமே மாறிப் போகும் என்று தோன்றியது. நிலை யான இன்பமும் கிடையாது. அவ்வாறே நிலையான துக்கமும் கிடையாது.

தங்கை மீனா கடைசி மகனுக்கு சொன்னதுபோல் முதல் மகனையும் தொடர்பு கொண்டு அக்காவின் நிலை பற்றி சொல்லி இருக்கிறாள்.



அடுத்த நாளே பெரியவன் ஆஸ்பத்திரிக்கு வந்து விட்டான்.

''அம்மா... அம்மா...'' கதறி அழுகிறான்.

தியாகு தன் பங்குக்கு ஆத்திரத்தைக் காண்பித்தும் குரு அசையவில்லை.

''அம்மா... அம்மா' என்று அம்மா காலடியிலேயே அமர்ந்திருக்கிறான்.

''குழந்தை எங்கேடா? எப்படிடா இருக்கான்?'' அழுத பிள்ளையின் தலையைத் தடவிக் கொடுத்தவாறே கேட்கிறாள் சுமதி.

''நான் நேரே ஆபீஸ்லேர்ந்து வரேன்மா. நாளைக்கு கட்டாயம் குழந்தையை அழைச்சுகிட்டு வரேன். ஏம்மா இப்படி ஆயிட்டே. உடம்பை கவனிச்சுக்கக் கூடாதா? நீ உழைச்சு ஓடாயிட்டேம்மா. இனிமே நீ ரெஸ்ட் எடும்மா. நான் இருக்கேன்மா. உன்னை விட்டுட மாட்டேன்மா'' குரு அம்மாவின் கைகளை தன் முகத்தில் வைத்தவாறே வெகு நேரம் அமர்ந்திருந்தான்.

''ஏதாவது சாப்பிடறியா கண்ணா?''

படுத்த படுக்கையாக இருக்கும்போதுகூட பிள்ளை சாப்பிட்டானா என்ற கவலையில் கேட்கிறாள்.

''என் சாப்பாடு இருக்கட்டும். நீ என்னம்மா சாப் பிட்டே?'' தான் கையோடு வாங்கி வந்த பழங்களை நறுக்கி அம்மாவிற்கு ஊட்டுகிறான் குரு. சுமதியின் மனம் நிரம்பி வழிந்தது. போதும் இந்த நிறைவோடு தான் போய் விட்டால் போதும்.

அடுத்த நாள் மருமகள், குழந்தையோடு வருகிறான் குரு. மாமியாரைப் பார்த்து சட்டென்று அழுகிறாள்.

''அத்தை... அத்தை...'' என்றபடி மாமியாரின் கையைப் பிடித்துக் கொள்கிறாள். வீட்டிலிருந்து சமைத்து எடுத்து வந்திருந்தாள்.

''எதுக்கும்மா, ராஜ் கொண்டு வருவான்.''

''இருக்கட்டும் அத்தை. உங்களுக்கு ரொம்ப பிடிச்ச சேவை செய்து எடுத்துட்டு வந்திருக்கேன்.''

''நீ ஆபீசுக்குப் போகலையா?''

''இல்லை அத்தை. ஒரு வாரம் லீவு போட்டு இருக் கேன்.''

''ஏம்மா.''

''நீங்க படுத்துகிட்டு இருக்கீங்க. இதுகூட செய் யலைன்னா?'' சொல்லும்போதே அழுகிறாள்.

''மாமா நீங்க கிளம்புங்க. நான் இருக்கேன். நீங்க வந்தும் எத்தனையோ நாளாச்சுன்னு இவர் சொன்னாரு.''

''ம்... ஹூம் அதெல்லாம் சரிவராது'' என்கிறான் தியாகு.

''மாமா என்னை மன்னிச்சிடுங்க. வயசு ஏறுச்சே தவிர மனமுதிர்ச்சி இல்லே. அனுபவம் இல்லே. உறவுகள் பலம்ன்னு இப்பதான் புரியுது. வீட்டுக்கு பெரியவங்க. அவுங்க அனுபவம் அது எங்களுக்கு வேணும். இந்த குடும்பத்துக்காக ஓடா உழைச்சவங்க இனிமே நீங்க ஓய்வு எடுக்கணும். உங்களை உள்ளங்கையிலே வச்சு நாங்க தாங்கணும். தயவு செய்து மாமா இதை ஒத்துக்கங்க. மாட்டேன்னு சொல்லிடாதீங்க. அத்தைக்கு என்னல்லாம் செய்ய முடியுமோ அதெல்லாம் நாங்க செய்யணும். உங்களுக்கும் சேர்த்துதான் மாமா.''



''நீ சொல்றது எல்லாம் சரி. ஆனா சின்ன குழந்தையை வச்சுகிட்டு இங்க நிக்கக் கூடாது. சின்னக் குழந்தைகளை ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரதே தப்பு...'' தியாகு பேச, சுமதியும் ஆமோதிக்கிறாள்.

''அத்தை அவன் யார்கூட வேணும்னாலும் இருப்பான். மாமா நீங்க அழைச்சுகிட்டுப் போங்க.'' ஒரு நிமிடம் தயங்கியவள் ''இவர் கூட வீட்டுக்குப் போகட்டும்.''

''நீங்க ஓய்வு எடுங்க மாமா'' கூறிவிட்டு ''தாத்தா பாரு'' என்று சொல்ல, அதுவரை சுமதியின் பிடியிலிருந்த குழந்தை சிரித்தவாறே தாத்தாவின் கையைப் பிடித்துக் கொண்டது. தனக்குப் பிறந்த தன் குழந்தைகளைக் கூடத் தொடாதவன் குழந்தையின் கையை இறுக்கிப் பிடித்துக் கொள்கிறான்.

''குழந்தையை நானே அழைச்சிகிட்டுப் போறேன்'' என்றவன் குருவைப் பார்த்து ''அங்கே போய் தனியா என்ன பண்ணப் போறே? எங்கூடவா'' என்கிறான். குருவும் சம்மதித்து அவர்கள் மூவரும் சென்ற பின் கொண்டு வந்ததை மாமியாருக்குப் பரிமாறுகிறாள்.

இதற்குள் ராஜ் சாப்பாடு கொண்டு வர, அண்ணன் குழந்தை அப்பாவிற்கு தருமாறு அவர்கள் வீட்டிற்குச் சென்று விட்டார்கள் என்று சுமதி சொல்லுகிறாள். முதலில் அண்ணியைப் பார்த்தவன் வெறுப்போடு நோக்க, பின் அண்ணி மனது மாறிப் போய் வந்திருக்கிறாள் என்றதும் சற்று இளகியது. ஆனாலும் அண்ணனோடு பேச மனம் வரவில்லை.

''நல்லாயிருக்கியாப்பா'' அண்ணி கேட்க, தலை ஆட்டிவிட்டு கிளம்புகிறான்.

இதற்குள் நாத்தனாரையும் பார்க்கிறாள் விமலா. வழக்கம் போல் அம்மாவிற்கு சாப்பாடு போடும் நேரத்துக்கு வருகிறாள் ரேகா. அறையைக் கூட்டி துடைத்து பாத்ரூம் கழுவி விட்டு வரும்போது தான் விமலா கவனிக்கிறாள். அதிர்ந்து போய் விடுகிறாள். போட்டோவில் சிரித்தபடி மிக நாகரீகமாக இருக்கும் பெண்ணா இது? ரேகாவைப் பார்த்ததில்லை. பேசியதில்லை. சாதாரணமாக இருந்தால் அவள் ரேகா என்று தெரிந்திருக்காது. குரு ரேகாவைப் பற்றியும் அவள் நிலையைப் பற்றியும் சொல்லி இருந்தான். போதாத குறைக்கு "அம்மா சாப்பாடு வந்திடுச்சா" என்று கேட்டவாறு அம்மாவிற்கு பணிவிடைகள் செய்தபோது அவள் ரேகா என்று ஊர்ஜிதமாயிற்று. விமலா தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறாள்.

"நீங்க அவருக்கு அக்கா. நீங்க கஷ்டப்படறதை என்னால பார்த்துக்கிட்டு இருக்க முடியலே. நீங்க நர்ஸிங் படிக்கறதா சொன்னாங்க. அதற்கு நான் பணம் கட்டறேன். என்னோட இருந்துடுங்க. வீட்டுலேர்ந்து வந்து நிம்மதியா படியுங்க. இப்படி கஷ்டப்பட வேண்டாம். ப்ளீஸ்."

அவள் சொல்ல, லேசாக புன்னகைக்கிறாள்.

"எனக்கு உதவி செய்யறேன்னு சொன்னதுக்கு ரொம்ப தேங்க்ஸ். ஆனா ப்ளீஸ் வேண்டாம்மா. அடுத்தவங்க உழைப்பிலே தின்னு தின்னு உழைப்போட பெருமையே தெரியாமப் போச்சு. இனிமேலாவது என்னை நான் திருத்திக்கக் கூடாதா? அம்மாவிற்கு செய்யறதுலே ஒரு ஆத்ம திருப்தி கிடைக்குது. அதை தயவு செய்து மாத்திடாதேம்மா. பெத்தவளுக்குன்னு நான் எதுவுமே செஞ்சதில்லை. மாறாக" சட்டென்று அம்மாவின் கைகளைப் பிடித்து அழுகிறாள். பெத்தவங்களுக்கு மட்டும் தான் கடமையா? பிள்ளைகளுக்குக் கிடையாதா? எங்களுக்காக உழைச்சு ஓடானவங்க எங்க அம்மா. அவுங்க கடைசி காலத்துலே அவுங்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டாமா? இந்த சமயத்துலே பிள்ளைங்களைவிட பொண்ணுங்க தான் பெத்தவங்க மேலே பாசம் வச்சிருப்பாங்கன்னு சொல்வாங்க. ஆனா என்னால எங்கம்மா சுகப்படவே இல்லை. கொஞ்சமாவது அவங்களுக்கு செய்யலைன்னா என் மனதே என்னை மன்னிக்காது."



"நீங்க செய்யுங்க அக்கா, வேண்டாம்னு சொல்லலே. ஆனா நீங்க ஏன் கஷ்டப்படணும். நான் சம்பாதிக்கிறேன். இவர் சம்பாதிக்கிறார். அதுலே கொஞ்சம் உங்களுக்குக் கொடுத்தா குறைஞ்சு போயிட மாட்டேன்."

ரேகாவின் கண்களில் கண்ணீர். "ரொம்ப நன்றிம்மா. ஆனா எனக்கு வேண்டாம். என் இஷ்டப்படி வாழ்ந்து வாழ்க்கையை கெடுத்துக்கிட்டவ நானு. இப்பவும் என் இஷ்டப்படி தான் வாழப் போறேன். வாழ்க்கையை சரி பண்ணிக்கத்தான் வாழணும். இதுலே நானே விழுந்து எழுந்துக்கணும்னு நினைக்கறேன். ப்ளீஸ் அதுனால என்னை கம்ப்பல் பண்ணாதேம்மா."

நாத்தனாரைப் புரிந்து கொண்டதும் நெகிழ்ந்து போகிறாள் விமலா. பனி இருவரும் அளவளாவுகின்றனர். சுமதியிடமும் மனம் விட்டுப் பேசுகின்றனர். சுமதியின் மன இறுக்கம் சுத்தமாக தொலைந்து போனது. இந்த வியாதி வந்ததுனால்தானே இத்தனை மாற்றங்களும் வந்தது. தனக்கு இப்படியே இருந்தாலும் தவறு இல்லை நினைத்துக் கொள்கிறாள்.

மாலை மறுபடியும் பிள்ளைகள் இருவரும் பேரனைத் தூக்கிக் கொண்டு தியாகுவோடு வந்தனர்.

தியாகு இரவு தான் படுப்பதாக சொல்கிறார். விமலா மறுத்தும் கேட்கவில்லை.

''ஓ.கே. அத்தை பகல்லே உங்களை கவனிச்சுக் கறேன். வெளியிலே சாப்பாடு எல்லாம் வரவழைக்க வேண்டாம். நானே சமைச்சுக்கறேன்'' சொன்னபடியே விமலாவே இரவும் சமையலை செய்து, காலையிலும் சமைத்து எடுத்துக் கொண்டு விடுகிறாள். நாத்தனாருக் கும் தனியாக பொட்டலம் கட்டி எடுத்து வருகிறாள்.

''ஐயோ எனக்கு வேண்டாம்மா'' ரேகா மறுக்க,

''இத பாருங்க. அத்தை ஆஸ்பத்திரியிலே இருக்கற வரைக்கும்தான் உங்களுக்குத் தரப் போறேன். தயவு செய்து இதையும் வேண்டாம்னு சொல்லிடாதீங்க.''

ரேகாவும் வேறு வழியில்லாமல் சாப்பிடும்படி ஆனது. எங்கும் ஆனந்தம் தான் நிலவியது. மாத்திரை மருந்துக் கான ரூபாயையும் குருவே கட்டி விடுகிறான்.

''நீ ஏண்டா கட்டினே!'' தியாகு கடிந்து கொள்ள,

''அப்பா படுத்துகிட்டு இருக்கறவங்க எங்க அம்மா. அவுங்களுக்கு இந்த நேரத்துலேகூட செய்யலைன்னா நான் மனுஷன் இல்லே.''

தியாகுவால் பேச முடியவில்லை. பிள்ளைகள் தாங்கு தாங்கு என்று தாங்குகிறார்கள். மருமகளும் தன் சொந்த தாய் தந்தைக்கு செய்வது போல் செய்கிறாள். பெண்ணும் தன்னால் முடிந்ததை எல்லாம் செய்கிறாள். சுமதி பூரித்துப் போய் தான் கிடக்கிறாள். தன் பிரார்த்தனையை இறைவன் கேட்டிருக்க வேண்டும். அதனால் தான்



எல்லாமே சரி ஆனது. நிம்மதிப் பெருமூச்சு விடுகிறாள். ஆனால் இந்த நிம்மதியும் க்ஷண நேரம்தான் என்பது ஏனோ புத்தியில் உறைக்காமல் போயிற்று. சாதாரண மாகவே இன்பம் வரும்போது குதிப்பதும் துன்பம் வரும்போது துவண்டு போவதும் மனித சுபாவம் தானே. ஆகையால் சுமதி இன்பத்தின் எல்லையில் இருந்தாள்.

அன்று இரவு வழக்கம் போல் வரவேண்டிய தியாகு பிள்ளைகள் யாருமே வராமல் போக மாமியாரும் மரு மகளும் தவித்துப் போயினர். என்னவாக இருக்கும்?

## 24



விமலா வீட்டிற்குப் போய் இரவு சமையலை முடிக்க வேண்டும். மாமியாருக்கு கொடுத்து அனுப்ப வேண்டும். குழந்தைக்கு சமையல் செய்து ஊட்ட வேண்டும். ஏன் அவர் வரவில்லை? தவித்துப் போகிறாள். தியாகுவைப் பற்றி நிறைய கேள்விப் பட்டிருக்கிறாள். அவரை நினைக்கையிலேயே எரிச்சல் வந்தது. ஒரு வேளை பழையபடி ஆகி விட்டாரா? அத்தையைக் கவனிக்காமல் விடலைப் பையனாய் ஊர் சுற்றுவாராமே. அப்படி ஆகி விட்டாரா? சே! மாமனாரை நினைக்கையிலேயே ஆத் திரம் வந்தது. எதையும் கண்டிக்க முடியாமல் அவஸ்தைப் படும் மாமியாரை நினைத்தும் ஆத்திரம் வந்தது. மாமனார் எக்கேடும் கெட்டுப் போகட்டும். தன் புருஷனுக்கு என்ன

வந்தது? ஏன் வரவில்லை? ஒரு போனாவது செய்திருக்கக் கூடாதா? எரிச்சல் வந்தது.

முதலில் எரிச்சல் வந்தாலும் பின் எரிச்சல் தவிப் பானது. கணவனுக்கு ஏதாவது? சே! ஒன்றும் இருக்காது. கணவன் மிக மிக ஜாக்கிரதையானவன். ஒரு வேளை குழந்தைக்கு ஏதேனும் நேர்ந்திருக்குமோ நெஞ்சம் பதைத்தது. மருத்துவமனையில் இருப்பே கொள்ள வில்லை. கணவனுக்கு பலமுறை செல்லில் தொடர்பு கொண்டும் பிரயோசனமில்லை. கணவனின் செல் அணைத்து வைத்திருந்தது. காத்திருந்து காத்திருந்து கண் பூத்துப் போனது. பொறுமையும் கை விட்டுப் போனது.

''அத்தை நான் கிளம்பறேன். அவுங்களுக்கு என்னாச் சுன்னு தெரியலை. நீங்க கொஞ்சம் சமாளிச்சுப்பீங்களா? நான் போய் யாரையாவது அனுப்பிடறேன்.''

கிளம்ப முயற்சிக்கும்போது வேர்த்து வியர்த்து வரு கிறான் கணவன் குரு.

''என்னங்க அத்தை?'' ஏன் இத்தனை லேட்?''

''ஒண்ணுமில்லே.''

''அம்மாவுக்கு சாப்பாடு எடுத்துட்டு வந்துட்டேன்'' அவுங்களுக்கு சாப்பாட்டை போட்டுடு.''

கணவன் சொல்ல, அவன் முக பதட்டம், லேசான மாறுதல் எல்லாம் அவளையும் பதட்டம் கொள்ள வைத்தது.

''என்னங்க என்ன ஆச்சு?''

''ஒண்ணும் ஆகலே. என்னமோ எல்லாம் டிலே ஆயிடுச்சு. அம்மா பட்டினி கிடப்பாங்களேன்னுதான் சாப்பாட்டை பக்கத்து வீட்டு ஆன்ட்டிகிட்டே சொல்லி செய்து எடுத்துகிட்டு வந்தேன்.''



''குழந்தை...''

''ராஜ் வச்சுகிட்டு இருக்கான். அம்மாவுக்கு சாப்பாடு போட்டுடு. அவனை வச்சுட்டு நம்ப கிளம்பலாம்.''

விமலா அவசரம் அவசரமாக மாமியாருக்கு சாப் பாட்டை போட்டு விட்டு, விடை பெற்று செல்லும்போது ராஜ் வந்து விடுகிறான். நீங்க போங்க அண்ணி'' சொல்லிவிட்டு அமர,

''குழந்தை'' என்று ஆரம்பித்தவள் ''ஓ... மாமா கிட்டே இருக்கானா?'' என்று கேட்டவள், ''ஆமாமா ஏன் வரலை?'' கணவனிடம் கேட்கிறாள்.

''ஸ்... மெதுவாக பேசு, அம்மாவுக்குத் தெரிய வேணாம்.''

''என்னாச்சுங்க... உங்கப்பா பழைய மாதிரி நடந்துக்க ஆரம்பிச்சிட்டாரா என்ன?''

''ஏதாவது உளறாதே. அப்பாவுக்கு ஆக்ஸிடண்ட் ஆயிடுச்சு.''

''என்னது?'' விமலாவிற்கு தூக்கி வாரிப் போட்டது.

''அப்பா ஆஸ்பிடலுக்கு தான் வந்துகிட்டு இருந்தார். ஒரு லாரிக்காரன் இடிச்சிட்டான். நல்லவேளை எதேச் சையா பக்கத்து வீட்டு அங்கிள் வந்ததுனாலே உடனே அப்பாவை ஆஸ்பிடல்லே சேர்த்துட்டாங்க.''

''ஐயையோ'' என்றவள், ''அப்ப குழந்தை எங்கே இருக்கு?''

பதறிப் போய் கேட்கிறாள்.

''பக்கத்து வீட்டுலே பாத்துக்க சொல்லிட்டு விட்டுட்டு வந்தேன்.

நீ கிளம்பி எங்க வீட்டுக்குப் போயிடு. நான் அப்பா வோட ஆஸ்பிடல்லே இருக்கணும். காலைல கிளம்பி இங்கே வந்திடு ராஜை ரிலீவ் பண்ணிடு.'' அவள் தலை அசைத்து விட்டு கிளம்புகிறாள்.

''சாப்பாடு எல்லாம் பக்கத்து வீட்டு ஆன்ட்டி செய்து வச்சிட்டாங்க. போய் சாப்பிட்டுக்க.'' சொல்லிவிட்டு அவன் நகர, ஒரு பெருமூச்சோடு மாமியாரின் வீட்டிற்குப் போகிறாள்.

''என்னாயிற்று? ஏன் இப்படி கஷ்டத்துக்கு மேலே கஷ்டம். மாமியார் படுத்துக் கொண்டிருக்கும்போது, மாமனாராவது நன்றாய் இருந்திருக்கலாமே. என்னவோ தலையெழுத்து.''

இங்கே சுமதிக்கு மனநிலையில் ஒரு ஆதங்கம் ஏற்பட்டது. ஏதோ நடந்திருக்கிறது பிள்ளையின் முகமே சரியில்லை. என்னவாக இருக்கும்? தன் புருஷன் வர வில்லை அவருக்கு ஏதேனும் ஆகி இருக்குமோ? இல்லை பழையபடி போயிருப்பாரோ அந்த நினைப்பே முள்ளாய் குத்தியது. இல்லை தன் புருஷன் சுத்தமாக மாறி விட்டான். அதை தன்னால் உணர்ந்து கொள்ள முடிகிறது. தன்னுடைய ஒவ்வொரு செயலிலும் எத்தனை அன்பை ஆசையைக் காட்டி இருக்கிறான். அது ஒரு போதும் பொய் யாக இருக்காது. எல்லாமே உண்மைதான். தன்னால் நம்ப முடிகிறது. வேறு என்ன? அவனுக்கு ஏதோ ஆகி இருக்க வேண்டும். இப்படி நினைத்ததும் மனது சிலீரென்றது. கடவுளே நான் இருக்கக் கூடாது என்று தானே எனக்கு வியாதியைக் கொடுத்தாய். என்னையே தீர்த்துவிடு. அவர்



சுகமாக இருக்கட்டும். அவர் எப்போதுமே சுகவாசி. சுகமாக வாழட்டும். தான் இருக்க வேண்டியது அவசியமில்லை. இப்படி நினைத்ததும் மனம் சற்று அமைதி அடைந் தாலும் கணவனைக் காணாமல் தவித்தது.

சிறியவன் ராஜ் வந்ததும் பொங்கிப் போகிறான். ''அப்பா எங்கேடா?''

முதலில் ஒன்றும் சொல்லாமல் மழுப்பப் பார்த்தவன், பிறகு அம்மா ''சொல்லுடா... சொல்லுடா'' என்று வெறி பிடித்தவள் போல் கத்த,

மெதுவாக பேச ஆரம்பித்தான்.

''அம்மா நீ தைரியமா இருக்கணும்.''

''என்னடா?'' பதறிப் போய் கேட்கிறாள்.

''அப்பாவிற்கு ஆக்ஸிடண்ட் ஆயிடுச்சு.''

''என்னது?'' பதறிப் போகிறாள்? நெஞ்சைப் பிடித்துக் கொள்கிறாள்.

''ஒண்ணுமில்லே. பதறாதீங்க. ஹி ஈஸ் ஆல்ரைட்.''

''ஆல்ரைட்டுன்னா அப்பா எங்கே?''

''லேசான அடி. ஆஸ்பத்திரியிலேருந்து வீட்டுக்கு அழைச்சிகிட்டு போயிட்டோம். ஒரு இரண்டு நாள் கழிச்சு வருவார்.''

''என்னடா இது? என்னென்னவோ சொல்றே?'' சட்டென்று கலங்கி அழ,

''ஏம்மா என்னாச்சு உனக்கு? அவருக்கு ஒண்ணுமில் லேன்னு சொல்லிகிட்டு இருக்கேன் திருப்பித் திருப்பி அழுதுகிட்டு இருக்கே.''

''இல்லைடா. அவர் இல்லாது வாழ்க்கை எனக்கு இல்லை.''

பிள்ளை அம்மாவையே உற்றுப் பார்க்கிறான். ''நான் ஒண்ணு சொன்னா கேட்பீங்களா?''

''என்னடா?''

''அப்பா என்ன பெரியது துணைன்னு இப்படி அடிச்சுக் கறீங்க?''

''என்னடா இப்படிச் சொல்றே?''

''இல்லே தெரியாமதான் கேக்கறேன். ஆஸ்பத்திரி யிலே உங்ககூட உதவியா இருந்தார். இல்லேன்னு சொல்லலே. மத்தபடி இத்தனை வருஷ வாழ்க்கையிலே உங்களுக்கு எதுக்கு துணையா இருந்தார்.''

''ராஜ் நீ ஏண்டா இப்படிப் பேசறே? உனக்கு அப்பாடா.''

''இல்லேன்னு சொல்லலேம்மா. உன் பாசம் புரியுது. அவருக்கு ஒண்ணும் ஆகலே. அவர் இல்லாம நான் எப்படின்னு பேசாதே. இதுவரைக்கும் அவர் எதுக்கும் துணை வராமதான் நீங்க வாழ்ந்துகிட்டு இருக்கீங்க.''

மகன் சொல்வது எல்லாம் உண்மைதான். இருந்தாலும் சுமதியால் மனதை அடக்க முடியவில்லை. உள்ளுக்குள் அழுகிறாள். தோளுக்கு மேல் வளர்ந்து விட்டால் பிள்ளைகூட அந்நியன்தான் தன் உணர்வுகள் இவனுக்கு எப்படி புரியும்?

அம்மாவின் முகம் போன போக்கை பார்த்து ராஜ் நெகிழ்ந்து போகிறான்.

''பாவம் தன் தாய். கொஞ்சம் கூட சுகப்படாத பிறவி. இப்போது படுத்த படுக்கையாய் வேறு இருக்கிறாள். அவளைத் தான் வதைக்கலாமா?''



''அம்மா ஒண்ணுமில்லேம்மா. வீணா போட்டு மனதை குழப்பிக்காதீங்க'' உங்களுக்கு வேணும்னா நாளைக்கே அவரைக் கூப்பிட்டுகிட்டு வந்திடறேன்.''

''வேணாம்டா. அவர் ரெஸ்ட் எடுக்கட்டும். பாவம்டா.''

அப்பிராணி அம்மாவை நினைத்து வருந்துகிறான். பெண்களுக்கு தான் தன் குடும்பம் என்று வந்து விட்டால் தியாகம் செய்வதற்கு அளவே இல்லை தான். அப்பாவிடம் எத்தனையோ குறைகள் இருந்தும் கொஞ்ச நாட்கள் பார்த்துக் கொண்டதற்காக அப்பாவை எப்படி எல்லாம் நினைந்து அம்மா உருகுகிறாள். பாரதப் பெண்களுக்கே உரிய தனிக் குணம் போலிருக்கிறது. நினைத்துக் கொண்டவன் அம்மாவின் தலையைத் தடவுகிறான்.

''நீ சாப்பிட்டியாம்மா?'' ஆசையாகக் கேட்கிறான்.

''ம்...'' என்று அம்மா தலை ஆட்ட ஜூஸைப் பிழிந்து தருகிறான்.

''வேண்டாம்'' என்று அம்மா மறுக்க ''சாப்பிடும்மா'' ஆசையாகத் தருகிறான். பிள்ளை வாயில் ஊட்டாத குறையாக அம்மாவிற்கு ஊட்டி விடுகிறான்.

இரண்டு நாட்கள் சென்றது. சுமதி அமைதியாகவே இருந்தாள். உள்ளுக்குள் வருத்தப்பட்டாலும் வெளியில் காண்பித்துக் கொள்ளவில்லை. காலையில் மருமகள் வந்து விடுகிறாள். மாலை ஆனால் பெரிய மகன் குரு வருகிறான். இரவு கடைசி மகன் காவலுக்கு வருகிறான். இப்படி மாற்றி, மாற்றி கவனித்துக் கொள்கிறார்கள்.

அன்று தன் மகனையும் அழைத்து வருகிறாள் விமலா. பேரனைப் பார்த்ததும் கவலைகள் மறைந்தன. அவ னோடு இழைந்து கன்னத்தோடு கன்னம் வைத்து கொஞ்சி

வாழ்க்கையே சுகமானது போல் தோன்றியது. அன்று மருமகள் கிளம்பும்போது மெதுவாக கேட்கிறாள்.

''மாமாவுக்கு எப்படிம்மா இருக்கு?''

''அத்தை ஒண்ணும் இல்லே பயப்படாதீங்க. அவுங்களுக்கு ஒண்ணும் இல்லே.''

கொஞ்சம் டயர்டா இருக்கார். அதான் வர முடியலே. கவலைப்படாதீங்க.''

சுமதிக்கு மனம் சற்று சமாதானம் அடைந்தாற்போல் இருந்தது. கணவனைப் பற்றிய நினைவில் ஆழ்ந்திருந்த போது, எப்போதும் வருவது போல் வந்த மகள் கலகலப்பாக இல்லாமல் கூம்பிய முகத்துடன் வருகிறாள். அடிக்கடி கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறாள்.

''என்னாச்சு ரேகா? ஏம்மா ஒரு மாதிரி இருக்கே.''

''செய்த வினைம்மா.''

''என்னடா? என்னம்மா ஆச்சு?'' விமலாவும் பதறித்தான் போகிறாள்.

''எல்லாம் நான் செய்த பாவம் அண்ணி. பெத்தவங்களை ஏமாத்தின பாவம். அம்மாவோட உழைப்பை திருடின பாவம். பிள்ளைங்க பெத்தவங்களுக்கு துணையில்லேன்னாகூட பரவாயில்லை. பாரமா இருக்கக் கூடாது. ஏற்கனவே வயதாலும் மனதாலும் க்ஷீணிச்சுப் போய் கிடக்கறவங்களை இன்னும் நாசப்படுத்தறதுலே என்ன லாபம்? இன்னும் அவுங்களைக் கஷ்டப்படுத்தறதுலே என்ன நியாயம் இருக்கு? அந்தப் பாவம் தான் அண்ணி என்னை ஆட்டுவிக்குது.''

''என்னாச்சும்மா'' அம்மாவும் அண்ணியும் மறுபடியும் கேட்க,



''டைவர்ஸ் நோட்டிஸ்லே கையெழுத்து வாங்க வந்தாங்க'' ரேகா மெதுவாக சொல்ல,

''இதுக்காம்மா கவலைப்படறே? நீதான் அவன் வேண்டாம்னு தூக்கிப் போட்டுட்டியே'' சுமதி கேட்க,

''பேசாம கையெழுத்தை போட்டு அவன் மூஞ்சிலே தூக்கி எறிய வேண்டியதுதானே.''

''வெறும் கையெழுத்தை மட்டும் கேட்டிருந்தா போட்டு மூஞ்சியிலே விட்டெறிஞ்சுட்டு வந்திருப்பேன். அதை மட்டும்னு கேக்கலையே'' சொல்லும்போதே கண்களில் கண்ணீர் பெருகிட அழுது விடுகிறாள்.

''என்னாச்சும்மா?'' சுமதியும், விமலாவும் பதறிப் போய் கேட்க,

''அவன் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கப் போறான்.''

''அதான் அன்னிக்கே சொன்னியே'' சுமதி, பாவமாகப் பொண்ணைப் பார்க்கிறாள்.

''உனக்கு வருத்தமா இருக்கா? விட்டுத் தள்ளுமா. பாசம் வைக்க தகுதி இல்லாதவன் கிட்டே கூட கணவன் வந்ததுனால பாசம் வைக்கிறோம். விட்டுடு. எப்ப உன்னை சாதாரண நிலையிலே கூட வச்சிக்கலையோ அவனோட தொடர்ந்து இருக்கறதும் தப்பு விட்டுடும்மா. நான் முன்னே சொன்ன மாதிரி நீ கிளம்பி வந்திடு. இனிமே என் பொண்ணா மட்டும் இரு. உன் இலட்சியங்களை அடைய முயற்சி பண்ணு.''

''அதுக்கும் நான் உயிரோட இருக்க வேண்டாமா?'' பெண் கேட்க,

''என்ன உளர்றே ஏன் உயிரோட இருக்க மாட்டே. உனக்கு என்னாச்சு?''

சற்று உயர்ந்த குரலில் சுமதி கத்த,

''அத்தை ப்ளீஸ் டென்ஷன் ஆகாதீங்க'' என்கிறாள் விமலா.

''நான் உயிரோடு இருக்கக் கூடாதாம். செத்துப் போகணு மாம்'' என்று சொன்ன ரேகாவை ''என்னது'' என்று அதிர்ச்சியோடு பார்க்கின்றனர் சுமதியும் விமலாவும்.



# 25

''ஆமாம்மா... அவன் பண்ணிக்கற பொண்ணு ரொம்ப பர்பெக்டாம். நான் ரொம்ப கெட்டவன்னு சொல்லி ஒத்துக்க வச்சிருக்காங்க. இப்ப என்னைப் பத்தி உண்மை தெரிஞ்சிடும்னு பயந்துகிட்டு என்னை இந்த இடத்தை விட்டு போகச் சொல்றான். இல்லைன்னா செத்துப் போயிடுங்கறான். செத்துப்போனா ரொம்ப நல்லதாம்'' மறுபடியும் அவள் கண்கள் கலங்க,

''அவன் செத்துப் போன்னு சொன்னா நீங்க எதுக்கு அழறீங்க. அவனை வெட்டாம'' விமலா எரிச்சலோடு கூற,

''அதுக்கில்லை. இவனை நல்லவன்னு நம்பி கல் யாணம் பண்ணிகிட்டு அம்மா அப்பா மனசை உடைச் சேனே. அதை நினைச்சேன். என் அம்மாவும் இப்படித் தானே வருத்தப்பட்டிருப்பாங்க'' சொல்லிவிட்டு அழ, சுமதியும் அழுகிறாள்.



''தசு... என்னம்மா நீங்க. அம்மாவுக்கே உடம்பு சரியில்லை. அவுங்களை அழ வைக்கலாமா? விடுங்க. நீங்களே சின்னக் குழந்தை நீன்னு சொல்லியும் தொட்டுப் பார்த்துதான் ஒத்துப்பேன்னு சொன்ன குழந்தை. தொட்டுப் பார்த்துட்டே. நெருப்பு என்னன்னு தெரிஞ்சு போச்சு இல்லையா? நெருப்பு சுட்டுடுச்சுன்னு கையை வெட்டிப்பாங்களா? காயத்தை ஆத்தப் பாக்கணும். உங்களை செத்துப் போன்னு சொல்றதுக்கு அவன் யாரு. அவன் சொன்னதுக்கா அழுவாங்க. சொன்ன வாயை உடைச்சிருக்க வேண்டாம். இத பாருங்க. நீங்க தனி ஆளு இல்லே. நீங்க ஏதோ உன் சுய கால்லே நிக்கறேன்னு சொன்னதுனாலே தான் பேசாம இருக்கோம். அதுக்காக உங்களை தனியாக விட்டுருவோம்னு கனவுலகூட நினைக்காதீங்க. நாங்க எல்லாரும் உங்க பக்கம். உங்க தம்பி இந்த விஷயத்தை கேள்விப்பட்டிருந்தார்னா நேரே அவன் வீட்டுக்குப் போய் உண்டு இல்லைன்னு ஆக்கி இருப்பாரு. நீங்க எதுக்கும் கவலைப்படாதீங்க. நாங்க எல்லாம் உங்ககூடதான் இருக்கோம்.''

''ஆமா ரேகா விமலா சொல்றது சரிதான். நீ பேசாம எங்க கூடவே இரு. யாரும் உன்னை ஒண்ணும் பண்ண முடியாது. நடந்தவை நடந்தவையாகவே இருக்கட்டும்.''

''இல்லேம்மா'' என்று ஆரம்பித்த ரேகாவை அடக்கு கிறாள் சுமதி.

''போதும் ரேகா ஏதாவது பேசாதே. இனிமேலாவது நான் சொல்றதைக் கேளு. நீ தனியா இருக்கறதைப் பார்த்தா பிரச்சனைக்கு மேலே பிரச்சனை வந்துகிட்டே தான் இருக் கும். அதுனால கட்டாயம் நீ வீட்டைக் காலி பண்ணிட்டு எங்கூடவே வந்து இருந்துடு. விமலா நீ போகும்போது

இவளும் ரீட்டி முடிஞ்சு போவா. அவ வீட்டைக் காலி பண்ணிட்டு நம்ப வீட்டுக்குக் கூப்பிட்டுகிட்டு வந்திடும்மா.'' விமலா சரியென்று தலை ஆட்டுகிறாள்.

இத்தனை துன்பத்திலும் ஒரு நிம்மதி. தன் மூன்று குழந்தைகளும் மீண்டும் தன்னிடமே வந்து விட்டது. ரேகாவின் வாழ்க்கை திசைமாறிப் போனது மனதை அறுத்தது. இருந்தாலும் அவளுக்கு ஏற்பட்டது ஒரு விபத்து. தெரிந்தே அந்த விபத்தில் சிக்கிக் கொண்டு விட்டாள். அவளை மீண்டும் சரியான தடத்தில் கொண்டு செல்ல வேண்டும். தாயின் மனம் குழந்தையின் நல் வாழ்க்கைக்காக ஏங்கியது.

அன்றே விமலா சுமதி சொன்னது போல் ரேகாவுடன் சென்று அவளை வற்புறுத்தி, அவள் இருந்த இடத்தை காலி செய்துவிட்டு தன் மாமியார் வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டாள். பழைய ரேகாவாக நீங்க ஆகணும் என்று நல்ல உடை உடுத்த சொல்லி நல்ல சாப்பாடு கொடுத்து விசேஷமாக கவனிக்கிறாள்.

ஆயிற்று சுமதி இன்னும் மூன்று நாட்களில் டிஸ்சார்ஜ் ஆக வேண்டும். ஆபரேஷன் செய்து மார்பில் புற்று நோய் இருக்கும் பகுதிகளை எடுத்துவிட்டு கீமோதெரபி என்பதைக் கொடுத்து விட்டார்கள். ஆபரேஷன் முடிந்தும் ரேடியேஷனை வேறு தொடர்ந்து கொடுத்துக் கொண டிருந்தாள். சுமதி படுக்கையில் படுத்தபடி பேசினாலும் உடல் முழுவதும் மிகவும் பலவீனமாகத்தான் இருந்தது. போதாத குறைக்கு தலை மயிர் வேறு நன்றாக கொட்ட ஆரம்பித்து விழுக்கை விழும் போல் ஆனது. நெஞ்சில் ஒரு வலி. முழுங்க முடியாத ஒரு வேதனை. லேசான வாந்தி, தலைவலி, எரிச்சல் வலி, வலி என்று நிறைய



வலிகளை அனுபவித்துவிட்டு இப்போது தான் டிஸ்சார்ஜ் செய்கிறார்கள். வலி சற்று குறைந்திருந்தது. ஆனால் தானாக நடக்கவோ உட்காரவோ முடியாத நிலை. இத்தனை நாட்களில் பட்ட மன வேதனை உடலுக்கு வந்தது போன்ற உணர்வு. உட்காரக் கூட முடியாத நிலை. பாத்ரூமுக்கு செல்ல வேண்டுமென்றாலும் அவளை தாங்கித்தான் பிடித்துக் கொண்டு போக வேண்டி இருந்தது. சுமதி சுமாராகத்தான் தேறிக் கொண்டு வரு கிறாள். படுக்கையில் படுத்து இருக்கும்வரை ஒன்றும் இல்லை. எழுந்தால் ஒரு ஐந்து நிமிடம் கூட சேர்ந்தாற் போல் உட்கார முடியவில்லை. உடம்பில் அசதியும் சோர்வும் அதிகமாக இருந்தது. அவள் கணவனும் அதன் பிறகு வரவே இல்லை.

அவனைப் பற்றி நினைக்கும்போதெல்லாம் மனது துடித்தது. ஏதேனும் வேதனைப்பட்டால் பின்னும் உடல் க்ஷீணித்துப் போயிற்று.

பெண்ணை நினைத்து வேதனைப்பட்டது வேறு உடலை இன்னும் பலவீனப்படுத்தியது. அன்று டிஸ்சார்ஜ் ஆகவேண்டும். படுக்கையை விட்டு எழுந்திருக்கவே கூடாது. குளிப்பது கூட படுத்த நிலையில்தான் குளிக்க வேண்டும். இன்னும் இரண்டு முறை வரவேண்டும் என்று எழுதிக் கொடுத்து விட்டார்கள். இதுவே உயிரை உடலிலிருந்து பிரிப்பது போல் தோன்றியது. கீமோ தெரபி ஒன்று தான் புற்றுநோக்கு சரியான மருந்து என்று வேறு சொன்னார்கள்.

வலி குறைந்து வீட்டிற்கு வந்தாயிற்று. வீட்டில் அவளுக்கென்று படுக்கை போடப்பட்டு அதில் படுத்து கிடக்கிறாள்.

வாயெல்லாம் புண் வந்து விட்டது. ஒரே சூடு. ஏனோ எழுந்திருக்க முடியவில்லை. அதுதான் என்றார்கள் எல்லோரும். கொஞ்ச நாட்களில் விழுங்கக் கூட முடிய வில்லை. தொண்டை எல்லாம் புண். பின் வயிற்றில் புண் போலும், ஒரே வயிற்று வலி. திடீரென்று வயிறு, வயிற்றுக்கீழே, பாத்ரூம் போகும் இடமெல்லாம் எரிச்சல். 'அம்மா ஐயோ அப்பா' என்று கூவிக் கொண்டிருக்கிறாள்.

ஆக்ஸிடண்டில் படுத்து எழுந்த புருஷன் ஞாபகம் வரவில்லை. அம்மா, அம்மா என்று சுற்றும் பிள்ளைகளை யும் தெரியவில்லை. அத்தை இதை சாப்பிடறீங்களா? அதைச் சாப்பிடறீங்களா? ஆசையாய் கேட்கும் மரு மகளையும் தெரியவில்லை. பாட்டி, பாட்டி என்று பாட்டி யின் முந்தானையையே பிடித்துக் கொண்டு தொங்கும் பேரனையும் தெரியவில்லை. ஆ வலி ஐயோ எரியுதே அம்மா முடியலே. ஆ, ஐயோ இனிமே எனக்கு வாழ்க்கை வேண்டாம் என்று கதறித் துடிக்கிறாள் சுமதி. சுமதியின் தாய் அவளின் தமக்கையோடு வருகிறாள்.

''என்னடி இப்படி ஆயிட்டே. ஓயாது உழைக்காதேன்னு எத்தனை சொன்னேன்? இது உடம்பு இல்லை வேற ஏதாவதா. பைத்தியம் மாதிரி பணம் பணம்னு ஓடுவாங் களா? சரியா சாப்பிடறதில்லே. உடம்பை சரியா கவனிச் சுக்கறதில்லே. இன்னிக்கு எந்த நிலைமையிலே இருக்கே பாத்தியா?''

அம்மா கண்ணீர் விடுகிறாள்.

அக்காவும் பேச ஆரம்பிக்கிறாள். மிஷினா இருந்தா கூட வாரத்துலே ஒரு நாள் ரெஸ்ட் கொடுக்கறோம். இப்படி ஓயாம ஓட்டினா பழுது அடைஞ்சுதான் போகும்.



மெனோபாஸ் ஆன வுடனேயே எல்லா டெஸ்டும் பண்ணிகிட்டு கரெக்டான மருந்தை சாப்பிட்டுவிட்டு ஓரளவு மிதமான எக்சர்ஸைஸ் பண்ணிகிட்டு, பழம் பச்சைக்காய்கறிகளை அதிகமா எடுத்திருந்தாலே நீ இப்படி கிடந்து இருக்க மாட்டே. அப்படி உடம்புக்கு மிஞ்சி என்ன பணம்?''

''என்னக்கா பேசறே? வாழ்க்கைங்கற சக்கரம் ஓடற துக்கு பணம் அவசியம்ங்க்கா. எல்லார் வீட்லேயும் புருஷன் கொண்டுட்டு வருவான். பொண்டாட்டி வீட்டை பாத்துப்பா. இப்ப ரெண்டு பேர் சம்பாதிச்சாலும் எங்க நாள் இப்ப கிடையாது. அவனும் பாதி வேலையை பகிர்ந்துப் பான். ஆனா என் வீட்டுலே என்ன நடந்தது. நான் யாரையும் குறை சொல்ல விரும்பலே. என் விதி. முதல்ல கணவனோட போராட்டம். அப்புறம் பணம் இல்லாத போராட்டம். அப்புறம் குழந்தைகளோட மல்லுக்கு நின்னேன். எல்லாமே சேர்ந்து என்னை சிதையிலே படுக்க வச்சிடுச்சு.''

''சே... சே என்ன பேச்சு பேசறே? வாயைக் கழுவு. யாரா இருந்தாலும் ஓய்வு இல்லாம எந்த வேலையும் செய்யக் கூடாதுங்கறதுக்கு நீ ஒரு உதாரணம். இந்த குடும்பங் களை தாங்கற பெண்கள் தங்களை கவனிச்சிக்க வேண் டவே வேண்டாமா? நல்ல வேளை முன்னைப் போல ஹஸ்பண்ட் வீட்டுலே இல்லேன்னா குழந்தைகள் இல்லேன்னா சமைக்கக்கூட இஷ்டப்படாத பெண்கள் இப்போ இல்லை. எல்லோரும் சம்பாதிக்கறாங்க. ஹோட் டல்ல போய் சாப்பிடறாங்க. ஓரளவு மருத்துவ செக் அப்பும் செய்துக்கறாங்க. ஆனா அவையும் கொஞ்சம் விழுக்காடுதான் இருக்காங்க. நிறைய பெண்கள் தன்னைப் பத்தி கேர் எடுக்கணும். சில பேர் அதிகமா

சாப்பிட்டு வீங்கிப்போய் இருப்பாங்க. நாற்பது வயசுக் குள்ளேயே சுகர், பி.பி. ஹார்ட் பிராப்ளம்னு வர பொண்ணு களும் அதிகம். சரிவிகித உணவு, கரெக்டான உணவு எக்ஸர்சைஸ் ஒரு சின்ன உபாதை வந்தாலும் உடனே எனக்கு ஒண்ணுமில்லைன்னு நினைக்காம டாக்டர் கிட்டே போய் டிரீட் பண்ணிகிட்டா இப்ப படற கஷ்டமே இருந்திருக்காது'' தன் நீண்ட உரையில் தங்கை ஆசு வாசப்பட்டுப் போனது தெரிந்தது.

''சரி உனக்கு உபதேசம் செய்யணும்னு நான் சொல் லலை: இப்படி உடம்பைக் கெடுத்து கிட்டயேன்னு வயித்தெரிச்சலா இருக்கு. அதான் சொன்னேன்.''

அக்கா சொல்வதெல்லாம் முழுக்க முழுக்க உண்மை தான். ஆனால் என்ன செய்வது? தன் வினை. சுட வேண்டுமென்று இருக்கிறது சுட்டுவிட்டது. கண்களை மூடியவாறு படுத்து இருக்கிறாள். பெண், பிள்ளைகள் மருமகள் எல்லாருமே உயிராகத்தான் இருக்கிறார்கள். ஆனால் யாராவது ஒருவர் என் வலியை ஏற்றுக் கொள்ள முடியுமா? தாங்கவே முடியவில்லையே. அக்கா அம்மா மேல் பாசம் கூட வரவில்லை. அவர்களைப் பார்த்து இன்பம்கூட ஏற்படவில்லை. இந்தக் கொடிய வலி மறுபடியும் எரிச்சல் தாங்காமல் அழுகிறாள். நெருப்பில் போட்டது போல் துடிக்கிறாள். இத்தனை எரிச்சல் எங் கிருந்து வந்தது.

இவள் படும் அவஸ்தையைக் காண முடியாமல் தியாகு டாக்டருக்கு போன் செய்ய சீமோ எடுத்துக் கொண்டாலே சில பேருக்கு ரொம்ப சிவியராக ஆகி விடுகிறது என் றார்கள். என்ன மாத்திரைகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று டாக்டர்கள் கூற, அதை வாங்கிக் கொடுக்க



ஆரம்பித்தார்கள். உப்பில்லாத மோர் சாதத்தை மிக்சியில் அடித்து கூழ் போல் செய்து காலை ஒரு டம்ளர் மதியம் ஒன்று இரவு என்று அதற்கு மேல் எதுவும் சாப்பிட முடியவில்லை. எந்நேரம் படுக்கை, தள்ளாமை, முடி யாமை, மூன்று டம்ளர் மோர் சாதத்தில் என்ன பெரிய சத்து இருக்க முடியும். வேறு எதையுமே எடுத்துக் கொள்ள முடியாத நிலை.

சுமதிக்கு தான் இனிமேல் பிழைக்க மாட்டோம் என்று தோன்றிவிட்டது. தனக்கு இப்படி கொடுமை செய்து விட்டாரே கடவுள் என்று கண்ணீர் வடிக்கிறாள். ஏனோ கடவுளின் படத்தைப் பார்க்கக் கூடப் பிடிக்கவில்லை. கடைசி காலத்தில் கடவுளின் நினைவு வருவதே அபூர் வம் என்றார்கள். அவளுக்கும் எந்த நினைவும் இல்லை. கடவுள் மேல் சுலோகம் சொல்லு, பெருமாளை பக்தி யோடு நினை என்பதெல்லாம் அவளைப் பொறுத்தவரை வெற்று வார்த்தையாகத்தான் போய் விட்டது. யார் நினைப்பும் இல்லாமல் எப்போதும் அழுகை வந்தது. வலி வலி.. வலிக்கு உயிர் போய் உயிர் வந்தது.

வலி உச்சத்துக்குப் போய் மாத்திரைகளினால் தூங்கிய வள் கொஞ்சம் கொஞ்சமாக வலியை குறைவாக உணர ஆரம்பித்தாள். வலி குறைய ஆரம்பித்ததும் யதார்த்தம் பிரிந்தது. மறுபடியும் இந்த உலகக் கவலை வந்து மாட்டியது. ராஜ் பழையபடி படிக்க ஆரம்பித்திருந்தான். கேம்பஸ் இன்டர்வியூவில் அவனுக்கு நல்ல கம்பெனி யில் வேலையும் கிடைத்து விட்டது. இதைக் கேட்டதுமே ரொம்ப ரொம்ப சந்தோஷமடைந்தாள். தியாகுவும் பிள்ளையின் வளர்ச்சியில் சந்தோஷப்பட்டு விட்டான்.

''அம்மாவை கவனித்தீர்களா? அம்மாவுக்கு மருந்து கொடுத்தீர்களா? அம்மாவிற்கு அந்த பெட்டை போடு''

என்று அம்மா, அம்மா என்று சுமதியை ஒவ்வொரு நிமிடமும் அதிகமாகவே கவனித்தான். அம்மாவுக்கு பாலைக் கொடுத்தீர்களா?'' தனக்கு எது கொடுத்தாலும் 'அம்மா அம்மா' என்று உருகினான். சுமதி பூரித்துப் போகிறாள்.

ரேகாவும் வீட்டிலிருந்து தான் போகிறாள். அம்மாவுக்கு மாய்ந்து மாய்ந்து எல்லா வேலைகள்ளயும் செய்கிறாள். 'அம்மா சாப்பிட்டியா? சாப்பிட்டியா?' என்று ஆசை ஆசையாகக் கேட்கிறாள். எல்லாம் செய்து விட்டு தான் வேலைக்கு ஒரு வருகிறாள். படிக்கவும் போகிறாள். இதற்குள் அவளுடைய விவாகரத்து வழக்கு கோர்ட்டில் வந்து ஒரு வருடம் பிரிந்து இருந்த பிறகு வரச் சொல்லி சொல்ல, அவள் நிம்மதியாகப் படிக்கிறாள். கணவனைப் பற்றி எதையும் நினைக்கக் கூட இல்லை. தன் கவனம் முழுவதையும் அம்மாவைக் கவனிப்பதிலும் வேலை யிலும், படிப்பதிலும் செலவு செய்கிறாள்.

குரு வேறு அம்மாவை தனிக்கவனத்துடன் கவனித் துக் கொள்கிறான். ''அம்மா சாப்பிட்டாங்களா! அம்மாவுக்கு ஜூஸ் கொடுத்தீங்களா? அப்பாவுக்கு பால் எக்ஸ்ட்ராவா கொடு. அம்மா காய்கறி எல்லாம் நிறைய போட்டுக்கங் கம்மா.'' மாய்ந்து மாய்ந்து கவனிக்கிறான். இம்முறை அம்மாவிற்கு புதுப்புடவை வாங்கித் தருகிறான். ''விமலா அம்மாவுக்கு பாலைக் கொடுத்தியா. டிபனைக் கொடுத் தியா பழம் கொடுத்தியா'' தொனப்பி எடுக்கிறான்.

விமலாவும் அத்தை, அத்தை என்று உயிரை விடு கிறாள்.



காலையில் நாத்தனாரோடு சேர்ந்து டிபன் சமையல் முடித்துவிட்டு மாமியாருக்கு வேண்டியதெல்லாம் மனம் கோணாமல் செய்கிறாள். தனி சம்பளத்திலிருந்து வீட் டுக்கு வேண்டிய சாமான்களை வாங்கிப் போடுகிறாள். மாமியாருக்கு வித விதமான பழங்களை தினமும் வாங்கி வருகிறாள். கிட்டே இருந்து பழங்களை நறுக்கிக் கொடுத்துச் சாப்பிடச் செய்கிறாள். மனம் நிறைந்து சந்தோஷத்தில் இருந்தாள் சுமதி.

மேலும் நான்கு மாதங்கள் ஓடியது ராஜ் உள்ளூரில் இருக்கும் அந்த கம்பெனியில் போய் சேர்ந்து கொண் டான். மாதம் இருபதாயிரம் சம்பளம். சுமதி பூரித்துப் போகிறாள். வேலைக்குப் போய் ஒரு மாதம் முடிந்தவுடன் அம்மாவின் கையில் கொண்டு வந்து கொடுக்கிறான். அம்மாவின் காலில் விழுந்து வணங்குகிறான். இப்போது சுமதி ஓரளவு தேறி நடக்க ஆரம்பித்து விட்டாள். சிறிய சிறிய வேலைகளைச் செய்ய ஆரம்பிக்கிறாள்.

பிள்ளைக்குத் திருமணம் செய்ய வேண்டுமென்று தன் ஆசையை சொன்னபோது, பிள்ளை இன்னும் கொஞ்ச நாட்கள் கழித்து திருமணம் புரிந்து கொள்வதாகச் சொல்லி விட்டான்.

''அப்படி இல்லேடா உடம்பு இப்ப கொஞ்சம் சரியா யிருக்கு. இப்பவே உனக்கு செய்துட்டா நல்லா இருக்கும்.''

''அம்மா உடலுக்கு நீங்க ஓய்வு கொடுக்கலை. இப்ப அந்த ஓய்வை உடம்பு எடுத்துடுச்சு. சரியாப் போச்சு. இன்னும் கொஞ்ச நாள்லே எல்லாம் சரியாகிடும். அப் புறம் புது தெம்போட பெண்ணைப் பாருங்க. கல்யாணம் பண்ணிக்கறேன்'' அவன் சிரித்தபடி சொல்லிவிட்டுப் போகிறான்.

அன்று மாலை வந்த ரேகாவின் முகம் விழுந்திருந்தது. எப்போதும் சிரித்தபடி சுறுசுறுப்பாக வேலை செய்பவள், இன்று பேசாமல் இருங்கிறாள். ஏதோ யோசனையில் இருப்பது தெரிகிறது. 'என்ன யோசனை' சுமதி துறுவித் துறுவிக் கேட்டும் பதில் வரவில்லை. "என்னாச்சும்மா?" என்று எத்தனையோ முறை கேட்டும் அவளால் பதில் சொல்ல முடியவில்லை.

விமலாவிடம் இரகசியமாக ரேகாவைப் பற்றிப் பேசுகிறாள் சுமதி. "நீ தான் கொஞ்சம் என்னன்னு பாரேன். ஒரு வேளை இவ வேலை செய்யற இடத்துல ஏதாவது பிரச்சனையா? இல்லை பணம்கிணம் ஏதாவது தேவையா? நம்பளை எப்படி கேக்கறதுன்னு யோசிக்கிறாளா? இல்லைன்னா அவ புருஷனால ஏதாவது பிரச்சனையா?"

"அம்மா ஒண்ணும் கவலைப்படாதீங்க. அதெல்லாம் ஒண்ணும் இருக்காது. பணம் நானே அவர் பேர்ல பேங்கில் போட்டு அவகிட்டே பாஸ்புக்கை கொடுத்து வச்சிருக்கேன். வேலைல உங்க பொண்ணு எம்டன். நான் பாஸ் புக்கை கொடுக்கும்போது தான் பார்த்தேன். இவளை சிஸ்டராவே போஸ்டிங் கொடுத்திட்டாங்க. அவ நோயாளிகளை அத்தனை நல்லா பார்த்துக்கிறாளாம். ஒரே பிரைஸ் பண்றாங்க. அவ புருஷனால என்ன பிரச்சனை இருக்க முடியும். அவதான் டைவர்ஸுக்கு ஒத்துகிட்டாளே."

சுமதியும் 'ஆமாம்' என்று தலை ஆட்டுகிறாள். "இருந்தாலும் நீ என்னன்னு கண்டு பிடிம்மா" கெஞ்சுதலாக சொல்ல,

"அத்தை நான் பாத்துக்கறேன். நீ எந்த கவலையும் படக்கூடாது. கவலையும் டென்ஷனும், வெறுப்பும், பகை



உணர்ச்சியும் தான் வியாதியாகவே மாறுதாம். அதுனால டென்ஷன் படாதீங்க. எல்லாம் நல்லதே நடக்கும்."

ஆனால் எதற்கும் அவசியம் இல்லாமல் ரேகாவை சுமதியைத் தேடி வருகிறாள்.

"என்னம்மா?"

"அம்மா எப்படிச் சொல்றதுன்னு தெரியலை. அவருக்கு உடம்பு சரியில்லை. ஒரு கிட்னி பெயிலியர் ஆகும் நிலையில் இருந்தது. எப்படியோ காப்பாத்தி அங்க நான் தான் புல்லா கவனிச்சுகிட்டேன். தான் செஞ்சதெல்லாம் தப்புன்னு அழுவுறாரு. தன்னை மன்னிக்கச் சொல்லி கதறுகிறார். அவுங்க அம்மா அப்பா பிள்ளைக்கு இப்படி ஆனவுடனே தவிச்சுப் போயிட்டாங்க. எனக்கு செஞ்ச துரோகம்தான் சொல்லியே அழுவுறாங்க. இன்னும் இரண்டு மாசத்துலே கோர்ட் ஹியரிங் வந்துடும். இப்ப என் மனதும் கொஞ்சம் மாறிடுங்க. நான் அவரோடு சேர்ந்து வாழலாமா? அப்ப நான் கேக்கலே இப்ப உங்க பர்மிஷன் இல்லாம அவரோட வாழ பிடிக்கலை."

"என்னம்மா சொல்றே?" சுமதி திகைத்துப் போகிறாள்.

"நீங்க சொல்லுங்க. அவரை மன்னிக்கலாமா?"

"நீ அவரை மன்னிச்சிட்டியா?"

"என்னம்மா சொல்றே? அவரை வெறுத்து இருந்தாத் தானே மன்னிக்கறதுக்கு?"

"என்ன சொல்றே நீ?"

"என்னை மன்னிச்சிடுங்கம்மா. அவர் எத்தனை கொடுமை பண்ணினாலும் மனசு அவரைத் தவிர யாரை

யும் நினைக்கலே. அவரை நான் உண்மையா நேசிச்சேன். உண்மையான நேசிப்புக்கு எதிர்பார்ப்பே கிடையாதும்மா. அவர் எப்படி இருந்தாரோ அப்படியே ஏத்துகிட்டேன். அவர் நல்லவர்னு நம்பினேன். இல்லைன்னு தெரிஞ்சவுடன் ஏமாற்றம் இருந்தாலும் அவர்மேலே வெறுப்பு வரலேமா. அவர் கிட்னி பெயிலியர் ஆகிற ஸ்டேஜ்லே ஆஸ்பிடலுக்கு வந்தபோது அவர் வலியால துடிச்சபோது நானும் துடிச்சேம்மா.''

பெண் பேசப்பேச பெருமையுடன் பெண்ணை நோக்குகிறாள் சுமதி.

''உன்னை நினைச்சா பெருமையா இருக்கும்மா. அவர் நம்ப வீட்டு மாப்பிள்ளை. எந்த ஜாதி மதமா இருந்தா என்ன? அவருக்கு உரிய மரியாதையைக் கொடுக்கணும். நாளைக்கு அவரை வீட்டுக்கு அழைச்சுகிட்டு வா.''

''இல்லைம்மா உங்களைப் பார்க்க இப்பவே வந்திருக்காரு.''

''எங்கே?'' கணவன், பிள்ளைகளுடன் அவனும் வருவதைப் பார்த்து அகமகிழ்ந்து போகிறாள்.

''என்னை மன்னிச்சிடுங்கம்மா. இவளை உயிர்க்குயிரா தான் நேசிச்சேன். ஆனா எங்கேந்து எனக்கு அந்த திமிர் வந்ததுன்னு தெரியலே. பணம் பெரிசா போச்சு. படிச்சா பொழைக்க இன்னிக்கு ஆயிரம் வழி இருக்கு. நான் தப்பான வழியைத்தான் தேர்ந்தெடுத்தேன். அதான் கடவுள் இந்த தண்டனையை கொடுத்துட்டார். நான் கல்யாணம் பண்ணிக்கப் போற பொண்ணு என்னை தூக்கி எறிஞ்சிட்டு போயிட்டா. எப்ப நீ பொண்ணு வாழ்க்கையைக் கெடுத்தியோ அப்ப உன் வாழ்வும் நாசமாத்தான்



போயிடும்னு சொல்லிட்டுப் போயிட்டா. என் வாழ்க்கையும் அப்படித்தான் ஆச்சு. திடீர்னு வயித்து வலி. கிட்னி பெயிலியர்னு சொன்னாங்க. அப்பதான் எங்க அம்மாவுக்கும் புத்தி வந்தது. அம்மா, அப்பா ரெண்டு பேரும் பீல் பண்ணினாங்க. ரேகாவிற்கு செய்த துரோகம்னு சொன்னாங்க. எனக்கும் இப்பதான் புரிஞ்சுது. அவளை வெறுக்க என்ன காரணம்னு தெரியலை. அவ இல்லேன்னா இறந்து போயிடுவேன்னு நினைச்சது ஒரு காலம். எப்படி எல்லாம் மாறிப் போச்சு. தெரியலே. ஆனா அவ கொஞ்சம் கூட மாறலே. அப்படியே தான் இருக்கா. எனக்கு உடம்புன்னவுடனே ஓடி ஓடி வந்து கவனிச்சுகிட்டா. அவளைப் போய் செத்துப் போயிடுன்னு சொன்னேன். நான் உயிர் பிழைச்சதே அவளுக்காகத்தான். இல்லேன்னா கடவுள் என்னை எப்பவோ கொண்டு போயிருப்பார்'' சொல்லும்போதே அழுகிறான்.

''அப்படி எல்லாம் சொல்லாதேப்பா. எல்லாரும் தான் தவறு செய்யறோம்.''

''இல்லேம்மா.. என்னைப் போல யாரும் தவறு செய்ய மாட்டாங்க. என் மிச்ச நாட்களெல்லாம் எம் பெண்டாட்டியை நல்லா வெச்சுக்கணும். அவருக்கு வேண்டியதை எல்லாம் செய்து கொடுக்கணும். அவளை எங்க வீட்டுக்கு அழைச்சுகிட்டு போறேன். எனக்கு நல்ல வேலையும் கிடைச்சிடுச்சு ஆன்டி.''

''அப்புறம் என்னம்மா. நீ இந்த வேலையை விட்டுரலாமே'' சுமதி பெண்ணைப் பார்த்து மிருதுவாகக் கூற,

''இல்லை ஆன்ட்டி அவளுக்கு எது விருப்பமோ அதை அவள் செய்யட்டும். ஆனா அவ எங்ககூட இருந்து தான் செய்யணும்'' ரேகாவின் முகத்தில் மட்டுமல்ல சுற்றி இருந்தவர்களின் முகத்திலும் சந்தோஷ திவலைகள்.

''எல்லாம் சரியாயிடும். மாப்பிள்ளைக்கு ரேகா மேலே இருக்கற ஆசையை விட எனக்கு இன்னும் நூறு மடங்கு ஆசை உன் மேல இருக்கு. நானும் தான் உன்னை நல்லா கவனிச்சுக்கணும்.'' அவளுடைய கரங்களைப் பற்றி தன் உதடுகளில் வைத்தபோது,

''ஐ... அப்பா'' என்று எல்லோரும் சிரிக்க அங்கே ஒரு ஆனந்த அலை உருவாயிற்று. இனி அது தொடர்ந்து அப் படியே நிலைக்க வாழ்த்துவோமாக.